بسم الله الرحمن الرحيم

79

الوجيز

في عقيدة السلف الصالح أهل السنة والجماعة

அல் வஜீஸ்

ஃபீ அகீதத்திஸ் ஸலஃபிஸ் ஸாலிஹ் அஹ்லிஸ் ஸுன்னா வல்ஜமாஆ

நபிவழியையும் நபித்தோழர்களையும் பின்பற்றுவோர் - நல்ல முன்னோர் உடைய கொள்கையின் சுருக்கம்

ஆசிரியர்:

ஷைக் அப்துல்லாஹ் இப்னு அப்தில் ஹமீத் அல் அஸரி

தமிழில்:

ஷைக் சையத் றமழான் சமூன் ஸலஃபி, **B.A., M.A.**

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

إن هدى الله هو الهدى
دار الهدى
DARUL HUDA
(இஸ்லாமாகிய) அல்லாஹ்வின் நேர்வழியே உண்மையான நேர்வழி

About This Book

Book Name in Arabic	: **Al Wajeez Fee Aqeedati Assalaf Assalih Ahlis Sunnah Wal Jama'ah**
Book Name in English	: **A Brief Introduction to the Creed of the Righteous Predecessors, Ahlis Sunnah Wal-Jama'ah**
Language	: Tamil
Author	: Asshaikh Abdullah Bin Abdul Hameed Al Asari
Translators	: Samoon Sayadu Ramalan, A. Omar Sheriff
Proof Readers	: Team of Darul Huda
Date of Publication	: February, 2025
Edition	: 1ST
Total Pages	: 320
Copies	: 3000
Book Code	: DH_TML 2079

HADIYAH: RS. 180/-

Published by:

DARUL HUDA

Quality Islamic Book Publishers

211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai_600001.

Phone : +91_44_25247866,
Mobile : +91_98401 74121

darulhuda.chennai@gmail.com
www.darulhuda.net

الوجيز
في عقيدة السلف الصالح

(أهل السنة والجماعة)

المؤلف:

فضيلة الشيخ عبد الله بن عبد الحميد الأثري حفظه الله

ترجمه إلى التاملية:

الشيخ سيد رمضان بن شمعون السلفي السيلاني

وعمر شريف عبد السلام

دار الهدى
DARUL HUDA

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

رَبَّنَا تَقَبَّلۡ مِنَّآۖ إِنَّكَ أَنتَ ٱلسَّمِيعُ ٱلۡعَلِيمُ

اَللّٰهُمَّ اجْعَلْ عَمَلِي كُلَّهُ صَالِحًا وَلِوَجْهِكَ خَالِصًا

اَللّٰهُمَّ انْفَعْ بِهٰذَا الْكِتَابِ وَاضِعَهُ وَقَارِئَهُ وَسَامِعَهُ وَنَاشِرَهُ

اَللّٰهُمَّ آمِين

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

எங்கள் இறைவா எங்களிடமிருந்து ஏற்றுக்கொள்! நிச்சயமாக நீதான் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன்.

அல்லாஹ்வே! என் அமல்கள் அனைத்தையும் நல்லவையாக, உன் முகத்திற்காக மட்டும் பரிசுத்தமாக செய்யப்பட்டவையாக ஆக்கு!

அல்லாஹ்வே! இந்த நூல் மூலம் இதை உருவாக்கியவருக்கும், இதை படிப்பவருக்கும், இதை கேட்பவருக்கும், இதை வெளியிடுபவருக்கும் நற்பலன் தருவாயாக!

அல்லாஹ்வே! எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்!!

يَٰقَوۡمَنَآ أَجِيبُواْ دَاعِيَ ٱللَّهِ

سورة الأحقاف الآية ٣١

எங்கள் சமுதாயமே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதில் அளியுங்கள்!!

(அல்குர்ஆன் 46:31)

சமர்ப்பணம்

மார்க்கக் கல்வியைக் கற்று, அல்லாஹ்வின் பாதையில் அழைப்பாளனாக நான் மாற வேண்டும் என்ற நோக்கத்தில் என்னை இலங்கை, பறகஹதெனிய கிராமத்தில் உள்ள தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடத்தில் சேர்த்துவிட்ட என் பெற்றோரான

நாகூர் பிச்சை சமூன்

மற்றும்

அபூபக்கர் பாத்துமுத்து ஸுஹரா

ஆகியோருக்கும்,

எனக்கு அகீதாவில் தெளிவான அறிவைத் தந்த எனது கல்வித் தந்தை எமது முதீர் (-கல்லூரி முதல்வர்)

அஷ்ஷெய்க் N. P. M. அபூபக்கர் ஸித்தீக் மதனீ

அவர்களுக்கும் உரித்தாகட்டும்.!

அல்லாஹ் அவர்களனைவரையும்
பொருந்திக்கொள்வானாக!

பொருளடக்கம்

****

பதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனே புகழ்ச்சிக்கும், நன்றிக்கும் வணக்கத்திற்கும் உரியவன். அவனது திருத்தூதர் மீதும் மற்றும் அவரின் குடும்பத்தார்கள் மீதும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் நிலவட்டும்!

தொடர்ந்து கொள்கை சார்ந்த நூல்களை வெளியிட வேண்டும் என்ற வேட்கையில் இந்த அல் வஜீஸ் நூலையும் வெளியிடுகிறோம். அல்ஹம்து லில்லாஹ்!

இந்த நூலை மூல மொழி அரபியிலிருந்து ஷைக் ரமழான் ஸலஃபி அவர்கள் மொழிபெயர்த்து தந்தார்கள். தொடர் பயணங்கள் காரணமாக இதை வெளியிடுவதில் காலதாமதம் நிகழ்ந்துவிட்டது. ஷைக் அவர்கள் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருந்தார்கள். அல் ஹம்து லில்லாஹ், பல முறை இந்த நூலை வாசித்து, தேவையான திருத்தம் செய்து, இந்த அமைப்பில் வெளியிட அல்லாஹ் அருள் புரிந்தான்.

இந்த நூல் – கல்வி சாலைகளில் பாட நூலாக வைப்பதற்கும் மஸ்ஜிதுகளிலும் வீடுகளிலும் ஒன்றுகூடி படிப்பதற்கும் மிக ஏற்றமான பொருத்தமான இலகுவான நல்ல நூலாகும்.

அல்லாஹ் ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளர்களுக்கும் நல்லருள் புரிவானாக! இந்தத் தமிழாக்கத்தை ஏற்றுக்கொள்வானாக! இறுதி நாள் வரை வரும் தமிழ் பேசும் மக்கள் இதன் மூலம் தூய கொள்கைகளை அறியவும் பின்பற்றவும் நல்லருள் புரிவானாக!

இந்த நூலைச் சரிப்பார்ப்பதிலும் திருத்தம் செய்வதிலும் தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கிய ஆலிம்கள் அப்துல் காதிர் ரப்பானி, இமாமுத்தீன் ஹஸனி, முஹம்மத் அனஸ் ஹஸனி, மன்ஸூர் அஹ்மத் உமரி, சகோதரர்கள் முஹம்மத் ஹகீம், ஸைஃபுத்தீன், முஹம்மத் இப்ராஹீம் மற்றும் சகோதரி ஷபானா ஆகியோருக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. அவர்களின் வாழ்க்கையில் பரகத் செய்வானாக. ஆமீன்.

மற்றும், இந்த நூலை கணினியில் வடிமைத்து, திருத்தங்களைச் செய்து கொடுத்த சகோதரர் ஹுஸைன் தாஹா அவர்களுக்கும் அல்லாஹ் நல்லருள் புரிவானாக! அவரின் தேவைகளை நிறைவேற்றி, இம்மையிலும் மறுமையிலும் அவருக்கு அவனுடைய பேருதவிகளையும் நற்பேறுகளையும் வழங்குவானாக! ஆமீன்!

இதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் எங்களை நீங்கள் தொடர்பு கொண்டு கேட்கலாம். நூலில் ஏதாவது தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்டினால் அவற்றை அடுத்த பதிப்புகளில் திருத்தி வெளியிடுவோம் இன் ஷா அல்லாஹ். அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி கொடுப்பானாக!

அல்லாஹ்வே! உனக்கே எல்லாப் புகழும்! எங்களிடமிருந்து இதை ஏற்றுக்கொள்வாயாக! எங்களை மன்னித்து அருள் புரிவாயாக! எங்கள் அழைப்புப் பணியில் எங்களுக்கு உதவுவாயாக! தொடர்ந்து இந்த பணிகளைச் செய்ய அருள் புரிவாயாக! எங்களுக்கு உதவியாளர்களை ஏற்படுத்துவாயாக! எங்களுக்கு உதவிய, உதவக்கூடிய எல்லா சகோதர சகோதரிகளுக்கும்; தாருல் ஹுதாவின் பணியாளர்கள் அனைவருக்கும் உன் அருளையும், அன்பையும், மன்னிப்பையும், சொர்க்கத்தையும் தந்தருள்வாயாக! ஆமீன். நீ மகத்தானவன், பேரரசன், யாவரையும் மிகைத்தவன், நன்கறிந்தவன், அனைத்தையும் பார்ப்பவன், செவியுறுபவன். உனது நபியின் மீதும் அவரின் குடும்பத்தார்கள் மற்றும் தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் பொழிவாயாக!

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்!!

பதிப்பாளர்

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

குர்ஆன், ஸுன்னா ஊழியர் - தாருல் ஹுதா - மதறாஸ் - இந்தியா

****

அணிந்துரை

ஸாலிஹ் அப்துல் அஸீஸ் இப்னு முஹம்மத் ஆலுஷ் ஷைக், (அமைச்சர் வழிகாட்டல், அழைப்பு, வக்ஃப் மற்றும் இஸ்லாமிய விவகாரத்துறை) அவர்கள் அரபி மொழி தொகுப்புக்கு வழங்கிய அணிந்துரையின் தமிழாக்கம்:

பரிபூரணம், அழகு, கம்பீரம் ஆகிய பண்புகளால் தனித்தவனான அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் உரித்தாகட்டும். அவனைப் போற்றிப் புகழ்ந்து, அவனுக்கு நன்றி கூறுகிறேன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை எனவும்; அவன் தனித்தவன், அவனுக்கு இணையோ, துணையோ இல்லை என்றும் சாட்சி கூறுகிறேன். மேலும் அவனுடைய தெய்வீகத் தன்மையிலும் அழகிய திருநாமங்களிலும் மற்றும் உயரிய பண்புகளிலும் அவன் தனித்தவன்; அவனுக்கு இணையான யாரும் இல்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ

அவனைப் போல் எதுவும் இல்லை, மேலும் அவன் அனைத்தையும் கேட்பவனாகவும் அனைத்தையும் பார்ப்பவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 42:11)

மேலும், உலகத்தாருக்குக் கருணையாக அனுப்பப்பட்ட முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். படைப்புகளை வணங்குவதிலிருந்து மக்களை விடுவித்து, படைப்பாளனான அல்லாஹ்வை வணங்குவதற்கும், மதங்களின் அநீதியிலிருந்து விடுவித்து இஸ்லாமின் நீதியின் பக்கம் மக்களை அழைத்துச் செல்லவும், இவ்வுலக வாழ்வியலின் நெருக்கடிகளிலிருந்து விடுவித்து, இவ்வுலகம் மற்றும் மறுமையின் பரந்து விரிந்த விசாலமான வாழ்வியலுக்கு அழைத்துச் செல்லத் தேவையான வழிகாட்டுதலுடனும் சத்திய மார்க்கத்துடனும் அல்லாஹ் நபியவர்களை அனுப்பிவைத்தான் எனவும் சாட்சி கூறுகிறேன். மேலும்,

அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் அருளும் அமைதியும் உண்டாவதாக!

முஹம்மத் ﷺ அவர்கள் அனுப்பப்படும்போது வாழ்ந்தவர்கள் சத்தியத்தை அறியாத ஜாஹிலிய்யா மக்களாக இருந்தனர். அவர்கள் شرك – ஷிர்க் எனும் பலதெய்வ வழிபாடுகளிலும் அறியாமை இருளிலும் வாழ்ந்தனர். மூடநம்பிக்கைகள் அவர்களை ஆதிக்கம் செலுத்தின. அவர்கள் தமக்கிடையே சண்டையிடுவதிலும் கோத்திரவாத மோதல்களிலும் மூழ்கியிருந்தனர். ஒருவரையொருவர் சபித்துக்கொண்டனர். ஒருவரையொருவர் கொலை செய்தனர். அவர்கள் பிற்போக்குத்தனத்திலும், காட்டுமிராண்டித்தனத்திலும் பிரிவினையிலும் மூழ்கிக்கிடந்தனர்.

இஸ்லாமின் பேரொளிச் சூரியன் உதிக்க அனுமதியளித்த அல்லாஹ், முஹம்மத் ﷺ அவர்களை தனது தூதராக தேர்ந்தெடுத்து, – அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அவனைத் தவிர வணங்குவதற்குத் தகுதியான வேறு கடவுள் இல்லை – என்று மனிதகுலத்திற்கு போதிப்பதற்காக அனுப்பிவைத்தான்.

அவர்கள் கொண்டுவந்த இந்த தவ்ஹீத் எனும் ஏகத்துவக் கொள்கையானது, அடியார்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் மிகப்பெரிய கடமையாகும். அது மட்டுமல்லாமல், அல்லாஹ் ஜின்களையும் மனிதர்களையும் படைத்ததன் மிகப்பெரிய குறிக்கோளாகவும் இக்கொள்கை காணப்படுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ۝٥٦

நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே தவிர படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51:56)

ஓரிறைக்கொள்கையை நிலைநாட்டுவதற்காகத்தான் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டனர்; வேதங்களும் அருளப்பட்டன. இக்கொள்கையை நிலைநாட்டத்தான் ஜிஹாதின் கொடியும் உயர்த்தப்பட்டது.

மக்காவில் பதின்மூன்று வருடங்கள் நபி ﷺ அவர்கள் ஓரிறைக் கொள்கைக்காக அழைப்புப் பணியை மேற்கொண்டார்கள். மக்களின் உள்ளங்களில் அதன் வேர்களை ஆழமாக ஊன்றினார்கள். உள்ளங்களின் ஆழத்தில் அதன் அடிப்படைகளையும் தூண்களையும் உறுதியாக விதைத்தார்கள். மக்களுக்கு ஓரிறை நம்பிக்கைக்கான வழி மிகத்தெளிவாகும் வரை அதன் தூண்களான அடிப்படைகளை மிகத் தெளிவாக விளக்கினார்கள். இறைநம்பிக்கை மீதான ஆசையும் ஆர்வமும் கொண்டோருக்கு அதன் முக்கியத்துவம் தெளிவானது. அதன் தொடர்ச்சியாக அல்லாஹ் சத்தியத்தை வெளிப்படுத்தி அசத்தியத்தைத் தோற்கடித்தான். தூய ஏகத்துவப் பேரொளி, இருண்டு கிடந்த உள்ளங்களை வெளிச்சமாக்கியது. شرك – ஷிர்க் – இணைவைத்தல் எனும் அசுத்தக் கறையிலிருந்து உள்ளங்கள் தெளிவடைந்தன. இணைவைப்பு எனும் சாக்கடையிலிருந்து உள்ளங்கள் சுத்தமாகின.

நபி ﷺ அவர்களின் வருகையின்போது மனித உள்ளங்கள் காய்ந்து வறண்ட நிலமாக இருந்தன. ஆதலால், **توحيد** – தவ்ஹீத் – ஓர் இறை வழிபாடு எனும் ஏகத்துவ நீர்த்தடாகத்திலிருந்து நபி ﷺ அவர்கள் அவ்வுள்ளங்களுக்கு நீர் புகட்டினார்கள். إخلاص – இக்லாஸ் எனும் உளத்தூய்மை நதியிலிருந்து அவர்களுக்கு நீர் பாய்ச்சினார்கள். அவ்வுள்ளங்களை அல்லாஹ்விற்கு கீழ்ப்படிதலின் பக்கம் இழுத்துச் சென்றார்கள். அதன் விளைவு, மகிழ்ச்சியான சிறந்த சமுதாயம் முளைவிட்டு, வளர்ந்து செழித்தோங்கிப் பூத்துக்குலுங்கியது. அந்த சமூகம் இழிநிலையிலிருந்து கண்ணியத்தைப் பெற்றது; பிளவுக்குப் பின்னர் ஒன்றுபட்டது; அடக்குமுறையிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் வெற்றிபெற்ற சமூகமாக உருமாறியது.

அகீதா எனும் நம்பிக்கை சார்ந்த விஷயங்கள் அல்லாஹ்வின் நாட்டப்படி தெளிவும் தூய்மையும் பரிசுத்தமும் கொண்டதாக நிலைபெற்றது. தூய ஏகத்துவ நம்பிக்கையற்றிருந்த உள்ளங்களெல்லாம் அதனை ஏற்று அல்லாஹ்வின் மார்க்கத்தில் இணைந்தன.

பின்னர், நபி ﷺ அவர்களின் மரணத்திற்கும் கலீஃபாக்களின் காலத்திற்கும் பிறகு கால ஓட்டத்தில் மக்களிடையே குழப்பநிலை உருவானது. அதனால் புதிய சிந்தனைகள், பல பிரிவுகள் உருவெடுத்தன.

தடம்புரண்ட கோட்பாடுகளும் பிழையான தத்துவங்களும் தோற்றம் பெற்றன. கொள்கைக் குழப்பம் உச்சத்தைத் தொட்டது. பார்வைகள் மங்கும் அளவுக்கும் உள்ளங்கள் இறுகும் அளவுக்கும் بدعة - பித்ஆ எனும் புதுமைகள், அனாச்சாரங்கள் பரவின. முஃமின்கள் பெரும் சோதனைக்குள்ளானார்கள். கடுமையான தொல்லைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இக்கட்டத்தில்தான் உண்மையான ஈமானின் வெளிச்சத்தை நோக்கி மக்களை மீட்டெடுக்கக்கூடிய நேர்வழிபெற்ற இமாம்களையும் அறிஞர்களையும் அல்லாஹு தஆலா உருவாக்கினான். அவர்கள் மக்களுக்கு அசத்தியத்தின் தீங்குகளைத் தெளிவுபடுத்தினர்; பொய்யர்களின் சந்தேகங்களைத் தோலுரித்தனர்; மக்களை منهج السلف الصالح - மன்ஹஜுஸ் ஸலஃபிஸ் ஸாலிஹ் எனப்படும் நல்ல முன்னோரின் வழிமுறையை நோக்கி மீட்டிக் கொண்டு வந்தனர்.

இஸ்லாமிய சமுதாயத்தின் வரலாற்றை விலாவாரியாக ஊன்றிப் படிக்கும் எவரும், சமூகத்தின் மகிமை, மேன்மை, மற்றும் வெற்றி அதன் அகீதா எனும் கொள்கை தூய்மை அடைவதிலும், அல்லாஹ்வுடன் உண்மையாக இருப்பதிலும், நபி ﷺ அவர்களின் அடிச்சுவட்டை முழுமையாக பின்பற்றுவதிலும்தான் தங்கியுள்ளது என்பதைக் கண்டுகொள்வார்.

மேலும், ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோர் உடைய மன்ஹஜ் - வழிமுறையில் பயணிப்பது; நல்ல காரியங்களில் ஆட்சியாளர்களுடன் இணைந்து இருப்பது; அவர்களுடன் சண்டை செய்யாமல் இருப்பது ஆகிய அனைத்தும் சமூகத்தின் மீட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் கண்டுகொள்வார்.

அதேபோல், இந்த சமுதாயத்தின் இழிவு, பலகீனம், வீழ்ச்சி, இந்த சமுதாயத்தின் மீதான ஏனைய சமூகங்களின் ஆக்கிரமிப்பு ஆகிய அனைத்தும் بدعة - பித்ஆ எனும் புதுமைகளாலும், محدثات - முஹ்தஸாத் எனும் நூதனங்களாலும், அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்திக் கொள்வதாலும், வழிகெட்ட பிரிவுகளின் தோற்றத்தினாலும், தலைமைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதாலும், ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதிலும்தான் நிகழ்கின்றன என்பதையும் புரிந்து கொள்வர்.

அகீதா - கொள்கை ரீதியான நெறிப்பிறழ்வும், மன்ஹஜ் ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோரின் அணுகுமுறையை விட்டு விலகுவதும், ஆலிம்

– அறிஞர் என்ற போர்வையில் வலம் வரும் தடம் புரண்டவர்களின் வார்த்தை ஜாலங்களுக்கு ஏமாறுவதும்தான் இந்த சமுதாயத்தின் பிரிவினைக்கும், பலவீனத்திற்கும், ஒற்றுமைச் சிதைவிற்கும் நேரடிக் காரணங்களாகக் காணப்படுகின்றன.

தற்கால நிலை அதற்கான சாட்சியாகவும் இருக்கிறது. நபி ﷺ அவர்களும் அவர்களது தோழர்களின் நேர்வழியில் நடந்த இமாம்களும் பயணித்த பாதைக்குத் திரும்பாத வரை இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கான எந்தவொரு வழியும் இல்லை. இந்தச் சமுதாயத்தின் பின்னோர் சீர்பெறுவதற்கு முன்னோர் சீர்பெற்ற வழியல்லாத வேறு எந்த வழியும் பொருத்தமாக அமையாது என்பது ஆழமாகக் கவனிக்கத்தக்கதாகும். ஏகத்துவப் பாதையிலிருந்து பின்வாங்குவது; ஸலஃப் ஸாலிஹ் உடைய வழிமுறையை விட்டு ஒதுங்குவது நீதிக்கு முரணானதும் புத்திக்குப் பொருந்தாததும் ஆகும்.

இதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்.

لَقَدْ أَرْسَلْنَا رُسُلَنَا بِٱلْبَيِّنَٰتِ وَأَنزَلْنَا مَعَهُمُ ٱلْكِتَٰبَ وَٱلْمِيزَانَ لِيَقُومَ ٱلنَّاسُ بِٱلْقِسْطِ ۖ

திட்டவட்டமாக நாம் நமது தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளோடு அனுப்பினோம். மற்றும், அவர்களுடன் வேதத்தையும் தராசையும் மக்கள் (அதன் மூலம்) நீதத்தை நிலை நிறுத்துவதற்காக நாம் இறக்கிவைத்தோம். (அல்குர்ஆன் 57:25)

நீதத்தில் மிகவும் மகத்தானது **توحيد** – தவ்ஹீத் எனும் ஓரிறைக் கொள்கையாகும். அதுதான் நீதத்தின் தலையாகும். தவ்ஹீதின் மூலமாகத்தான் நீதம் நிலைபெறுகிறது. அநியாயங்களில் மிகப்பெரியது شرك – ஷிர்க் எனும் இணைவைப்பாகும். இதனை அல்லாஹ் அல் குர்ஆனில் லுக்மான் عليه السلام தனது மகனுக்கு செய்த உபதேசத்தில் தெளிவுபடுத்துகிறான்.

وَإِذْ قَالَ لُقْمَٰنُ لِٱبْنِهِۦ وَهُوَ يَعِظُهُۥ يَٰبُنَيَّ لَا تُشْرِكْ بِٱللَّهِ ۖ إِنَّ ٱلشِّرْكَ لَظُلْمٌ عَظِيمٌ ﴿١٣﴾

லுக்மான் தனது மகனாருக்கு உபதேசித்த போது சொன்ன வார்த்தையை நினைவு கூர்வீராக! என் மகனே! அல்லாஹ்விற்கு இணை வைக்காதே! நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரிய அநியாயமாகும்.

(அல்குர்ஆன் 31:13).

عَنْ عَبْدِ اللهِ ﵁ قَالَ: سَأَلْتُ - أَوْ سُئِلَ - رَسُولُ اللهِ ﷺ أَيُّ الذَّنْبِ عِنْدَ اللهِ أَكْبَرُ، قَالَ: أَنْ تَجْعَلَ لِلّٰهِ نِدًّا وَهُوَ خَلَقَكَ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﵁, அவர்கள் நபி ﷺ அவர்களிடம் கேட்டார்கள்.

அல்லாஹ்விடம் பாவங்களில் மிகப் பெரியது எது? அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்விற்கு நீ ஓர் இணையை ஏற்படுத்துவது – அவனோ உன்னை படைத்திருக்க![1]

அல்லாஹ் சீர்திருத்தத்தை ஏவினான், குழப்பம் விளைவிப்பதை தடை செய்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَا تُفْسِدُوا۟ فِى ٱلْأَرْضِ بَعْدَ إِصْلَٰحِهَا وَٱدْعُوهُ خَوْفًا وَطَمَعًا ۚ إِنَّ رَحْمَتَ ٱللَّهِ قَرِيبٌ مِّنَ ٱلْمُحْسِنِينَ ﴿٥٦﴾

பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் குழப்பம் செய்யாதீர்கள். பயத்துடனும், ஆசையுடனும் (அல்லாஹ்வாகிய) அவனை அழைத்துப் பிரார்த்தனை செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் கருணை, நல்லறம் புரிவோருக்கு மிகச் சமீபமானதாகும். (அல்குர்ஆன் 7:56)

குழப்பங்களில் மிகப் பெரும் குழப்பம் என்னவென்றால், மக்களின் நம்பிக்கைகள், உணர்வுகள் மற்றும் சிந்தனைகளைச் சிதைத்து, அல்லாஹ்வின் பாதையிலிருந்து அவர்களை தடுத்து, அல்லாஹ் அவர்களைப் படைத்திருக்கும் فطرة – ஃபித்ரா எனும் நேரிய இயல்பிலிருந்து அவர்களை விலக்குவதாகும்.

1. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 4477.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ النَّبِيُّ ﷺ كُلُّ مَوْلُودٍ يُولَدُ عَلَى الفِطْرَةِ، فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ، أَوْ يُنَصِّرَانِهِ، أَوْ يُمَجِّسَانِهِ

ஒவ்வொரு குழந்தையும் فطرة - 'ஃபித்ரா' எனும் நேரிய இயல்பின்படியே பிறக்கிறது. ஆக, அதன் பெற்றோர் அதனை ஒரு யூதராக, அல்லது கிறிஸ்தவராக அல்லது நெருப்பு வணங்கியாக மாற்றுகிறார்கள்.[2]

عَنْ عِيَاضِ بْنِ حِمَارٍ الْمُجَاشِعِيِّ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ ذَاتَ يَوْمٍ فِي خُطْبَتِهِ: " أَلَا إِنَّ رَبِّي أَمَرَنِي أَنْ أُعَلِّمَكُمْ مَا جَهِلْتُمْ، مِمَّا عَلَّمَنِي يَوْمِي هَذَا، كُلُّ مَالٍ نَحَلْتُهُ عَبْدًا حَلَالٌ، وَإِنِّي خَلَقْتُ عِبَادِي حُنَفَاءَ كُلَّهُمْ، وَإِنَّهُمْ أَتَتْهُمُ الشَّيَاطِينُ فَاجْتَالَتْهُمْ عَنْ دِينِهِمْ، وَحَرَّمَتْ عَلَيْهِمْ مَا أَحْلَلْتُ لَهُمْ، وَأَمَرَتْهُمْ أَنْ يُشْرِكُوا بِي مَا لَمْ أُنْزِلْ بِهِ سُلْطَانًا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

அறிந்து கொள்ளுங்கள், எனது ரப்பு இந்நாளில் அவன் எனக்குக் கற்பித்தவற்றிலிருந்து நீங்கள் அறியாதவற்றை உங்களுக்குக் கற்றுத் தருமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளான். (அல்லாஹு தஆலா கூறுகிறான்:) அடியானுக்கு நான் வழங்கும் செல்வங்கள் எல்லாம் ஹலால் ஆகுமானதாகும். எனது அடியார்கள் அனைவரையும் நான், حنيف - ஹனீஃப் அல்லாஹ்வை மட்டும் வணங்குகிற தூயவர்களாகப் படைத்துள்ளேன். ஷைத்தான்கள் அவர்களிடம் வந்து, அவர்களை மார்க்கத்தை விட்டும் திருப்பிவிட்டார்கள். நான் அவர்களுக்கு ஹலாலாக்கியதை ஷைத்தான்கள் அவர்களுக்கு ஹராம் - தடைசெய்யப்பட்டதாக ஆக்கிவிட்டனர்; எதற்கு நான் ஓர் ஆதாரத்தையும் இறக்கவில்லையோ அதை எனக்கு இணையாக்கி வணங்குமாறு ஷைத்தான்கள் அவர்களை ஏவினர்.[3]

2. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 1385.

3. அறிவிப்பாளர்: இயாழ் இப்னு ஹிமார் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2865.

இணைவைப்பது மிகப் பெரும் அநியாயம், அது பாவங்களில் மிகப் பெரும் பாவம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்வுலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் அது பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திவிடும்.

பிற்காலங்களில் கொள்கை நிலைப்பாடுகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பேச்சாளர்களுக்கு இவ்வுலகம் அழகாகத் தெரிந்தது. மனோஇச்சைக்காரர்கள் தமது மனோஇச்சையை – வழிகேடான சிந்தனைகளை வெளிப்படுத்தினர். அவர்கள் உருவாக்கிய புதுமைகள் பரவலாகின. அழிந்து போயிருந்த அவர்களது முன்னோர்களின் வழிமுறைகள் உயிர்பெற்றன. அவர்களது நூல்கள் துளிர்விட்டன. புதிய சிந்தனைகள் தோற்றம் பெற்றன. தமக்கென இலக்குகளை நிர்ணயித்துக்கொண்டு, நேரிய வழிமுறைகளிலிருந்து வேறுபட்ட நவீன கூட்டங்கள் முளைத்தன. ஒவ்வொரு பிரிவும் அல்லது கூட்டமும் தங்கள் தோற்றத்தின்போது பிற பிரிவுகளை வசைபாடின. இதற்கிடையில், மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, அவர்களின் நம்பிக்கைக் கோட்பாடுகளைக் கெடுத்து, அவர்களுக்கு شرك – ஷிர்க் – பலதெய்வ வழிபாட்டை எளிதாக்கினர்; அதிகாரத்தில் இருப்பவர்களது அதிகாரத்தின் மீது ஆட்சேபனை செய்தனர்; அவர்களுக்கு சத்திய வழிகாட்டுதல் தெளிவாகத் தெரிந்த பிறகும், இறைத்தூதரை விட்டும் விலகி, விசுவாசிகளின் வழிகளல்லாத பிற வழிகளைப் பின்பற்றினர்.

இந்த சமுதாயத்தின் நலன்கள் மீது அக்கறை கொண்ட அறிஞர்கள் மீதும் ஸுன்னாவைப் பின்பற்றும் நபிவழி ஆதரவாளர்கள் மீதும் பல கடமைகள் காணப்படுகின்றன. அதாவது, மார்க்கத்தின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்துதல், மன்ஹஜ் ஸலஃப் ஸாலிஹ் – நல்ல முன்னோரின் அணுகுமுறையின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துதல், அதன் செயல்முறையை விளக்குதல், நேர்வழி நடந்த இமாம்களின் கிரந்தங்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்துதல், இமாம்களின் கூற்றுகளை விளக்கி, சரிபார்ப்பதன் மூலம் அவற்றை முன்னிலைப்படுத்துதல், அவர்களின் مقاصد – மகாஸித் நோக்கங்களைத் தெளிவுபடுத்துதல், ஏகத்துவக் கொள்கையைக் கவனத்தில் கொள்ளுதல், இமாம்கள் தமது பாடங்களிலும், பிரசங்கங்களிலும், விரிவுரைகளிலும் மற்றும் எழுத்துகளிலும் கைக்கொள்ளும் அணுகுமுறையை விளக்குதல், மற்றும் பின்வரும் அல்லாஹ்வின் கூற்றுக்கு இணங்க, நபி ﷺ அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும் அவர்களது ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பதற்கும், அவர்களது தோழர்களின்

அடிச்சுவட்டில் பயணிப்பதற்கும் மக்களை வழிநடத்துதல் ஆகியவை அந்த கடமைகளாகும்.

அல்லாஹுூ தஆலா கூறுகிறான்:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾

(நபியே!) கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னையே பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும், உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன் ஆவான்.

(அல்குர்ஆன் 3:31)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أُوصِيكُمْ بِتَقْوَى اللهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ تَأَمَّرَ عَلَيْكُمْ عَبْدٌ فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَىٰ اخْتِلَافًا كَثِيرًا فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ فإِنَّ كلَّ محدثةٍ بدعةٌ، وكلَّ بدعةٍ ضلالةٌ

அல்லாஹ்வின் பயத்தை உங்களுக்கு உபதேசிக்கிறேன். (ஆட்சியாளரின் கட்டளைக்கு) செவிசாய்க்க வேண்டும்; கீழ்ப்படிய வேண்டும் என்றும் உபதேசிக்கிறேன். உங்களுக்கு அடிமை ஒருவர் ஆட்சியாளராக இருந்தாலும் சரியே. ஏனெனில், உங்களில் எனக்குப் பின்னர் வாழ்பவர் பல கருத்து வேறுபாடுகளைக் காண்பர். எனவே, நீங்கள் எனது ஸுன்னாவையும் நேர்வழிபெற்ற கலீஃபாக்களின் வழிமுறையையும் பற்றிப்பிடியுங்கள். அவற்றை நீங்கள் கடைவாய்ப் பற்களால் கவ்விக்கொள்ளுங்கள். புதிய அனுஷ்டானங்கள் விஷயத்தில் உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், அனைத்து நூதனங்களும் بدعة 'பித்அத்' அனாச்சாரமாகும். அனைத்து பித்அத்துகளும் வழிகேடு ஆகும் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[4]

---

4. அறிவிப்பாளர்: இர்பாழ் இப்னு ஸாரியா ؓ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4607, ஸுனன் அத் திர்மிதீ எண்: 2676.

இதுதான் அல்லாஹ் அங்கீகரித்த மிக நேரான, நேர்த்தியான, அல்லாஹ்வின் திருப்தியின் பக்கம் கொண்டு செல்கிற பாதையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأَنَّ هَٰذَا صِرَٰطِي مُسۡتَقِيمٗا فَٱتَّبِعُوهُۖ وَلَا تَتَّبِعُواْ ٱلسُّبُلَ فَتَفَرَّقَ بِكُمۡ عَن سَبِيلِهِۦۚ ذَٰلِكُمۡ وَصَّىٰكُم بِهِۦ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ﴿١٥٣﴾

நிச்சயமாக இதுதான் எனது நேரான பாதையாகும். அதனையே பின்பற்றுங்கள்; வேறு வழிகளைப் பின்பற்றாதீர்கள். ஏனெனில், அவை அவனது பாதையை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் இறையச்சம் பெறுவதற்காக இதனை அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான். (அல்குர்ஆன் 6:153)

இதுதான் நபி ﷺ அவர்கள் அழைத்த வழியாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلۡ هَٰذِهِۦ سَبِيلِيٓ أَدۡعُوٓاْ إِلَى ٱللَّهِۚ عَلَىٰ بَصِيرَةٍ أَنَا۠ وَمَنِ ٱتَّبَعَنِيۖ وَسُبۡحَٰنَ ٱللَّهِ وَمَآ أَنَا۠ مِنَ ٱلۡمُشۡرِكِينَ ﴿١٠٨﴾

(நபியே!) கூறுவீராக: இதுதான் என் பாதையாகும். நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான அறிவின் மீது இருந்தவர்களாக அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறோம். அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். நான் இணைவைப்பவர்களில் உள்ளவன் இல்லை. (அல்குர்ஆன் 12:108)

இதுதான், الفرقة الناجية அல்பிர்கத்துன் நாஜியா - வெற்றிப் பிரிவினர் என நபி ﷺ அவர்கள் புகழ்ந்தவர்களின் கொள்கையாகும்.

நபி ﷺ கூறினார்கள்:

عَنْ مُعَاوِيَةَ ﷺ يَقُولُ: سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ: لَا يَزَالُ مِنْ أُمَّتِي أُمَّةٌ قَائِمَةٌ بِأَمْرِ اللهِ، لَا يَضُرُّهُمْ مَنْ خَذَلَهُمْ، وَلَا مَنْ خَالَفَهُمْ، حَتَّىٰ يَأْتِيَهُمْ أَمْرُ اللهِ وَهُمْ عَلَىٰ ذَٰلِكَ

எனது சமுதாயத்தில், அல்லாஹ்வின் கட்டளைகளை நிலை நிறுத்தக்கூடிய ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். அவர்களை யார் கைவிட்டு விடுவாரோ, அவர்களுக்கு யார் மாற்றம் செய்வாரோ அவர் அவர்களுக்கு எவ்வித தீங்கும் செய்ய முடியாது. இறுதியாக அவர்கள் அதே நிலையில் இருக்கும்போது அல்லாஹ்வின் கட்டளை(யாகிய மறுமை) அவர்களுக்கு வரும்![5]

இதுதான் நபி ﷺ அவர்களும் அவர்களது தோழர்களும் இருந்த கொள்கையாகும். அன்றி, இந்த கொள்கையைத்தான் நபி ﷺ அவர்களும் அவர்களது தோழர்களும் நிலை நிறுத்தினார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَإِنَّ بَنِي إِسْرَائِيلَ تَفَرَّقَتْ عَلَىٰ ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً، وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَىٰ ثَلَاثٍ وَسَبْعِينَ مِلَّةً، كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً وَاحِدَةً، قَالُوا: وَمَنْ هِيَ يَا رَسُولَ اللهِ؟ قَالَ: مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِي

இஸ்ரவேலர்கள் எழுபத்திரண்டு கொள்கைகளாக பிரிந்தனர். எனது சமுதாயமோ எழுபத்தி மூன்று கொள்கைகளாக பிரிவார்கள். அவர்களில் ஒரு பிரிவைத் தவிர அவர்கள் எல்லோரும் நரகத்தில் நுழைவார்கள். அந்த கூட்டம் யார் அல்லாஹ்வின் தூதரே! என்று தோழர்கள் கேட்டார்கள். நானும் எனது தோழர்களும் எதன்மீது இருக்கிறோமோ அதன்மீது இருப்பவர்கள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[6]

இந்த வகையில், நமது அறிஞர்கள், கல்வியாளர்கள், மற்றும் உளத்தூய்மை கொண்ட கல்வித்துறை மாணவர்களுக்கு கொள்கை சார்ந்த நூல்களை எழுதுவதற்கும், கற்பிப்பதற்கும், சரிபார்ப்பதற்கும் அல்லாஹ் அருள்பாலித்திருக்கிறான். அவர்களில் ஒருவராக சகோதரர் அஷ்ஷைக் அப்துல் ஹமீத் அப்துல்லாஹ் அல் அஸரீ அவர்கள் தனது الوجيز فى عقيدة السلف الصالح அல் வஜீஸ் ஃபீ அகீதத்திஸ் ஸலஃபிஸ் ஸாலிஹ் (நல்ல முன்னோருடைய கொள்கை பற்றிய சுருக்கம்) எனும் இந்த நூலின் மூலம் தனது பங்களிப்பை இத்துறையில் வழங்கியுள்ளார்.

5. அறிவிப்பாளர்: முஆவியா இப்னு அபீ ஸுஃப்யான் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3641.

6. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ؓ, நூல்: ஜாமிவுத் திர்மிதீ எண்: 2641.

சகோதரர் அஷ் ஷைக் அப்துல் ஹமீத் அப்துல்லாஹ் அல் அஸரீ அவர்கள் தனது இந்நூலை வாசித்து அதற்கு அணிந்துரை வழங்குமாறு என்னை வேண்டிக்கொண்டார். நான் இந்நூலை வாசித்த வகையில் இதனை அவர் மிகவும் சிறப்பாகவும் பயன்மிக்கதாகவும் அமைப்பதற்குப் போற்றத்தக்க முயற்சியை மேற்கொண்டுள்ளார். அதில், ஸலஃப் உடைய நம்பிக்கைகளை முழுவதுமாக, வசீகரமான மொழி நடையில், எளிதான வார்த்தைப் பிரயோகத்தில், தேவையான விளக்கங்களுடன் ஒழுங்குபடுத்துவதில் வெற்றி கண்டுள்ளார்.

இந்நூல், அடிப்படை மூலாதாரங்களைச் சார்ந்திருப்பதுடன், குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் ஸலஃப் உடைய கருத்துக்களையும் குறிப்பிடுகிறது. இது இந்த நூலின் சிறப்பம்சமாகும்.

இந்த நூலும் இது போன்ற மற்ற நூல்களும் ஏகத்துவ வாதிகளின் கண்களைக் குளிரவைத்து, அவர்களின் உள்ளங்களை மகிழ்விக்கும் அதேவேளை, எதிரிகளின் தொண்டைகளை அடைக்கச் செய்து, அவர்களின் நெஞ்சை நெறித்துவிடும் தன்மை உடையதாகவும் காணப்படுகிறது.

وَٱللَّهُ غَالِبٌ عَلَىٰٓ أَمۡرِهِۦ وَلَٰكِنَّ أَكۡثَرَ ٱلنَّاسِ لَا يَعۡلَمُونَ ﴿٢١﴾

அல்லாஹ் தனது விஷயங்களில் மிகைத்தவன் ஆவான். என்றாலும் மக்களில் அதிகமானவர்கள் அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 12:21)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

عَنْ تَمِيمٍ الدَّارِيِّ ﵁ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: لَيَبْلُغَنَّ هَذَا الْأَمْرُ مَا بَلَغَ اللَّيْلُ وَالنَّهَارُ، وَلَا يَتْرُكُ اللهُ بَيْتَ مَدَرٍ وَلَا وَبَرٍ إِلَّا أَدْخَلَهُ اللهُ هَذَا الدِّينَ، بِعِزِّ عَزِيزٍ أَوْ بِذُلِّ ذَلِيلٍ، عِزًّا يُعِزُّ اللهُ بِهِ الْإِسْلَامَ، وَذُلًّا يُذِلُّ اللهُ بِهِ الْكُفْرَ

இரவு பகல் சென்றடைகிற இடத்திற்கெல்லாம் இந்த மார்க்கம் சென்றடையும். கண்ணியமானவர் கண்ணியமடைவதுடன் அல்லது இழிவானவர் இழிவடைவதுடன் கல் வீடு அல்லது குடிசை வீடு என அனைத்திலும் அல்லாஹ் இந்த மார்க்கத்தை நுழைக்காமல்

விடமாட்டான். இஸ்லாமை அல்லாஹ் ஓங்கச்செய்வான். كفر - குஃப்ர் –நிராகரிப்பை அல்லாஹ் தாழ்த்திவிடுவான்.[7]

இந்த விஷயத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வம், ஆசை மற்றும் இந்த நூலை உருவாக்குவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் ஆகியவற்றுக்காக நான் அவருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கும் அதே நேரம், எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு சிறந்த வெகுமதியை அளிக்க வேண்டும் எனவும், அவரது முயற்சிகளைப் பொருந்திக்கொண்டு அதில் அவருக்கு அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன். மேலும், இந்த நூல் நமது சமுதாயத்தின் நம்பிக்கையைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

மேலும், நபி ﷺ அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர்களது தோழர்களின் வழியைக் கடைப்பிடித்து, ஸலஃப் இமாம்களின் வழிமுறையைப் பின்பற்றி மார்க்க அறிஞர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தையும் திருப்தியையும் மட்டுமே தங்கள் நோக்கமாக கொள்வதற்கு அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிய வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்.

وَآخِرُ دَعْوَانَا أَنِ الْـحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَـمِينَ

எங்கள் இறுதி சொல், நிச்சயமாக எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே!

ஸாலிஹ் அப்துல் அஸீஸ் இப்னு முஹம்மத் ஆலுஷ்ஷைக்

வழிகாட்டல், அழைப்பு, வக்ஃப் மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சர்,

சவூதி அரேபியா | ஜமாதுல் ஊலா 1421.

****

7. அறிவிப்பாளர்: தமீம் அத் தாரீ رضي الله عنه, நூல்: முஸ்னத் அஹ்மத் எண்: 16957.

ஷைகு சையத் றமழான் சமூன் ஸலஃபி அவர்களின் முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ்தான் வணக்கத்திற்குரிய இறைவன், அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை, துணை எதுவும் இல்லை எனவும் முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார் எனவும் சாட்சி கூறுகிறேன்.

ஓரிறைக் கொள்கை மூலம் இவ்வுலக மக்களின் வாழ்வியலை ஒழுங்குபடுத்த அல்லாஹ் அனுப்பி வைத்த இறைத்தூதர்களில் இறுதியானவரும் நபிமார்களின் தலைவருமான முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார்கள் மீதும் அவர்களை பின்பற்றி வாழ்ந்த உத்தம தோழர்கள் மீதும் நல்லவற்றில் அவர்களைப் பின்தொடர்ந்த நல்லோர் மீதும் அல்லாஹ்வின் ஸலாத்தும் ஸலாமும் என்றென்றும் உண்டாவதாக!

மனித இனம் படைக்கப்பட்டதற்கும் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டதற்கும் நோக்கம் - அல்லாஹ் ஒருவன்; அவன் மாத்திரமே நாம் வணங்குவதற்குத் தகுதியானவன்; அவனல்லாத அனைத்துப் பொய்யான கடவுள்களிலிருந்தும் நாம் நீங்கியிருக்க வேண்டும் என்பதாகும். உலகம் அழியும் வரை இந்த ஓரிறைக் கொள்கையில் நிலைத்திருப்பதும் அதன் பக்கம் மக்களை அழைப்பதும் உண்மை முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாக உள்ளது.

இம்மை, மறுமை வாழ்வின் வெற்றியானது, தெளிவான இறை நம்பிக்கையிலும் அதன் மீது உறுதியாக இருப்பதிலும் இருக்கிறது. இதனால்தான் நபி ﷺ அவர்கள் தனது இறுதித் தருவாயில், மன்னிப்பற்ற பெரும்பாவமாக எச்சரிக்கப்பட்டுள்ள شرك - 'ஷிர்க்' - 'இணைவைப்பு' எனும் மௌட்டீகத்தில் முஸ்லிம் சமுதாயம் வீழ்ந்து, இவ்வுலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் தோற்றுவிடக் கூடாது எனக் கவலைப்பட்டார்கள்.

இஸ்லாம் என்பது, ஈமான், இஸ்லாம், இஹ்ஸான் ஆகிய மூன்று அடிப்படை அம்சங்கள் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளதை 'ஹதீஸ்

ஜிப்ரீல்' மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த மூன்று அடிப்படைகளும் மனித வாழ்வியலைச் சீர்படுத்தி ஒழுங்கமைப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றன. இவை பற்றிய புரிதல்கள் மிகச் சரியாகவும் நேர்த்தியாகவும் இருக்கும்போது இம்மை மறுமை வாழ்க்கை பற்றிய பார்வை சீராக, சரியாக அமையும்.

இதனால்தான் பிற்காலத்தில் இம்மூன்று துறைகளிலும் **مُحْدَثَات** – முஹ்தஸாத் எனும் புதுமைகள் மற்றும் **بِدْعَة** – பித்அத் எனும் அனாச்சாரங்கள் இஸ்லாமின் பெயரால் தோற்றுவிக்கப்பட்டன. இத்தகைய புதுமைகள், கொள்கை சார்ந்த விஷயங்களிலும் அமல்கள் சார்ந்த விஷயங்களிலும் நற்குணங்கள் சார்ந்த விஷயங்களிலும் உருவாக்கப்பட்டன.

இவற்றில் முதலாவது வகை, **العقائد الشركية** அல் அகாயிதுஷ் ஷிர்கிய்யா - இணைவைத்தலை சேர்ந்த கொள்கைகள் என்று அறியப்படுகிறது.

இரண்டாவது வகை, **الأعمَال البدعية** அல் அஃமாலுல் பிதயிய்யா - அனாச்சாரமான அனுஷ்டானங்கள் என்று அறியப்படுகிறது.

மூன்றாவது வகை, **طريقة** - தரீக்கா, **تصوف** தஸவ்வுஃப் என்று அறியப்படுகிறது. இவை மூன்றும் ஒன்றை விட்டு ஒன்றை பிரிக்க முடியாத அளவிற்கு பின்னிப் பிணைந்தவை ஆகும்.

மௌட்டீகம், அராஜகம், அநியாயம், அத்துமீறல் என்பவற்றையே தம் அடையாளமாய் கொண்டிருந்த அரபு சமூகத்தை மனிதப் புனிதர்களாக மாற்றியமைத்த ஈமான், இஸ்லாம், இஹ்ஸான் என்ற மூன்று அடிப்படைகளும் நபியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விதத்திலேயே அவற்றை நாம் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதும், அவை நபித்தோழர்களால் பின்பற்றப்பட்ட விதத்திலேயே அவற்றை நாம் பின்பற்றுவதும், அவற்றை நபித்தோழர்கள் பார்த்த விதத்திலேயே நாமும் அவற்றைப் பார்ப்பதும்தான் நம்மை வழிகேட்டிலிருந்து பாதுகாத்து, நேர்வழியின் பக்கம் அழைத்துச் செல்லும்.

ஏனெனில், நபி ﷺ அவர்களின் பாசறையில் பயின்ற நபித்தோழர்களுக்கு இம்மூன்று அம்சங்களை விளங்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் குழப்பம் இருக்கவில்லை. பிற்காலத்தில் பல்வேறு சமய, சமூக,

கலாச்சாரத் தாக்கங்களை உடைய சமூகங்களும், அரபுமொழியை அறியாத மக்களும் இஸ்லாமில் கூட்டம் கூட்டமாக நுழைந்த காலப் பகுதியில் இஸ்லாமிய சமூகத்தில் அந்நிய கலாச்சாரங்களின் சிந்தனைகள் தாக்கம் செலுத்தலாயின. இதுவரை இருந்து வந்த இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியம், சிந்திக்கும் நடைமுறை, ஆதாரங்களை அணுகும் முறை ஆகியவற்றில் மாற்றம் நிகழ்ந்தது. ஆகவே, இவை தொடர்பாக விரிவான கல்விகளும் நேரான பார்வை உடைய தெளிவும் வழங்க வேண்டிய அவசியம் அறிஞர்களுக்கு உருவானது.

ஹிஜ்ரி முதல் நூற்றாண்டு வரை ஸலஃப்களின் வழிமுறையிலேயே கல்வி கற்றல், கல்வி கற்பித்தல், கல்வி நூல்களின் தொகுப்புகள் இடம்பெற்று வந்தன. அதன்படியே சமூகத்தில் பிரபல்யமாகியுள்ள ஃபிக்ஹ் துறையின் நான்கு இமாம்கள், அவர்களது நேரடி மாணவர்கள், அவர்களிடமிருந்து கல்வியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் மாணவர்கள் என எல்லோரும் கொள்கை, வணக்க வழிபாடு, மற்றும் ஏனைய மார்க்க விஷயங்களில் **منهج السلف** - மன்ஹஜுஸ் ஸலஃப் அதாவது ஸலஃப் என்ற முதல் மூன்று தலைமுறையினருடைய வழியிலேயே பயணித்தனர்.

இதன் பின்னர் வந்த காலத்தில் ஏற்பட்ட அந்நிய சிந்தனையின் தாக்கமானது, பொதுமக்களையும் சில ஆட்சியாளர்களையும் கவர்ந்தது. வரலாற்றில் தோன்றிய சிற்றரசர்களும் பேரரசர்களும் தமது அதிகாரத்தை இச்சிந்தனைச் சிதைவுகளுக்கு ஆதரவாகப் பயன்படுத்தினர். இதனால் இஸ்லாமிய சமூகத்தில் **علم الكلام** - இல்முல் கலாம் கிரேக்க தத்துவம், **منطق** - மன்திக் தர்க்கவியல் போன்ற மனிதர்கள் உருவாக்கிய இறையியல் துறைகள் மார்க்க ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும் துர்ப்பாக்கிய நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக **تصوف** - தஸவ்வுஃப் எனும் ஆன்மிகம் உருவானது. பிறகு, அதிலிருந்து தங்கள் குருக்களை புனிதப்படுத்துவது, அவர்களுக்கு இறைத்தன்மையை கற்பிப்பது உருவானது. மேலும், தங்கள் ஷைகுகளின் கப்ருகளை புனிதப்படுத்துதல், அவற்றுக்கு மரியாதை செய்வது என்ற பெயரில் சடங்குகள் செய்வது உருவானது. இறுதியாக இவர்களில் பலர் அந்த கப்ருகளை வணங்கும் அளவிற்கு அந்த நிலை சென்று விட்டது.

அத்தோடு, குர்ஆனையும் ஸுன்னாவையும் சந்தேகத்திற்கு இடமான

உறுதியற்ற ஆதாரங்களாகக் கருதிய அவர்கள், தர்க்க ஆதாரங்களே புத்திக்குப் பொருத்தமானது; அறிவு ரீதியானது எனக் கருதினர். அதனால், மார்க்க ஆதாரங்களை விட சுயசிந்தனைக்கு முன்னுரிமை அளித்தனர். இதன் நீட்சியானது நிலைமையை இன்னமும் மோசமாக்கியது. அதாவது, ஒருவர் கொள்கை அடிப்படையில் எந்த வழியில் இருக்கிறார் என்பதை அறிவதே சிரமமாகும் நிலை தோன்றியது. அதாவது, **مذهب** மத்ஹபில் **شافعي** 'ஷாஃபிஈ' ஆகவும், அகீதாவில் தர்க்க கலையை சேர்ந்தவராகவும் இருந்தனர். அல்லது, மத்ஹபில் **حنفي** – ஹனஃபியாகவும் அகீதாவில் தர்க்க கலையை சேர்ந்தவராகவும் இருந்தனர். தமது இமாம்களின் அகீதாவுக்கே முரண்பட்டு, ஒரு குழப்பமான நிலையில் இருந்தனர்.

இவ்வாறான நிலை உருவாகியதில் அப்பாஸிய ஆட்சியின் பிற்கால கலீஃபாக்களுக்கும் ஃபாத்திமிய்யா அரசர்களுக்கும் நிறையவே பங்குண்டு. அரசியல் அதிகாரத்தின் கீழும் அரசு அங்கீகாரத்துடனும் இவை பயிற்றுவிக்கப்பட்டதால் முஸ்லிம் உலகில் இந்த கொள்கைகள் மிக வேகமாகப் பரவின. இவை சார்ந்த நூல்களும் அதிகரித்தன. பொதுமக்கள் கப்ருகளை தரிசிப்பதும் **خانقاه** கான்காஹ் என்ற திக்ரு மடங்களில் தங்கி தியானம் செய்வதும்தான் இஸ்லாம் என்று எண்ணுமளவுக்கு நிலைமை மாறியது. என்றாலும், வரலாறு நெடுகிலும் நபி ﷺ அவர்களின் வாக்கிற்கு ஏற்ப அல்லாஹ்வின் பேருதவியால், ஒரு கூட்டம் இத்தகைய வழிகேடுகளிலிருந்து விலகியே இருந்து வந்தது.

இந்தக் கூட்டம்தான் நபி ﷺ அவர்கள் புகழ்ந்துரைத்த மறுமை வரை சத்தியப் பாதையில் நிலைத்திருக்கின்ற, இறையருள் கிடைக்கப்பெற்ற கூட்டமாகும். இவ்வாறு சத்தியத்தில் நிலைத்திருந்த **السلف الصالحون** அஸ் ஸலஃபுஸ் ஸாலிஹூன் என்ற அந்த சான்றோர்கள் **إيمَان** – ஈமான், **إسلام** – இஸ்லாம், **إحسان** – இஹ்ஸான் ஆகிய இம்மூன்று துறைகளையும்

1. **عقيدة** – (அகீதா) நம்பிக்கைக் கோட்பாடு

2. **عبادة** – (இபாதத்) வணக்க வழிபாடு

3. **إحسان** – (இஹ்ஸான்) உளப்பரிசுத்தம், இறைசிந்தனை, இறைக்கண்காணிப்பு உணர்வு

என்று வகைப்படுத்தி விளக்கினார்கள். இந்த மூன்றிலும் ஈமான் பற்றிய கோட்பாடுகளை விளக்கும் அகீதா என்ற விஷயம் முதன்மையானதும், தலைமையானதும் ஆகும். இதில் தவறிழைக்கும்போது இம்மை, மறுமை வாழ்வு பாதிப்புக்குள்ளாகி விடும். ஏனெனில், அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஈமான் இன்றியமையாதது.

இந்த வகைப்படுத்தல்கள் வெறுமனே அமல்கள் செய்யும் முறைகளை விளக்குவதை மட்டும் இலக்காகக் கொண்டிராது, இஸ்லாமிய அடிப்படைகளையும் அதற்கான ஆதாரங்களையும் எவ்வாறு புரிந்துகொள்வது, அவற்றை ஆய்ந்தறிவதற்கான எல்லைகள், வரைமுறைகள் என்பவற்றையும் விளக்கி ஒழுங்குபடுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.

வஹியின் ஒளியில் வளர்ந்த ஸஹாபாக்களும் அவர்களின் வார்ப்பில் உருவான தாபியீன்களும் அவர்களிடம் பயின்ற தபஉத் தாபியீன்களும் நபி ﷺ அவர்கள் புகழ்ந்துரைத்தது போலவே மிகவும் நம்பிக்கையாகவும் அறிவுப்பூர்வமாகவும் தெளிவாகவும் இப்பணியை மேற்கொண்டனர். அவர்கள் மேற்கொண்ட அவ்வழிமுறையும் அவர்கள் கையாண்ட அணுகுமுறைகளுமே **المنهج السلفي** அல் மன்ஹஜுஸ் ஸலஃபீ எனப்படும் மரபுவாத அணுகுமுறை என அறிமுகமானது.

இதன் நடைமுறை வடிவத்தை நபியவர்களிடமிருந்து ஸஹாபாக்களும் ஸஹாபாக்களிடமிருந்து தாபியீன்களும் தாபியீன்களிடமிருந்து தபஉத் தாபியீன்களும் பெற்றுக்கொண்டதோடு, அதன் பாரம்பரிய வழியில் தமது நடை, உடை, பாவனை, மற்றும் சிந்தனை, பேச்சு, நம்பிக்கை என்பவற்றையும் வரையறுத்துக் கொண்டனர். இந்த வழிமுறைதான் **منهج السلف** - மன்ஹஜுஸ் ஸலஃப் எனும் சான்றோர் உடைய அணுகுமுறை என அடையாளப்படுத்தப்படுகிறது.

தான்தோன்றித்தனமாக மார்க்கத்தை விளங்க, விளக்க எத்தனிப்போரும், தன்னை ஆதரிக்கும் ஒரு கூட்டம் தனக்குப் பின்னால் வரவேண்டும் என்பதற்காகப் பாடுபடுவோரும் இந்தக் கட்டுக்கோப்புக்களை விரும்புவதில்லை. இவர்கள்தான் **أهل الأهواء** அஹ்லுல் அஹ்வா எனப்படும் மனோஇச்சைக்காரர்கள் ஆவார்கள். தாம் விரும்புகின்ற அர்த்தங்களை வஹிக்கு வழங்கி, தமது கருத்துத்தான் சரியானது

எனப் பிடிவாதம் கொள்ளும் அதேவேளை, நவீன அறிவியல் இல்லாத காலத்தில் வாழ்ந்த அஸ் ஸலஃபுஸ் ஸாலிஹூன் முதல் மூத்த முன்னோடிப் பரம்பரையினரான சான்றோரைத் தரக்குறைவாகச் சித்தரிக்கும் மனோபாவமும் இவர்களிடம் காணப்படுகிறது.

தங்களை சத்தியவாதிகள் எனக் காட்டிக்கொள்ளும் இவர்கள் குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை விளங்குவதற்கு ஸலஃப் கையாண்ட வழிமுறைகளிலிருந்து விலகிச் சென்று, ஆதாரங்களை விட அறிவை முதன்மைப்படுத்துகின்றனர். கருத்து வேறுபாட்டுக்குரிய விஷயங்களுக்காக இவர்கள் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து சென்றனர்.

இதன் விளைவு, மனோஇச்சைக்காரர்களது கருத்துக்கள் மார்க்கத்தில் உள்ளவைதான் என பொதுமக்கள் எண்ணுமளவுக்கு அவர்களது வார்த்தை ஜாலங்களும் குறுக்கு வாதங்களும் தூய இஸ்லாமின் சாயம் பூசப்பட்டவையாகக் காணப்படுகின்றன. தமது பிழையான நிலைப்பாட்டை மக்கள் ஏற்றுக்கொள்வதற்காக சமூகவியல் தொடர்பான கருத்துக்களை கவர்ச்சிகரமாக முன்வைத்து, அதன் நிழலில் தமது பிழையான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

அண்மைக் காலமாக தமிழ் உலகில் பொதுவாகவும் தமிழகத்திலும் இலங்கையிலும் குறிப்பாகவும் இந்தத் தாக்கம் கடுமையாகப் பரவி வருகிறது. இது மாதிரியான குழப்பத்தையும் அதற்கான தெளிவையும் அரபுலகம் ஆரம்ப காலத்திலேயே பெற்றுக்கொண்டாலும் தமிழுலகம் இச்சிந்தனைச் சிதைவுக்குப் புதிதாகவே முகம்கொடுத்து வருகிறது. குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அரபுமொழிப் புலமையுள்ளோர் மற்றும் இஸ்லாமிய அறிஞர்களின் பற்றாக்குறையால் இவை பற்றிய தெளிவுகள் இன்னமும் மக்களைச் சரியாகச் சென்றடையவில்லை.

இந்தத் தேவையை உணர்ந்து, இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய வழிகெட்ட பிரிவுகள் என்ற நூலைத் தயாரித்த போதுதான் அஹ்லுஸ் ஸுன்னா பற்றி தனியான தொகுப்பொன்று தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உருவானது. இக்கட்டத்தில்தான் 2003 அளவில் ரியாத் நகரில் நடந்த கல்விக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்ட

சந்தர்ப்பத்தில் الوجيز في عقيدة السلف الصالح (அஸ் ஸலஃபுஸ் ஸாலிஹ் உடைய அகீதாவில் சுருக்கமான நூல்) எனும் இந்நூலை வாங்கக் கிடைத்தது. என்றாலும் 2023 இல்தான் அதனைத் தமிழில் கொண்டுவரும் வாய்ப்பை பெற்றேன். அல் ஹம்து லில்லாஹ்

சாதாரணமாக அகீதா பற்றிப் படிக்க விரும்பும் மாணவர்கள், அழைப்பாளர்கள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கோட்பாடுகளை ஒரே பார்வையில் தெரிந்துகொள்ளும் விதத்தில் மிக இரத்தினச் சுருக்கமாகவும் அதேவேளை, மூடலற்ற மிகத் தெளிவான அமைப்பிலும் இந்நூலினை அஷ் ஷைக் அப்துல்லாஹ் இப்னு அப்தில் ஹமீத் அல் அஸரீ அவர்கள் தொகுத்தளித்துள்ளார். இந்நூலினை நூலாசிரியர் அவர்கள் மூன்று பிரிவுகளாக அமைத்துள்ளார்கள்.

முதல் பிரிவில் அகீதா துறையில் பயன்படுத்தப்படுகின்ற அகீதா, ஸலஃப், அஹ்லுஸ் ஸுன்னா போன்ற மிக முக்கிய சொற்களுக்கான வரைவிலக்கணங்கள் பற்றிய தெளிவுரைகளை வழங்கியுள்ளார்கள். இரண்டாவது பிரிவில் அஸ் ஸலஃபுஸ் ஸாலிஹீன் உடைய அகீதாவின் அடிப்படைகளை பதினொரு தலைப்புகளில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். மூன்றாவது பிரிவில் பிற்சேர்க்கைகள் என்ற வகையில் சரியான அகீதாவைப் புரிந்துகொள்ள உதவுகின்ற மேலதிக தகவல்களை சிறு குறிப்புகளாக முன்வைத்துள்ளார்கள்.

அல்லாஹ் அவரது பணியை ஏற்றுக்கொண்டு அவருக்கு அருள்பாலிப்பானாக!

இந்த வகையில், வழிகேட்டிற்கு இட்டுச் செல்லக்கூடிய சிந்தனை குழப்பங்களிலிருந்து பொதுவாக மக்களையும், குறிப்பாக இளம் தலைமுறையினரையும் காப்பாற்றக்கூடிய விளக்கத்தையும் தெளிவையும் இந்நூல் கொண்டுள்ளது. குறிப்பாக, மன்ஹஜுஸ் ஸலஃப் – சான்றோர் அணுகுமுறை பற்றித் தெளிவாக முன்வைக்கும் நூலாக இது விளங்குகிறது.

இந்த நூலுக்கான எனது தமிழாக்கத்தை பதிப்பித்து வெளியிட முன்வந்த தாருல் ஹுதா நிறுவனத்தின் ஊழியர் இந்தியாவைச் சேர்ந்த நண்பர் உமர் ஷரீஃப் அவர்களுக்கு அல்லாஹு தஆலா நற்கூலி வழங்குவானாக!

இம்மொழிபெயர்ப்பைப் பதிப்பித்து வெளியிடுவதற்கும் மொழிபெயர்ப்பை வாசித்துச் சரிபார்த்து உறுதிப்படுத்துவதிலும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அறிஞர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நூலின் தமிழ் தவறுகளை சரிபார்த்த எனது அன்பு மனைவி முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக, தமிழ்மொழித் துறை உதவி விரிவுரையாளர் அப்துல் லத்தீப் பாத்திமா இர்பானா அவர்களுக்கும் எனது கல்வித்துறை வளர்ச்சியிலும் எழுத்துத்துறை வளர்ச்சியிலும் உந்துதல் அளித்து வந்த நண்பர் ஏ.எல். கலீலுர் ரஹ்மான் (எம்.ஏ) அவர்களுக்கும் எனது கல்வித் தந்தை அஷ் ஷைக் அபூ பக்ர் ஸித்தீக் மதனீ அவர்களுக்கும் எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன். அத்தோடு மார்க்கக் கல்வி கற்பதற்குத் தேவையான சூழலில் என்னை கொண்டுசேர்த்த என் அன்புக்கும் பாசத்துக்குமுரிய பெற்றோருக்கும் என் நன்றிகளும் பிரார்த்தனைகளும் உரித்தாகட்டும். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக.! எல்லாவற்றுக்கும் மேலாக எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் நன்றியும் உரித்தாகட்டும். அஹ்லுஸ் ஸுன்னாவின் அகீதாவை இரத்தினச் சுருக்கமாக உள்ளடக்கியிருக்கும் இந்நூலை மக்கள் மத்தியில் பரவலாக்கும் அனைவருக்கும் அல்லாஹ் அருள்பாலிப்பானாக!

எமது பணியை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக.

الحمد لله رب العالمين

وصلى الله وسلَّم على نبينا محمَّد وعلى آله وصحبه أَجمعين

சஃமூன் எஸ். றமழான்

****

மூல நூலாசிரியரின் முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. அவனை நாம் புகழ்கிறோம். அவனிடம் உதவி தேடுகிறோம். எங்கள் உள்ளங்களின் தீமைகளிலிருந்தும் எங்கள் செயல்களின் தீங்குகளிலிருந்தும் நாம் அவனிடம் பாதுகாவல் தேடுகிறோம். யாரை அல்லாஹ் நேர்வழிப்படுத்தினானோ அவனை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அல்லாஹ் யாரை வழிகெடுத்தானோ அவனை நேர்வழிப்படுத்துபவர் யாரும் இல்லை. மேலும், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையும் இல்லை என சாட்சி சொல்கிறேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதரும் அடியாரும் ஆவார்கள் என சாட்சி சொல்கிறேன்.

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ
وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ﴿١٠٢﴾

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அஞ்சவேண்டிய உண்மையான முறையில் அஞ்சுங்கள். நீங்கள் முஸ்லிம்களாக இருக்கும் நிலையிலேயே தவிர இறந்து விடாதீர்கள். (அல்குர்ஆன் 3:102)

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱتَّقُوا۟ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُم مِّن نَّفْسٍ وَٰحِدَةٍ وَخَلَقَ مِنْهَا
زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَآءً ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ٱلَّذِى تَسَآءَلُونَ بِهِۦ
وَٱلْأَرْحَامَ ۚ إِنَّ ٱللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا ﴿١﴾

மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சுங்கள். (அவன்) உங்களை ஒரே ஓர் ஆன்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து அதிகமான ஆண்களையும் பெண்களையும் (இவ்வுலகத்தின் பல பாகங்களில்) பரப்பினான். அல்லாஹ்வை அஞ்சுங்கள். அவன் மூலமாகவே உங்களுக்குள் (தேவைகளை ஒருவர் மற்றவரிடம்) கேட்டுக் கொள்கிறீர்கள். அன்றி, இரத்த உறவுகளை முறிப்பதைப் பயந்து

கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பாளனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4:1)

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا ﴿٧٠﴾ يُصْلِحْ لَكُمْ أَعْمَـٰلَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَمَن يُطِعِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ﴿٧١﴾

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். நேர்மையான பேச்சைப் பேசுங்கள். (அல்லாஹ்) உங்கள் அமல்களை உங்களுக்குச் சீர்படுத்துவான். உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் யார் கீழ்ப்படிவாரோ திட்டமாக அவர் மகத்தான வெற்றி பெறுவார். (அல்குர்ஆன் 33:70,71)

பேச்சுக்களில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டல்களில் மிகவும் சிறந்தது முஹம்மத் ﷺ அவர்களின் வழிகாட்டல்களாகும். காரியங்களில் மிகவும் மோசமானது அவற்றில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டவை ஆகும். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அனைத்தும் அனாச்சாரமாகும். எல்லா அனாச்சாரங்களும் வழிகேடுகளாகும். எல்லா வழிகேடுகளும் நரகத்தில்தான்.

சகோதரர்களே!

இந்நூல், ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோர் வழிவந்த أهل السنة والجماعة அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய அகீதா பற்றி விளக்கும் சுருக்கமான நூலாகும்.

இன்றைய இஸ்லாமிய சமுதாயத்தின் சமகால இயக்கங்களில் நிலவுகிற பிரிவினைகளும் கருத்து முரண்பாடுகளும் இதைத் தொகுக்க என்னை தூண்டின. ஒவ்வொரு அமைப்பும் தனது கோட்பாட்டுக்காகவும் வழிமுறைக்காகவுமே அழைப்பு விடுக்கின்றன. தமது கூட்டத்தை மட்டுமே தூய்மையாக்குகின்றன. இவர்களில் யாரைப் பின்பற்றுவது, யாரை முன்மாதிரியாக எடுத்துக்கொள்வது என்று மக்கள் குழப்பமடைகின்றனர்.

என்றாலும், அல்லாஹ்வின் உதவியால், இந்த சமுதாயத்தின் நன்மை அழியவுமில்லை; அழியவும் மாட்டாது. ஏனெனில், நபி ﷺ அவர்கள் கூறியது போல், ஒரு பிரிவினர் இந்த நேர்வழியையும் சத்தியத்தையும் தொடர்ந்து பற்றிப்பிடித்துக் கொண்டே இருப்பார்கள். இந்நிலை மறுமை நாள் வரை நீடித்திருக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ ثَوْبَانَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ لَا تَزَالُ طَائِفَةٌ مِنْ أُمَّتِي ظَاهِرِينَ عَلَى الْحَقِّ، لَا يَضُرُّهُمْ مَنْ خَذَلَهُمْ، حَتَّىٰ يَأْتِيَ أَمْرُ اللهِ وَهُمْ كَذَٰلِكَ

என் சமுதாயத்தில் ஒரு கூட்டம் தொடர்ந்து சத்தியத்திலேயே நிலைத்திருக்கும். அவர்களைக் கைவிடுபவர்கள் அவர்களுக்கு எந்த தீங்கும் செய்யமுடியாது. அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை அவர்கள் அப்படியே இருப்பார்கள்.[8]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَمَّارِ بْنِ يَاسِرٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَثَلُ أُمَّتِي مَثَلُ الْمَطَرِ لَا يُدْرَىٰ أَوَّلُهُ خَيْرٌ أَمْ آخِرُهُ

என் சமுதாயம் மழை போன்றதாகும். அதன் ஆரம்பம் சிறந்ததா; அல்லது அதன் இறுதி சிறந்ததா என்று அறிய முடியாது.[9]

ஆகவே, இறைத்தூதர் ﷺ அவர்கள் கொண்டு வந்த உண்மையான இஸ்லாமை பற்றிப்பிடித்திருக்கும் இந்தக் கூட்டத்தை இனங்கண்டு கொள்வது நம்மீது அவசியமாகிறது.

இந்த குழுதான், الفرقة الناجية - அல் ஃபிர்க்கதுன் நாஜியா - வெற்றி பெற்ற கட்சியினர், மற்றும் الطائفة المنصورة - அத் தாஇஃபத்துல் மன்ஸூரா - உதவி செய்யப்பட்ட பிரிவினர் ஆவர்.

8. அறிவிப்பாளர்: ஸவ்பான் மவ்லா ரஸூலில்லாஹ் ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1920.
9. அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர் ﷺ, நூல்: முஸ்னத் அஹ்மத் எண்: 18881.

இந்தப் பிரிவினர்தான் أهل السنة والجَماعة - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ - நபிவழியையும் நபித்தோழர்களையும் பின்பற்றுவோர், أهل الحديث அஹ்லுல் ஹதீஸ் - நபிமொழியை பின்பற்றுவோர், أهل الأثر அஹ்லுல் அஸர் - நபிமொழியாளர்கள், أهل الاتباع - அஹ்லுல் இத்திபா - பின்பற்றுவோர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள், நபி ﷺ அவர்களும் அவர்களது தோழர்களும் சென்ற நேரான வழிமுறையில் சென்றவர்கள் ஆவார்கள்.

அந்த நேரான வழியை தெளிவுபடுத்தும் விதமாக எனது الْـمُيَسَّرُ فِي عَقِيْدَةِ السَّلَفِ الصَّالِـحِ அல் முயஸ்ஸர் ஃபீ அகீதத்திஸ் ஸலஃபிஸ் ஸாலிஹ் எனும் நூலிலிருந்து உங்கள் கைகளில் தவழும் இந்த அல்வஜீஸ் எனும் இந்த நூலைத் தொகுத்தேன்.

ஒவ்வொரு வாசகரும், குறிப்பாக இஸ்லாமிய விழிப்புணர்வு கொண்ட இளம் தலைமுறையினர் பயனடையும் விதத்தில் இந்த நூலைச் சுருக்கமான, தெளிவான வாக்கிய நடையில் அமைப்பதில் அதிக கவனம் செலுத்தியுள்ளேன். அதே நேரத்தில், முன்னோடிகளான இமாம்களால் ஷரீஆ வழக்கத்தில் பின்பற்றப்பட்டு வந்த சொற்களை முடிந்த வரை நானும் இந்த நூலில் கடைபிடித்துள்ளேன். நேர்வழியில் பயணிக்க விரும்பும் வாலிப ஆண்கள், வாலிப பெண்கள் மற்றும் இஸ்லாமை தம் வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொண்ட புதியவர்களும் ஸலஃப் ஸாலிஹ் உடைய அகீதாவை மொத்தமாகவும் எளிதாகவும் கற்றுக்கொள்ள இந்நூல் அவர்கள் எல்லோருக்கும் உதவும் எனக் கருதுகிறேன்.

மேலதிக விளக்கமும் தெளிவும் அவசியமாக இருக்கிற இடங்களில் தவிர வேறு எங்கும் மேலதிகமாக எதையும் நான் என் சார்பாக சேர்க்கவில்லை. மேலும், இந்த நூலின் இறுதிப் பகுதியில் இதில் குறிப்பிடப்படுகிற ஆதார நூல்களின் பட்டியலை இணைத்துள்ளேன்.

முடிவாக, இந்த அல் வஜீஸ் எனும் குறிப்பேட்டை வெற்றிகரமாக எழுதி முடிக்கும் பணியில் ஈடுபட அருள்பாலித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன். மேலும் இந்த சிறிய எனது ஆய்வு, முஸ்லிம்களின் நம்பிக்கைகளில் ஏற்பட்டுள்ள தவறுகளை

சீர்செய்வதற்குப் பங்களிக்கும் என்றும், அது அவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும் நம்புகிறேன். அல்லாஹ்வின் வேதத்தின் பக்கமும் அவனது தூதர் ﷺ அவர்களின் ஸுன்னாவின் பக்கமும் திரும்புவதற்கான ஒரு உந்துதலாகவும் இந்த நூல் அமைய வேண்டும் என அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கிறேன்.

மேலும், இதில் உள்ளடங்கியுள்ள கருத்துகளை மதிப்பாய்வு செய்தும் தேவையான ஆலோசனைகளை வழங்கியும் இந்த அல் வஜீஸ் எனும் ஆக்கத்தை நிறைவு செய்ய உதவிய அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். அவர்களில் முதன்மையானவர்களாக மதிப்பிற்குரிய ஷைக் ஸஊத் பின் இப்ராஹிம் அஷ் ஷுரைம் மற்றும் மதிப்பிற்குரிய ஷைக் முஹம்மது பின் ஜமீல் ஸைனூ ஆகிய இருவரும் இப்புத்தகத்தைப் படித்து, அதற்கு ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலிகளை அருள்வானாக.

இது, அடியேனின் சிறியதோர் முயற்சியாகும். இதை நான் மரியாதைக்குரிய வாசகர்களுக்கு முன் சமர்ப்பிக்கிறேன். நான் சொல்வது சரியென்றால், அது அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். வெற்றியைத் தருபவன் அவனே! மகிமையனைத்தும் அவனுக்கே உரித்தானது. நான் தவறு செய்திருந்தால் அது என்னிடமிருந்தும் ஷைத்தானிடமிருந்தும் வந்ததாகும்.

மேலும், இதில் ஏதும் தவறை யாரும் கண்டால் அது பற்றி எனக்கு அறிவித்து தர அவர்கள் பின்வாங்க மாட்டார்கள் என்றும் நம்புகிறேன்.

எனது இப்பணியை அல்லாஹு தஆலா அவனது கண்ணியமான திரு முகத்திற்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதாக ஆக்க வேண்டும் என எல்லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டுகிறேன். அல்லாஹ், எனது இப்பணியை ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் அவன் முஸ்லிம்களுக்குப் பயனளிக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்.

அல்லாஹ்வின் வேதத்திற்கும் அவனது தூதர் ﷺ அவர்களின் ஸுன்னாவிற்கும் மற்றும் நமது முன்னோர்களான ஸலஃப் ஸாலிஹ் உடைய புரிதலுக்கும் முரண்படுவதிலிருந்து அல்லாஹ்வின் பக்கம்

மீள்கிறேன். அவ்வாறான ஏதாவது முரண்பாடுகள் தற்செயலாக என்னில் இடம்பெற்றிருந்தால், என் வாழ்நாளிலும், என் மரணத்திற்குப் பின்னும் அதிலிருந்து நான் திரும்பி விடுகிறேன்.

وصلى الله وسلَّم على نبينا محمَّد وعلى آله وصحبه أَجمعين

எழுதியவர்:

மன்னிக்கும் இறைவனின் கருணையை எதிர்பார்த்தவனாக,

அபூ முஹம்மது அப்துல்லாஹ் பின் அப்தில் ஹமீத் பின் அப்தில் மஜீத் அல் இஸ்மாயில் அல் அஸரி, இஸ்தான்புல், அல்லாஹ் அவரை மன்னிப்பானாக, துல் ஹிஜ்ஜா, ஹிஜ்ரி 1416.

****

تَعْرِيفَاتٌ ضَرُورِيَّةٌ

அவசியமான வரைவிலக்கணங்கள்

تَعْرِيفُ الْعَقِيدَةِ
அகீதா உடைய வரைவிலக்கணம்

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை ஆணிவேர் அதன் நம்பிக்கைகளாகும். அந்த நம்பிக்கைகள் அரபு மொழியில் அகீதா எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றன.

இஸ்லாமின் மூலாதாரங்களான குர்ஆனும் ஹதீஸும் அவை இரண்டின் கல்விகளும் அரபு மொழியில் இருப்பதால் இது போன்ற இஸ்லாமிய கலைச் சொற்களைப் புரிந்து கொள்ள அரபு மொழியின் அடிப்படையிலும், இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிலும் கலைச் சொற்கள் விளக்கப்படுவதே மரபாகும். அதன்படி அகீதா என்ற சொல்லுக்கு அதன் துறை சார்ந்த பிரயோகங்களும் அதற்கான விளக்கங்களும் இந்த பகுதியில் விளக்கப்படுகிறது.

عقيدة - அகீதா என்ற சொல்லின் அகராதி பொருள்

அகீதா என்ற அரபுச் சொல் **عقد** அக்த் என்ற வேர்ச் சொல்லில் இருந்து வந்தது. அதன்படி அக்த் என்ற பதத்திற்கு அரபு மொழியில், கட்டுதல், சட்டமியற்றுதல், உறுதிப்படுத்துதல், கடைப்பிடித்தல், ஒப்பந்தம் செய்தல், இறுகிய முடிச்சு போடுதல், கொள்கையை உறுதி செய்தல், உறுதியான நம்பிக்கையை கொண்டுவருதல் போன்ற அர்த்தங்கள் காணப்படுகின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يُؤَاخِذُكُمُ ٱللَّهُ بِٱللَّغْوِ فِىٓ أَيْمَٰنِكُمْ وَلَٰكِن يُؤَاخِذُكُم بِمَا عَقَّدتُّمُ ٱلْأَيْمَٰنَ ۖ

உங்கள் வீணான சத்தியங்களை கொண்டு அல்லாஹ் உங்களைத் தண்டிக்க மாட்டான். எனினும், நீங்கள் உறுதிப்படுத்திய சத்தியங்களுக்காகவே உங்களைத் தண்டிப்பான். (அல்குர்ஆன் 5:89)

இந்த வசனத்தில் عَقَّدتُّمُ – அக்கத்தும் என்பது عقد அக்த் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் உறுதிப்படுத்துதல் ஆகும்.

இந்த வசனத்தின் படி عقيدة அகீதா என்பது, ஒரு விஷயத்தை நம்பியிருப்போரின் உள்ளத்தில் நிலைத்திருக்கின்ற, எவ்வித சந்தேகமும் இல்லாத உறுதியான நம்பிக்கையைக் குறிக்கிறது.

இஸ்லாம் மார்க்கத்தில் அகீதாவானது, வெளிப்படையான செயல்கள் அல்லாத உள்ளத்தின் நம்பிக்கை சார்ந்த விஷயங்களையே குறிக்கிறது. அதாவது, அல்லாஹ்வின் உள்ளமை, இறைத் தூதர்களின் வருகை, மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கைகள், இன்னும் இவை போன்ற நம்பிக்கை சார்ந்த விஷயங்களையே அகீதா என்ற சொல் உள்ளடக்கியுள்ளது.

அகாயித் – عقائد என்பது عقيدة அகீதா என்ற சொல்லின் பன்மையாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்துகளை தொகுத்து சொல்வதென்றால், ஒரு மனிதன் தனது உள்ளத்தில் கொண்டிருக்கும் உறுதியான, தீர்க்கமான, சந்தேகமற்ற நம்பிக்கை சார்ந்த விஷயங்களைக் குறிக்கக்கூடியதாக அகீதா என்ற சொல் இருக்கிறது. அந்த நம்பிக்கை சரியானதாகவும் இருக்கலாம். அல்லது, அந்த நம்பிக்கை பிழையானதாகவும் இருக்கலாம்.

இஸ்லாமிய ஷரீஆ வழக்கில் அகீதாவின் பொருள்:

இஸ்லாமிய ஷரீஆவில், உள்ளம் உண்மைப்படுத்தி, ஆன்மா அமைதியடைந்து, எவ்வித சந்தேகமும் இன்றி உறுதியோடும், தெளிவோடும் குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களின் அடிப்படையில் ஏற்றிருக்க வேண்டிய விஷயங்களையே அகீதா என்ற பதம் குறிக்கிறது.

அதாவது, இஸ்லாமில் அகீதா என்பது எவ்வித சந்தேகமும் கலக்காத, உறுதிமிக்க நம்பிக்கையையே குறிக்கிறது. அது நடைமுறைக்கு ஏற்றதாகவும், யூகங்களுக்கும் சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டதாகவும் இருக்க வேண்டும். உறுதியற்ற நம்பிக்கைகளுக்கு அகீதா என்று கூறப்படுவதில்லை.

இதன்படி, இஸ்லாமிய அகீதா என்பது, அல்லாஹ்வுடைய ربوبية ருபூபிய்யத் (–படைத்து பரிபாலிக்கும் தன்மை), அவனுடைய ألوهية

உலூஹிய்யத் (-அவன் மட்டுமே வணக்கத்திற்குரியவனாக இருப்பது), அவனது **الأسَمَاء والصفات** அல் அஸ்மா, வஸ் ஸி..ஃபாத் (அவனது பெயர்கள், மற்றும் பண்புகள்), மற்றும், மலக்குகள், வேதங்கள், இறைத்தூதர்கள், மறுமை நாள், கதர் - விதி, மற்றும் இவை அல்லாத மற்ற மறைவான விஷயங்கள், **أركان الإسلام** அர்கானுல் இஸ்லாம் - இஸ்லாமின் தூண்கள் மற்றும் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபவுத் தாபியீன்கள் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட விஷயங்கள் எல்லாவற்றையும் உறுதியாக நம்புவதாகும்.

அதுமட்டுமன்றி, **الطاعة** அத் தாஆ அதாவது, அல்லாஹ்வின் ஏவல்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதும், **الإتباع** அல் இத்திபா அதாவது, நபி ﷺ அவர்களைப் பூரணமாகப் பின்பற்றுவதும் இதில் அடங்கும்.

இந்த அடிப்படையில், இஸ்லாமிய அகீதா என்பது, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய அகீதாவையே குறிக்கிறது. ஏனென்றால், அதுதான் அல்லாஹ், தன் அடியார்களுக்காக எந்த நம்பிக்கையைப் பொருந்திக் கொண்டானோ அந்த நம்பிக்கையாக இருக்கிறது. மேலும், அதுதான் நபி ﷺ அவர்களால் புகழப்பட்ட முதல் மூன்று தலைமுறைகளில் வாழ்ந்த ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோர் ஆகிய ஸஹாபாக்கள் -நபித்தோழர்கள், தாபியீன்கள் - ஸஹாபாக்களை பின்பற்றியவர்கள், தபவுத் தாபியீன்கள் - ஸஹாபாக்களை பின்பற்றியவர்களை பின்பற்றியவர்கள் ஆகியோர் அனைவரும் ஏற்றிருந்த நம்பிக்கையாகும்.

இஸ்லாமிய அகீதாவுக்கு அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவினரிடம் பல பெயர்கள் காணப்படுகின்றன.

توحيد - தவ்ஹீத் - ஓரிறை நம்பிக்கை, ஓரிறை வழிபாடு, **سنة** ஸுன்னா - நபிவழி, **أصول الدين** உஸூலுத் தீன் - மார்க்கத்தின் அடிப்படைகள், **الفقه الأكبر** அல் ஃபிக்ஹுல் அக்பர் - மாபெரும் ஞானம், **الشريعة** அஷ் ஷரீஆ - சட்டம், **الإيمَان** அல் ஈமான் - நம்பிக்கை போன்ற சொற்களை அஹ்லுஸ் ஸுன்னா அகீதா துறையில் பயன்படுத்துகிறார்கள்.

****

تَعْرِيفُ السَّلَفِ
ஸலஃப் உடைய வரைவிலக்கணம்

மொழிரீதியாக ஸலஃப் உடைய விளக்கம்

سَلَفَ - ஸலஃப என்ற வினைச் சொல்லுக்கு கடந்துசென்றது; முடிந்துபோனது; முன்சென்றது போன்ற அர்த்தங்கள் உள்ளன. ஸலஃப் என்ற சொல்லுக்கு முன்சென்றவர்கள், மூதாதையர், முன்னோர், முன்னோடிகள் போன்ற அர்த்தங்களும் மொழியில் வழங்கப்படுகின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَجَعَلْنَٰهُمْ سَلَفًا وَمَثَلًا لِّلْءَاخِرِينَ ﴿٥٦﴾

அவர்களை நாம் (நிராகரிப்பாளர்களான) அவர்களுக்கு முன்னோடிகளாகவும் மற்றவர்களுக்குப் படிப்பினையாகவும் நாம் ஆக்கினோம். (அல்குர்ஆன் 43:56)

இந்த குர்ஆன் வசனத்தின்படி, ஸலஃப் என்ற வார்த்தையின் மொழிரீதியான பொருள், நமக்கு முன் வாழ்ந்த நம் பெற்றோர், உறவினர், மூத்தவர்கள், முன்னோர் போன்றவர்களைக் குறிக்கிறது. இதனால்தான் முஸ்லிம் சமூகத்தில், முன்னோர்கள் அல்லது முன்னோடிகள் என்ற வார்த்தையின் மூலம் ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபவுத் தாபியீன்கள் ஆகியோர் மட்டும் கருதப்படுகின்றனர். இவர்கள்தான் ஸலஃப் ஸாலிஹ் எனும் நல்லவர்களான முன்னோர் என அடையாளப் படுத்தப்படுகின்றனர்.

ஷரீஆ வழக்கில் ஸலஃப் என்பதன் விளக்கம்

அகீதா துறை சார்ந்த அறிஞர்கள், ஸலஃப் என்ற வார்த்தையை ஸஹாபாக்கள்; அல்லது, ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்கள்; அல்லது, ஸஹாபாக்கள், தாபியீன்கள் மற்றும் தபவுத் தாபியீன்கள் ஆகியோரை குறிப்பதற்காக பயன்படுத்துகிறார்கள். நபி ﷺ அவர்கள் சிறப்பித்துக் கூறிய மூன்று தலைமுறையில் வாழ்ந்தவர்கள் இவர்கள்தான்.

மேலும், இந்த மூன்று காலத்திற்கு நெருக்கமாக வாழ்ந்த இமாம்கள், ஸுன்னாவைப் பின்பற்றுவதிலும் அதனைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் بدعة - பித்ஆவையும் شرك - ஷிர்க்கையும் தாம் தவிர்த்திருந்ததுடன் அது பற்றி மக்களையும் எச்சரித்த மூத்த மார்க்க அறிஞர்கள் எல்லோரையும் ஸலஃப் என்ற சொல் உள்ளடக்கிக் கொள்ளும். குறிப்பாக, மார்க்க விஷயங்களில் முஸ்லிம் சமுதாயத்தினரால் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட, மார்க்கத்தின் சட்டத்துறை கல்வியில் பெரும் பங்காற்றிய இமாம்களும் இதில் அடங்குவார்கள்.

ஆகவே, இஸ்லாமிய சமுதாயத்தில் முதல் காலகட்டத்தில் வாழ்ந்தவர்களை ஸலஃப் ஸாலிஹ் என்று அழைக்கப்படுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يُشَاقِقِ ٱلرَّسُولَ مِنۢ بَعۡدِ مَا تَبَيَّنَ لَهُ ٱلۡهُدَىٰ وَيَتَّبِعۡ غَيۡرَ سَبِيلِ ٱلۡمُؤۡمِنِينَ
نُوَلِّهِۦ مَا تَوَلَّىٰ وَنُصۡلِهِۦ جَهَنَّمَۖ وَسَآءَتۡ مَصِيرًا ﴿١١٥﴾

யார் தனக்கு நேர்வழி தெளிவாகியதன் பின்னர் இந்த ரஸூலுக்கு முரண்பட்டு, முஃமின்களின் பாதை அல்லாததைப் பின்பற்றுவாரோ அவர் எதன் பக்கம் திரும்பினாரோ அதன் பக்கமே நாம் அவரை திருப்பி விடுவோம். அன்றி, அவரை நரகத்தில் நுழைவிப்போம். செல்லுமிடத்தில் அது மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 4:115)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلسَّٰبِقُونَ ٱلۡأَوَّلُونَ مِنَ ٱلۡمُهَٰجِرِينَ وَٱلۡأَنصَارِ وَٱلَّذِينَ ٱتَّبَعُوهُم بِإِحۡسَٰنٖ
رَّضِيَ ٱللَّهُ عَنۡهُمۡ وَرَضُواْ عَنۡهُ وَأَعَدَّ لَهُمۡ جَنَّٰتٖ تَجۡرِي تَحۡتَهَا ٱلۡأَنۡهَٰرُ خَٰلِدِينَ
فِيهَآ أَبَدٗاۚ ذَٰلِكَ ٱلۡفَوۡزُ ٱلۡعَظِيمُ ﴿١٠٠﴾

(இஸ்லாமில்) முந்தியவர்களான முதலாமவர்களான முஹாஜிர்களும், அன்ஸாரிகளும் மற்றும் நல்லறங்களில் அவர்களைப் பின்பற்றியவர்களும் - அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான்.

அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டனர். அவர்களுக்காக சொர்க்கங்களை அவன் தயார்படுத்தி இருக்கிறான். அவற்றுக்குக் கீழ் நதிகள் ஓடுகின்றன. அவற்றில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். அதுதான் மகத்தான வெற்றியாகும்.

(அல்குர்ஆன் 9:100)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: خَيْرُ النَّاسِ قَرْنِي، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ

மக்களில் சிறந்தோர் எனது தலைமுறையினர். பிறகு, அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு, அவர்களை அடுத்து வருபவர்கள் என நபி ﷺ கூறினார்கள்.[10]

நபி ﷺ அவர்கள், அவர்களின் தோழர்கள் மற்றும் நன்மையில் அவர்களைப் பின்பற்றியவர்கள் இந்த சமுதாயத்தின் ஸலஃப் ஆவார்கள். மேலும், நபியவர்களும் நபித்தோழர்களும் அவர்களை பின்பற்றியவர்களும் எதன் பக்கம் அழைத்தார்களோ அதன் பக்கம் அழைப்பவர்கள் அனைவரும் ஸலஃப் உடைய வழிமுறையில் உள்ளவர்கள் ஆவார்கள்.

ஸலஃப் வழிமுறையை பின்பற்றுவது என்ற விஷயத்தில் கால வரையறை மட்டும் ஒரு நிபந்தனையாக எடுக்கப்படுவதில்லை. அதாவது அந்த காலத்தோடு சேர்ந்திருந்தவர்கள் மட்டுமே ஸலஃப்களை பின்பற்றுவோர் என்பது அல்ல. மாறாக, அகீதாவிலும் சட்டங்களிலும் நற்குணங்களிலும் குர்ஆன் மற்றும் ஸுன்னாவுக்கு ஸலஃப் உடைய புரிதலின் படி உடன்பட்டிருப்பது மட்டுமே நிபந்தனையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே, எவர்கள் காலத்தால் அந்த மூன்று தலைமுறையிலிருந்து மிகுந்த இடைவெளியில் இருந்தாலும் அவர்கள் குர்ஆனையும் ஸுன்னாவையும் அந்த ஸலஃப் உடைய வழியில் பின்பற்றி நடந்தால் அவர்களும் ஸலஃப்களை பின்பற்றுவோர்

10. அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6429.

ஆவார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் காலம் மற்றும் இடத்தால் எவ்வளவுதான் தூரம் இருந்தாலும் சரி. அதேவேளை, யார் அந்த ஸலஃபுக்கு முரண்பட்டாரோ அவர், அந்த ஸலஃப் உடைய காலத்தில் வாழ்ந்தாலும் அவர் ஸலஃப்களைச் சேர்ந்தவராக ஆக மாட்டார்.

ஸலஃப் ஸாலிஹ் உடைய இமாம் - முன்னோடி

இறைத்தூதர் நபி முஹம்மத் ﷺ அவர்கள்தான் ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோர் உடைய இமாம் - முன்னோடி ஆவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مُّحَمَّدٌ رَّسُولُ ٱللَّهِۚ وَٱلَّذِينَ مَعَهُۥٓ أَشِدَّآءُ عَلَى ٱلۡكُفَّارِ رُحَمَآءُ بَيۡنَهُمۡۖ تَرَىٰهُمۡ رُكَّعٗا سُجَّدٗا يَبۡتَغُونَ فَضۡلٗا مِّنَ ٱللَّهِ وَرِضۡوَٰنٗاۖ سِيمَاهُمۡ فِي وُجُوهِهِم مِّنۡ أَثَرِ ٱلسُّجُودِۚ ذَٰلِكَ مَثَلُهُمۡ فِي ٱلتَّوۡرَىٰةِۚ وَمَثَلُهُمۡ فِي ٱلۡإِنجِيلِ كَزَرۡعٍ أَخۡرَجَ شَطۡـَٔهُۥ فَـَٔازَرَهُۥ فَٱسۡتَغۡلَظَ فَٱسۡتَوَىٰ عَلَىٰ سُوقِهِۦ يُعۡجِبُ ٱلزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ ٱلۡكُفَّارَۗ وَعَدَ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّـٰلِحَٰتِ مِنۡهُم مَّغۡفِرَةٗ وَأَجۡرًا عَظِيمَۢا ﴿٢٩﴾

முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்; அவரோடிருப்பவர்களோ, (யுத்தம் செய்கிற) நிராகரிப்பாளர்களோடு கடினமானவர்களாகவும் தமக்கிடையில் கருணையாளர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் ஆசை வைத்தவர்களாக இருப்பதையும் அவர்கள் ருகூஃ செய்பவர்களாகவும் ஸுஜூது செய்பவர்களாகவும் இருப்பதை நீர் காண்கிறீர். அவர்களின் முகங்களில் ஸுஜூதின் தடயம் அவர்களுக்கான அடையாளமாக இருக்கிறது. இது தவ்ராத்தில் விவரிக்கப்பட்ட அவர்களின் தன்மையாகும். இன்ஜீலில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாவது, (நெல், கோதுமை போன்ற) ஒரு விளைச்சல் பயிரைப் போன்றதாகும். அது தனது (செடியின்) முளையை வெளியாக்கி, உறுதியடைகிறது. பிறகு அது தடிப்பமாகியது. தனது தண்டின் மீது அது சீராக நின்று, விவசாயிகளைக் கவர்கிறது. (இப்படித்தான் அல்லாஹ், முஃமின்களான) அவர்கள் மூலமாக

நிராகரிப்பாளர்களை ரோஷமூட்டுவதற்காக (நம்பிக்கையாளர்களை ஓங்கி உயரச் செய்கிறான்). நம்பிக்கை கொண்டு நன்மைகளைச் செய்த அவர்களுக்கு அல்லாஹ் (தனது) மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களித்துள்ளான். (அல்குர்ஆன் 48:29)

அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதையும் நபியவர்களுக்கு கட்டுப்படுவதையும் அல்லாஹ் இணைத்துக் கூறி இருக்கிறான்.

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يُطِعِ ٱللَّهَ وَٱلرَّسُولَ فَأُوْلَـٰٓئِكَ مَعَ ٱلَّذِينَ أَنْعَمَ ٱللَّهُ عَلَيْهِم مِّنَ ٱلنَّبِيِّـۧنَ
وَٱلصِّدِّيقِينَ وَٱلشُّهَدَآءِ وَٱلصَّـٰلِحِينَ ۚ وَحَسُنَ أُوْلَـٰٓئِكَ رَفِيقًا ﴿٦٩﴾

எவர்கள் அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் அல்லாஹ் அருள்புரிந்த நபிமார்கள், சத்தியவான்கள், இறைவழியில் உயிர் நீத்த தியாகிகள், மற்றும் நல்லவர்கள் ஆகியோருடன் (மறுமையில்) இருப்பார்கள். இவர்கள்தான் தோழர்களில் அழகானவர்கள் ஆவர். (அல்குர்ஆன் 4:69)

மேலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்குக் கட்டுப்படுவதைத் தனக்குக் கட்டுப்படுவதாக அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مَّن يُطِعِ ٱلرَّسُولَ فَقَدْ أَطَاعَ ٱللَّهَ ۖ
وَمَن تَوَلَّىٰ فَمَآ أَرْسَلْنَـٰكَ عَلَيْهِمْ حَفِيظًا ﴿٨٠﴾

எவர் இந்த இறைத்தூதருக்கு கீழ்ப்படிகிறாரோ அவர் திட்டமாக அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்து விட்டார். (நபியே!) எவர் (உம்மை புறக்கணித்து) திரும்பினாரோ அவர்கள் மீது பாதுகாவலராக உம்மை நாம் அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 4:80)

அடுத்து, நபியவர்களுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது நல்லறங்களை நாசமாக்கிவிடும் என அல்லாஹ் எச்சரித்திருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَلَا تُبْطِلُوٓاْ أَعْمَـٰلَكُمْ ﴿٣٣﴾

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்விற்கு கீழ்ப்படியுங்கள்! மற்றும், இந்தத் தூதருக்கு கீழ்ப்படியுங்கள்! உங்கள் அமல்களை வீணாக்கி விடாதீர்கள்! (அல்குர்ஆன் 47:33)

மேலும், இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு மாறுசெய்வதை அல்லாஹ் தடை செய்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يَعْصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَيَتَعَدَّ حُدُودَهُۥ يُدْخِلْهُ نَارًا خَـٰلِدًا فِيهَا وَلَهُۥ عَذَابٌ مُّهِينٌ ﴿١٤﴾

எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்து, அவனுடைய சட்டங்களை மீறுகிறாரோ அவரை அல்லாஹ் நரகத்தில் நுழைவிப்பான். அதில் அவர் நிரந்தரமாக தங்கி இருப்பார். மேலும், இழிவுபடுத்தும் வேதனையும் அவருக்குண்டு. (அல்குர்ஆன் 4:14)

மேலும், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஏவிய ஏவல்களையும் அவர்கள் தடுத்த விலக்கல்களையும் எடுத்து நடக்கும்படி அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டிருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمْ عَنْهُ فَٱنتَهُوا۟ ۚ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۖ إِنَّ ٱللَّهَ شَدِيدُ ٱلْعِقَابِ ﴿٧﴾

இந்த இறைத்தூதர் எதை உங்களுக்குக் கொடுத்தாரோ அதைப் பற்றிப் பிடியுங்கள். அவர் எதை விட்டு உங்களைத் தடுத்தாரோ அதை விட்டும் விலகிவிடுங்கள். அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் ஆவான்.
(அல்குர்ஆன் 59:07)

மேலும், நமது வாழ்க்கையின் அனைத்து காரியங்களிலும் நபி ﷺ அவர்களிடமே தீர்ப்புகளை தேடும்படியும் நபி ﷺ அவர்களின்

தீர்ப்புகள் மற்றும் கட்டளைகளின் பக்கமே நாம் திரும்பும்படியும் அல்லாஹு தஆலா நமக்குக் கட்டளையிட்டுள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا۟ فِىٓ أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴿٦٥﴾

ஆக, (உண்மை அவ்வாறு) இல்லை. உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்களுக்கிடையில் சச்சரவு ஏற்பட்டதில் அவர்கள் உம்மை தீர்ப்பாளராக்கி, பிறகு, நீர் தீர்ப்பளித்ததில் தங்கள் உள்ளங்களில் அறவே அதிருப்தி காணாமல் (–சங்கடத்தை உணராமல்) முழுமையாக (உமது தீர்ப்புக்கு) பணியும் வரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள். (அல்குர்ஆன் 4:65)

மேலும், நபி ﷺ அவர்கள்தான் முஃமின்களுக்கான அழகிய முன்மாதிரி, நல்ல தலைவர், பொருத்தமான முழுமையான முன்னோடி, பின்பற்றத் தகுந்த மிகச் சிறந்த உதாரணப் புருஷர் என அல்லாஹு தஆலா தனது நபியைப் பற்றி விளக்கி கூறுகிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِى رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا۟ ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْءَاخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

உங்களுக்கு, (அதாவது) அல்லாஹ்வை அதிகம் நினைவு கூர்ந்து அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஆசைப்படுகிறவர்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி நிச்சயமாக இருக்கிறது. (அல்குர்ஆன் 33:21)

மேலும், நபி ﷺ அவர்களின் பொருத்தத்தோடு அல்லாஹ் தனது பொருத்தத்தை இணைத்திருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱللَّهُ وَرَسُولُهُۥٓ أَحَقُّ أَن يُرْضُوهُ إِن كَانُوا۟ مُؤْمِنِينَ ﴿٦٢﴾

அவர்கள் உண்மை முஃமின்களாக இருந்தால், அவர்கள் திருப்திப்படுத்துவதற்கு மிக உரிமை உள்ளவர்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும்தான். (அல்குர்ஆன் 9:62)

மேலும், இறைத்தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றுவதை அல்லாஹ்வை நேசிப்பதின் அடையாளமாக அல்லாஹ் ஆக்கி இருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ
وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٣١﴾

நபியே! கூறுவீராக, உண்மையாகவே அல்லாஹ்வை நீங்கள் நேசிப்பவர்களாக இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்! (அப்போதுதான்) அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும், உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்போனாகவும் இரக்கமுள்ளவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 3:31)

மேலும், நபி ﷺ அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை அல்லாஹ் தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுடன் சேர்த்திருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ أَطِيعُوا۟ ٱللَّهَ وَٱلرَّسُولَ ۖ فَإِن تَوَلَّوْا۟ فَإِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْكَٰفِرِينَ ﴿٣٢﴾

(நபியே!) கூறுவீராக: அல்லாஹ்விற்கும் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். ஆக, நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்கள் மீது அன்பு வைக்கமாட்டான். (அல்குர்ஆன் 3:32)

இதனால்தான், பிரச்சனைகள், கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, அல்லாஹ்வின் வேதமான குர்ஆன் பக்கமும் அல்லாஹ்வின்

தூதரின் வழிகாட்டல்களான ஸுன்னாவின் பக்கமும் ஸலஃப் ஸாலிஹ் திரும்பிவிடுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ٥٩

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் உங்களுக்குள் ஒரு விஷயத்தில் பிணங்கிக்கொண்டால், (மெய்யாகவே) நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் திருப்பிவிடுங்கள். இதுதான் உங்களுக்கு சிறந்ததாகவும், மிக அழகான முடிவாகவும் இருக்கிறது! (அல்குர்ஆன் 4:59)

நபி ﷺ அவர்களுக்குப் பின்னர் ஸலஃப் - முன்னோரில் சிறந்தவர்கள் ஸஹாபாக்கள் - நபித்தோழர்கள் ஆவார்கள். நபித்தோழர்கள் நபியவர்களிடமிருந்து மார்க்கத்தை உண்மையாக, உளத்தூய்மையுடன் எடுத்துக்கொண்டார்கள். அல்லாஹ், குர்ஆனில் அவர்களை உயர்வாக வர்ணித்துப் பேசுகிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مِّنَ ٱلۡمُؤۡمِنِينَ رِجَالٞ صَدَقُواْ مَا عَٰهَدُواْ ٱللَّهَ عَلَيۡهِۖ فَمِنۡهُم مَّن قَضَىٰ نَحۡبَهُۥ وَمِنۡهُم مَّن يَنتَظِرُۖ وَمَا بَدَّلُواْ تَبۡدِيلٗا ٢٣

அவர்கள் அல்லாஹ்விடம் எதற்காக ஒப்பந்தம் செய்தார்களோ அதை உண்மைப்படுத்திய ஆண்களும் முஃமின்களில் இருக்கின்றனர். (வீர மரணமடைய தான் செய்த) தனது நேர்ச்சையை நிறைவேற்றியவரும் அவர்களில் உள்ளனர். (வீர மரணத்தை) எதிர்பார்ப்பவரும் அவர்களில் உள்ளனர். அவர்கள் (தங்கள் ஒப்பந்தத்தை) அறவே மாற்றிவிடவில்லை. (அல்குர்ஆன் 33:23)

இந்த வசனம் மட்டுமல்லாமல் பல நூறு குர்ஆன் வசனங்கள் ஸஹாபாக்கள் உடைய ஈமானுக்கும் நல்லமலுக்கும் மார்க்கப்பற்றுக்கும் சான்று பகருகின்றன.

அதற்கடுத்ததாக, ஸலஃப் – சான்றோரில் சிறந்தோராக ஸஹாபாக்களைத் தொடர்ந்து வந்த தலைமுறையினரான தாபியீன்கள் திகழ்கின்றனர். அவர்களும் நபியவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட காலகட்டங்களில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: خَيْرُ النَّاسِ قَرْنِي، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ

மக்களில் சிறந்தோர் எனது நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். பின்பு, அவர்களையடுத்து வந்தவர்கள். பின்பு, அவர்களையடுத்து வந்தவர்கள்.[11]

இதனால்தான், ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்கள் – இவர்கள் அல்லாத மற்றவர்களை விட – நாம் பின்பற்ற மிகத் தகுதியுடையோராக இருக்கின்றனர். ஏனெனில், அவர்கள் தங்களது ஈமானில் மிக உண்மையாளர்களாக இருந்தனர். தமது வணக்க வழிபாடுகளில் உளத்தூய்மை உடையவர்களாக இருந்தனர். அவர்கள் அகீதா மற்றும் ஷரீஆவின் பாதுகாவலர்கள், சொல்லிலும் செயலிலும் ஷரீஆவின் படி செயல்பட்டவர்கள். இதனால்தான், இந்த மார்க்கத்தையும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவையும் பரப்புவதற்காக அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَىٰ ثَلَاثٍ وَسَبْعِينَ مِلَّةً كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً وَاحِدَةً قَالُوا وَمَنْ هِيَ يَا رَسُولَ اللهِ قَالَ مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِي

எனது சமுதாயம் எழுபத்து மூன்று பிரிவினராக பிளவுறுவார்கள்.

11. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6429.

அவர்களில் ஒரு பிரிவினரைத் தவிர எல்லாரும் நரகத்தில் இருப்பார்கள். அதற்கு ஸஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் யார் எனக் கேட்க, நானும் எனது தோழர்களும் இருந்த வழியில் இருப்பவர்கள் என நபி ﷺ கூறினார்கள்.[12]

ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோரை பின்பற்றி, அவர்களின் வழிமுறையில் பயணிப்பவரை **سلفي** - ஸலஃபி என்று கூறப்படுகிறது. ஏனெனில், அவரை ஸலஃபோடு இணைப்பதற்காகவும் ஸலஃப்களை பின்பற்றாதவர்களிலிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவும் இவ்வாறு இணைத்துச் சொல்லப்படுகிறது.

وَمَن يُشَاقِقِ ٱلرَّسُولَ مِنۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ ٱلْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ ٱلْمُؤْمِنِينَ
نُوَلِّهِۦ مَا تَوَلَّىٰ وَنُصْلِهِۦ جَهَنَّمَ ۖ وَسَآءَتْ مَصِيرًا ﴿١١٥﴾

தனக்கு நேர்வழி தெளிவாகியதன் பின்னர் இந்த ரஸூலுக்கு முரண்பட்டு செல்பவரையும் (நபித்தோழர்களாகிய) முஃமின்களின் வழியல்லாததைப் பின்பற்றுபவரையும் அவர் சென்ற பக்கமே நாம் திருப்பி விடுவோம். மற்றும், அவரை நரகத்தில் நுழைவிப்போம். மீளுமிடங்களில் அது மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 4:115)

உண்மையான ஒரு முஸ்லிம், ஸலஃபுடன் தன்னை இணைப்பதைக் கொண்டு பெருமைப்படாமல் இருக்க முடியாது.

السَّلَفِيَّة அஸ் ஸலஃபிய்யா - என்ற பதமானது, இஸ்லாமை ஸலஃப் ஸாலிஹ் உடைய வழியில் பெற்றுக்கொள்ளவும் படிக்கவும் புரியவும் அதனைச் செயல்படுத்தவும் மேற்கொள்ளப்படுகிற வழிமுறையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிற ஒரு சொல்லாகும்.

மேலும், அல்லாஹ்வின் வேதத்தையும் நபி ﷺ அவர்களுடைய ஸுன்னாவையும் ஸலஃப் உடைய புரிதலுடன் உறுதியாக பற்றிப்பிடிப்பவர்களுக்குச் சொல்லப்படுகிற அடையாளப் பெயராகவும் ஸலஃபிய்யா என்பது இருக்கிறது.

****

12. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் رضي الله عنهما, நூல்: ஜாமிவுத் திர்மிதீ எண்: 2641.

تَعْرِيفُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய வரைவிலக்கணம்

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற வார்த்தையின் வரைவிலக்கணத்தை விளங்கிக் கொள்ள அதில் அடங்கியிருக்கும் ஸுன்னா மற்றும் ஜமாஆ ஆகிய இரண்டு பதங்களின் பயன்பாட்டையும் புரிந்துகொள்வது அவசியமாகும்.

السنة – **அஸ் ஸுன்னா**

அரபி மொழியில் அஸ் ஸுன்னா, سن ஸன்ன என்ற வினைச் சொல்லிலிருந்து ஸுன்னா என்ற பதம் பிறந்தது. அதாவது, சட்டத்தை அமைத்தான், சட்டத்தை ஏற்படுத்தினான், காரியத்தைத் தெளிவுப்படுத்தினான், விவரித்தான், பாதையை நடக்க இலகுவாக்கினான் என்பது அதன் அர்த்தமாகும்.

இதிலிருந்துதான் ஸுன்னா என்ற சொல் வழிமுறை என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அந்த வழிமுறை நல்லதாகவும் இருக்கலாம். அல்லது தவறானதாகவும் இருக்கலாம்.

பின்வரும் ஹதீஸில் ஸுன்னா என்ற பதம் இந்த பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَتَتْبَعُنَّ سَنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ، شِبْرًا شِبْرًا وَذِرَاعًا بِذِرَاعٍ

நிச்சயமாக நீங்கள் உங்களுக்கு முன் சென்ற சமூகத்தின் ஸுனன் - வழிமுறைகளை ஜானுக்கு ஜான், முழத்துக்கு முழம் பின்பற்றுவீர்கள் என நபி ﷺ கூறினார்கள்.[13]

13. அறிவிப்பாளர்: அபூ சயீதுல் குத்ரீ ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 7320.

அதாவது மார்க்க மற்றும் உலக காரியங்களில் அவர்களின் பாதையை நீங்கள் பின்பற்றுவீர்கள் என்பது அதன் பொருளாகும்.

மேலும், நபி ﷺ அவர்களின் பின்வரும் கூற்றிலும் ஸுன்னா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

مَنْ سَنَّ فِي الإِسْلَامِ سُنَّةً حَسَنَةً فَلَهُ أَجْرُهَا وَأَجْرُ مَنْ عَمِلَ بِهَا بَعْدَهُ مِنْ غَيْرِ أَنْ يَنْقُصَ مِنْ أُجُورِهِمْ شَيْءٌ وَمَنْ سَنَّ فِي الإِسْلَامِ سُنَّةً سَيِّئَةً كَانَ عَلَيْهِ وِزْرُهَا وَوِزْرُ مَنْ عَمِلَ بِهَا مِنْ بَعْدِهِ مِنْ غَيْرِ أَنْ يَنْقُصَ مِنْ أَوْزَارِهِمْ شَيْءٌ

யாரொருவர் இஸ்லாமில் அழகிய வழிமுறை ஒன்றை செயல்படுத்துவாரோ அவருக்கு அதற்கான கூலியும் அவருக்குப் பின்னர் அதனைச் செய்பவரின் கூலியும் உண்டு. ஆனால், அவர்களின் கூலியில் எதுவும் குறைக்கப்படாது. யாரொருவர் இஸ்லாமில் கெட்ட வழிமுறை ஒன்றை செயல்படுத்துவாரோ அவருக்கு அதற்கான பாவமும் அவருக்குப் பின்னர் அதனைச் செய்பவரின் பாவமும் உண்டு. ஆனால், அவர்களின் பாவத்தில் எதுவும் குறைக்கப்படாது என நபி ﷺ கூறினார்கள்.[14]

இஸ்லாமிய ஷரீஆவில் ஸுன்னா

நபி ﷺ அவர்களும் அவர்களுடைய தோழர்களும் கல்வி, நம்பிக்கை, செயல், அங்கீகாரம் என அனைத்திலும் எந்த வழிமுறையில் இருந்தார்களோ அந்த வழிமுறைக்கு ஸுன்னா என்று சொல்லப்படுகிறது.

மேலும், ஸுன்னா என்ற பதம் عبادة இபாதா - வணக்க வழிபாடுகள், மற்றும் عقيدة அகீதா கொள்கையில் இருக்கும் அம்சங்களுக்கும் சொல்லப்படும். இதற்கு எதிர்ப்பதமாக, بدعة பித்ஆ - அனாச்சாரம் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَىٰ اخْتِلَافًا كَثِيرًا فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ

14. அறிவிப்பாளர்: முன்திர் இப்னு ஜரீர் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1017.

ஆக, நிச்சயமாக உங்களில், எனக்குப் பின்னர் யார் வாழ்வாரோ அவர் அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பார். ஆகவே, அப்பொழுது எனது ஸுன்னா – வழிமுறையையும் நல்லறிவு உடையவர்களான, நேர்வழி பெற்றவர்களான கலீஃபாக்களின் வழிமுறையையும் நீங்கள் பற்றிப்பிடியுங்கள்![15]

الجَمَاعة அல் ஜமாஆ

மொழியில் الجَمَاعة அல் ஜமாஆ என்ற சொல் ஒன்றை ஒன்றோடு இணைப்பது, சேர்ப்பது என்ற பொருளில் இது பயன்படுத்தப்படுகிறது.

பிரிவு, பிரிவினை, பிளவு என்ற அர்த்தம் தரக்கூடிய تفرق – فرقة ஃபுர்க்கா, அல்லது ஃபிர்க்கா, தஃபர்ருக் ஆகிய பதங்களுக்கு எதிர்ச்சொல்லாக ஜமாஆ என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

அல்ஜமாஆ என்ற சொல் மக்களில் அதிகமான எண்ணிக்கையில் ஒன்று சேர்ந்தவர்களையும்; ஒரே நோக்கத்திற்காக ஒன்று சேர்ந்த மக்களையும் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இஸ்லாமிய வழக்கில் ஜமாஆ

ஜமாஆ என்பது ஜமாஅத்துல் முஸ்லிமீன் – முஸ்லிம்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. அதாவது, இந்த சமுதாயத்தின் முன்னோரான ஸஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும் மறுமை நாள் வரை நன்மையில் அவர்களைப் பின்பற்றி நடப்பவர்களை குறிக்கிறது. அவர்கள் குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் மீது அகத்திலும் புறத்திலும் ஒன்றிணைந்து இருப்பார்கள்.

முஃமின்கள் ஒரே ஜமாஆவாக – கூட்டமாக, பிரிவுகள் இன்றி இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டிருக்கிறான். அன்றி, முஃமின்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர நட்புடனும் நேசத்துடனும், உதவி ஒத்தாசையுடனும் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டிருக்கிறான். மேலும், முஃமின்கள் தங்களுக்கிடையே பிளவுபடுவது, கருத்து வேறுபாடு கொள்வது, மற்றும் சண்டையிடுவதிலிருந்து அல்லாஹ் அவர்களை தடுத்திருக்கிறான்.

15. அறிவிப்பாளர்: அல் இர்பாழ் இப்னு ஸாரியா ﵁, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4607.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱعْتَصِمُوا۟ بِحَبْلِ ٱللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا۟ ۚ وَٱذْكُرُوا۟ نِعْمَتَ ٱللَّهِ عَلَيْكُمْ إِذْ كُنتُمْ أَعْدَآءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُم بِنِعْمَتِهِۦٓ إِخْوَٰنًا

நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் (வேதம் எனும்) கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்! பிரிந்து விடாதீர்கள்! உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருளை நினைவு கூருங்கள்! நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாக இருந்தபோது உங்கள் உள்ளங்களுக்கு மத்தியில் (இஸ்லாமின் மூலம்) அவன் இணக்கத்தை ஏற்படுத்தினான். ஆக, அவனுடைய அருட்கொடையினால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள்! (அல்குர்ஆன் 3:103)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَا تَكُونُوا۟ كَٱلَّذِينَ تَفَرَّقُوا۟ وَٱخْتَلَفُوا۟ مِنۢ بَعْدِ مَا جَآءَهُمُ ٱلْبَيِّنَٰتُ ۚ

எவர்கள் தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னர் (தங்களுக்குள்) பிரிந்துவிட்டார்களோ, மற்றும் ஒருவருக்கொருவர் கருத்துவேறுபட்டார்களோ அவர்களைப் போல் நீங்கள் ஆகிவிடாதீர்கள். (அல்குர்ஆன் 3:105)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَإِنَّ هَذِهِ الْمِلَّةَ سَتَفْتَرِقُ عَلَى ثَلَاثٍ وَسَبْعِينَ ثِنْتَانِ وَسَبْعُونَ فِي النَّارِ وَوَاحِدَةٌ فِي الْجَنَّةِ وَهِيَ الْجَمَاعَةُ

இந்த மார்க்கத்தை உடையவர்கள் எழுபத்தி மூன்றாக பிரிவார்கள். அவர்களில் எழுபத்தி இரண்டு பிரிவுகள் நரகத்தில் இருப்பார்கள். ஒன்று மட்டுமே சொர்க்கம் செல்வார்கள். அவர்கள்தான் ஜமாஆ – ஆவார்கள்.[16]

16. அறிவிப்பாளர்: முஆவியா இப்னு அபீ ஸுஃப்யான் ؓ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4597.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَلَيْكُمْ بِالْـجَمَاعَةِ وَإِيَّاكُمْ وَالْفُرْقَةَ فَإِنَّ الشَّيْطَانَ مَعَ الْوَاحِدِ وَهُوَ مِنَ الاِثْنَيْنِ أَبْعَدُ مَنْ أَرَادَ بُحْبُوحَةَ الْجَنَّةِ فَلْيَلْزَمِ الْجَمَاعَةَ

நீங்கள் ஜமாஆவை பற்றி பிடியுங்கள். பிரிவுகளை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். நிச்சயமாக ஷைத்தான் தனித்தவனோடுதான் இருப்பான். (ஒன்றுபட்டிருக்கும்) இருவரிடமிருந்து அவன் மிகத் தூரமாக இருக்கிறான். யார் சொர்க்கத்தின் சிறந்த இடங்களை பெற விரும்புகிறாரோ அவர் ஜமாஆவுடன் சேர்ந்து இருக்கட்டும்.[17]

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள்:

الْـجَمَاعَةُ مَا وَافَقَ الْـحَقَّ وَإِن كُنْتَ وَحْدَكَ

ஜமாஆ என்பது உண்மைக்கு நேர்ப்பட்டவர்கள் ஆவார்கள். அது, நீ ஒருவனாக தனித்து இருந்தாலும் சரியே![18]

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்பவர்கள், நபி ﷺ அவர்களுடைய ஸுன்னாவையும் ஸஹாபாக்களையும் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பற்றிப்பிடித்திருப்பவர்கள் ஆவார்கள். அவர்கள் கொள்கை, சொல் மற்றும் செயல் என அனைத்திலும் அந்த நன்மக்களின் வழியில் செல்வார்கள்.

அவர்கள் நபி ﷺ அவர்களைப் பின்பற்றுவதில் உறுதியாகவும் நிலையாகவும் இருப்பார்கள். மார்க்கத்தில் புதுமைகளை உண்டாக்குவதிலிருந்து தூரமாக இருப்பார்கள். இத்தகைய மக்கள் மறுமை நாள் வரை வந்துகொண்டே இருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் உதவிக்கு உரியவர்களாக இருப்பார்கள். பிற மக்களை விட ஓங்கி உயர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆக, இவர்களைப் பின்பற்றுவது நேர்வழியாகும். இவர்களுக்கு முரண்படுவது வழிகேடாகும்.

---

17. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﵄, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 2165.
18. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்பவர்கள் பல்வேறு பிரிவுகளிலிருந்து பல தனித் தன்மைகளால், பல சிறப்புகளால், பல பண்புகளால் வித்தியாசப்படுகிறார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய தனித்தன்மைகள்

1. إفراط இஃப்ராத் – மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள அளவை மீறுதல், மார்க்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட எல்லையை மீறுதல், மற்றும் تفريط தஃப்ரீத் – மார்க்க சட்டங்களை அலட்சியப்படுத்துதல், மார்க்க விதிகளை புறக்கணித்தல் ஆகிய இரு நிலைப்பாடுகளையும் தவிர்த்து, நடுநிலை உடையவர்களாக இருப்பார்கள்.

அகீதா, பிக்ஹ் மற்றும் ஏனைய அனைத்துத் துறைகளிலும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை மீறாமலும் அவற்றை அலட்சியம் செய்யாமலும் இருப்பார்கள். உலகில் காணப்படும் பல சமயங்களுக்கு மத்தியில் முஸ்லிம் சமுதாயம் நடுநிலையாக இருப்பது போல இந்த சமுதாயத்தினரிடையே காணப்படும் பல பிரிவுகளுக்கு மத்தியில் நடுநிலை வகிப்பவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

2. அவர்கள், குர்ஆன் மற்றும் ஸுன்னாவிலிருந்து மட்டும் கல்வி எடுப்பார்கள்; அவை இரண்டுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்; குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவார்கள்; ஸலஃப் உடைய வழிமுறையின் பிரகாரம் அவை இரண்டையும் புரிவார்கள்.

3. ஒருவரின் கூற்றை மட்டும் நாம் முழுமையாக ஏற்று, அவரின் கூற்றுக்கு மாற்றமான அனைத்தையும் நாம் விட்டுவிடும்படியான மதிக்கத்தக்க இமாமாக நபி ﷺ அவர்களைத் தவிர வேறு யாரையும் அவர்கள் கருதமாட்டார்கள். அல்லாஹ்வின் தூதரின் ஸஹீஹான ஹதீஸ்கள் அனைத்தையும் முழுமையாக எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் நபி ﷺ அவர்களின் சொல், செயல் மற்றும் எல்லா நிலைகளையும் நன்கறிந்தவர்களாக இருப்பார்கள். இதனால், இவர்கள் ஸுன்னாவின் மீது அதீத பற்றுக்கொண்டிருப்பார்கள். அவற்றைப் பின்பற்றுவதிலேயே அதிக ஆர்வம் கொள்வார்கள். ஸுன்னாவைப் பின்பற்றுவோருடன் அதிக இணக்கம் உள்ளவர்களாக அவர்களை நேசிப்பவர்களாக இருப்பார்கள்.

4. மார்க்க விவகாரங்களில் வீண் விவாதங்களைத் தவிர்த்து கொள்வார்கள். விவாதங்களில் ஈடுபடுவோரை விட்டும் ஒதுங்கி இருப்பார்கள். ஹராம், ஹலால் உடைய மஸாயில்களில் தர்க்க வாதங்களைத் தவிர்த்து விடுவார்கள். மார்க்கத்தில் முழுமையாக நுழைந்து விடுவார்கள்.

5. நேர்வழி நடந்த முன்னோரான ஸலஃப் ஸாலிஹை கண்ணியப்படுத்துவார்கள். ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபவுத் தாபியீன்கள் ஆகியோருடைய வழிதான் மிகச் சரியானதும், தெளிவானதும், நேரிய அறிவுக்குப் பொருத்தமானதும், சீரானதும், உறுதியானதும், பாதுகாப்பானதும் என்று நம்புவார்கள்.

6. تأويل தஃவீல் - மார்க்க ஆதாரங்களின் கருத்துகளைத் திரிப்பதையும், ஆதார சொற்களுக்கு மாற்றுப் பொருள் கூறுவதையும் முற்றிலும் விட்டுவிடுவார்கள். அறிவை விட ஆதாரத்தை முற்படுத்துவார்கள். அறிவை, ஆதாரத்திற்கு பணிய வைப்பார்கள்.

7. ஆதாரங்களைக் கையாள்வதில் முழுமைத் தன்மையை பேணுவார்கள். ஒரு விஷயம் தொடர்பாக தீர்வு காண முற்படும்போது, அது தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் ஒன்றிணைத்து முடிவு செய்வார்கள். متشابهات முதஷாபிஹாத் எனும் பல கருத்துக்களுக்கு இடம்பாடான ஆதாரங்களை, محكَمات முஹ்கமாத் எனும் தீர்க்கமான கருத்துடைய ஆதாரங்களின் பக்கம் திருப்பி விடுவார்கள்.

8. ஸாலிஹீன் - நல்லடியார்களுக்கு முன்னுதாரணமாகவும் முன்மாதிரியாகவும் அவர்கள் திகழ்வார்கள். அவர்கள் சத்தியத்தின் பக்கம் வழிகாட்டுவார்கள். நேர்வழியின் பக்கம் வழிநடத்துவார்கள். அவர்களும் நேர்வழியின் மீதும் சரியான கொள்கையின் மீதும் உறுதியாக இருப்பார்கள். அகீதா - கொள்கை விஷயங்களில் ஒன்றுபட்டிருப்பார்கள்.

மற்றும், அவர்கள் கல்வியையும் வணக்க வழிபாட்டையும் ஒன்றிணைப்பார்கள்; அல்லாஹ் மீது தவக்குல் - நம்பிக்கை வைத்திருப்பார்கள். உலக காரணங்களையும் எடுத்துக்கொள்வார்கள். உலக வாழ்க்கையில் தேவையான வசதிகளை பயன்படுத்துவதுடன்

ورع வரஃ - பேணுதலையும் கடைப்பிடிப்பார்கள். அல்லாஹ்வை பயப்படுவார்கள்; அவன் மீது நல்லாதரவு வைப்பார்கள்; அல்லாஹ்வுக்காக நேசிப்பார்கள்; அல்லாஹ்விற்காகவே வெறுப்பார்கள்; முஃமின்களுடன் இரக்கமாகவும் இஸ்லாமின் எதிரிகளாக இருக்கின்ற காஃபிர்களுடன் கடுமையாகவும் கண்டிப்பாகவும் நடந்துகொள்வார்கள். காலங்களும் இடங்களும் மாறுபட்டிருந்தாலும் அவர்கள் தங்களுக்குள் கருத்து மாறுபட மாட்டார்கள்.

9. இஸ்லாம், ஸுன்னா, அல் ஜமாஆ போன்ற பெயர்களைத் தவிர்த்து, வேறு பெயர்களை அவர்கள் தங்களுக்குச் சூட்டிக்கொள்ள மாட்டார்கள்.

10. சரியான அகீதா, மற்றும் நேரான மார்க்கத்தை பரப்புவதிலும் மக்களுக்குக் கற்பிப்பதிலும் அவர்களுக்கு வழிகாட்டுவதிலும் உபதேசங்கள் வழங்குவதிலும் அதிகம் ஆர்வப்படுவார்கள்; மக்களுடைய காரியங்களிலும் அவர்களின் தேவைகளிலும் அக்கறை செலுத்துவார்கள், அவற்றுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

11. அவர்கள் தங்கள் கூற்றுகளிலும், கொள்கைகளிலும், அழைப்புப் பணியிலும் மிக உறுதியாக இருப்பார்கள். சோதனைகளைச் சகிப்பதில் அதிகம் பொறுமையோடு இருப்பார்கள்.

12. ஜமாஆவைப் பேணுவதிலும் பரஸ்பரம் அன்பு பாராட்டுவதிலும் ஈடுபாடு காட்டுவார்கள். மக்களை ஒற்றுமையின் பக்கம் அழைப்பார்கள். மேலும் அதற்கு ஆர்வமூட்டுவார்கள். கருத்து வேறுபாடுகளையும் ஜமாஆவை விட்டு பிரிந்து செல்வதையும் தூக்கி எறிந்துவிடுவார்கள். மற்றும் மக்களை அது குறித்து எச்சரிப்பார்கள்.

13. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவில் உள்ளவர்களில் ஒருவர் மற்றவரை காஃபிர் என்று கூறுவதை விட்டும் அல்லாஹ் அவர்களை பாதுகாத்திருக்கின்றான். பிற மக்கள் மீது அவர்கள் கல்வி ஆதாரத்துடனும் நீதம் நேர்மையுடனும் தீர்ப்பளிப்பார்கள்.

14. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, தங்களுக்குள் அன்பாகவும், பரஸ்பர பாசத்துடனும், நேசத்துடனும் நடந்துகொள்வார்கள். தங்களுக்கு இடையில் பரஸ்பர ஒத்துழைப்போடும், ஒத்தாசையாகவும்

நடந்து கொள்வார்கள். அவர்களில் ஒருவர் மற்றவரின் குறைகளை நீக்குவார்கள். அவர்கள் அல்லாஹ்விற்காகவே நேசம் பாராட்டுவார்கள், மற்றும் பகைமை பாராட்டுவார்கள்.

சுருக்கமாக கூறுவதென்றால், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ குணங்களால் மிக அழகானவர்கள், அல்லாஹ்வை வழிபடுவதன் மூலமாக தமது உள்ளங்களைத் தூய்மைப்படுத்துவதில் அதிக அக்கறை உள்ளவர்கள், தொலை நோக்குடையவர்கள், கருத்து வேறுபாடுகளில் விசாலமான உள்ளம் உள்ளவர்கள், கருத்து வேறுபாட்டின் அடிப்படைகளையும் ஒழுங்குகளையும் நன்கறிந்தவர்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற சொல்லின் கருத்து பற்றிய தெளிவான விளக்கம்

முஸ்லிம் சமூகத்தில் இருக்கின்ற பிரிவுகளில் இவர்களே வெற்றி பெற்ற பிரிவினர். நபி ﷺ அவர்கள் இவர்களுக்கு இப்படித்தான் நன்மாராயம் கூறி இருக்கிறார்கள். இதற்கு காரணமாவது, இவர்கள் ஸுன்னாவைப் பின்பற்றி நடப்பதும், வணக்கவழிபாடுகள், கொள்கைகள், நற்பண்புகள், நல்லொழுக்கங்கள் என அனைத்திலும் நபி ﷺ அவர்களின் வழிகாட்டலுக்கு முற்றிலும் உடன்பட்டிருப்பதும் முஸ்லிம்களின் ஜமாஆவை விட்டு பிரியாமல் அவர்களுடன் சேர்ந்திருப்பதும் ஆகும்.

இந்த அடிப்படையில், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவுக்கு கூறப்படும் வரைவிலக்கணம் ஸலஃப் ஸாலிஹ்க்கு கூறப்படும் வரைவிலக்கணத்திற்கு அப்பாற்பட்டதல்ல என்பதைப் புரிய முடியும்.

ஸலஃப் ஸாலிஹ் என்போர், குர்ஆனின் போதனைகள் படி செயல்படக்கூடியவர்கள், ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பவர்கள் ஆவார்கள். ஆகவே, ஸலஃப் ஸாலிஹ் என்பவர்கள்தான் நபி ﷺ அவர்கள் கூறிய அஹ்லுஸ் ஸுன்னா ஆவார்கள். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்பவர்கள்தான் ஸலஃப் ஸாலிஹ் மற்றும் அவர்களது வழிமுறையின் படி மார்க்கத்தை பின்பற்றுபவர்களும் ஆவார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற பெயருக்கு கூறப்பட்ட கருத்துகளின் படி, இஸ்லாமிய சமூகத்தில் புதிதாக தோற்றம் பெற்ற خوارج

கவாரிஜ், جهمية ஜஹ்மிய்யா, قدرية கதரிய்யா, معتزلة முஃதஸிலா, مرجئة முர்ஜிஆ, رافضة ராஃபிழா போன்ற பிரிவுகள் மற்றும் இவர்களுடைய வழியில் பயணித்த எல்லா அஹ்லுல் பித்ஆவும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய வரைவிலக்கணத்திற்குள் வரமாட்டார்கள்.

ஆக, ஸுன்னா என்பது பித்ஆவுக்கு எதிரானதாகவும் ஜமாஆ என்பது ஃபிர்க்கா - பிரிவுகளுக்கு எதிரானதாகவும் இருக்கிறது.

ஜமாஆவுடன் சேர்ந்திருக்க வேண்டும், பிரிவுகளை விட்டு விலகி இருக்க வேண்டும் என்று நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸ்களின் கருத்து இதுதான்.

ترجمان القرآن தர்ஜுமானுல் குர்ஆன் - குர்ஆனின் விரிவுரையாளராகிய அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் பின்வரும் வசனத்திற்கு கூறிய விளக்கத்தின் கருத்து இதுதான்.[19]

يَوْمَ تَبْيَضُّ وُجُوهٌ وَتَسْوَدُّ وُجُوهٌ ۚ

அந்நாளில் சில முகங்கள் வெண்மையாகும், சில முகங்கள் கறுத்துவிடும். (அல்குர்ஆன் 3:106)

تَبْيَضُّ وُجُوهُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ وَتَسْوَدُّ وُجُوهُ أَهْلِ الْبِدْعَةِ وَالْفُرْقَةِ

அதாவது, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய முகங்கள் வெண்மையடையும்! பித்ஆக்காரர்கள் மற்றும் பிரிவினைவாதிகள் உடைய முகங்கள் கறுத்துவிடும் என்று இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

ஸலஃப் ஸாலிஹ் என்ற சொல் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ என்ற சொல்லுக்கு சமமானதாகும். மேலும், أهل الأثر - அஹ்லுல் அஸர் - ஹதீஸ்களைப் பின்பற்றுவோர், أهل الحديث - அஹ்லுல் ஹதீஸ் -

19. நூல்: தஃப்சீர் இப்னு கஸீர்.

ஹதீஸ்களைப் பின்பற்றுவோர், الفرقة المنصورة அல் ஃபிர்க்கத்துல் மன்ஸூரா - உதவி செய்யப்பபட்டப் பிரிவு, الفرقة الناجية ஃபிர்கத்துன் நாஜியா – (அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும் வழிகேட்டிலிருந்தும்) தப்பித்த பிரிவு, أهل الاتباع அஹ்லுல் இத்திபா - பின்பற்றுவோர் போன்ற பெயர்களும் அஹ்லுஸ் ஸுன்னாவுக்கு கூறப்படுகின்றன. இந்த பெயர்கள், ஸலஃப் அறிஞர்களின் புழக்கத்தில் பரவலாக காணப்படுகிறது.

****

خَصَائِصُ عَقِيدَةِ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கையின் சிறப்பம்சங்கள்

العقيدة الصحيحة அகீதா ஸஹீஹா – சரியான கொள்கைதான் இந்த மார்க்கத்தின் அஸ்திவாரமாகும். இந்த அஸ்திவாரமின்றி கட்டமைக்கப்படும் அனைத்துமே இறுதியில் சரிந்து, இடிந்து விழுந்துவிடும்.

இதனால்தான் நபி ﷺ அவர்கள், தன் வாழ்நாள் முழுவதும் தோழர்களுடைய உள்ளத்தில் அகீதாவை உறுதியாக, ஆழமாக பதிய வைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். உறுதியான வலிமையான அஸ்திவாரத்தின் மீது அந்த வீரர்கள் கட்டமைக்கப்பட வேண்டும் என்பதற்காக நபி ﷺ அவர்கள் இப்படி செய்தார்கள்.

மக்காவில் பதின்மூன்று ஆண்டுகள் ஒரே ஒரு செய்தியை அல்குர்ஆன் தொடர்ந்து பேசி வந்தது. அதுதான் கொள்கை. அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்குவது, அவனுக்கு அடிமையாக இருப்பதுதான் அந்த கொள்கை. இந்த கொள்கையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு நபி ﷺ அவர்கள் மக்காவில் இந்த கொள்கையின் பக்கம் மட்டுமே மக்களைத் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்தார்கள். தங்கள் தோழர்களை இந்த கொள்கையின் மீது வளர்த்துகொண்டும் பயிற்சி கொடுத்துக் கொண்டும் இந்த கொள்கையை கற்பித்துக் கொண்டும் இருந்தார்கள்.

தூய்மையான, சரியான கொள்கையை தெரிந்து கொள்வது மிக முக்கியம் என்பதால் அந்த சரியான கொள்கையை போதிக்கக் கூடிய السَّلف الصالح ஸலஃப் ஸாலிஹ் என்ற நல்ல முன்னோரின் கொள்கை, அல்லது அஹ்லுஸ் ஸுன்னா – நபிவழியை உடையவர்களின் கொள்கையை படிப்பதும் கற்பதும் அவசியமாகிறது. அது மட்டுமல்லாமல், மக்களை அந்தத் தூய்மையான கொள்கையின் பக்கம் மீட்டுக்கொண்டுவருகின்ற பாதையில் நாம் தீவிரமான பணி செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாலும் பிரிவுகளின் வழிகேடுகள்

பலதரப்பட்ட அமைப்புகளின் கருத்து வேறுபாடுகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும் நாம் அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கையை கற்க வேண்டியது முக்கியமான அவசியமாக இருக்கிறது.

ஸலஃப் ஸாலிஹ் - நல்ல முன்னோர் உடைய வழிமுறையின்படி அமையப்பெற்ற கொள்கையின் சிறப்பம்சங்கள் மற்றும் நன்மைகள்.

அவை, அந்த வழிமுறையின்படி அமையப்பெற்ற கொள்கையின் உயர்வையும் மதிப்பையும் தெளிவுப்படுத்துகின்றன, அதை பற்றிப்பிடிப்பதின் அவசியத்தை விவரிக்கின்றன.

அவை:

முதலாவது:

பிரிவுகளாக, அமைப்புகளாக பிளவுபடுவதிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழியாக இந்தக் கொள்கை காணப்படுகிறது. பொதுவாக முஸ்லிம் சமூகத்தையும் குறிப்பாக, அறிஞர்களையும் அழைப்பாளர்களையும் ஓரணிப்படுத்தும் ஒரே பாதையாக இந்தக் கொள்கை திகழ்கிறது. ஏனெனில், இந்த கொள்கைதான் அல்லாஹ்வின் வஹியாகவும், நபி ﷺ அவர்களின் ஸுன்னாவாகவும், இஸ்லாமின் முதல் சமுதாயமாகிய கண்ணியமிக்க நபித்தோழர்களின் நம்பிக்கையாகவும் இருக்கிறது.

இன்றைய முஸ்லிம்களிடம் காணப்படுவது போன்று இந்த கொள்கை அல்லாத வேறு ஒன்றில் ஒன்று சேர்வதுடைய முடிவானது பல பிரிவுகளாக, அமைப்புகளாக பிரிவதும் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதும் தோல்வியும்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يُشَاقِقِ ٱلرَّسُولَ مِنۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ ٱلْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ ٱلْمُؤْمِنِينَ
نُوَلِّهِۦ مَا تَوَلَّىٰ وَنُصْلِهِۦ جَهَنَّمَ ۖ وَسَآءَتْ مَصِيرًا ﴿١١٥﴾

எவர் தனக்கு நேர்வழி தெளிவாகியதன் பின்னர் இந்த ரஸூலுக்கு முரண்படுகிறாரோ, மற்றும் முஃமின்களின் வழியல்லாததை பின்பற்றுவாரோ அவரை அவர் சென்ற பக்கமே நாம் திருப்பி விடுவோம். மற்றும், அவரை நரகத்தில் நுழைவிப்போம். மீளுமிடங்களில் அது மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 4:115)

இரண்டாவது:

இந்தக் கொள்கை, முஸ்லிம்களின் அணிகளை சத்தியத்தில் ஒற்றுமைப்படுத்துகிறது; மற்றும், வலிமைப்படுத்துகிறது.

وَٱعۡتَصِمُواْ بِحَبۡلِ ٱللَّهِ جَمِيعٗا وَلَا تَفَرَّقُواْۚ

நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் (வேதம் எனும்) கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்; பிரிந்து விடாதீர்கள். (அல்குர்ஆன் 3:103)

என்ற குர்ஆன் வசனத்தில் உள்ள அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதுதான் இந்த கொள்கையைப் பற்றிப்பிடிப்பதாகும்.

இன்று முஸ்லிம்களிடம் பல பிளவுகளும், பிரிவுகளும் ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் அவர்களுடைய கொள்கைகளும் அவர்களின் மன்ஹஜ் – வழிமுறைகளும் மாறுபட்டிருப்பதாகும். ஆகவே, கொள்கையில் ஒற்றுமையை ஏற்படுத்துவது உம்மத்தை ஒற்றுமைப்படுத்த முக்கிய வழியாக விளங்குகிறது.

மூன்றாவது:

ஸலஃப் ஸாலிஹ் உடைய மன்ஹஜின் மீது அமையப்பெற்றக் கொள்கை, முஸ்லிம்களுக்கு அல்லாஹ் மற்றும், அவனது தூதருடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்திவிடுகிறது. மேலும், அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் அன்பையும், மதிப்பையும், மகத்துவத்தையும் இந்த கொள்கை உண்டாக்குகிறது. மேலும், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் ﷺ அவர்களின் கட்டளைகளை மீறாமல் இருக்கச் செய்கிறது. ஏனெனில், ஸலஃப் உடைய அகீதாவின் ஊற்றாவது, قَالَ الله காலல்லாஹ் – அல்லாஹ் கூறினான், மற்றும் قَالَ رَسُولُ الله கால ரஸூலுல்லாஹ் ﷺ

– அல்லாஹ் உடைய தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் என்பதாகும். (அதாவது, அல்லாஹ் கூறியதும்; நபி ﷺ அவர்கள் கூறியதும் மட்டும்தான் ஸலஃப் கொள்கையுடைய ஆதாரமாக இருக்கிறது.) இந்த கொள்கையானது, மனோஇச்சைகள், வீணான சந்தேகங்களின் குழப்பங்களை விட்டும் தூரமானது; கிரேக்க தத்துவம் மற்றும் தர்க்க வாதங்களை விட்டும் நீங்கியது. குர்ஆன் மற்றும் ஸுன்னாவைத் தவிர இந்த கொள்கைக்கு வேறு ஆதாரம் இல்லை.

நான்காவது:

ஸலஃப் ஸாலிஹீன் உடைய அகீதா, இலகுவானதும், தெளிவானதும் ஆகும். அதில் கருத்துக் குழப்பங்களோ, சந்தேகங்களோ, மூடலான சிந்தனைகளோ இல்லை. குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைத் திரிப்பதிலிருந்து அவற்றுக்கு தவறான பொருள் கூறுவதிலிருந்து அந்த கொள்கை தூரமானதாகும். அந்த அகீதாவை ஏற்றுக்கொண்டவர் மனம் அமைதிபெற்றவராகவும் உள்ளம் நிம்மதியடைந்தவராகவும் வீண் சந்தேகங்கள், யூகங்கள், ஷைத்தானுடைய குழப்பங்கள் ஆகியவற்றிலிருந்து தூரமாகவும் கண் குளிர்ச்சி அடைந்தவராகவும் இருக்கிறார். காரணம், இந்த சமுதாயத்தின் நபி ﷺ அவர்களும் அவர்களின் கண்ணியமான தோழர்களும் எந்த வழியை காண்பித்தார்களோ அந்த வழியில் அவர் பயணிக்கிறார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ ءَامَنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ ثُمَّ لَمْ يَرْتَابُوا۟ وَجَٰهَدُوا۟ بِأَمْوَٰلِهِمْ
وَأَنفُسِهِمْ فِى سَبِيلِ ٱللَّهِ ۚ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلصَّٰدِقُونَ ﴿١٥﴾

நம்பிக்கையாளர்கள் எல்லாம் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கைகொண்டவர்கள்தான். பிறகு அவர்கள் சந்தேகிக்கவில்லை. மற்றும், தங்கள் செல்வங்களாலும் தங்கள் உயிர்களாலும் அல்லாஹ்வின் பாதையில் போரிடுகிறார்கள். அத்தகையவர்கள்தான் உண்மையா(ன நம்பிக்கையா)ளர்கள். (அல்குர்ஆன் 49:15)

ஐந்தாவது:

அல்லாஹ்வின் நெருக்கத்தையும், அவனது திருப்தியையும், பொருத்தத்தையும் பெறுவதற்குரிய காரணங்களில் மிக மகத்தான காரணமாக இந்த கொள்கை விளங்குகிறது.

இந்த சிறப்பம்சங்கள், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவிற்கு என்று இருக்கக்கூடியவை ஆகும். இடமோ, காலமோ மாறுபடுவதால் அந்த சிறப்பம்சங்களில் மாற்றம் ஏற்படாது. அல் ஹம்து லில்லாஹ்!

****

أُصُولُ عَقِيدَةِ السَّلَفِ الصَّالِحِ
أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா
வல் ஜமாஆ உடைய அகீதாவின் அடிப்படைகள்

أُصُولُ عَقِيدَةِ السَّلَفِ الصَّالِحِ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய அகீதாவின் அடிப்படைகள்

ஸலஃப் ஸாலிஹ் உடைய வழியில் பயணிக்கின்ற அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ தமது நம்பிக்கைகளிலும் செயல்களிலும் ஒழுக்க மாண்புகளிலும் மிகவும் தெளிவான, உறுதியான அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றனர். அந்த அடிப்படைகள், அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும் நபி ﷺ அவர்களின் ஸஹீஹான ஸுன்னாவிலிருந்தும் இந்த சமுதாயத்தின் முன்னோடிகளான ஸலஃப் ஸாலிஹ் என்ற ஸஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும் அவர்களை நல்லவற்றில் பின்பற்றியவர்களின் விளக்கங்களிலிருந்தும் பெறப்பட்டவையாகும்.

இந்த மார்க்கத்தின் அடிப்படைகளை நபி ﷺ அவர்கள் மிகத் தெளிவாகவும், தூய்மையாகவும் வரையறுத்துத் தந்துள்ளார்கள். எனவே, மார்க்கத்தில் புதிதாக ஏதாவதொன்றைத் தோற்றுவித்து விட்டு, அதுவும் மார்க்கம்தான் எனக்கூறும் அதிகாரம் யாருக்கும் இல்லை. எனவேதான், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, இந்த அடிப்படைகளை மிக உறுதியாகக் கடைப்பிடிக்கின்றனர். இதனால்தான் மார்க்கத்தின் அடிப்படை விஷயங்களில் புதிய சொற்களைத் தவிர்த்து, ஷரீஆ அங்கீகரித்த சொற்களையே கையாளுகின்றனர்.

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவிடம் மார்க்கத்தின் அடிப்படைகள் சுருக்கமாக பின்வருமாறு அமைகிறது.

****

اَلْأَصْلُ الْأَوَّلُ
الْإِيمَانُ وَأَرْكَانُهُ

முதலாவது அடிப்படை:
ஈமானும் அதன் தூண்களும்

الْإِيمَانُ وَأَرْكَانُهُ

ஈமானும் அதன் தூண்களும்

ஈமானின் அடிப்படைகள் விஷயத்தில் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய நம்பிக்கையானது, ஹதீஸ் ஜிப்ரீல் என்று அறியப்பட்ட நபிமொழியில் கூறப்பட்ட ஆறு தூண்களை நம்பிக்கை கொள்வது மற்றும் அவற்றை உண்மைப்படுத்துவதில் அடங்கி இருக்கிறது.

ஜிப்ரீல் عليه السلام நபி ﷺ அவர்களிடம், ஈமான் என்றால் என்ன எனக் கேட்டபோது, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَنْ تُؤْمِنَ باللهِ، ومَلَائِكَتِهِ، وَكُتُبِهِ، وَرُسُلِهِ، وَالْيَومِ الآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وشَرِّهِ

ஈமான் என்றால் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும் அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொள்வது, மற்றும் அல்லாஹ்வின் ‘கதர்’ விதியை - அதன் நல்லதையும் கெட்டதையும் - நம்பிக்கை கொள்வதாகும்.[20]

இந்த ஆறு தூண்களின் மீது ஈமான் அமையப்பெறுகிறது. ஒருவரிடம் இவற்றில் ஏதாவது ஒன்று இல்லை என்றாலும் அவர் ஒருபோதும் முஃமினாக ஆக மாட்டார். ஏனெனில் ஈமானின் தூண்களில் ஒன்றை அவர் இழந்து விட்டார்.

ஒரு கட்டிடம் நிற்பதற்கு எப்படி அதற்கு தேவையான எல்லா தூண்களும் சரியாக இருக்க வேண்டுமோ அப்படித்தான் ஈமான் நிற்பதற்கும் அதன் ஆறு தூண்களும் முழுமையாக இருக்க வேண்டும்.

குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் வந்துள்ளபடி சரியான முறையில் இந்த ஆறு தூண்களை நம்பிக்கை கொள்ளாமல் ஈமான் நிறைவுறாது. யார் இந்த தூண்களில் ஒன்றை மறுப்பாரோ அவர் முஃமினாக இருக்க மாட்டார்.

****

20. அறிவிப்பாளர்: உமர் இப்னு கத்தாப் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 8.

اَلرُّكْنُ الْأَوَّلُ

الْإِيمَانُ بِاللّٰهِ

முதலாவது தூண்

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِاللهِ

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளுதல்

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளுதல் என்றால் அல்லாஹ் இருக்கிறான் என்பதையும் அவன் பரிபூரணமான, கண்ணியமான பண்புகளையும் கொண்டிருக்கிறான் என்பதையும் அவன் மட்டுமே வணக்க வழிபாடுகளுக்கு தகுதியானவன் என்பதையும் உண்மைப்படுத்துவதாகும். மற்றும், இந்த நம்பிக்கையில் உள்ளம் பூரண நிம்மதி, திருப்தி அடைய வேண்டும். மனிதனின் செயல்களிலும் குணங்களிலும் இந்த நம்பிக்கையின் அடையாளங்கள் வெளிப்பட வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும். அவன் தடுத்த காரியங்களை விட்டு விலகி இருக்க வேண்டும்.

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது என்பது இந்த அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இந்த முதல் நம்பிக்கைதான் மற்ற எல்லா நம்பிக்கைகளுக்கும் அசலாகும். ஈமானின் மற்ற எல்லா தூண்களும் இந்த தூணுடன் இணைந்ததும் இதை பின்தொடரக்கூடியதும் ஆகும்.

மேலும், அல்லாஹ்வை நம்புதல் என்பது, அவனது தனித்துவத்தை ஏற்றுக் கொள்வதையும் அவன் மாத்திரமே வணக்க வழிபாடுகளுக்கு தகுதியானவன் என்பதையும் உள்ளடக்கியிருக்கிறது. ஏனெனில், அல்லாஹ் இருக்கிறான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவனது உள்ளமையை இயல்பான அறிவும், மனித சிந்தனையும், மார்க்கமும், வெளிப் புலன்களும் தெளிவாக அறிவிக்கின்றன.

அல்லாஹ்வை நம்புதல் என்பது, அவனது وحدانيَّة வஹ்தானிய்யத் - ஒருமைப்பாட்டையும் அவனது ألوهية உலூஹிய்யத் - வணக்கவழிபாடுகளுக்கு தகுதியானவன் என்பதையும் அவனது الأَسمَاء والصفات அல் அஸ்மா வஸ் ஸிஃபாத் - அழகிய பெயர்கள் மற்றும் உயரிய பண்புகளை நம்பிக்கை கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது. அதாவது, தவ்ஹீதின் இந்த மூன்று வகைகளையும் உறுதிப்படுத்தி,

நம்பிக்கைக் கொண்டு, அவற்றை ஏற்று செயல்படுவதையே இது குறிக்கிறது.

அல்லாஹ்வை மட்டுமே ஏக இறைவனாக ஏற்றுக் கொள்வது மூன்று வகையான தவ்ஹீதை உள்ளடக்கியதாகும்.

1. توحيد الربوبية தவ்ஹீத் அர் ருபூபிய்யா - அதாவது, அல்லாஹ் ஒருவனே படைத்துப் பரிபாலிக்கும் இறைவனாக இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்ளுதல்.

2. توحيد الألوهية தவ்ஹீத் அல் உலூஹிய்யா - அதாவது, அல்லாஹ் மாத்திரமே வணங்கத்தகுதியான இறைவனாக இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்ளுதல்.

3. توحيد الأسمَاء والصفات தவ்ஹீதுல் அஸ்மா வஸ் ஸிஃபாத் - அதாவது, அல்லாஹ்விற்கு அழகிய பெயர்களும் உயரிய பண்புகளும் உள்ளன. அவை அவனுக்கு மட்டுமே தகுதியானவை என்று நம்பிக்கை கொள்ளுதல்.

1. தவ்ஹீத் அர் ருபூபிய்யா

அல்லாஹ் தனித்தவன், அவன்தான் ஒவ்வொரு படைப்பின் பரிபாலன், அதன் உரிமையாளன், அதில் அவனுக்கு இணையாக யாரும் இல்லை, எதுவும் இல்லை, அவன்தான் படைப்பாளன், இப்பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவற்றையும் திட்டமிடுபவனும் அவற்றை இயக்குபவனும் அவனே, மனிதர்களையும் படைத்தான். அவர்களை வாழவைப்பவனும் மரணிக்கச் செய்பவனும் அவர்களுக்கு உணவளிப்பவனும் அவனே.

அல்லாஹ்வை இத்தகைய தன்மைகளோடு உறுதியாக நம்பிக்கை கொள்வது - தவ்ஹீத் அர் ருபூபிய்யா ஆகும். அத்தோடு அல்லாஹ்வின் ஏற்பாடாகிய கதர் - விதியை உறுதியாக நம்புவதும் அல்லாஹ் தன் உள்ளமையில் தனித்தவனாக, ஒருவனாக இருக்கிறான் என நம்புவதும் தவ்ஹீத் அர் ருபூபிய்யாவில் அடங்கும்.

சுருக்கமாக, தவ்ஹீத் அர் ருபூபிய்யா என்பது, அல்லாஹ்வின் செயல்களில் அவன் தனித்தவன் என நம்புவதாகும்.

அல்லாஹ்வின் ருபூபிய்யா பண்பினை நம்பிக்கைக் கொள்வது கட்டாயம் என்பதை மார்க்க ஆதாரங்கள் அறிவிக்கின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ٱلۡحَمۡدُ لِلَّهِ رَبِّ ٱلۡعَٰلَمِينَ ۝١

எல்லாப் புகழும் அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானது. (அல்குர்ஆன் 1:1)

إِنَّ رَبَّكُمُ ٱللَّهُ ٱلَّذِي خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضَ فِي سِتَّةِ أَيَّامٖ ثُمَّ ٱسۡتَوَىٰ عَلَى ٱلۡعَرۡشِۖ يُغۡشِي ٱلَّيۡلَ ٱلنَّهَارَ يَطۡلُبُهُۥ حَثِيثٗا وَٱلشَّمۡسَ وَٱلۡقَمَرَ وَٱلنُّجُومَ مُسَخَّرَٰتِۭ بِأَمۡرِهِۦٓۗ أَلَا لَهُ ٱلۡخَلۡقُ وَٱلۡأَمۡرُۗ تَبَارَكَ ٱللَّهُ رَبُّ ٱلۡعَٰلَمِينَ ۝٥٤

நிச்சசமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான். அவன்தான் வானங்களையும் இந்த பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்பு அவன் அர்ஷ்க்கு மேல் உயர்ந்துவிட்டான். இரவை பகல் மீது அவன் போர்த்துகிறான். அது அதை விரைவாக தேடி வருகிறது. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களும் அவனது கட்டளைகளுக்குப் பணிந்தவையாக இருக்கின்றன. அறிந்து கொள்ளுங்கள்! படைப்பாற்றலும் கட்டளையிடும் தகுதியும் அவனுக்கே உரியன. அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ் மிக பாக்கியவானாக இருக்கிறான். (அல்குர்ஆன் 7:54)

هُوَ ٱلَّذِي خَلَقَ لَكُم مَّا فِي ٱلۡأَرۡضِ جَمِيعٗا ثُمَّ ٱسۡتَوَىٰٓ إِلَى ٱلسَّمَآءِ فَسَوَّىٰهُنَّ سَبۡعَ سَمَٰوَٰتٖۚ وَهُوَ بِكُلِّ شَيۡءٍ عَلِيمٞ ۝٢٩

அவன்தான் உங்களுக்காக இந்த பூமியிலுள்ள அனைத்தையும் படைத்தான். பின்பு அவன் வானத்துக்கு மேல் உயர்ந்து விட்டான். அவற்றை அவன் ஏழு வானங்களாக சீர்செய்தான். மேலும் அவன் ஒவ்வொரு பொருளையும் நன்கு அறிந்தவன் ஆவான்.

(அல்குர்ஆன் 2:29)

إِنَّ ٱللَّهَ هُوَ ٱلرَّزَّاقُ ذُو ٱلْقُوَّةِ ٱلْمَتِينُ ﴿٥٨﴾

நிச்சயமாக அல்லாஹ்தான் உணவளிப்பவன், வலிமை உடையவன், மிக உறுதியானவன். (அல்குர்ஆன் 51:58)

தவ்ஹீதுடைய இந்த வகையை குரைஷி காஃபிர்களும் மறுக்கவில்லை. மேலும், பல சமயங்களும் கோட்பாடுகளும் மதங்களும் பிரபஞ் சத்தின் படைப்பாளன் அல்லாஹ் - அதாவது ஒரே ஓர் இறைவன்தான் என்பதை ஏற்றுக்கொள்கின்றன.

இதனைப் பின்வரும் குர்ஆன் வசனங்களும் உறுதிப்படுத்துகின்றன.

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ لَيَقُولُنَّ ٱللَّهُ ۚ قُلِ ٱلْحَمْدُ لِلَّهِ ۚ بَلْ أَكْثَرُهُمْ لَا يَعْلَمُونَ ﴿٢٥﴾

(நபியே!) நீர் அவர்களிடம், இந்த வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார் எனக் கேட்டால், நிச்சயமாக அவர்கள், அல்லாஹ் என்றே கூறுவார்கள். புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று நபியே நீர் கூறுவீராக! எனினும், அவர்களில் பெரும்பாலானோர் அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 31:25)

قُل لِّمَنِ ٱلْأَرْضُ وَمَن فِيهَآ إِن كُنتُمْ تَعْلَمُونَ ﴿٨٤﴾ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ أَفَلَا تَذَكَّرُونَ ﴿٨٥﴾ قُلْ مَن رَّبُّ ٱلسَّمَٰوَٰتِ ٱلسَّبْعِ وَرَبُّ ٱلْعَرْشِ ٱلْعَظِيمِ ﴿٨٦﴾ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ أَفَلَا تَتَّقُونَ ﴿٨٧﴾ قُلْ مَنۢ بِيَدِهِۦ مَلَكُوتُ كُلِّ شَىْءٍ وَهُوَ يُجِيرُ وَلَا يُجَارُ عَلَيْهِ إِن كُنتُمْ تَعْلَمُونَ ﴿٨٨﴾ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ فَأَنَّىٰ تُسْحَرُونَ ﴿٨٩﴾

(நபியே!) இந்த பூமியும் அதிலுள்ளவைகளும் - நீங்கள் அறிந்திருந்தால் - யாருக்குரியன என (அவர்களிடம்) கேட்பீராக! அல்லாஹ்வுக்குரியன என அவர்கள் கூறுவார்கள். (அப்படியாயின்) நீங்கள் சிந்திக்க வேண்டாமா எனக் கூறுவீராக! மேலும், ஏழு வானங்களின் அதிபதியும் மகத்துவம் பொருந்திய அர்ஷின் உரிமையாளனும் யார் எனக் கேட்பீராக! அவை

அல்லாஹ்வுக்குரியன என அவர்கள் கூறுவார்கள். (அப்படியாயின்) நீங்கள் அவனை பயப்பட வேண்டாமா என நபியே நீர் கூறுவீராக! மேலும், ஒவ்வொன்றுடைய ஆட்சியதிகாரமும் – நீங்கள் அறிந்திருந்தால் – யாருடைய கையில் இருக்கிறது? அவனே பாதுகாப்பளிக்கிறான்; அவனுக்கு எதிராக எதற்கும் பாதுகாப்பு அளிக்கப்படாது என நபியே நீர் கூறுவீராக! அவை அல்லாஹ்வுக்குரியன என அவர்கள் கூறுவார்கள். அப்படியாயின் நீங்கள் எப்படித்தான் (அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம்) கவர்ந்திழுக்கப் படுகிறீர்களோ என நபியே நீர் கூறுவீராக! (அல்குர்ஆன் 23:84–89)

மனித உள்ளங்கள் இயல்பாகவே இறைவன் ஒருவன் தான், அவன்தான் பிரபஞ்சத்தை படைத்து பரிபாலிப்பவன் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், இந்த நம்பிக்கை மட்டும் ஒருவரை முவஹ்ஹிதாக – முஃமினாக ஆக்காது. மாறாக, தவ்ஹீதின் மற்ற இரண்டு வகைகளையும் ஒருவர் நம்பிக்கை கொண்டால்தான் அவர் முவஹ்ஹிதாக, முஃமினாக ஆகுவார்.

2. தவ்ஹீத் அல் உலூஹிய்யா

அடியார்கள் தமது செயல்களினால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதை இது குறிக்கிறது. இது, தவ்ஹீதுல் இபாதா – வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் எனவும் அழைக்கப்படுகிறது.

அதாவது, அல்லாஹ்தான் உண்மையான இலாஹ் – வணக்கத்துக்குரியவன் – நாம் வணங்கி வழிபடத் தகுதிமிக்கவன். அவனைத் தவிர இத்தகுதி கொண்ட எவரும் அறவே இல்லை. உலகில் வணங்கப்படுகின்ற அவனல்லாத கடவுள்கள் அனைத்துமே பொய்யானவை என உறுதியாக நம்ப வேண்டும். மேலும், வணக்கவழிபாடு, அடிபணிவு, முழுமையான நிபந்தனையற்ற கீழ்ப்படிதல் என்பனவற்றிலும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்த வேண்டும். யாராக இருந்தாலும் அவர் அவனுக்கு நிகராக, இணையாக ஆக்கப்படக்கூடாது. தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், الإستعانة உதவிதேடுதல், النذر நேர்ச்சை, الذبح அறுத்துப் பலியிடுதல், التوكل நம்பிக்கை வைத்தல், பொறுப்பு சாட்டுதல், الخوف அச்சம் கொள்ளுதல், الرجاء ஆதரவு வைத்தல், الحب அன்புவைத்தல்

போன்ற உள்ரங்கமான, வெளிரங்கமான வணக்க வழிபாடுகளில் எந்த ஒன்றும் அல்லாஹ் அல்லாத வேறு எவருக்காகவும் நிறைவேற்றப்படக் கூடாது. அன்பு, பயம், நல்லாதரவு என இவை அனைத்தும் அல்லாஹ்விற்கு மட்டும் செய்யப்பட வேண்டிய வணக்கமாகும். இத்தகைய விரிவான நம்பிக்கையைத்தான் தவ்ஹீதுல் உலூஹிய்யா குறிக்கிறது. அல்லாஹ்விற்குரிய வணக்க வழிபாடுகளில் சிலவற்றை அவனுக்கு நிறைவேற்றி சிலவற்றை விடுவது வழிகேடு ஆகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ٥

உன்னையே வணங்குகிறோம்! உன்னிடமே உதவி தேடுகிறோம்! (அல்குர்ஆன் 1:05)

وَمَن يَدْعُ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ لَا بُرْهَٰنَ لَهُۥ بِهِۦ فَإِنَّمَا حِسَابُهُۥ عِندَ رَبِّهِۦٓ
إِنَّهُۥ لَا يُفْلِحُ ٱلْكَٰفِرُونَ ١١٧

யாரொருவர் அல்லாஹ்வுடன் வேறு ஒரு கடவுளை அழைக்கிறாரோ – அதற்கு அவரிடம் எந்தவொரு ஆதாரமும் இல்லை – அவருடைய விசாரணையானது, அவரது இறைவனிடம்தான் உள்ளது. நிச்சயமாக நிராகரிப்பாளர்கள் வெற்றி பெறமாட்டார்கள். (அல்குர்ஆன் 23:117)

தவ்ஹீதுல் உலூஹிய்யா – அனைத்து நபிமார்களும் போதித்த விஷயமாகும். இதனை மறுத்ததால்தான் முந்தைய நபிமார்களின் சமூகங்கள் அழிக்கப்பட்டன.

இக்கொள்கைதான் மார்க்கத்தின் முதலும் இறுதியுமாகும்; மார்க்கத்தின் உட்புறமும் வெளித் தோற்றமுமாகும்; ரஸூல்மார்களுடைய தஃவா – அழைப்பின் ஆரம்பமும் இறுதியுமாகும்; இதற்காகத்தான் ரஸூல்மார்கள் அனுப்பப்பட்டார்கள்; வேதங்கள் இறக்கப்பட்டன; முஃமின்கள் மற்றும் காஃபிர்களுக்கு மத்தியிலும் சொர்க்கவாசிகள் மற்றும் நரகவாசிகளுக்கு மத்தியிலும் வேறுபாடு என்பது இதைக் கொண்டுதான் அறியப்படுகிறது.

لا إله إلا الله லா இலாஹ இல்லல்லாஹ் என்ற அல்லாஹ்வின் வார்த்தையின் அர்த்தமும் இதுதான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ أَرۡسَلۡنَا مِن قَبۡلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِيٓ إِلَيۡهِ أَنَّهُۥ
لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعۡبُدُونِ ﴿٢٥﴾

என்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாரும் இல்லை; என்னையே வணங்குங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமல் உமக்கு முன்னர் எந்தவொரு இறைத்தூதரையும் நாம் அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 21:25)

யார் உண்மையான படைப்பாளனாக, உணவளிக்கும் வல்லமை உடையவனாக, அனைத்தையும் ஆளும் வல்லவனாக, அனைத்தையும் செய்யும் ஆற்றல் மிக்கவனாக, வாழவைப்பவனாக, மரணிக்கச் செய்பவனாக, பரிபூரணத் தன்மைகளாலும் பண்புகளாலும் வர்ணிக்கப்பட்டவனாக, அனைத்து வகையான குறைகளிலிருந்தும் நீங்கியவனாக, ஆட்சி அனைத்தையும் தன் கையில் வைத்திருக்கின்ற இறைவனாக இருக்கிறானோ அவன் மாத்திரமே வணங்கத்தகுதியான ஒரே இறைவனாக இருக்க முடியும்; இருக்கவும் வேண்டும். அவனல்லாத வேறு எவருக்கும் எந்தவொரு வணக்க வழிபாடும் செய்யப்படுவது கூடாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا خَلَقۡتُ ٱلۡجِنَّ وَٱلۡإِنسَ إِلَّا لِيَعۡبُدُونِ ﴿٥٦﴾

ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51:56)

தவ்ஹீதுல் உலூஹிய்யாவிற்கு தேவையான அம்சங்களில் ஒன்றுதான் தவ்ஹீதுர் ருபூபிய்யா ஆகும். தவ்ஹீதுர் ருபூபிய்யாவை ஏற்பவர்கள் எல்லோரும் தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நம்பிக்கை கொண்டவர்களாக

ஆகமாட்டார்கள். ஆனால், தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நம்பிக்கை கொண்ட எல்லோரும் தவ்ஹீதுர் ருபூபிய்யாவை நம்பிக்கை கொண்டவர்கள் ஆவார்கள்.

மக்கா நகர இணைவைப்பாளர்கள் தவ்ஹீதுர் ருபூபிய்யாவை ஏற்றிருந்தும் அவர்கள் ஒரே ஓர் இறைவனை வணங்கவில்லை. மாறாக, அவர்கள் பலதெய்வங்களையே வணங்கி வழிபட்டு வந்தனர். மேலும், அக்கடவுள்கள் இறைவனிடம் தங்களை நெருக்கமாக்கி வைக்கும் எனவும் அவர்கள் நம்பி வந்தனர். அதே சமயம் அந்தக் கடவுள்கள் எந்த நன்மையோ தீங்கோ விளைவிக்கும் சக்தியற்றவை என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆக, அவர்கள் அல்லாஹ்வின் ருபூபிய்யத்தை ஏற்றிருந்தாலும் வணக்க வழிபாட்டில் அல்லாஹ்விற்கு அவர்கள் இணைகற்பித்ததால் அல்லாஹ் அவர்களை முஃமின்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களை காஃபிர்கள் - நிராகரிப்பாளர்கள் என்றே அல்லாஹ் வர்ணிக்கின்றான்.

ஆக, உலூஹிய்யா பற்றிய நம்பிக்கையில் ஸலஃப் ஸாலிஹை உண்மையாக பின்பற்றும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஏனையோரிடமிருந்து வேறுபடுகின்றனர். சிலர் கருதுவது போன்று அவர்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இல்லை என்ற கருத்தில் தவ்ஹீதை அவர்கள் நிறுத்திக் கொள்வதில்லை. மாறாக, அவர்களிடத்தில் தவ்ஹீதுல் உலூஹிய்யா என்பது, பின்வரும் இரண்டு அடிப்படைகளின் மூலமே உறுதியாகிறது.

முதலாவது:

அனைத்து வணக்க வழிபாடுகளும் அல்லாஹ் அல்லாதோரை தவிர்த்து, அல்லாஹ்வுக்கு மட்டுமே செய்யப்பட வேண்டும். படைப்பாளனுக்குரிய சிறப்புரிமைகளிலோ சிறப்புத் தன்மைகளிலோ எந்தவொன்றும் அவனல்லாத வேறு படைப்புக்களுக்கு வழங்கப்படக் கூடாது.

எனவே, அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் வணங்கப்படக் கூடாது. அல்லாஹ் அல்லாதோருக்காக தொழுகை நிறைவேற்றப்படக் கூடாது. அல்லாஹ் அல்லாதோருக்காக ஸுஜூது - சிரம்பணிதல் கூடாது. அல்லாஹ் அல்லாதவரிடம் நேர்ச்சை செய்யக் கூடாது. அல்லாஹ் அல்லாத வேறு எவரிடமும் தமது காரியங்களுக்காக தவக்குல் - நம்பிக்கை வைப்பது கூடாது. ஆகவே, தவ்ஹீதுல் உலூஹிய்யா

என்ற நம்பிக்கையானது, வணக்க வழிபாடுகள் மூலம் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதை அவசியமாக்குகிறது.

இபாதா – வணக்க வழிபாடு என்பது, ஒன்று உள்ளம் மற்றும் நாவுடைய சொல்லாக இருக்கும். அல்லது, உள்ளம் மற்றும் உறுப்புகளின் செயல்களாக இருக்கும்.

இது பற்றி குர்ஆன் பின்வருமாறு விளக்குகிறது.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿١٦٢﴾ لَا شَرِيكَ لَهُۥ
وَبِذَٰلِكَ أُمِرْتُ وَأَنَا۠ أَوَّلُ ٱلْمُسْلِمِينَ ﴿١٦٣﴾

நிச்சயமாக, என் தொழுகையும், எனது வணக்க வழிபாடுகளும் என் வாழ்வும் என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியன என்று கூறுவீராக! மேலும், அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை; இதையே (கடைப்பிடிக்குமாறு) நான் ஏவப்பட்டுள்ளேன். அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த (முஸ்லிமான)வர்களில் நான் முதலாமவன் ஆவேன் (என்றும் கூறுவீராக!). (அல்குர்ஆன் 6 : 162,163)

أَلَا لِلَّهِ ٱلدِّينُ ٱلْخَالِصُ

அறிந்து கொள்ளுங்கள்! பரிசுத்தமான தீன் – வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்விற்கே உரியன. (அல்குர்ஆன் 39 : 03)

இரண்டாவது:

வணக்க வழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ் ஏவியதற்கு ஏற்பவும், அவனது தூதரான நபி ﷺ அவர்களது கட்டளைகளுக்கு உட்பட்டதாகவும் அவர்களின் வழிகாட்டல்களுக்கு உடன்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

வணக்கவழிபாடு, பணிவு, மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, ஷஹாதாவின் முதற்பகுதியான لَا إِلَٰهَ إِلَّا اللهُ வணங்குவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர அறவே இல்லை எனும் சாட்சியத்தை உறுதிப்படுத்துகிறது.

நபி ﷺ அவர்களைப் பின்பற்றுவதும் நபி ﷺ அவர்களுடைய ஏவல், விலக்கல்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுவதும் ஷஹாதாவின் அடுத்த பகுதியான مُحَمَّدٌ رَسُولُ اللهِ – முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்ற சாட்சியத்தை உறுதிப்படுத்துகிறது.

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் மன்ஹஜ் – வழிமுறையானது, அவர்கள் அல்லாஹ்வை மாத்திரமே வணங்குவார்கள். அவனுக்கு எதையும் எவரையும் கூட்டுச் சேர்த்து இணை கற்பிக்கமாட்டார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரிடமும் தமது தேவைகளை கேட்க மாட்டார்கள். அல்லாஹ் அல்லாத வேறு எவரிடமும் உதவி தேட மாட்டார்கள். கஷ்டத்தின்போது, அல்லாஹ்வைத் தவிர வேறு எவரிடமும் ஆதரவு கோர மாட்டார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எவர் மீதும் தவக்குல் – நம்பிக்கை வைக்கமாட்டார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் அச்சம் கொள்ளமாட்டார்கள். அல்லாஹ்விடம் அவனை வணங்குவதன் மூலமாகவும் நல்ல அமல்களை செய்வதன் மூலமாகவும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவும் நெருக்கத்தைத் தேடுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱعۡبُدُواْ ٱللَّهَ وَلَا تُشۡرِكُواْ بِهِۦ شَيۡـٔٗاۖ

அல்லாஹ்வையே வணங்குங்கள்; அவனுக்கு எந்தவொன்றையும் இணையாக்காதீர்கள்! (அல்குர்ஆன் 4:36)

3. தவ்ஹீத் அல் அஸ்மா வஸ் ஸிஃபாத்

அல்லாஹு தஆலாவிற்கு அவனது மகத்துவத்தையும் கீர்த்தியையும் எடுத்துக்காட்டுகிற அல் அஸ்மாவுல் ஹுஸ்னா எனும் அழகிய திருநாமங்களும் அஸ் ஸிஃபாத் எனும் உயரிய பண்புகளும் உள்ளன என ஈமான் கொள்வது தவ்ஹீத் அல் அஸ்மா வஸ் ஸிஃபாத் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, அல்லாஹ்வை பரிபூரணமான பண்புகளால் மாத்திரமே வர்ணிக்கப்பட வேண்டும். குறைபாடான பண்புகள் அவனை விட்டும் தவிர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் அவன் எல்லாப் படைப்பினங்களிலிருந்தும் தனித்தவனாகிறான் என நம்புவதாகும்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, தமது இரட்சகனை குர்ஆனிலும் ஸுன்னாவிலும் வந்துள்ள பண்புகளைக் கொண்டு அறிந்துகொள்கின்றனர். அல்லாஹ்வும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களும் விவரித்திருக்கும் பண்புகளைக் கொண்டு மாத்திரமே அல்லாஹ்வை வர்ணிக்கின்றனர். அப்பண்புகளுக்கு மாற்றுக் கருத்தோ, மாற்று விளக்கமோ வழங்க மாட்டார்கள். அவனது பெயர்களையும் வசனங்களையும் மாற்ற மாட்டார்கள். அல்லாஹ் தனக்கு இருப்பதாக சொன்ன ஸிஃபாத் - உயர் பண்புகளை அப்படியே ஏற்று உறுதிப்படுத்துவார்கள். அந்த பண்புகளுக்கு உவமை - உதாரணம், சுய வர்ணனை, சுய விளக்கம் கொடுக்க மாட்டார்கள். மற்றும் ஒப்பிடுதல் செய்ய மாட்டார்கள். மேலும், அவை பொருளற்றவை என்று மறுக்க மாட்டார்கள். அவற்றுக்குரிய வெளிப்படையான அர்த்தத்தை எடுப்பார்கள். அதற்கு மாற்றுக்கருத்தை கூற மாட்டார்கள். இவை அனைத்திற்கும் பின்வரும் அல்லாஹ்வின் கூற்றையே அவர்கள் அடிப்படையாக வைப்பார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ﴿١١﴾

அவனுக்கு ஒப்பாக எதுவுமே இல்லை. அவன் அனைத்தையும் நன்கு செவியுறுபவனாகவும் அனைத்தையும் நன்கு பார்ப்பவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 42:11)

وَلِلَّهِ ٱلْأَسْمَآءُ ٱلْحُسْنَىٰ فَٱدْعُوهُ بِهَا ۖ وَذَرُوا۟ ٱلَّذِينَ يُلْحِدُونَ فِىٓ أَسْمَٰٓئِهِۦ ۚ
سَيُجْزَوْنَ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٨٠﴾

அல்லாஹ்வுக்கு (மாத்திரமே) மிக அழகிய திரு நாமங்கள் உள்ளன. ஆகவே, அவற்றைக் கொண்டு அவனை அழையுங்கள். அவனுடைய பெயர்களில் தவறிழைப்பவர்களை (அவர்கள் வழியிலேயே) விட்டுவிடுங்கள். அவர்கள் செய்துகொண்டிருந்ததற்கு (தகுந்த) கூலி கொடுக்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 7:180)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ்வின் ஸிஃபாத் -

உயர்பண்புகளை அவை எவ்வாறானவை; எப்படிப்பட்டவை என்று விளக்கமளிக்க மாட்டார்கள். ஏனெனில், அல்லாஹு தஆலா தனது ஸிஃபாத் - உயர் பண்புகளை அறிவிக்கும்போது அவை எப்படியானவை எனத் தெரிவிக்கவில்லை. ஆதலால், அவற்றை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ ءَأَنتُمْ أَعْلَمُ أَمِ ٱللَّهُ ۗ

நபியே நீர் கூறும்! (அவனைப் பற்றி) நீங்கள் மிக அறிந்தவர்களா? அல்லது அல்லாஹ் மிக அறிந்தவனா? (அல்குர்ஆன் 2:140)

மற்றும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَا تَضْرِبُوا۟ لِلَّهِ ٱلْأَمْثَالَ ۚ إِنَّ ٱللَّهَ يَعْلَمُ وَأَنتُمْ لَا تَعْلَمُونَ ﴿٧٤﴾

அல்லாஹ்விற்கு நீங்கள் உதாரணங்கள் கற்பிக்க வேண்டாம்! நிச்சயமாக, அல்லாஹ்தான் அறிவான். நீங்கள் அறிய மாட்டீர்கள்.
(அல்குர்ஆன் 16:74)

அல்லாஹ்விற்கு பிறகு அல்லாஹ்வைப் பற்றி அறிந்தவர் இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் ஆவார்கள். ஏனெனில், நபி ﷺ அவர்கள் தமது விருப்பப்படி பேசாமல் வஹியை மட்டுமே கூறுவார்கள். அதனால், அல்லாஹ்வைப் பற்றி அவர்கள் சொன்ன தகவல்கள் எல்லாம் அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தவைதான்.

وَمَا يَنطِقُ عَنِ ٱلْهَوَىٰٓ ﴿٣﴾ إِنْ هُوَ إِلَّا وَحْىٌ يُوحَىٰ ﴿٤﴾

அவர், மனோஇச்சையின் படி (எதனையும்) பேசமாட்டார். அவர் பேசுவதெல்லாம் அவருக்கு அறிவிக்கப்படும் வஹியே தவிர இல்லை.
(அல்குர்ஆன் 53:3-4)

மேலும், அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ அல்லாஹ்வுடைய உயர் பண்புகளைப் பின்வருமாறு நம்பிக்கை கொள்கின்றனர்.

அவன் الأول அல் அவ்வல் - முதலாமவன், அவனுக்கு முன்னர் எதுவும் இல்லை, الآخر அல் ஆகிர் - இறுதியானவன், அவனுக்குப் பின்னர் எதுவுமில்லை, الظاهر அள் ளாஹிர் - மிக உயர்வானவன், அவனுக்கு மேல் எதுவும் இல்லை, الباطن அல் பாதின் - மிக சமீபமானவன், அவனை விட சமீபமானது எதுவுமில்லை என ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

هُوَ ٱلْأَوَّلُ وَٱلْـَٔاخِرُ وَٱلظَّـٰهِرُ وَٱلْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ ﴿٣﴾

அவன்தான் முதலாமவன்; இறுதியானவன்; மேலானவன்; சமீபமானவன்; அவன் எல்லாவற்றையும் நன்கறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 57:3)

அல்லாஹ்வின் ذات தாத் (உள்ளமை) வேறு எந்த பொருளின் இயல்புக்கும் உள்ளமைக்கும் ஒப்பாக மாட்டாது என ஈமான் கொள்கின்றனர்.

அது போலவே, அல்லாஹ்வின் ஸிஃபாத் எனும் பண்புகளும் வேறு எந்த பொருளின் பண்புகளுக்கும் ஒப்பாகமாட்டாது என ஈமான் கொள்ளவேண்டும். ஏனெனில், அல்லாஹ்வுக்கு சமமாகவோ, நிகராகவோ, ஒப்பாகவோ எதுவுமே இல்லை. படைப்புகளைக் கொண்டு அவனை மதிப்பிட முடியாது, படைப்புகளைக் கொண்டு அவனை அனுமானிக்க முடியாது. அல்லாஹ் படைப்புகளிலிருந்து தனது உள்ளமையாலும் பண்புகளாலும் முற்றிலும் வேறுபட்டவன் ஆவான்.

ஆக, எந்த தன்மைகள் எல்லாம் அல்லாஹ் தனக்கு இருப்பதாக கூறினானோ அந்த தன்மைகள் அப்படியே அல்லாஹ்விற்கு இருப்பதாக அஹ்லுஸ் ஸுன்னா நம்புவார்கள். ஆனால், அவற்றுக்கு உவமை கற்பிக்க மாட்டார்கள். மேலும், அல்லாஹ்வை பரிசுத்தப்படுத்துகிறோம் என்று அல்லாஹ்வின் தன்மைகளை பொருளற்றதாக ஆக்க மாட்டார்கள். அதாவது, அல்லாஹ் தனக்கு கூறி இருக்கும் தன்மைகளை அவனுக்கு கூறும்போது அந்த தன்மைகளுக்கு உதாரணமோ, உவமையோ கூற மாட்டார்கள். (அல்லாஹ்வின் தன்மைகளை படைப்புகளின் தன்மையுடன் ஒப்பிட மாட்டார்கள்.) படைப்புகளின் தன்மைகளை

விட்டும் அல்லாஹ்வை பரிசுத்தப்படுத்தும்போது அவன் தனக்கு கூறி இருக்கும் தன்மைகளை பொருளற்றவையாக ஆக்க மாட்டார்கள்.

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ் தனக்கு கூறிய தன்மைகளிலும் பெயர்களிலும் تمثيل தம்ஃஸீல், تشبيه – தஷ்பீஹ், تعطيل – தஃத்தீல், تأويل – தஃவீல், تكييف – தக்யீஃப் செய்ய மாட்டார்கள். அதாவது, அல்லாஹ்வின் பெயர்களுக்கும் தன்மைகளுக்கும் உதாரணம் கூற மாட்டார்கள், அல்லாஹ்வின் பெயர்களையும் தன்மைகளையும் ஒப்பிட மாட்டார்கள், அல்லாஹ்வின் பெயர்களையும் தன்மைகளையும் அவை பொருளற்றவை என்று கூற மாட்டார்கள், அல்லாஹ்வின் பெயர்களுக்கும் தன்மைகளுக்கும் மாற்றுப் பொருள் கூற மாட்டார்கள், அல்லாஹ்வின் பெயர்களையும் தன்மைகளையும் தங்களது சுய அறிவை வைத்து இப்படி இப்படி இருக்கும் என்று விவரிக்க மாட்டார்கள்.

நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் சூழ்ந்து இருக்கிறான்; எல்லாவற்றுடைய படைப்பாளனும் அவனே; எல்லா உயிரினங்களுக்கும் உணவளிப்பவனும் அவற்றை பரிபாலிப்பவனும் அவனே ஆவான் என்று அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கை கொள்கிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ ٱللَّطِيفُ ٱلْخَبِيرُ ﴿١٤﴾

படைத்தவன் (அவன் படைத்த படைப்புகள் அனைத்தையும்) அறியமாட்டானா? அவன்தான் மிக நுட்பமானவன்; ஆழ்ந்தறிபவன் ஆவான். (அல்குர்ஆன் 67:14)

إِنَّ ٱللَّهَ هُوَ ٱلرَّزَّاقُ ذُو ٱلْقُوَّةِ ٱلْمَتِينُ ﴿٥٨﴾

நிச்சயமாக அல்லாஹ், அவன்தான் எல்லோருக்கும் உணவளிப்பவனாகவும் பலமுள்ளவனாகவும்; மிக உறுதியுடையவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 51:58)

மேலும், அல்லாஹ் அர்ஷின் மீது இருக்கிறான். அது ஏழு வானங்களுக்கு மேலாக இருக்கிறது. அல்லாஹ், தனது அறிவாலும்

ஆற்றலாலும் படைப்புகள் அனைத்தையும் சூழ்ந்து இருக்கிறான் என அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்கின்றனர். இது பற்றிப் பின்வரும் ஏழு வசனங்களிலும் அல்லாஹ் தெளிவாக எடுத்துக்கூறுகிறான். அவற்றில் எங்கும் அவன் அர்ஷுக்கு மேல் எப்படி உயர்ந்திருக்கிறான் என்பது கூறப்படவில்லை.

1. அல் அஃராஃப் 7:54, 2. யூனுஸ் 10:3

إِنَّ رَبَّكُمُ ٱللَّهُ ٱلَّذِى خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ فِى سِتَّةِ أَيَّامٍ
ثُمَّ ٱسْتَوَىٰ عَلَى ٱلْعَرْشِ

நிச்சயமாக, உங்கள் இரட்சகன் அல்லாஹ்தான். அவன்தான் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்பு, அர்ஷுக்கு மேல் அவன் உயர்ந்தான்.

3. அர் ரஅத் 13:02

ٱللَّهُ ٱلَّذِى رَفَعَ ٱلسَّمَٰوَٰتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا ثُمَّ ٱسْتَوَىٰ عَلَى ٱلْعَرْشِ

அல்லாஹ்தான், வானங்களை நீங்கள் காணக்கூடிய தூண்கள் இன்றி உயர்த்தினான். பின்பு, அர்ஷுக்கு மேல் அவன் உயர்ந்தான்.

4. தா ஹா 20:5

ٱلرَّحْمَٰنُ عَلَى ٱلْعَرْشِ ٱسْتَوَىٰ ﴿٥﴾

ரஹ்மான் (அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்) அர்ஷுக்கு மேல் உயர்ந்தான்.

5. அல் ஃபுர்கான் 25:59

ٱلَّذِى خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِى سِتَّةِ أَيَّامٍ ثُمَّ ٱسْتَوَىٰ عَلَى
ٱلْعَرْشِ ٱلرَّحْمَٰنُ فَسْـَٔلْ بِهِۦ خَبِيرًا ﴿٥٩﴾

அவன்தான் வானங்களையும் பூமியையும் அவை இரண்டுக்கும் இடையில் உள்ளவற்றையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்பு,

அர்ஷுக்கு மேல் அவன் உயர்ந்தான். (அந்த அல்லாஹ்) பேரருளாளன். எனவே, (அனைத்தையும்) அவனிடமே கேட்பீராக! (அல்லாஹ்வாகிய அவனே) ஆழ்ந்தறிபவனாக இருக்கிறான்.

6. அஸ் ஸஜ்தா 32:4

ٱللَّهُ ٱلَّذِى خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِى سِتَّةِ أَيَّامٍ ثُمَّ ٱسْتَوَىٰ عَلَى ٱلْعَرْشِ ۖ

அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் அவ்விரண்டுக்கும் இடையில் உள்ளவற்றையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்பு, அர்ஷுக்கு மேல் அவன் உயர்ந்தான்.

7. அல் ஹதீத் 57:4

هُوَ ٱلَّذِى خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ فِى سِتَّةِ أَيَّامٍ ثُمَّ ٱسْتَوَىٰ عَلَى ٱلْعَرْشِ ۚ

அவன்தான் ஆறு நாட்களில் வானங்களையும் பூமியையும் படைத்தான். பின்பு, அர்ஷுக்கு மேல் அவன் உயர்ந்தான்.

8. அல் ஹதீத் 67:16,17

ءَأَمِنتُم مَّن فِى ٱلسَّمَآءِ أَن يَخْسِفَ بِكُمُ ٱلْأَرْضَ فَإِذَا هِىَ تَمُورُ ﴿١٦﴾ أَمْ أَمِنتُم
مَّن فِى ٱلسَّمَآءِ أَن يُرْسِلَ عَلَيْكُمْ حَاصِبًا ۖ فَسَتَعْلَمُونَ كَيْفَ نَذِيرِ ﴿١٧﴾

வானத்தின் மேல் உள்ளவன் உங்களை பூமியில் சொருகிவிடுவதை நீங்கள் பயமற்று இருக்கிறீர்களா? அப்போது அது குலுங்கும். அல்லது, வானத்தின் மேல் உள்ளவன் உங்கள் மீது கல் மழையை அனுப்புவதை நீங்கள் பயமற்று இருக்கிறீர்களா? ஆக, என் எச்சரிக்கை எப்படி இருந்தது என்பதை நீங்கள் விரைவில் அறிவீர்கள்!

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مَن كَانَ يُرِيدُ ٱلْعِزَّةَ فَلِلَّهِ ٱلْعِزَّةُ جَمِيعًا ۚ إِلَيْهِ يَصْعَدُ ٱلْكَلِمُ ٱلطَّيِّبُ وَٱلْعَمَلُ ٱلصَّٰلِحُ يَرْفَعُهُۥ ۚ

யார் கண்ணியத்தை நாடுகிறாரோ (அவர் அல்லாஹ்விடம் அதனை தேடட்டும்.) ஏனெனில், அல்லாஹ்விற்குத்தான் கண்ணியம் அனைத்தும் சொந்தமானது. நல்ல சொல் அவன் பக்கம்தான் உயர்கிறது. நற்செயல் அதை உயர்த்துகிறது. (அல்குர்ஆன் 35:10)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَخَافُونَ رَبَّهُم مِّن فَوْقِهِمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ۩ ﴿٥٠﴾

(மலக்குகளான) அவர்கள் தங்களுக்கு மேலிருக்கின்ற தங்கள் இரட்சகனைப் பயப்படுகின்றனர். மற்றும், அவர்கள் எதை ஏவப்படுகிறார்களோ அதையே செய்கிறார்கள். (அல்குர்ஆன் 16:50)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَلَا تَأْمَنُونِي وَأَنَا أَمِينُ مَنْ فِي السَّمَاءِ يَأْتِينِي خَبَرُ السَّمَاءِ صَبَاحًا وَمَسَاءً

நான், வானத்திற்கு மேல் இருப்பவனுக்கு நம்பிக்கைக்குரியவனாக இருக்கிறேன், காலையும் மாலையும் வானத்தின் செய்திகள் எனக்கு வருகின்றன! அப்படி இருக்க நீங்கள் என்னை நம்பமாட்டீர்களா?[21]

இதுவரை கூறப்பட்ட வசனங்களும் நபிமொழிகளும் அல்லாஹ் ஏழு வானங்களுக்கு மேலுள்ள அர்ஷுக்கு மேல் இருக்கிறான் என்பதை மிகத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ்வின் குர்ஸீ உண்மை என்றும் அர்ஷ் உண்மை என்றும் ஈமான் கொள்கிறார்கள்.

وَسِعَ كُرْسِيُّهُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ ۖ وَلَا يَـُٔودُهُۥ حِفْظُهُمَا ۚ
وَهُوَ ٱلْعَلِيُّ ٱلْعَظِيمُ ﴿٢٥٥﴾

அவனது குர்ஸீ – பாதஸ்தலம், வானங்களையும் பூமியையும் வியாபித்திருக்கிறது. மேலும் அவ்விரண்டையும் பேணிப் பாதுகாப்பது அவனுக்குச் சிரமமாகாது. அவன் மிக உயர்ந்தவனும், மகத்துவமிக்கவனும் ஆவான். (அல்குர்ஆன் 2:255)

21. அறிவிப்பாளர்: அபூ சயீத் அல் குத்ரீ ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 4351.

அர்ஷின் அளவை அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் மதிப்பிட முடியாது. மேலும், வானமும் பூமியும் குர்ஸீக்கு முன்னால் பாலைவனத்தில் வீசப்பட்ட ஒரு வளையத்தைப் போன்றாகும். அர்ஷுக்கு முன்னால் குர்ஸீ என்பது பாலைவனத்தில் வீசப்பட்ட ஒரு வளையத்தை போன்றாகும். அல்லாஹு தஆலா அர்ஷ் மற்றும் குர்ஸீயின் தேவையற்றவனாக இருக்கிறான்.

அல்லாஹ், அர்ஷின் பக்கமோ அல்லது அதை விட குறைவான ஒன்றின் பக்கமோ தேவையுடையவனாக இருப்பதிலிருந்து அவன் தூய்மையானவன். அல்லாஹ்வின் விஷயம் அர்ஷை விட மகத்துவமானது. எனினும் அர்ஷும் குர்ஸீயும் அல்லாஹ்வின் சக்தியினாலும் வல்லமையினாலும் நிலைபெற்றிருக்கின்றன.

அல்லாஹ் தனது இரு கைகளாலேயே ஆதம் عليه السلام அவர்களைப் படைத்தான். அவனது இரு கைகளும் வலது கைகளாகும். அவனது இரு கைகளும் விரிந்தவை. அவன் விரும்பியவாறு செலவிடுகிறான் என அல்லாஹ் தன்னைப் பற்றி விவரிப்பதையும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

وَقَالَتِ ٱلْيَهُودُ يَدُ ٱللَّهِ مَغْلُولَةٌ ۚ غُلَّتْ أَيْدِيهِمْ وَلُعِنُوا۟ بِمَا قَالُوا۟ ۘ بَلْ يَدَاهُ مَبْسُوطَتَانِ يُنفِقُ كَيْفَ يَشَآءُ ۚ

அல்லாஹ்வுடைய கை கட்டப்பட்டிருப்பதாக யூதர்கள் கூறினர். (உண்மையில்,) அவர்களுடைய கைகள்தான் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் (இவ்வாறு) கூறியதற்காக அவர்கள் சபிக்கப்பட்டனர். மாறாக, அவனுடைய இரு கைகளும் விரிக்கப்பட்டிருக்கின்றன. அவன் நாடியவாறு செலவிடுகிறான். (அல்குர்ஆன் 5:64)

قَالَ يَـٰٓإِبْلِيسُ مَا مَنَعَكَ أَن تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَىَّ ۖ

(இப்லீஸே!) நான் எனது இரு கைகளினால் யாரை படைத்தேனோ அவருக்கு நீ ஸஜ்தா செய்வதிலிருந்து உன்னைத் தடுத்தது எது? என அவன் (அல்லாஹ்) கூறினான். (அல்குர்ஆன் 38:75)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ்வுக்கு سمع ஸம்ஃ - செவியுறுதல், بصر பஸர் - பார்த்தல், علم இல்ம் - அறிதல், قدرة குத்ரத் - சக்தி, ஆற்றல் பெற்றிருத்தல், قوة குவ்வத் - பலம், வலிமை, عزة இஸ்ஸத் - கண்ணியம், மேன்மை, كلام கலாம் - பேச்சு, حياة ஹயாத் - வாழ்வு, قدم கதம் - பாதம், ساق சாக் - கெண்டைக்கால், يد யத் - கை, معية மயிய்யத் - உடனிருத்தல், போன்ற பண்புகள் இருப்பதாக அல்லாஹ் தன்னைப் பற்றி குர்ஆனில் கூறி இருப்பதையும் அவனது தூதர் ﷺ அவர்கள் சொன்னவற்றையும் அப்படியே நம்பிக்கைக் கொள்கின்றனர். அவை, எப்படி என்பதை அல்லாஹ்தான் அறிவான். அதன் விளக்கத்தை நாம் அறிய மாட்டோம். அல்லாஹ் அதுபற்றி நமக்கு அறிவிக்கவில்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قَالَ لَا تَخَافَآ إِنَّنِي مَعَكُمَآ أَسۡمَعُ وَأَرَىٰ ﴿٤٦﴾

(அல்லாஹ்) கூறினான்: நீங்கள் இருவரும் பயப்படாதீர்கள்; நிச்சயமாக நான் உங்கள் இருவருடன் இருக்கிறேன்; நான் செவியுறுகிறேன்; பார்த்துக் கொண்டிருக்கிறேன். (அல்குர்ஆன் 20:46)

وَٱللَّهُ مَوۡلَىٰكُمۡۖ وَهُوَ ٱلۡعَلِيمُ ٱلۡحَكِيمُ ﴿٢﴾

அல்லாஹ்தான் உங்கள் எஜமானன். அவன்தான் நன்கறிந்தவன்; மகா ஞானவான் ஆவான். (அல்குர்ஆன் 66:02)

وَكَلَّمَ ٱللَّهُ مُوسَىٰ تَكۡلِيمٗا ﴿١٦٤﴾

அல்லாஹ் மூஸாவுடன் நேரடியாகப் பேசினான். (அல்குர்ஆன் 4:164)

وَيَبۡقَىٰ وَجۡهُ رَبِّكَ ذُو ٱلۡجَلَٰلِ وَٱلۡإِكۡرَامِ ﴿٢٧﴾

(பெரும்) கம்பீரமும் கண்ணியமும் உடையோனான உமது இறைவனின் முகம்தான் நிலைத்திருக்கும். (அல்குர்ஆன் 55:27)

رَّضِيَ ٱللَّهُ عَنۡهُمۡ وَرَضُواْ عَنۡهُۚ

அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக்கொண்டனர். (அல்குர்ஆன் 5:119)

يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُۥٓ

அவன் அவர்களை நேசிப்பான்: அவர்களும் அவனை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 5:54)

فَلَمَّآ ءَاسَفُونَا ٱنتَقَمْنَا مِنْهُمْ فَأَغْرَقْنَـٰهُمْ أَجْمَعِينَ ۝٥٥

அவர்கள் நமக்கு கோபமூட்டியபொழுது நாம் அவர்களைப் பழிவாங்கினோம். ஆக, அவர்கள் அனைவரையும் மூழ்கடித்தோம். (அல்குர்ஆன் 43:55)

يَوْمَ يُكْشَفُ عَن سَاقٍ وَيُدْعَوْنَ إِلَى ٱلسُّجُودِ فَلَا يَسْتَطِيعُونَ ۝٤٢

கெண்டைக்கால் வெளிப்படுத்தப்படும் அந்நாளில்! ஸுஜூதுக்காக அவர்கள் அழைக்கப்படுவார்கள். ஆனால், அவர்கள் (அதற்கு) சக்திபெறமாட்டார்கள். (அல்குர்ஆன் 68:42)

ٱللَّهُ لَآ إِلَـٰهَ إِلَّا هُوَ ٱلْحَىُّ ٱلْقَيُّومُ ۝٢

அல்லாஹ், அவனைத் தவிர வணங்கத் தகுதியான இறைவன் எவரும் இல்லை (அவன்தான்) நித்திய ஜீவன்; நிலையானவன் ஆவான். (அல்குர்ஆன் 3:02)

غَضِبَ ٱللَّهُ عَلَيْهِمْ

அல்லாஹ் அவர்கள் மீது கோபமடைந்தான். (அல்குர்ஆன் 60:13)

இவை போன்ற குர்ஆன் வசனங்களில் கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் பெயர்களையும், பண்புகளையும், செயல்களையும் அவற்றுக்குரிய அர்த்தங்களிலும் கருத்துகளிலும் நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, நல்லடியார்கள் மறுமையில் தமது ரப்பை கண் விழிகளால் நேரடியாக பார்ப்பார்கள்; அல்லாஹ்வுடன்

அடியார்கள் பேசுவார்கள்; அல்லாஹ்வும் நம்மோடு பேசுவான் என்று ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وُجُوهٌ يَوْمَئِذٍ نَّاضِرَةٌ ﴿٢٢﴾ إِلَىٰ رَبِّهَا نَاظِرَةٌ ﴿٢٣﴾

அந்நாளில் சில முகங்கள் செழிப்பாக (பிரகாசமாக) இருக்கும்; தமது இரட்சகனைப் பார்த்துக் கொண்டிருக்கும். (அல்குர்ஆன் 75: 22, 23)

பௌர்ணமி நிலவை நாம் பார்ப்பதைப் போன்று தெளிவாக அல்லாஹ்வை நாம் காணலாம். அவனைப் பார்ப்பதில் முண்டியடிக்கத் தேவையில்லை எனவும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ اللهِ ﷺ قَالَ: كُنَّا عِنْدَ النَّبِيِّ ﷺ فَنَظَرَ إِلَى الْقَمَرِ لَيْلَةً فَقَالَ: «إِنَّكُمْ سَتَرَوْنَ رَبَّكُمْ، كَمَا تَرَوْنَ هَذَا الْقَمَرَ، لَا تُضَامُّونَ فِي رُؤْيَتِهِ، فَإِنِ اسْتَطَعْتُمْ أَنْ لَا تُغْلَبُوا عَلَى صَلَاةٍ قَبْلَ طُلُوعِ الشَّمْسِ وَقَبْلَ غُرُوبِهَا فَافْعَلُوا

நாங்கள் முழு நிலவுள்ள பௌர்ணமி இரவில் நபி ﷺ அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்கள் முழு நிலவை நோக்கினார்கள். இந்த நிலவை நீங்கள் பார்ப்பது போன்று நிச்சயமாக உங்கள் இறைவனைக் காண்பீர்கள். அவனைப் பார்ப்பதில் நீங்கள் நெருக்கடிக்கு ஆளாக மாட்டீர்கள். ஆக, உங்களுக்கு இயலுமானால், சூரியன் உதிக்கும் முன்னரும் சூரியன் மறையும் முன்னரும் உள்ள தொழுகைகளை நீங்கள் தவறவிடாமல் இருங்கள்! என்று கூறினார்கள்.[22]

மேலும், இரவின் மூன்று பகுதிகளில் இறுதி மூன்றாவது பகுதியில் அல்லாஹ் தனது மகத்துவத்திற்கும் கண்ணியத்திற்கும் ஏற்றாற் போல் கீழ் வானத்திற்கு இறங்குகிறான் எனவும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

22. அறிவிப்பாளர்: ஜரீர் இப்னு அப்தில்லாஹ் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 554.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَىٰ كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا، حِينَ يَبْقَىٰ ثُلُثُ اللَّيْلِ الآخِرُ فَيَقُولُ: مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ، مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ، مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ

நமது ரப்பு கீழ் வானத்திற்கு இரவின் இறுதி மூன்றாவது பகுதி மீதமிருக்கும் தருணத்தில் இறங்குகிறான். அவன் கூறுகிறான்: என்னை யார் அழைப்பாரோ அவரின் பிரார்த்தனையை நான் அங்கீகரிப்பேன். என்னிடம் யார் கேட்பாரோ அவருக்கு நான் கொடுப்பேன். என்னிடம் யார் பாவமன்னிப்புக் கேட்பாரோ அவருக்கு நான் மன்னிப்பு அளிக்கிறேன் என்று கூறுகிறான் என நபி ﷺ கூறினார்கள்.[23]

மேலும், அல்லாஹ் மறுமை நாளில் தனது அடியார்களுக்கு இடையில் தீர்ப்பு வழங்க தனது கண்ணியத்திற்கு ஏற்ற வருகையால் நிஜமாகவே வருகை தருவான் என அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

كَلَّآ إِذَا دُكَّتِ ٱلْأَرْضُ دَكًّا دَكًّا ﴿٢١﴾

وَجَآءَ رَبُّكَ وَٱلْمَلَكُ صَفًّا صَفًّا ﴿٢٢﴾

அவ்வாறல்ல, பூமி தூள் தூளாகத் தகர்க்கப்படும்போது. மேலும், உம் இறைவன் வருவான், மற்றும் மலக்குகளும் அணி அணியாக நிற்பார்கள். (அல்குர்ஆன் 89:21,22)

هَلْ يَنظُرُونَ إِلَّآ أَن يَأْتِيَهُمُ ٱللَّهُ فِى ظُلَلٍ مِّنَ ٱلْغَمَامِ وَٱلْمَلَٰٓئِكَةُ وَقُضِىَ ٱلْأَمْرُ ۚ وَإِلَى ٱللَّهِ تُرْجَعُ ٱلْأُمُورُ ﴿٢١٠﴾

அல்லாஹ்வும் வானவர்களும் மேகங்களின் நிழல்களில் அவர்களிடம் வருவதையும் காரியம் முடிக்கப்படுவதையும் தவிர (வேறெதையும்)

23. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 7494.

எதிர்பார்க்கிறார்களா? காரியங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பக்கமே திருப்பப்படும். (அல்குர்ஆன் 2:210)

மேற்கூறப்பட்ட அல்லாஹ்வின் அல் அஸ்மா வஸ் ஸிஃபாத் - பெயர்கள், தன்மைகள் விஷயங்களை ஈமான் கொள்கின்ற அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய மன்ஹஜ் - அணுகுமுறையானது, அல்லாஹ்வும் நபி ﷺ அவர்களும் அறிவித்தவற்றை முழுமையாக ஈமான் கொள்வதும் அவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்வதுமாகும்.

இமாம் ஸுஹ்ரீ ؒ கூறுகிறார்கள்:

مِنَ اللهِ الرِّسَالَةُ وَعَلَى الرَّسُولِ الْبَلَاغُ وَعَلَيْنَا التَّسْلِيمُ

ரிஸாலா - தூதுத்துவம் அல்லாஹ்விடமிருந்து வந்தது. நபி ﷺ அவர்களுடைய பொறுப்பு அதை எடுத்துரைப்பதாகும். நமது பொறுப்பு அதை ஏற்றுக்கொள்வதாகும்.

இமாம் ஸுஃப்யான் இப்னு உயைனா ؒ கூறுகிறார்கள்:

كُلُّ مَا وَصَفَ اللهُ تَعَالَىٰ بِهِ نَفْسَهُ فِي الْقُرْآنِ فَقِرَاءَتُهُ؛ تَفْسِيرُهُ لَا كَيْفَ وَلَا مِثْلَ

அல்குர்ஆனில் அல்லாஹ் தன்னைப் பற்றி வர்ணித்தவற்றை எப்படி என்று கேட்காமலும் உவமை கூறாமலும் அப்படியே படிப்பதுதான் அதன் விளக்கமாகும்.

இமாம் ஷாஃபிஈ ؒ கூறுகிறார்கள்:

آمَنْتُ بِاللهِ، وَبِمَا جَاءَ عَنِ اللهِ عَلَىٰ مُرَادِ اللهِ، وَآمَنْتُ بِرَسُولِ اللهِ وَبِمَا جَاءَ عَنْ رَسُولِ اللهِ عَلَىٰ مُرَادِ رَسُولِ اللهِ ﷺ

அல்லாஹ்வை நம்பிக்கைக் கொண்டேன். அல்லாஹ்வைப் பற்றி வந்த செய்தியை அல்லாஹ்வின் நோக்கத்திற்கு ஏற்ப நம்பிக்கைக் கொண்டேன். அல்லாஹ்வின் தூதரையும் நம்பிக்கைக் கொண்டேன். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடமிருந்து வந்ததை அல்லாஹ்வின்

தூதர் ﷺ அவர்களின் நோக்கத்திற்கு ஏற்ப நம்பிக்கைக் கொண்டேன்.

இமாம் வலீத் இப்னு முஸ்லிம் ﵀ கூறுகிறார்கள்:

وَقَالَ الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ: سَأَلْتُ الْأَوْزَاعِيَّ وَسُفْيَانَ بْنَ عُيَيْنَةَ وَمَالِكَ بْنَ أَنَسٍ عَنْ هَٰذِهِ الْأَحَادِيثِ فِي الصِّفَاتِ وَالرُّؤْيَةِ، فَقَالُوا: أَمِرُّوهَا كَمَا جَاءَتْ بِلَا كَيْفٍ

அவ்ஸாயி, ஸுஃப்யான் இப்னு உயைனா, மாலிக் இப்னு அனஸ் ஆகியோரிடம் ஸிஃபாத் – அல்லாஹ்வின் பண்புகள் மற்றும் அல்லாஹ்வைக் காணுதல் பற்றி வரும் ஹதீஸ்கள் தொடர்பாகக் கேட்டேன். அதற்கு அவர்கள் எல்லோரும் கூறினார்கள்: எப்படி என்று கேட்காமல் அவை வந்ததைப் போன்று அப்படியே அவற்றை விட்டுவிடுங்கள்! (அவற்றை அப்படியே அறிவிப்பு செய்யுங்கள்!)

இமாமு தாரில் ஹிஜ்ரா என்று புகழப்படும் மாலிக் இப்னு அனஸ் ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

إِيَّاكُمْ وَالْبِدَعَ قِيلَ: وَمَا الْبِدَعُ؟ قَالَ: أَهْلُ الْبِدَعِ هُمُ الَّذِينَ يَتَكَلَّمُونَ فِي أَسْمَاءِ اللهِ وَصِفَاتِهِ وَكَلَامِهِ وَعِلْمِهِ وَقُدْرَتِهِ، وَلَا يَسْكُتُونَ عَمَّا سَكَتَ عَنْهُ الصَّحَابَةُ وَالتَّابِعُونَ لَهُمْ بِإِحْسَانٍ.

பித்ஆக்களை விட்டு உங்களை நான் எச்சரிக்கிறேன் என்று அவர்கள் கூறியபொழுது, பித்ஆக்கள் என்றால் என்ன என்று அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு இமாம் கூறினார்கள்: பித்ஆக்காரர்கள், அல்லாஹ்வின் பெயர்களிலும் அவனது பண்புகளிலும் அவனது பேச்சு, அவனது அறிவு, அவனது ஆற்றல் தொடர்பாக தர்க்கம் பேசுவார்கள். ஸஹாபாக்கள், தாபியீன்கள், மற்றும், அவர்களை நல்வழியில் பின்பற்றியோரும் மௌனம் காத்த விஷயங்களில் அவர்கள் மௌனம் காக்க மாட்டார்கள்.

وَسَأَلَ رَجُلٌ مَالِكَ بْنَ أَنَسٍ ﵀ عَنْ قَوْلِهِ سُبْحَانَهُ وَتَعَالَىٰ: {الرَّحْمَٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوَىٰ} [طه: ٥] كَيْفَ اسْتَوَى؟ فَقَالَ: الاسْتِوَاءُ غَيْرُ مَجْهُولٍ، وَالْكَيْفُ غَيْرُ

مَعْقُولٍ، وَالْإِيمَانُ بِهِ وَاجِبٌ، وَالسُّؤَالُ عَنْهُ بِدْعَةٌ، وَمَا أَرَاكَ إِلا ضَالًّا، وَأَمَرَ بِهِ أَنْ يُخْرَجَ مِنَ الْمَجْلِسِ.

இமாம் மாலிக் ﵀ அவர்களிடம் அர்ரஹ்மான் அர்ஷின் மீது உயர்ந்து விட்டான் என்ற குர்ஆன் வசனம் (20:5) தொடர்பாக, அவன் எவ்வாறு உயர்ந்து இருக்கிறான்? என ஒருவர் வினவினார். அதற்கு இமாம் அவர்கள், இஸ்திவா - உயர்ந்திருத்தல் என்பது நமக்குத் தெரியாதது அல்ல. அது எப்படி என்பது அறிவால் அறிய முடியாதது. அதை ஈமான் கொள்வது கடமை. அதுபற்றி கேள்வி கேட்பது பித்ஆ ஆகும். உம்மை நான் வழிகெட்டவராகவே காண்கிறேன் என்று கூறினார்கள். பின்னர், அவரை அந்த சபையில் இருந்து வெளியேற்றுமாறு ஏவினார்கள்.

இமாம் அபூ ஹனீஃபா ﵀ அவர்கள் கூறினார்கள் :

لَا يَنْبَغِي لِأَحَدٍ أَنْ يَنطِقَ فِي ذَاتِ اللهِ بِشَيْءٍ؛ بَلْ يَصِفُهُ بِمَا وَصَفَ بِهِ نَفْسَهُ، وَلَا يَقُولُ فِيهِ بِرَأْيِهِ شَيْئًا؛ تَبَارَكَ اللهُ تَعَالَىٰ رَبُّ الْعَالَمِينَ

அல்லாஹ்வின் தாத் - உள்ளமைப் பற்றி மேலதிகமாக எதுவும் பேசுவதற்கு யாருக்கும் எவ்வித அவசியமும் இல்லை. அல்லாஹ் தன்னைப் பற்றி வர்ணித்தவற்றைக் கொண்டு மட்டுமே அவர் வர்ணிக்க வேண்டும். இந்த விஷயத்தில் அவர் தமது எவ்வித அறிவைக் கொண்டு எதையும் கூறக்கூடாது. அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் மிகவும் பாக்கியமுடையவன் ஆவான்.

இமாம் அபூ ஹனீஃபா ﵀ அவர்களிடம், நுஸூல் -அல்லாஹ்வின் இறங்குதல் பற்றி கேள்வி கேட்கப்பட்டபோது, இமாம் அவர்கள்,

يَنْزِلُ بِلَا كَيْفٍ

அல்லாஹ் இறங்குகிறான் ஆனால், எவ்வாறு என்று வர்ணிக்க முடியாது என பதில் கூறினார்கள்.

இமாம் நுஅய்ம் இப்னு ஹம்மாத் ﵀ அவர்கள் கூறினார்கள்:

مَنْ شَبَّهَ اللهَ بِخَلْقِهِ فَقَدْ كَفَرَ، وَمَنْ أَنْكَرَ مَا وَصَفَ بِهِ نَفْسَهُ فَقَدْ كَفَرَ، وَلَيْسَ مَا وَصَفَ بِهِ نَفْسَهُ وَلَا رَسُولُهُ تَشْبِيهًا

அல்லாஹ்வை அவனது படைப்பினங்களுக்கு யார் ஒப்பிடுவாரோ அவர் காஃபிராகி விடுவார். அல்லாஹ் தன்னைப் பற்றி வர்ணித்தவற்றை யார் மறுப்பாரோ அவர் காஃபிராகி விடுவார். அவன் தன்னைப் பற்றி வர்ணித்தவையும், அவனது தூதர் ﷺ அவர்கள் அவனை வர்ணித்தவையும் தஷ்பீஹ் - (அவனை படைப்புகளுக்கு) ஒப்பிடுவதாக இல்லை.

قَدَمُ الإِسْلَامِ لَا تَثْبُتُ إِلَّا عَلَىٰ قَنْطَرَةِ التَّسْلِيمِ

கட்டுப்படுதல், ஏற்றுக்கொள்ளுதல் என்ற பாலத்தின் மீதுதான் இஸ்லாமின் பாதம் உறுதி அடைகிறது!

என்று சான்றோர் சிலர் கூறி இருப்பதாக இமாம் بغوى பகவி ؒ அவர்கள் ஷர்ஹுஸ் ஸுன்னா நூலில் அறிவிக்கிறார்கள்.

ஆகவே, யார் அல்லாஹ்வின் தாத் - உள்ளமை விஷயத்திலும் அவனது ஸிஃபாத் - பண்புகள் விஷயத்திலும் ஸலஃப் உடைய வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் அல்லாஹ்வின் அல் அஸ்மா வஸ் ஸிஃபாத் விஷயத்தில் منهج القرآن மன்ஹஜுல் குர்ஆன் - குர்ஆனின் வழிமுறையைப் பின்பற்றக்கூடியவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் ஸலஃப் உடைய காலத்தில் வாழ்ந்தவர்களாகவோ, அல்லது பிற்காலத்தில் வந்தவர்களாகவோ இருந்தாலும் சரியே.

மற்றும், யார் (அல்லாஹ்வின் தன்மைகளை நம்பிக்கைக் கொள்வதில்) ஸலஃப் உடைய வழிமுறைக்கு முரண்படுகிறார்களோ அவர் குர்ஆனின் அணுகுமுறையை, வழிமுறையைப் பின்பற்றியவராக ஆக மாட்டார். அவர் ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்கள் உடைய காலத்தில் வாழ்ந்தவராக இருந்தாலும் சரியே.

****

اَلرُّكْنُ الثَّانِي

الْإِيمَانُ بِالْمَلَائِكَةِ

இரண்டாவது தூண்

வானவர்களை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِالْمَلَائِكَةِ
வானவர்களை நம்பிக்கை கொள்ளுதல்

ஈமானின் இரண்டாவது தூண் மலக்குகள் – வானவர்களின் உள்ளமையை சந்தேகமே இல்லாமல், உறுதியாக நம்பிக்கைக் கொள்வதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ءَامَنَ ٱلرَّسُولُ بِمَآ أُنزِلَ إِلَيۡهِ مِن رَّبِّهِۦ وَٱلۡمُؤۡمِنُونَۚ كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ

இந்த இறைத்தூதரும், முஃமின்களும் தமது இறைவனிடமிருந்து தமக்கு இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொண்டனர். (அல்குர்ஆன் 2:285)

மலக்குகளின் உள்ளமையை யாராவது மறுத்தால் அவர் காஃபிர் ஆவார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يَكۡفُرۡ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِ فَقَدۡ ضَلَّ ضَلَٰلَۢا بَعِيدًا ﴿١٣٦﴾

எவர் அல்லாஹ்வையும், அவனின் வானவர்களையும், அவனின் வேதங்களையும் அவனின் தூதர்களையும் மறுமை நாளையும் நிராகரிப்பாரோ, நிச்சயமாக அவர் மிகத் தூரமான வழிகேடாக வழிகெட்டுவிட்டார். (அல்குர்ஆன் 4:136)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மலக்குகள் பற்றி முஜ்மல் – பொதுவாக ஈமான் கொள்கின்றனர். மலக்குகள் பற்றி முஃபஸ்ஸல்

- விரிவாக ஈமான் கொள்கின்ற விஷயத்தில் ஸஹீஹ் - சரியான ஆதாரங்களில் அவர்களைப் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதையும் அல்லாஹ்வும் ரஸூல் ﷺ அவர்களில் யாரை பெயர் குறிப்பிட்டுக் கூறினார்களோ அவர்களையும் விரிவாக நம்பிக்கை கொள்கிறார்கள்.

உதாரணமாக, جبريل ஜிப்ரீல் ﷵ அவர்கள் வஹியை கொண்டு வருவதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

ميكائيل மீக்காயீல் ﷵ அவர்கள் மழைக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

إسرافيل இஸ்ராஃபீல் ﷵ அவர்கள் சூர் - எக்காளத்தில் ஊதுவதற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

ملك الموت மலக்குல் மவ்த் ﷵ அவர்கள் உயிர்களைக் கைப்பற்று வதற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

مَالك மாலிக் ﷵ அவர்கள் நரகத்திற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

رضوان ரிழ்வான் ﷵ அவர்கள் சொர்க்கத்திற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர் ஆவார்.

منكر முன்கர் ﷵ மற்றும் نكير நக்கீர் ﷵ ஆகிய இருவரும் கப்ரில் விசாரணை செய்வதற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர்கள் ஆவார்கள்.

رقيب ரக்கீப் ﷵ மற்றும் عتيد அத்தீத் ﷵ ஆகிய இரு மலக்குகளும் நன்மை தீமைகளை பதிவு செய்வற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்ட வானவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ மலக்குகள் பற்றி விரிவாக நம்பிக்கை கொள்கிறார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய நம்பிக்கையாவது: மலக்குகள் என்றொரு படைப்பினம் உள்ளது, அவர்கள் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட அடியார்கள் ஆவார்கள், அல்லாஹ் அவர்களை

ஒளியினால் படைத்தான், அவர்களுக்கு என்று தனி உள்ளமை இருக்கிறது. அவர்கள் அல்லாஹ் உடைய படைப்புகளில் ஒரு வகையான படைப்பு ஆவார்கள், அவர்கள் வானத்தில் வசிக்கிறார்கள்.

மலக்குகளின் தோற்றம், படைப்பு பிரம்மாண்டமானது. அவர்களில் இரு இறக்கைகள் உடையவர் இருக்கிறார்; மூன்று இறக்கைகள் உடையவர் இருக்கிறார்; நான்கு இறக்கைகள் உடையவர் இருக்கிறார். அவற்றை விடவும் அதிக இறக்கைகள் உடையவர்களும் இருக்கின்றனர். குறிப்பாக, ஜிப்ரீல் ﵇ அவர்களுக்கு அறுநூறு இறக்கைகள் இருக்கின்றன.

மலக்குகள் அல்லாஹ்வின் ராணுவங்களில் உள்ள ஒரு ராணுவமாகும். அவர்கள் எப்பொருளுக்கும் ஒத்த உருவத்தில் தோற்றம் எடுக்க சக்தி பெற்றவர்கள். அல்லாஹ்வின் அனுமதி கிடைப்பதைப் பொறுத்து நிலைமைக்கு ஏற்ப எந்தவொரு உடல் தோற்றத்திலும் அவர்கள் வெளிப்பட ஆற்றல் உள்ளவர்கள் ஆவார்கள். மலக்குகள் அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்கள், அல்லாஹ்விடம் கண்ணியமிக்கவர்கள். அவர்கள் ஆண், பெண் என்ற தன்மைக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் பிள்ளைகள் பெற மாட்டார்கள்.

மலக்குகள் உணவு உண்ணமாட்டார்கள்; பானங்கள் அருந்தமாட்டார்கள். தஸ்பீஹ் سُبْحَانَ اللهِ - ஸுப்ஹானல்லாஹ், தஹ்லீல் لَا إِلٰهَ إِلَّا اللهُ - லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதுதான் அவர்களின் உணவாகும். மலக்குகள் அல்லாஹ்வை வணங்குவதிலும் அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் சடைவடைய மாட்டார்கள்; சோர்வடைய மாட்டார்கள்; பலவீனமடைய மாட்டார்கள். அழகு, வனப்பு, வெட்கம், ஒழுக்கம் போன்ற ஒழுக்கங்களைக் கொண்டு அவர்கள் அலங்கரிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

மலக்குகள் மனிதர்களில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் எப்பொழுதும் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவார்கள்; அவனுக்கு மாறுசெய்ய மாட்டார்கள். இதுதான் அவர்களின் இயல்பாகும். அல்லாஹ், மலக்குகளை அவனை வணங்கி வழிபடுவதற்காகவும் அவனது கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவுமே படைத்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَقَالُواْ ٱتَّخَذَ ٱلرَّحۡمَٰنُ وَلَدٗاۗ سُبۡحَٰنَهُۥۚ بَلۡ عِبَادٞ مُّكۡرَمُونَ ٢٦ لَا يَسۡبِقُونَهُۥ
بِٱلۡقَوۡلِ وَهُم بِأَمۡرِهِۦ يَعۡمَلُونَ ٢٧ يَعۡلَمُ مَا بَيۡنَ أَيۡدِيهِمۡ وَمَا خَلۡفَهُمۡ وَلَا
يَشۡفَعُونَ إِلَّا لِمَنِ ٱرۡتَضَىٰ وَهُم مِّنۡ خَشۡيَتِهِۦ مُشۡفِقُونَ ٢٨

அர்ரஹ்மான் (ஆகிய அல்லாஹ் தனக்கு மலக்குகளைப்) பிள்ளையாக எடுத்துக் கொண்டான் என்று அவர்கள் (-காஃபிர்கள்) கூறினர். (அவர்கள் சொன்ன இவ்வார்த்தையிலிருந்து) அவன் (-அல்லாஹ்) மிகத்தூயவன். மாறாக, (அந்த வானவர்கள்) அவனுடைய கண்ணியமான அடியார்கள் ஆவார்கள். அவர்கள் அவனது பேச்சை மீற மாட்டார்கள். அவனுடைய கட்டளைப்படியே அவர்கள் செயல்படுகின்றனர். அவர்களுக்கு முன்னால் உள்ளதையும் அவர்களுக்குப் பின்னால் உள்ளதையும் அவன் நன்கறிகிறான். அவன் பொருந்திக் கொண்டவர்களைத் தவிர (மற்றவர்களுக்காக) அவர்கள் ஷஃபாஅத் - சிபாரிசு செய்யமாட்டார்கள். அவர்கள் அவனுடைய அச்சத்தால் பயந்து கொண்டிருக்கிறார்கள். (அல்குர்ஆன் 21:26-28)

மலக்குகள் இரவு பகலாக அல்லாஹ்வைத் துதித்துக் கொண்டே இருக்கின்றனர். வானத்தில் இருக்கும் البيت المعمور அல் பைத்துல் மஃமூர் என்ற ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் வானவர்கள் தொழுவார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கு மாத்திரம் பயந்தவர்களாகவும், அச்சம் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

மலக்குகளில் பல வகையினர் உள்ளனர்.

அல் குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் மலக்குமார்கள் பற்றியும் அவர்களது பணிகள் பற்றியும் கூறப்பட்டுள்ள செய்திகளின் சுருக்கமாவது:

மலக்குகளில் பல வகையினர் இருக்கின்றனர். அவர்களில் அர்ஷை சுமப்பதற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள், வஹியை கொண்டு வருவதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்டவர்கள்,

மலைகளுக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சொர்க்கத்தின் காவலர்களும், நரகத்தின் காவலர்களும் இருக்கின்றனர்.

அடியார்களின் செயல்களைப் பதிவு செய்து, பாதுகாக்கும் பொறுப்புக்குரிய மலக்குகளும் இருக்கின்றனர். முஃமின்களின் உயிரைக் கைப்பற்றுவதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்ட மலக்குகளும் இருக்கின்றனர். காஃபிர்களின் உயிரைக் கைப்பற்றுவதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்ட மலக்குகளும் இருக்கின்றனர். கப்ர் - மண்ணறையில் மனிதர்களிடம் கேள்வி கணக்கு கேட்பதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்ட மலக்குகளும் இருக்கின்றனர்.

வானவர்களில் முஃமின்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுபவர்கள் இருக்கின்றனர். முஃமின்களுக்காகப் பிரார்த்திப்பவர்களும், முஃமின்கள் மீது அன்பு கொள்வோரும் உள்ளனர். அல்லாஹ்வை நினைவு கூரும் சபைக்கு வருகை தருவோரும், கல்வி கற்கும் இடங்களுக்கு சமூகமளிப்போரும் உள்ளனர். அந்த சபையோரை தங்கள் இறக்கைகளால் அந்த மலக்குகள் மூடிக் கொள்கின்றனர். மனிதனை விட்டுப் பிரியாத எப்போதும் அவனுடன் சேர்ந்திருப்போரும் மலக்குகளில் இருக்கின்றனர். மனிதனை நன்மை செய்வதன் பக்கம் அழைப்பவரும் அவர்களில் உள்ளனர். நல்லடியார்களின் ஜனாஸாவில் கலந்து கொள்வோரும் அவர்களில் உள்ளனர். முஃமின்களோடு போர்களில் பங்கெடுப்பவர்களும் அல்லாஹ்வின் எதிரிகளிடம் ஜிஹாத் செய்பவர்களின் பாதங்களைப் பலப்படுத்துபவர்களும் மலக்குகளில் இருக்கின்றனர்.

நல்லடியார்களின் பாதுகாப்புக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டோரும் மலக்குகளில் உள்ளனர். முஃமின்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்குவதற்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்களும் மலக்குகளில் இருக்கின்றனர். (பாவிகளுக்கு) தண்டனை வழங்குவதற்கு பொறுப்பு கொடுக்கப்பட்டவர்களும் மலக்குகளில் உள்ளனர்.

உருவப்படங்கள், சிலைகள், நாய், பன்றி, மணி இருக்கும் வீடுகளுக்குள் மலக்குகள் நுழைய மாட்டார்கள். மனிதனுக்கு எது சங்கடத்தை தருகிறதோ அதன் மூலம் மலக்குகளும் சங்கடப்படுகின்றனர்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ الْبَيْتَ الَّذِي فِيهِ الصُّوَرُ لَا تَدْخُلُهُ الْمَلَائِكَةُ

நிச்சயமாக உருவங்கள் இருக்கும் வீடுகளுக்குள் மலக்குகள் நுழையமாட்டார்கள்.[24]

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

عَنْ أَبِي طَلْحَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا تَدْخُلُ الْمَلَائِكَةُ بَيْتًا فِيهِ كَلْبٌ وَلَا صُورَةٌ

நாயும் உருவப்படங்களும் இருக்கும் வீடுகளுக்குள் மலக்குகள் நுழையமாட்டார்கள்.[25]

மலக்குகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கையை அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا يَعْلَمُ جُنُودَ رَبِّكَ إِلَّا هُوَ ۚ وَمَا هِيَ إِلَّا ذِكْرَىٰ لِلْبَشَرِ ﴿٣١﴾

உமது இரட்சகனின் இராணுவங்களை அவனைத் தவிர (வேறு யாரும்) அறிய மாட்டார்கள். இது மனிதர்களுக்கு ஒரு நினைவூட்டலே தவிர (வேறு) இல்லை. (அல்குர்ஆன் 74:31)

அல்லாஹ் நமது கண்களுக்குப் புலப்படாதவாறு மலக்குகளை மறைத்து வைத்துள்ளான். அவர்கள் எந்த உருவ அமைப்பில் படைக்கப்பட்டார்களோ அந்த உண்மை உருவத்தில் நாம் அவர்களை பார்க்க முடியாது. எனினும் அல்லாஹ், தான் நாடிய சில அடியார்களுக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். நபி ﷺ அவர்கள், ஜிப்ரீல் عليه السلام அவர்களை அல்லாஹ் படைத்த உண்மை உருவத்தில் இரண்டு முறை பார்த்திருக்கிறார்கள்.

24. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 5961.
25. அறிவிப்பாளர்: அபூ தல்ஹா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3322.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَقَدْ رَءَاهُ نَزْلَةً أُخْرَىٰ ﴿١٣﴾ عِندَ سِدْرَةِ ٱلْمُنتَهَىٰ ﴿١٤﴾

திட்டவட்டமாக அவர் (-நபி முஹம்மது) அவரை (-ஜிப்ரீலை) மற்றொரு முறை, சித்ரத்துல் முன்தஹா என்ற இடத்தில் பார்த்தார்.

(அல்குர்ஆன் 53:13,14)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَقَدْ رَءَاهُ بِٱلْأُفُقِ ٱلْمُبِينِ ﴿٢٣﴾

திட்டவட்டமாக, தெளிவான அடிவானத்தில் அவர் (-நபி முஹம்மது) அவரை (-ஜிப்ரீலை)க் கண்டார். (அல்குர்ஆன் 81:23)

****

اَلرُّكْنُ الثَّالِثُ

الْإِيمَانُ بِالْكُتُبِ

மூன்றாவது தூண்

வேதங்களை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِالْكُتُبِ
வேதங்களை நம்பிக்கை கொள்ளுதல்

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ் தனது தூதர்கள் மீது வேதங்களை இறக்கி இருக்கிறான் என்று எவ்வித சந்தேகமும் இன்றி மிக உறுதியாக நம்பிக்கை கொள்கின்றனர். அந்த வேதங்களில், மனித சமூகம் எடுத்து நடக்க வேண்டிய ஏவல்களும், தவிர்ந்து கொள்ள வேண்டிய விலக்கல்களும், நல்லவர்களுக்கான கூலியும், பாவிகளுக்கான தண்டனையும் விவரிக்கப்பட்டுள்ளன. மற்றும், அல்லாஹ் தனது படைப்புகளிடம் எதை விரும்புகிறான், (எதை விரும்பவில்லை) என்ற செய்திகளும் அந்த வேதங்களில் இருக்கின்றன. மேலும், அந்த வேதங்களில் ஒளியும், நேர்வழியும் இருக்கின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ءَامَنَ ٱلرَّسُولُ بِمَآ أُنزِلَ إِلَيۡهِ مِن رَّبِّهِۦ وَٱلۡمُؤۡمِنُونَۚ كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَـٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ

இந்த இறைத்தூதரும், முஃமின்களும் தமது இறைவனிடமிருந்து தமக்கு இறக்கப்பட்ட(வேதத்)தை நம்பிக்கை கொண்டுள்ளனர். (முஃமின்கள்) எல்லோரும் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொண்டுள்ளனர். (அல்குர்ஆன் 2:285)

மனித இனத்தை நேர்வழிப்படுத்துவதற்காகவே அல்லாஹ் தனது இறைத்தூதர்களுக்குத் தனது வேதங்களை இறக்கி வைத்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

الٓرۚ كِتَـٰبٌ أَنزَلۡنَـٰهُ إِلَيۡكَ لِتُخۡرِجَ ٱلنَّاسَ مِنَ ٱلظُّلُمَـٰتِ إِلَى ٱلنُّورِ بِإِذۡنِ رَبِّهِمۡ إِلَىٰ صِرَٰطِ ٱلۡعَزِيزِ ٱلۡحَمِيدِ ١

அலிஃப், லாம், ரா. (இது ஒரு) வேதமாகும். மக்களை அவர்களின் இறைவனின் அனுமதியின்படி இருள்களிலிருந்து ஒளியின் பக்கம், புகழுக்குரியவனாகிய மிகைத்தவனின் பாதையின் பக்கம் நீர் வெளியாக்கி கொண்டு வருவதற்காக இ(ந்த வேதத்)தை நாம் உமக்கு இறக்கினோம். (அல்குர்ஆன் 14:1)

அந்த வேதங்கள் தவ்ராத், ஸபூர், இன்ஜீல், குர்ஆன் ஆகும். மேலும், இப்ராஹீம் ﷺ மற்றும் மூஸா ﷺ ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஸுஹுஃப் என்ற ஏடுகளாகும். தவ்ராத், இன்ஜீல், குர்ஆன் ஆகியவை வேதங்களில் பெரிய வேதங்களாகும். இந்த மூன்றில் மிக மகத்தானது, மிக சிறப்பானது அல்குர்ஆன் ஆகும். இது ஏனைய வேதங்களை மாற்றிவிட்டது.

அல்லாஹ், முந்தைய நபிமார்களுக்கு வேதங்களை அருளியபோது அவற்றைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை அவன் ஏற்கவில்லை. மாறாக, மதகுருக்களும் கல்வியாளர்களும் அவ்வேதங்களைப் பாதுகாக்க வேண்டும் என ஏவப்பட்டிருந்தனர். ஆனால், அவர்கள் அவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தவறிவிட்டனர். அவர்கள் அவற்றை உரிய முறையில் கண்காணித்துப் பாதுகாக்கவில்லை. ஆகையால் அவற்றில் பலவிதமான மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன.

கண்ணியமிகு அல்குர்ஆன்

குர்ஆன், ரப்புல் ஆலமீன் – அகிலத்தாரின் இரட்சகனுடைய பேச்சாகும். அவனது மிகத் தெளிவான வேதமாகும். அவனது மிக உறுதிமிக்க கயிறாகும். இதனை அல்லாஹ் அவனது திருத்தூதர் முஹம்மது இப்னு அப்தில்லாஹ் ﷺ அவர்கள் மீது இறக்கி வைத்தான். அதனை நபி ﷺ அவர்களின் சமுதாயத்திற்கான சட்ட நூலாக ஆக்கி வைத்தான். மனித குலத்தை இருள்களிலிருந்து ஒளியின் பால் அழைத்துச் செல்லும் கலங்கரை விளக்கமாகவும், நேர்வழி மற்றும் சீரான பாதைக்கு வழிகாட்டியாகவும் ஆக்கினான்.

குர்ஆனில் அல்லாஹ், முன்சென்ற சமூகங்கள் மற்றும் பின் வந்தவர்கள் பற்றிய செய்திகளையும் தெளிவுபடுத்தியுள்ளான். மேலும், இந்த குர்ஆனில் வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்தது பற்றிய

தகவல்களையும் விளக்கி இருக்கிறான். ஹலால் – அனுமதிக்கப்பட்டது, ஹராம் – தடுக்கப்பட்டது பற்றிய விளக்கங்களையும், ஒழுக்க மாண்புகள் மற்றும் நற்பண்புகளின் அடிப்படைகளையும், வணக்க வழிபாடுகளின் சட்டங்களையும், முஆமலாத் – கொடுக்கல், வாங்கல், வர்த்தகங்களின் சட்டங்களையும் இந்த குர்ஆனில் அல்லாஹ் தெளிவாகக் கூறி இருக்கிறான்.

அல்லாஹு தஆலா அல்குர்ஆனில் நபிமார்கள், நல்லடியார்கள் பற்றிய வரலாறுகளைக் கூறுகிறான். முஃமின்களுக்கு மறுமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நற்கூலிகளையும், காஃபிர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனைகளையும் தெளிவாகக் கூறி இருக்கிறான். மேலும், முஃமின்களின் தங்குமிடமான சொர்க்கத்தின் வர்ணனைகளையும், காஃபிர்களின் தங்குமிடமான நரகத்தின் வர்ணனைகளையும் கூறி இருக்கிறான்.

குர்ஆனை அல்லாஹ் உள்ளங்களில் இருக்கும் நோய்களுக்கான நிவாரணியாகவும், மனித வாழ்வுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களுக்குமான மிகத் தெளிவான விளக்கமாகவும், நேர்வழியாகவும், முஃமின்களுக்கான அருளாகவும் ஆக்கி வைத்துள்ளான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَنَزَّلْنَا عَلَيْكَ ٱلْكِتَٰبَ تِبْيَٰنًا لِّكُلِّ شَىْءٍ وَهُدًى وَرَحْمَةً وَبُشْرَىٰ لِلْمُسْلِمِينَ ﴿٨٩﴾

(நபியே!) இவ்வேதத்தை நாம் எல்லாவற்றுக்குமான தெளிவுரையாகவும் நேர்வழி காட்டியாகவும் அருளாகவும் முஸ்லிம்களுக்கு நற்செய்தியாகவும் உம்மீது நாம் இறக்கினோம். (அல்குர்ஆன் 16:89)

நபி ﷺ அவர்களது சமுதாயத்தினர் மீது குர்ஆனைப் பின்பற்றுவதும்; அதன்படி தீர்ப்பு வழங்குவதும்; நபி ﷺ அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களை பின்பற்றுவதும்; அதன்படி தீர்ப்பு வழங்குவதும் கடமையாக இருக்கிறது. ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் நபி ﷺ அவர்களை மனிதர்கள், ஜின்கள் ஆகிய இரு இனத்தாருக்கும் அவர்களுக்காக இறக்கப்பட்ட வேதத்தை தெளிவுபடுத்துவதற்காக அனுப்பி வைத்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأَنزَلْنَآ إِلَيْكَ ٱلذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ ﴿٤٤﴾

இந்த ஞான(மிக்க வேத)த்தை (நபியே!) உமக்கு இறக்கினோம் - ஏனெனில், அம்மக்களுக்காக இறக்கப்பட்ட (இந்த ஞானத்)தை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக; மற்றும், அவர்கள் சிந்தித்து செயல்படுவதற்காக! (அல்குர்ஆன் 16:44)

குர்ஆனின் எழுத்துக்களும் சொற்களும் அதன் அர்த்தங்களும் كلام الله கலாமுல்லாஹ் - அல்லாஹ்வின் பேச்சு என்று அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர். குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து ஆரம்பமாக வெளிப்பட்டது. மற்றும், அல்லாஹ்வின் பக்கமே அது மீண்டுவிடும். குர்ஆன், இறக்கப்பட்டதாகும். அது படைக்கப்படவில்லை. அது அல்லாஹ்வின் நிஜமான பேச்சாகும். ஜிப்ரீல் ﵇ அவர்களுக்கு வஹி மூலம் அல்லாஹ் குர்ஆனை அறிவித்தான். அதனை ஜிப்ரீல் ﵇ அவர்கள் முஹம்மது நபி ﷺ அவர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்தார்கள் என அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

குர்ஆனை அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு தெளிவான அரபு மொழியில் அருளினான். நபி ﷺ அவர்கள் மற்றும் அவர்களது தோழர்களின் காலத்திலிருந்து இன்று வரை எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி متواتر முதவாதிர் எனும் பெருவாரியான அறிவிப்பாளர்களை உடைய அறிவிப்பினால் நம் வரை குர்ஆன் அறிவிக்கப்பட்டு வருகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِنَّهُۥ لَتَنزِيلُ رَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿١٩٢﴾ نَزَلَ بِهِ ٱلرُّوحُ ٱلْأَمِينُ ﴿١٩٣﴾ عَلَىٰ قَلْبِكَ لِتَكُونَ مِنَ ٱلْمُنذِرِينَ ﴿١٩٤﴾ بِلِسَانٍ عَرَبِيٍّ مُّبِينٍ ﴿١٩٥﴾

நிச்சயமாக (அல்குர்ஆனாகிய) இது அகிலத்தாரின் இரட்சகனால் இறக்கப்பட்ட வேதமாகும். நம்பிக்கைக்குரியவரான ரூஹ் (என்ற ஜிப்ரீல்), நீர் (மக்களை) எச்சரிப்பவர்களில் (ஒருவராக) ஆகவேண்டும்

என்பதற்காக உமது உள்ளத்தில் தெளிவான அரபி மொழியில் இதை இறக்கினார். (அல்குர்ஆன் 26:192-195)

குர்ஆன், அல் லவ்ஹுல் மஹ்ஃபூள் - அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்ட தாய் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. அதனை நெஞ்சங்கள் மனனமிடுகின்றன, நாவுகள் ஓதுகின்றன. அது ஏடுகளில் எழுதப்படுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

بَلْ هُوَ ءَايَٰتٌۢ بَيِّنَٰتٌ فِى صُدُورِ ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْعِلْمَ ۚ وَمَا يَجْحَدُ بِـَٔايَٰتِنَآ إِلَّا ٱلظَّٰلِمُونَ ﴿٤٩﴾

மாறாக, இது கல்வி கொடுக்கப்பட்டவர்களின் நெஞ்சங்களில் (பதியப்பட்டுள்ள) தெளிவான அத்தாட்சிகளான வசனங்களாகும். அநியாயக்காரர்களைத் தவிர (மற்றவர்கள்) நமது வசனங்களை மறுக்கமாட்டார்கள். (அல்குர்ஆன் 29:49)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّهُۥ لَقُرْءَانٌ كَرِيمٌ ﴿٧٧﴾ فِى كِتَٰبٍ مَّكْنُونٍ ﴿٧٨﴾ لَّا يَمَسُّهُۥٓ إِلَّا ٱلْمُطَهَّرُونَ ﴿٧٩﴾ تَنزِيلٌ مِّن رَّبِّ ٱلْعَٰلَمِينَ ﴿٨٠﴾

நிச்சயமாக இது கண்ணியமான குர்ஆனாகும், (இது அல் லவ்ஹுல் மஹ்ஃபூள்) பாதுகாக்கப்பட்ட பதிவேட்டில் இருக்கிறது, மிகவும் பரிசுத்தமான (வான)வர்களைத் தவிர (மற்றவர்கள்) இதைத் தொடமாட்டார்கள், (இது) அகிலங்களின் இரட்சகனிடமிருந்து இறக்கப்பட்ட வேதமாகும். (அல்குர்ஆன் 56:77-80)

குர்ஆன், நபி ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட முஃஜிஸாத் - அற்புதங்களில் மிகப்பெரியதும் நிலையானதுமாகும். குர்ஆன், அல்லாஹ்விடமிருந்து இறக்கியருளப்பட்ட வேதங்களில் இறுதியானதாகும். அதில் எவ்வித மாற்றங்களும் திருத்தங்களும்

இடம் பெறவில்லை. இடைச் செருகல்கள், மாற்றங்கள், கூட்டல், குறைத்தல் எதுவும் அதில் ஏற்படுவதிலிருந்து அல்லாஹ் அதனை பாதுகாத்திருக்கிறான். அல்லாஹ் அதை தன்னிடம் உயர்த்திக் கொள்கிற உலக இறுதிநாள் வரும் வரை அது அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்டதாகவே நீடித்திருக்கும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا ٱلذِّكْرَ وَإِنَّا لَهُۥ لَحَـٰفِظُونَ ﴿٩﴾

நிச்சயமாக நாம்தான் அத் திக்ர் – இந்த அறிவுரையை (உம்மீது) இறக்கினோம். மேலும், நிச்சயமாக நாம்தான் அதற்குப் பாதுகாவலர்கள் ஆவோம். (அல்குர்ஆன் 15:9)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, யார் குர்ஆனில் ஒரு எழுத்தை மறுக்கிறாரோ, அல்லது ஒரு எழுத்தை கூட்டுகிறாரோ, அல்லது குறைக்கிறாரோ அவரை காஃபிர் – நிராகரிப்பாளர் எனக் கருதுகின்றனர். ஆக, நாம் குர்ஆனில் உள்ள அனைத்து வசனங்களும் அல்லாஹ்விடம் இருந்தே இறக்கி அருளப்பட்டவை என உறுதியாக ஈமான் கொள்கிறோம். மேலும், குர்ஆன், நபி ﷺ அவர்களிடமிருந்து ஸஹாபாக்களிடம், ஸஹாபாக்களிடமிருந்து இன்று வரை முதவாத்திர் – பெருவாரியான அறிவிப்பாளர்களைக் கொண்ட உறுதியான அறிவிப்பு தொடர் மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

குர்ஆன், நபி ﷺ அவர்களுக்கு முழுவதுமாக மொத்தமாக ஒரே தடவையில் இறக்கப்படவில்லை. மாறாக, அது கொஞ்சம் கொஞ்சமாகவே இறக்கப்பட்டது. அதாவது, நிலைமைகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் நிகழ்வுகளுக்கு ஏற்ப இறங்கியது. அல்லது, நபி ﷺ அவர்களிடத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைகளாகவும் அக்காலத்தில் நிகழ்ந்த பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வுகளாக, விளக்கங்களாக இருபத்தி மூன்று ஆண்டுகளில் சிறிது சிறிதாக இறக்கப்பட்டது.

கண்ணியமிகு குர்ஆன், 114 அத்தியாயங்களைக் கொண்டது. அவற்றில் 86 – எண்பத்தி ஆறு அத்தியாயங்கள் மக்கா வாழ்க்கையிலும், 28 இருபத்தி எட்டு அத்தியாயங்கள் மதீனா வாழ்க்கையிலும் அருளப்பட்டன. மக்கா வாழ்க்கையில் இறங்கியவை مكية மக்கிய்யா எனவும், மதீனா வாழ்க்கையில் இறங்கியவை مدنية மதனிய்யா எனவும் அழைக்கப்படுகின்றன. 114 அத்தியாயங்களில் இருபத்தி ஒன்பது அத்தியாயங்கள் தனி எழுத்துக்களைக் கொண்டு ஆரம்பிக்கின்றன.

குர்ஆன், நபி ﷺ அவர்களது காலத்திலேயே அவர்களின் கண்களுக்கு முன்பாக முழுவதும் நிறைவாக எழுதப்பட்டுவிட்டது. வஹியை எழுதுவதற்கு என்று தனியாக சிறந்த தோழர்கள் இருந்தார்கள். நபி ﷺ அவர்களுடைய கட்டளையின் பிரகாரம் அவர்களது மேற்பார்வையின் கீழ், அனைத்து ஆயத்துகளையும் அந்த தோழர்கள் எழுதினார்கள்.

பின்னர், அபூபக்ர் ﵁ அவர்களுடைய காலத்தில் நூல் வடிவில் குர்ஆன் ஒன்று சேர்க்கப்பட்டது. பின்னர் உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் ஒரே கிராஅத் – ஒரே ஓதுதல் (ஒரே எழுத்து வடிவில்) ஒன்று சேர்க்கப்பட்டது.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, குர்ஆனைக் கற்பதிலும், கற்பிப்பதிலும், அதை மனனமிடுவதிலும் அதைப் பாதுகாப்பதிலும், ஓதுவதிலும், விளங்குவதிலும், விளக்குவதிலும் அதன்படி செயல்படுவதிலும் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

كِتَٰبٌ أَنزَلْنَٰهُ إِلَيْكَ مُبَٰرَكٌ لِّيَدَّبَّرُوٓاْ ءَايَٰتِهِۦ وَلِيَتَذَكَّرَ أُوْلُواْ ٱلْأَلْبَٰبِ ﴿٢٩﴾

இது அருள் நிறைந்த பாக்கியமிக்க வேதமாகும். இதன் வசனங்களை அவர்கள் சிந்திப்பதற்காகவும், அறிவுள்ளவர்கள் (இதன் மூலம்) நல்லுபதேசம் பெறுவதற்காகவும் அதனை நாம் உமக்கு இறக்கினோம். (அல்குர்ஆன் 38:29)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, குர்ஆன் ஓதுவதை இறை வணக்கமாகக் கருதுகின்றனர். குர்ஆனை ஓதும்போது ஒவ்வொரு எழுத்துக்கும் பத்து நன்மைகள் இருக்கின்றன.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ ﷺ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ، وَالحَسَنَةُ بِعَشْرِ أَمْثَالِهَا، لَا أَقُولُ الم حَرْفٌ، وَلَكِنْ أَلِفٌ حَرْفٌ وَلَامٌ حَرْفٌ وَمِيمٌ حَرْفٌ

அல்லாஹ்வின் வேதத்திலிருந்து யார் ஒரு எழுத்தை ஓதுகிறாரோ அதற்காக அவருக்கு ஹஸனா - ஒரு நன்மை உண்டு. ஒரு ஹஸனா என்பது, அது போன்று பத்து மடங்குகளுக்கு சமமாகும். அலிஃப் லாம் மீம் என்ற வசனத்தை நான் ஒரு எழுத்து என்று சொல்ல மாட்டேன். அலிஃப் ஓர் எழுத்து, லாம் ஓர் எழுத்து, மீம் ஓர் எழுத்து ஆகும்.[26]

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்குர்ஆனிற்கு வெறும் அறிவைக் கொண்டு மட்டும் விளக்கமளிப்பதை ஆகுமானதாகக் கருதவில்லை. ஏனெனில், அவ்வாறு முழுக்க முழுக்க அறிவின் அடிப்படையில் மட்டும் விளக்கம் அளிப்பதானது, அல்லாஹ்வின் மீது நாம் அறியாத விஷயங்களை இட்டுக்கட்டி சொல்வதாக அமைந்துவிடும். மற்றும், அது ஷைத்தானின் செயலாகவும் இருக்கிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ كُلُوا۟ مِمَّا فِى ٱلْأَرْضِ حَلَـٰلًا طَيِّبًا وَلَا تَتَّبِعُوا۟ خُطُوَٰتِ ٱلشَّيْطَـٰنِ ۚ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ ﴿١٦٨﴾ إِنَّمَا يَأْمُرُكُم بِٱلسُّوٓءِ وَٱلْفَحْشَآءِ وَأَن تَقُولُوا۟ عَلَى ٱللَّهِ مَا لَا تَعْلَمُونَ ﴿١٦٩﴾

26. அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் ﵁, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 2910.

மக்களே! பூமியிலுள்ளவற்றில் ஹலாலான அனுமதிக்கப்பட்ட நல்லவற்றையே உண்ணுங்கள்! ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்! நிச்சயமாக, அவன்தான் உங்களுக்குப் பகிரங்கமான எதிரியாவான். (ஷைத்தானாகிய) அவன் உங்களுக்கு ஏவுவதெல்லாம் தீமையையும், மானக்கேடானதையும், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்) கூறுவதையும்தான்.

(அல்குர்ஆன் 2:168,169)

மாறாக, குர்ஆன் வசனங்களுக்கு முதலில் குர்ஆனைக் கொண்டும்; பின்னர், ஸுன்னாவைக் கொண்டும்; பின்னர், ஸஹாபாக்கள் - நபித்தோழர்களுடைய விளக்கங்களைக் கொண்டும்; பின்னர், நபித்தோழர்களின் மாணவர்களாகிய தாபியீன்கள் உடைய விளக்கங்களைக் கொண்டும்; பின்னர், குர்ஆன் எந்த மொழியில் இறங்கியதோ அந்த அரபு மொழியைக் கொண்டும் தஃப்ஸீர் - விளக்கமளிக்கப்பட வேண்டும்.

****

اَلرُّكْنُ الرَّابِعُ

الْإِيمَانُ بِالرُّسُلِ

நான்காவது தூண்

இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِالرُّسُلِ
இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்ளுதல்

அல்லாஹு தஆலா மனித குலத்தை நேர்வழிப்படுத்துவதற்காகவும் அவர்களை இருள்களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகவும் தனது தூதர்களை நற்செய்தி கூறுபவர்களாக, அச்சமூட்டி எச்சரிப்பவர்களாக, சத்திய மார்க்கத்தின் பக்கம் அழைப்பவர்களாக அனுப்பினான் என்று மிக உறுதியாக அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ நம்பிக்கை கொள்கின்றனர்.

இறைத்தூதர்களின் அழைப்புப் பணியானது, மக்களை சிலைவணக்கத்திலிருந்தும் இணைவைப்பிலிருந்தும் பாதுகாப்பதற்காக, சமுதாய மக்களை ஒழுக்கக் கேடான செயல்களிலிருந்து, எல்லா விதமான சீர்கேடுகளிலிருந்தும் சுத்தப்படுத்துவதற்காக இருந்தது.

நிச்சயமாக இறைத்தூதர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவத்தை அப்படியே தம் சமூகத்தாருக்கு எடுத்துரைத்தார்கள்; தம்மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை சரியாக நிறைவேற்றினார்கள்; தமது சமூகத்துக்கு நன்மையை நாடினார்கள்; அல்லாஹ்விற்காக முழுமையாக போரிட்டார்கள்; மேலும், அவர்கள் வெளிப்படையான பல அற்புதங்களை மக்களிடம் கொண்டு வந்தார்கள். அந்த அற்புதங்கள் அவர்களின் தூதுத்துவத்தை உண்மைப்படுத்தின. யார், தூதர்களில் ஒருவரை நிராகரிப்பாரோ அவர் அல்லாஹ்வையும் அவனது அனைத்து தூதர்களையும் நிராகரித்தவராகவே ஆகிவிடுவார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ يَكۡفُرُونَ بِٱللَّهِ وَرُسُلِهِۦ وَيُرِيدُونَ أَن يُفَرِّقُواْ بَيۡنَ ٱللَّهِ وَرُسُلِهِۦ
وَيَقُولُونَ نُؤۡمِنُ بِبَعۡضٖ وَنَكۡفُرُ بِبَعۡضٖ وَيُرِيدُونَ أَن يَتَّخِذُواْ بَيۡنَ ذَٰلِكَ
سَبِيلًا ١٥٠ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡكَٰفِرُونَ حَقّٗاۚ وَأَعۡتَدۡنَا لِلۡكَٰفِرِينَ عَذَابٗا مُّهِينٗا

﴿١٥١﴾ وَٱلَّذِينَ ءَامَنُوا۟ بِٱللَّهِ وَرُسُلِهِۦ وَلَمْ يُفَرِّقُوا۟ بَيْنَ أَحَدٍ مِّنْهُمْ أُو۟لَـٰٓئِكَ سَوْفَ
يُؤْتِيهِمْ أُجُورَهُمْ ۗ وَكَانَ ٱللَّهُ غَفُورًا رَّحِيمًا ﴿١٥٢﴾

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நிராகரிக்கிறார்களோ; அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதர்களுக்கும் இடையில் பிரிவினை செய்ய விரும்புகிறார்களோ; (தூதர்களில்) "சிலரை நம்பிக்கை கொள்வோம்; சிலரை நிராகரிப்போம்" எனக் கூறுகிறார்களோ; மேலும் அதற்கு மத்தியில் (வெறுக்கத்தக்க) ஒரு பாதையை ஏற்படுத்த நாடுகிறார்களோ, அ(த்தகைய)வர்கள்தான் உண்மையில் நிராகரிப்பாளர்கள் ஆவார்கள். மற்றும், இழிவுபடுத்தும் தண்டனையை நிராகரிப்பாளர்களுக்கு நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொண்டார்களோ; அவர்களில் ஒருவருக்கிடையிலும் பிரிவினை செய்யவில்லையோ அவர்களுக்கு அவர்களுடைய (தகுந்த நற்) கூலிகளை அல்லாஹ் கொடுப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளனாக, பெரும் கருணையாளனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4:150-152)

கண்ணியமிகு தூதர்களை அல்லாஹ் அனுப்பியதில் என்ன ஞானம் இருக்கிறது என்பதை அல்லாஹ் விவரிக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

رُّسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى ٱللَّهِ حُجَّةٌۢ بَعْدَ ٱلرُّسُلِ ۚ
وَكَانَ ٱللَّهُ عَزِيزًا حَكِيمًا ﴿١٦٥﴾

தூதர்களுக்குப் பின்பு அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற) மக்களுக்கு ஓர் ஆதாரமும் இல்லாதிருக்க, நற்செய்தி கூறுபவர்களாக, (அச்சமூட்டி) எச்சரிப்பவர்களாக (பல) தூதர்களை (மக்களுக்கு தொடர்ந்து நாம் அனுப்பினோம்). அல்லாஹ் மிகைத்தவனாக, மகா ஞானவானாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4:165)

இவ்வுலகுக்கு நபிமார்களையும், ரஸூல்மார்களையும் பெரும் எண்ணிக்கையில் அல்லாஹ் அனுப்பிவைத்துள்ளான். அவர்களில்

சிலரின் பெயர்கள் குர்ஆனிலும், ஸுன்னாவிலும் கூறப்பட்டிருக்கின்றன. மற்றும் அதிகமான இறைத்தூதர்களின் பெயர்கள் நமக்கு கூறப்படவில்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَقَدْ أَرْسَلْنَا رُسُلًا مِّن قَبْلِكَ مِنْهُم مَّن قَصَصْنَا عَلَيْكَ وَمِنْهُم مَّن لَّمْ نَقْصُصْ عَلَيْكَ

திட்டவட்டமாக உமக்கு முன்னர் பல தூதர்களை நாம் அனுப்பினோம். அவர்களில் நாம் உமக்கு விவரித்து கூறியவர்களும் இருக்கின்றனர். மற்றும், அவர்களில் நாம் உமக்கு விவரித்து கூறாதவர்களும் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 40:78)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ وَٱجْتَنِبُوا۟ ٱلطَّٰغُوتَ

அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள்; (அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படும்) தாகூத்துகளை - தெய்வங்களை விட்டும் விலகிவிடுங்கள் என்று (மக்களுக்குப் போதிப்பதற்காகவே) ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் ஒரு தூதரைத் திட்டவட்டமாக நாம் அனுப்பினோம். (அல்குர்ஆன் 16:36)

அல்குர்ஆனில் இருபத்தைந்து இறைத்தூதர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவர்கள்:

1. آدم ஆதம் அலைஹிஸ் ஸலாம்,

2. إدريس இத்ரீஸ் அலைஹிஸ் ஸலாம்,

3. نوح நூஹ் அலைஹிஸ் ஸலாம்,

4. هود ஹூத் அலைஹிஸ் ஸலாம்,

5. صالح ஸாலிஹ் அலைஹிஸ் ஸலாம்,

6. إبراهيم இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம்,

7. لوط லூத் அலைஹிஸ் ஸலாம்,

8. إسمَاعيل இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம்,

9. إسحاق இஸ்ஹாக் அலைஹிஸ் ஸலாம்,

10. يعقوب யஃகூப் அலைஹிஸ் ஸலாம்,

11. يوسف யூஸுஃப் அலைஹிஸ் ஸலாம்,

12. شعيب ஷுஅய்ப் அலைஹிஸ் ஸலாம்,

13. أيوب அய்யூப் அலைஹிஸ் ஸலாம்,

14. ذو الكفل துல் கிஃப்ல் அலைஹிஸ் ஸலாம்,

15. موسى மூஸா அலைஹிஸ் ஸலாம்,

16. هارون ஹாரூன் அலைஹிஸ் ஸலாம்,

17. داوود தாவூத் அலைஹிஸ் ஸலாம்,

18. سليمَان ஸுலைமான் அலைஹிஸ் ஸலாம்,

19. إلياس இல்யாஸ் அலைஹிஸ் ஸலாம்,

20. الْيَسَع அல்யஸஉ அலைஹிஸ் ஸலாம்,

21. يونس யூனுஸ் அலைஹிஸ் ஸலாம்,

22. زكريا ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம்,

23. يحيي யஹ்யா அலைஹிஸ் ஸலாம்,

24. عيسى ஈஸா அலைஹிஸ் ஸலாம்,

25. محمد முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அல்லாஹ், நபிமார்களில் மற்றும் ரஸூல்மார்களில் சிலரை சிலரைப் பார்க்கிலும் மேன்மைப்படுத்தி இருக்கிறான். ரஸூல்மார்கள், நபிமார்களை விட உயர்ந்தவர்கள் என்பதில் இந்த சமுதாயம் ஏகோபித்த முடிவில் இருக்கிறது. ரஸூல்மார்கள் தங்களுக்குள் சிறப்பில் ஏற்றத்தாழ்வு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்களில் மிக சிறப்பிற்குரிய சிலர் இருக்கிறார்கள். அவர்களை أولو العزم உலுல்

அஸ்ம் மன உறுதியுடைவர்கள் என அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஐந்து ரஸூல்மார்கள்.

1. முஹம்மது ﷺ
2. நூஹ் عليه السلام
3. இப்ராஹீம் عليه السلام
4. மூஸா عليه السلام
5. ஈஸா عليه السلام.

உலுல் அஸ்ம் தூதர்களில் மிக சிறப்பானவர் முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் ﷺ ஆவார்கள். அவர்களே ரஸூல்மார்கள் மற்றும் நபிமார்களில் இறுதியானவராக திகழ்கிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مَّا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ ٱللَّهِ وَخَاتَمَ ٱلنَّبِيِّـۧنَ ۗ وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَىْءٍ عَلِيمًا ﴿٤٠﴾

முஹம்மத் உங்கள் ஆண்களில் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. என்றாலும், அவர் அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களின் இறுதி முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 33:40)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, எந்த இறைத்தூதர்களின் பெயர்களை அல்லாஹ் குர்ஆனில் கூறி இருக்கிறானோ அவர்களையும் குர்ஆனில் பெயர் குறிப்பிடாத இறைத்தூதர்களையும் சேர்த்து, அனைத்து இறைத்தூதர்களையும் ஈமான் கொள்கின்றனர். அவர்களில் முதலாமவரான ஆதம் عليه السلام அவர்கள் முதல் இறுதியானவரான, மிகச் சிறந்தவரான முஹம்மத் ﷺ வரை அனுப்பப்பட்ட அனைத்து இறைத்தூதர்களையும் ஈமான் கொள்கின்றனர்.

இறைத்தூதர்களை ஈமான் கொள்ளுதல் என்பது إيمَان مجمل ஈமான் முஜ்மல் ஆகும். முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றி ஈமான் கொள்வது

إيمَان مفصل ஈமான் முஃபஸ்ஸல் விரிவான ஈமானாக அமைய வேண்டும். அதாவது, நபி ﷺ அவர்களை அவர்கள் கொண்டுவந்த அனைத்து காரியங்களிலும் பின்பற்ற வேண்டும்.

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ﷺ

முஹம்மது இப்னு அப்தில்லாஹ் என்பது அவர்களது முழுப்பெயர். أبو القاسم அபுல் காஸிம் என்பது அவர்களின் புனைப்பெயராகும். முஹம்மத் ﷺ அவர்கள், இப்ராஹிம் عليه السلام அவர்களது பரம்பரையில் இருந்து வந்தவர்கள். முஹம்மத் ﷺ அவர்களது பரம்பரை பின்வருமாறு:

முஹம்மது இப்னு அப்தில்லாஹ் இப்னி அப்தில் முத்தலிப் இப்னி ஹாஷிம் இப்னி அப்தி மனாஃப் இப்னி குஸை இப்னி கிலாப் இப்னி முர்ரஹ் இப்னி கஅப் இப்னி லுஅய் இப்னி ஙாலிப் இப்னி ஃபிஹ்ர் இப்னி மாலிக் இப்னி நழ்ர் இப்னி கினானா இப்னி குஸைமா இப்னி முத்ரகா இப்னி இல்யாஸ் இப்னி முழர் இப்னி நிஸார் இப்னி மஅத் இப்னி அத்னான் இப்னி இஸ்மாயீல் இப்னி இப்ராஹீம் عليه السلام.

நபி ﷺ இறைத்தூதர்களில் இறுதியானவரும் மனித சமூகம் அனைவருக்குமான இறைத்தூதரும் ஆவார்கள். அவர் அல்லாஹ்வின் அடியார் ஆவார். அவரை வணங்கக் கூடாது. அவர் அல்லாஹ்வின் தூதர். அவரை பொய்ப்பிக்கக் கூடாது. அவர் படைப்புகளில் சிறந்தவரும் அல்லாஹ்விடம் மிக்க கண்ணியமும் அதிக சிறப்பும் பெற்றவர் ஆவார். அல்லாஹ்விடம் உயர் அந்தஸ்தையுடைய நபி அவர்தான். வஸீலா – சொர்க்கத்தின் உயர்ந்த தகுதியால் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர் அவர். மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் சத்தியத்தைக் கொண்டும் நேர்வழியைக் கொண்டும் நபியாக அனுப்பப்பட்டவர். அல்லாஹ், அவரை அகிலத்தாருக்கு கருணையாக அனுப்பினான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا رَحۡمَةٗ لِّلۡعَٰلَمِينَ ١٠٧

(நபியே!) உம்மை அகிலத்தார்களுக்கு ஓர் அருளாகவே தவிர நாம் அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 21:107)

அல்லாஹ், முஹம்மது ﷺ மீது தனது வேதத்தை இறக்கினான். தனது மார்க்கத்தில் (அதை பாதுகாப்பதிலும் எடுத்துரைப்பதிலும்) அவரை நம்பிக்கைக்குரியவராக ஆக்கினான். அல்லாஹ் அவருக்கு ரிசாலத் – தூதுத்துவத்தை கொடுத்து அதை பிற மக்களுக்கு எடுத்துரைப்பதை அவர் மீது கட்டாயமாக்கினான். இந்த தூதுத்துவத்தை எடுத்துரைக்கும் பணியில் எவ்வித பிழையும் தவறும் வழிகேடும் இடம் பெற்றுவிடாமல் அல்லாஹ் நபி ﷺ அவர்களைப் பாதுகாத்தான்.

وَمَا يَنطِقُ عَنِ ٱلْهَوَىٰٓ ۝٣ إِنْ هُوَ إِلَّا وَحْىٌ يُوحَىٰ ۝٤

(முஹம்மத் நபியாகிய) அவர், மனோஇச்சையின்படி பேச மாட்டார். அவர் பேசுவதெல்லாம், அவருக்கு அறிவிக்கப்படும் வஹியே அன்றி வேறில்லை. (அல்குர்ஆன் 53:3,4)

ஓர் அடியான், நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த ரிஸாலத்தை ஈமான் கொள்ளாத வரை; அவர்களின் நபித்துவத்திற்கு சாட்சி கூறாத வரை அவருடைய ஈமான் சரியாகாது.

யார், நபி ﷺ அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பாரோ அவர் சொர்க்கம் செல்வார். யார், நபி ﷺ அவர்களுக்கு மாறு செய்வாரோ அவர் நரகம் செல்வார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا۟ فِىٓ
أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا۟ تَسْلِيمًا ۝٦٥

ஆக, (உண்மை அவ்வாறு) இல்லை. உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்களுக்கிடையில் சச்சரவு ஏற்பட்டதில் அவர்கள் உம்மை தீர்ப்பாளராக்கி, பிறகு, நீர் தீர்ப்பளித்ததில் தங்கள் உள்ளங்களில் அறவே அதிருப்தி காணாமல் (–சங்கடத்தை உணராமல்) முழுமையாக (உமது தீர்ப்புக்கு) பணியும் வரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள். (அல்குர்ஆன் 4:65)

உலகுக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள் ஒவ்வொருவரும் தத்தமது சமூகத்தாருக்கு மட்டும் அனுப்பப்பட்டார்கள். ஆனால், முஹம்மது ﷺ அவர்கள் மட்டுமே மனித சமூகம் முழுவதற்குமான பொதுவான நபியாக அனுப்பப்பட்டார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا كَآفَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا
وَلَـٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ ﴿٢٨﴾

(நபியே!) மக்கள் அனைவருக்காகவும் - (அவர்களுக்கு) நற்செய்தி சொல்பவராகவும் (அவர்களை) எச்சரிப்பவராகவும் தவிர நாம் உம்மை அனுப்பவில்லை. என்றாலும் மக்களில் அதிகமானவர்கள் (நீர் உண்மையான தூதர் என்பதை) அறியமாட்டார்கள்.

(அல்குர்ஆன் 34:28)

நபி ﷺ அவர்களின் முஃஜிஸாத் - அற்புதங்கள்

அல்லாஹ், முஹம்மது ﷺ அவர்களுக்குத் தெளிவான அத்தாட்சிகளையும் வெளிப்படையான தெளிவான அற்புதங்களையும் கொடுத்து அவர்களை உறுதிப்படுத்தினான் என அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

அல் குர்ஆன்

நபி ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களில் மிகப் பெரியது, குர்ஆன் ஆகும். அதன் மூலமாக அல்லாஹ் சிறந்த மொழி ஆற்றலும், பேச்சுத் திறனும், இலக்கிய வல்லமையும் கொண்ட சமூகங்களுக்கு, இது போன்ற ஒரு குர்ஆனை கொண்டு வரும்படி சவால் விடுகிறான். ஆனால், அவர்களால் ஒரு சிறு அத்தியாயத்தைக் கூட இன்று வரை கொண்டு வர முடியவில்லை.

அல் இஸ்ரா வல் மிஃராஜ்

அல்லாஹ் நபி ﷺ அவர்களின் தூதுத்துவத்தை உறுதிப்படுத்த

வழங்கிய அற்புதங்களில் குர்ஆனுக்குப் பிறகு இஸ்ரா, மிஃராஜ் எனும் விண்ணுலகப் பயணமாகும்.

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, நபி ﷺ அவர்கள் விழிப்போடிருந்த நிலையில், உயிரும் உடலும் சேர்ந்தே, இரவில் – அல் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து அல் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கும் பிறகு, அங்கிருந்து வானலோகத்திற்கும் – அழைத்துச் செல்லப்பட்டார்கள் என ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

سُبْحَـٰنَ ٱلَّذِىٓ أَسْرَىٰ بِعَبْدِهِۦ لَيْلًا مِّنَ ٱلْمَسْجِدِ ٱلْحَرَامِ إِلَى ٱلْمَسْجِدِ ٱلْأَقْصَا
ٱلَّذِى بَـٰرَكْنَا حَوْلَهُۥ لِنُرِيَهُۥ مِنْ ءَايَـٰتِنَآ ۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ۝١

(மக்காவின்) புனிதமான மஸ்ஜிதிலிருந்து (பைத்துல் முகத்தஸில் உள்ள) அல் மஸ்ஜிதுல் அக்ஸா வரை தன் அடிமை(யாகிய முஹம்மத் நபி)யை இரவில் அழைத்துச் சென்ற (இறை)வன் மிகப் பரிசுத்தமானவன். அ(ந்த மஸ்ஜி)தைச் சுற்றி நாம் அருள் புரிந்தோம். நமது அத்தாட்சிகளிலிருந்து (பலவற்றை) அவருக்கு காண்பிப்பதற்காக அவரை அழைத்து சென்றோம். நிச்சயமாக அவன்தான் நன்கு செவியுறுபவன், உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 17:1)

பின்னர், நபி ﷺ அவர்கள் முதல் வானத்திற்கும் அங்கிருந்து ஒவ்வொரு வானமாக ஏழாவது வானம் வரை ஏறிச்சென்று, பிறகு அதற்கும் மேலாக அல்லாஹ் நாடிய அளவு உயரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சித்ரதுல் முன்தஹா வரை அவர்கள் அழைத்து செல்லப்பட்டார்கள். அங்குதான் ஜன்னத்துல் மஃவா – அல்மஃவா என்ற சொர்க்கம் இருக்கிறது.

இப்பயணத்தில் அல்லாஹ் தான் நாடியவாறு நபி ﷺ அவர்களைக் கண்ணியப்படுத்தினான். மிஃராஜ் பயணத்தில் நபி ﷺ அவர்களுக்கு அல்லாஹ் (விசேஷமாக) வஹி அறிவித்தான்; அவர்களோடு பேசினான்; ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற வேண்டிய ஐந்து வேளைத் தொழுகையையும் கடமையாக்கினான். நபி ﷺ அவர்கள் சொர்க்கத்தில்

நுழைந்து அதைப் பார்த்தார்கள்; மற்றும், நரகத்தையும் அதில் நடக்கும் தண்டனைகளையும் பார்த்தார்கள். மேலும், மலக்குகளைக் கண்டார்கள். ஜிப்ரீல் ﵇ அவர்களை அல்லாஹ் எந்த தோற்றத்தில் படைத்தானோ அதே தோற்றத்தில் நபி ﷺ அவர்கள் ஜிப்ரீலைக் கண்டார்கள். நபி ﷺ அவர்கள் கண்ட அற்புதங்களில் எதையும் அவர்களுடைய உள்ளம் பொய்ப்பிக்கவில்லை. அவர்கள் தனது இரு கண்களாலும் பார்த்த அனைத்துமே உண்மையான காட்சிகளாகவே இருந்தன. ஏனைய நபிமார்களை விடவும் நபி ﷺ அவர்களுக்கு இருக்கும் உயர்ந்த அந்தஸ்த்தை வெளிப்படுத்தவும், அவர்களைக் கண்ணியப்படுத்தவும் இப்பயணத்தை அல்லாஹ் ஏற்பாடு செய்திருந்தான். மிஃராஜ் பயணம் முடிந்ததும் நபி ﷺ அவர்கள், பைத்துல் முகத்தஸ் மஸ்ஜிதில் இறங்கி நபிமார்களுக்கு தொழுகை நடத்திவிட்டு ஃபஜ்ர் உதயமாவதற்கு முன்னர் மக்காவிற்குத் திரும்பி விட்டார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَفَتُمَٰرُونَهُۥ عَلَىٰ مَا يَرَىٰ ﴿١٢﴾ وَلَقَدْ رَءَاهُ نَزْلَةً أُخْرَىٰ ﴿١٣﴾ عِندَ سِدْرَةِ ٱلْمُنتَهَىٰ ﴿١٤﴾ عِندَهَا جَنَّةُ ٱلْمَأْوَىٰٓ ﴿١٥﴾ إِذْ يَغْشَى ٱلسِّدْرَةَ مَا يَغْشَىٰ ﴿١٦﴾ مَا زَاغَ ٱلْبَصَرُ وَمَا طَغَىٰ ﴿١٧﴾ لَقَدْ رَأَىٰ مِنْ ءَايَٰتِ رَبِّهِ ٱلْكُبْرَىٰٓ ﴿١٨﴾

ஆக, அவர் பார்த்ததில் அவரிடம் நீங்கள் தர்க்கம் செய்கிறீர்களா? திட்டவட்டமாக அவர் (–நபி முஹம்மத்) அவரை (–ஜிப்ரீலை) மற்றொரு முறைப் பார்த்தார், “சித்ரத்துல் முன்தஹா” என்ற இடத்தில். அங்குதான் அல்மஃவா சொர்க்கம் இருக்கிறது. எது சூழ்ந்து கொள்ளுமோ அது அந்த இலந்தை மரத்தை சூழ்ந்து கொள்ளும்போது (தூதர் வானவரை மற்றொரு முறை பார்த்தார்). (நபியின்) பார்வை (அவர் பார்த்ததை விட்டும் இங்கும் அங்கும்) சாயவுமில்லை, மற்றும், (அல்லாஹ் அவருக்கு நிர்ணயித்த எல்லையை) மீறவுமில்லை. திட்டவட்டமாக அவர் தனது இறைவனின் பெரிய அத்தாட்சிகளில் (ஒன்றைப்) பார்த்தார்.

(அல்குர்ஆன் 53:12–18)

அவை தவிர, நபி ﷺ அவர்களுக்கு மேலும் பல அற்புதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் சில பின்வருமாறு:

சந்திரன் பிளக்கப்படுதல்

நபி ﷺ அவர்களுக்கு அவர்களின் நுபுவ்வத் – நபித்துவத்தை நிரூபிப்பதற்காக அல்லாஹ் வழங்கிய மிகப்பெரிய ஓர் அற்புத அத்தாட்சியாக இது இருக்கிறது. மக்கா நகர காஃபிர்கள், நபி ﷺ அவர்களிடம் ஓர் அற்புதத்தை காட்டும்படி கேட்டபொழுது இந்த நிகழ்வு நடைபெற்றது.

மற்றும் சில அற்புதங்கள்

உணவு அதிகரிக்கப்படுதல் நபி ﷺ அவர்களுக்கு சொற்ப உணவில் பலர் சாப்பிடும் அளவிற்கு அந்த உணவில் அபிவிருத்தி செய்யப்பட்ட சம்பவங்கள் பல முறை நிகழ்ந்திருக்கின்றன.

தண்ணீர் அதிகரித்தல், விரல்களுக்கிடையில் நீரூற்று ஏற்படுதல், உணவு – அது சாப்பிடப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் – தஸ்பீஹ் செய்தல்.

உணவு தஸ்பீஹ் செய்த நிகழ்வும் பல முறை நிகழ்ந்திருக்கிறது.

நோயாளிகளைக் குணப்படுத்துதல், நோய்வாய்ப்பட்ட சில தோழர்களுக்கு வெளிப்படையான மருந்துகள் இன்றி நபி ﷺ அவர்களின் கரங்களால் நிவாரணம் கிடைத்திருக்கிறது.

மிருகங்கள் நபி ﷺ அவர்களுடன் கீழ்ப்படிந்து நடத்தல், மரங்கள் அவர்களின் சொற்படி பணிதல், கற்கள் அவர்களுக்கு ஸலாம் கூறுதல்.

நபி ﷺ அவர்களுக்கு மோசடி, துரோகம் செய்தவர்களில் சிலரும் அவர்களைக் கடுமையாக எதிர்த்த சிலரும் உடனடியாக தண்டிக்கப்படுதல்.

நபி ﷺ மறைவான விஷயங்களில் சிலவற்றை அறிவித்தல், நபி ﷺ அவர்கள் தமது இருப்பிடத்தில் இருந்து கொண்டே வெகு தொலைவில் நடைபெற்ற நிகழ்வுகளை அறிவித்தல். அதுவரை நடக்காத பல விஷயங்களை நபி ﷺ அவர்கள் அறிவிக்க, அவை நபி ﷺ அறிவித்தப்படியே எவ்வித மாற்றமும் இல்லாமல் நிகழ்தல்.

நபி ﷺ அவர்களின் துஆக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுதல்.

நபி ﷺ அவர்களை அல்லாஹ் பாதுகாத்தல், அவர்களை விட்டு எதிரிகளை தடுத்தல்.

அபூ ஹுரைரா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ قَالَ أَبُو جَهْلٍ هَلْ يُعَفِّرُ مُحَمَّدٌ وَجْهَهُ بَيْنَ أَظْهُرِكُمْ قَالَ فَقِيلَ نَعَمْ . فَقَالَ وَاللاَّتِ وَالْعُزَّىٰ لَئِنْ رَأَيْتُهُ يَفْعَلُ ذٰلِكَ لَأَطَأَنَّ عَلَىٰ رَقَبَتِهِ أَوْ لَأُعَفِّرَنَّ وَجْهَهُ فِي التُّرَابِ قَالَ فَأَتَىٰ رَسُولَ اللهِ ﷺ وَهُوَ يُصَلِّي زَعَمَ لِيَطَأَ عَلَىٰ رَقَبَتِهِ قَالَ فَمَا فَجِئَهُمْ مِنْهُ إِلاَّ وَهُوَ يَنْكُصُ عَلَىٰ عَقِبَيْهِ وَيَتَّقِي بِيَدَيْهِ قَالَ فَقِيلَ لَهُ مَا لَكَ فَقَالَ إِنَّ بَيْنِي وَبَيْنَهُ لَخَنْدَقًا مِنْ نَارٍ وَهَوْلًا وَأَجْنِحَةً . فَقَالَ رَسُولُ اللهِ ﷺ لَوْ دَنَا مِنِّي لَاخْتَطَفَتْهُ الْمَلَائِكَةُ عُضْوًا عُضْوًا

(மக்காவில் ஒரு முறை) அபூஜஹ்ல், உங்களிடையே முஹம்மத் (இறைவனை வணங்குவதற்காக) மண்ணில் தமது முகத்தை வைத்து தேய்க்கிறாரா? என்று (கிண்டலாக) கேட்டான். அப்போது ஆம் என்று சொல்லப்பட்டது. அதற்கு அவன், லாத் மற்றும் உஸ்ஸாவின் மீது சத்தியமாக! அவ்வாறு அவர் செய்துகொண்டிருப்பதை நான் கண்டால், அவரது பிடரியின் மீது நிச்சயமாக நான் மிதிப்பேன்; அல்லது, அவரது முகத்தை மண்ணில் வைத்து நான் தேய்ப்பேன் என்று கூறினான். அவ்வாறே, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுதுகொண்டிருந்த போது, அவர்களது பிடரியின் மீது மிதிப்பதற்கு அவன் முயற்சித்தபோது, தன் கைகளால் தன்னை பாதுகாத்தவனாக, தனது பின்னங்கால்கள் மீது திரும்பினான். உனக்கு என்ன நேர்ந்தது? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவன், எனக்கும் அவருக்குமிடையில் நெருப்புக் குண்டம் ஒன்றையும், பீதியையும், இறக்கைகளையும் கண்டேன் என்று கூறினான். ஆக, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: அவன் மட்டும் என்னை நெருங்கியிருந்தால் அவனை ஒவ்வொரு உறுப்பாக வானவர்கள் பிய்த்தெடுத்திருப்பார்கள்.[27]

****

27. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2797.

اَلرُّكْنُ الْخَامِسُ

الإِيْمَانُ بِالْيَوْمِ الْآخِرِ

ஐந்தாவது தூண்

இறுதி நாளை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِالْيَوْمِ الْآخِرِ
இறுதி நாளை நம்பிக்கை கொள்ளுதல்

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மறுமை நாளை எவ்வித சந்தேகமும் இன்றி உறுதியாக முழுமையாக ஈமான் கொள்கின்றனர்.

மரணத்திற்கு பின்னர் என்ன நடக்கும், பிறகு மரணத்திலிருந்து சொர்க்க வாசிகள் சொர்க்கத்திற்கு செல்கின்ற வரை, நரகவாசிகள் நரகத்திற்கு செல்கின்ற வரை என்ன நடக்கும் என்பதை பற்றி அல்லாஹ் தனது கண்ணியமிகு வேதத்திலும் அவனது ரஸூல் ﷺ அவர்கள் ஸஹீஹான ஹதீஸ்களிலும் கூறிய அனைத்தையும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அல்லாஹு தஆலா தனது கண்ணியத்திற்குரிய வேதத்தில் பல இடங்களில் மறுமை நாள் பற்றிய நினைவூட்டலை உறுதிப்படுத்தி இருக்கிறான். மேலும், மறுமை நாளை நம்பிக்கை கொள்வதை அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதுடன் இணைத்து கூறி இருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلَّذِينَ يُؤْمِنُونَ بِمَآ أُنزِلَ إِلَيْكَ وَمَآ أُنزِلَ مِن قَبْلِكَ وَبِٱلْـَٔاخِرَةِ هُمْ يُوقِنُونَ ﴿٤﴾

அவர்கள் உமக்கு இறக்கப்பட்டதையும், உமக்கு முன்னர் இறக்கப்பட்டதையும் நம்பிக்கை கொள்வார்கள். இன்னும் மறுமை (வாழ்க்கை)யை அவர்கள் உறுதி(யாக நம்பிக்கை) கொள்வார்கள். (அல்குர்ஆன் 2:4)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மறுமை எப்போது நிகழும் என்பதை அல்லாஹ் மட்டுமே அறிவான் எனவும், அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அது பற்றிய ஞானம் இல்லை எனவும் ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ عِندَهُۥ عِلۡمُ ٱلسَّاعَةِ

நிச்சயமாக அல்லாஹ், – அவனிடம்தான் மறுமையைப் பற்றி (அது எப்போது நிகழும் என்ற) அறிவு இருக்கிறது. (அல்குர்ஆன் 31:34)

மறுமை நிகழவிருக்கும் நேரத்தை அல்லாஹ், தனது அடியார்கள் யாரும் அறியாத வண்ணம் மறைத்து வைத்திருந்தாலும் அது நெருங்கி விட்டது என்பதற்கான அடையாளங்களை அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கிறான்.

மறுமையின் சிறிய, பெரிய அடையாளங்கள் அனைத்தையும் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கைக் கொள்கின்றனர். அந்த அடையாளங்களில் ஒவ்வொன்றும் மறுமை நிகழப்போகிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. மறுமையின் அடையாளங்களை நம்பிக்கைக் கொள்வது மறுமையை நம்பிக்கைக் கொள்வதில் அடங்கும்.

மறுமையின் சிறிய அடையாளங்கள்

மறுமை நிகழ்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இந்த அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அந்த அடையாளங்கள் பழக்கத்தில் இருக்கும் காரியங்களைப் போல ஆகிவிடும். சிறிய அடையாளங்களில் சில பெரிய அடையாளங்கள் நிகழும்போது அவற்றுடன் சேர்ந்து நிகழும்.

மறுமையின் சிறிய அடையாளங்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன. அவற்றில் ஸஹீஹான ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளவற்றில் சிலவற்றை இங்கு கூறுகிறோம்.

நபி ﷺ அவர்களின் வருகை. நபித்துவமும் தூதுத்துவதும் நபி முஹம்மத் ﷺ அவர்களுடன் முடிக்கப்படுதல். நபி ﷺ அவர்களின் மரணம். பைத்துல் முகத்தஸ் வெற்றிக்கொள்ளப்படுதல். குழப்பங்கள் தோன்றுதல். யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் வழிமுறைகளை பின்பற்றுதல். ஏமாற்றுக்காரார்கள் தோன்றுதல். நபித்துவத்தை பொய்யாக உரிமை கோருபவர்கள் தோன்றுதல்.

நபி ﷺ அவர்களின் பெயரில் ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்படுதல். நபி ﷺ அவர்களின் ஸுன்னா புறக்கணிக்கப்படுதல். பொய்கள் அதிகரித்தல். செய்திகளைப் பரப்புவதில் அவசரப்படுதல். கல்வி உயர்த்தப்படுதல். வயது குறைவானவர்களிடம் (கல்வி ஆழம் இல்லாதவர்களிடம்) கல்வி கற்கப்படுதல். அறியாமைகளும் குழப்பங்களும் அதிகரித்தல். நல்லவர்களின் மரணம் அதிகரித்தல். இஸ்லாமின் சட்டம் ஒவ்வொரு சட்டமாக உடைக்கப்படுதல். ஏனைய சமுதாய மக்கள் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களை அழிக்க முயற்சித்தல். இஸ்லாமும் முஸ்லிம்களும் அன்னியமாக ஆகிவிடுதல்.

கொலைகள் அதிகரித்தல், கடுமையான சோதனைகளால் மரணத்தை விரும்புதல். கப்ரில் அடக்கம் செய்யப்பட்டவர்களை பார்த்து அவர்களின் இடத்தில் நாமும் இருக்க வேண்டுமே என்று ஆசைப்படுதல். திடீர் மரணங்கள் அதிகரித்தல். நில நடுக்கங்கள் மற்றும் நோய்களினால் மரணங்கள் அதிகரித்தல். ஆண்களின் எண்ணிக்கை குறைதல். பெண்கள் அதிகரித்தல். பெண்கள் ஆடை அணிந்த நிலையிலும் நிர்வாணமாக காட்சி தருதல். பாதைகளில் விபச்சாரம் பரவுதல். அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு உதவுகின்ற காவலர்கள் தோன்றுதல், அவர்கள் மக்களை சாட்டையால் அடிப்பார்கள்.

இசைக்கருவிகள், மது, வட்டி, சூது, விபச்சாரம், பட்டாடை வெளிப்படுதல். மக்கள் இவற்றை ஆகுமாக்கிவிடுதல். கல் மழை பொழிதல். உருவம் மாற்றப்படுதல். பூமியில் சொருகப்படுதல்.

அமானிதம் - பொறுப்புகள் வீணடிக்கப்படுதல். தகுதியற்றோருக்கு அதிகாரம் வழங்கப்படுதல். மக்களில் இழிவானவர்கள் தலைமைத்துவத்தை அடைவது. சமுதாயத்தில் சிறந்தவர்களை பார்க்கிலும் தாழ்ந்தவர்கள் உயர்ந்திருத்தல். அடிமைப் பெண் தனது எஜமானியைப் பெற்றெடுத்தல். உயரமான கட்டடங்கள் கட்டுவதில் போட்டி போடுதல். பள்ளிவாசல்களை ஆடம்பரமாக கட்டுவதில் பெருமையடித்தல். முஸ்லிம் சமுதாயத்தில் شرك - ஷிர்க் - இணைவைத்தல் தோன்றுதல். சிலைகள் வணங்கப்படுதல்.

அறிமுகமானவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்லுதல். வியாபாரங்கள் அதிகரித்தல். அருகருகே பெரும்பெரும் சந்தைகள் தோன்றுதல். மக்களிடத்தில் செல்வங்கள் அதிகரித்தல். ஆனால், நன்றி உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். கஞ்சத்தனம் அதிகரித்தல். பொய் சாட்சி அதிகரித்தல். உண்மைக்கான சாட்சியத்தை மறைத்துவிடுதல். மானக்கேடான செயல்கள் அதிகரித்தல். சண்டை சச்சரவுகள், பரஸ்பர வெறுப்புகள், பொறாமைகள், காழ்ப்புணர்ச்சிகள் அதிகரித்தல். உறவுகள் துண்டிக்கப்படுதல். அண்டை வீட்டாருக்குத் தீங்கிழைத்தல்.

காலம் நெருங்கிவிடுதல். நேரங்களில் அபிவிருத்தி குறைதல். பிறைகள் உப்பிவிடுதல் (–பெரியதாக தோன்றுதல்). கடும் இருள் நிறைந்த இரவின் பாகங்களைப் போன்று குழப்பங்கள் தோன்றுதல். மக்களிடையே ஒருவருக்கொருவர் அறிமுகமின்மை ஏற்படுதல். இஸ்லாம் ஆர்வமூட்டிய ஸுன்னாக்களை அலட்சியம் செய்தல். வயோதிகர்கள் (ஆடை அணிகலன்களில்) இளைஞர்களுக்கு ஒப்பாகுதல்.

காட்டு விலங்குகள் மற்றும் உயிரற்றப் பொருட்கள் மனிதனோடு பேசுதல். யூப்ரட்டிஸ் நதி வற்றி, தங்க மலை வெளிப்படுதல். முஃமின்களின் கனவுகள் பலித்தல்.

நபி ﷺ அவர்களது வாழ்விடமான மதீனா தீயவர்களை வெளியேற்றிவிடுதல், இறை அச்சமிக்க நல்லவர்கள் மாத்திரமே அதில் தங்கி இருத்தல். அரேபியத் தீபகற்பத்தில் நதிகளும் பசுமையான தோட்டங்களும் உருவாகுதல். மக்கள் கட்டுப்படும் ஆளுமையுள்ள ஒருவர் கஹ்தான் பரம்பரையில் தோன்றுதல்.

ரோமர்கள் அதிகரித்தலும், அவர்கள் முஸ்லிம்களிடம் யுத்தம் செய்தலும். முஸ்லிம்கள் யூதர்களிடம் போர் தொடுத்தல். அப்பொழுது, முஸ்லிமே! இதோ ஒரு யூதன் இருக்கிறான்; ஆக, இங்கு வந்து, அவனைக் கொல் என்று கற்களும் மரங்களும் சொல்லும்.[28]

28. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2926, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2922.

கான்ஸ்டாண்டுநோபிளை வென்றது போல் ரோமாவையும் வெற்றி கொள்ளுதல். இன்னும், இதைப் போன்ற ஏராளமான மறுமையின் சிறிய அடையாளங்கள் ஸஹீஹான ஹதீஸ்களில் விளக்கப்பட்டுள்ளன.

மறுமையின் பெரிய அடையாளங்கள்:

பெரிய அடையாளங்கள் என்பது மறுமை நாள் சமீபமாகி விட்டதைத் தெளிவாகக் காட்டும் அடையாளங்களாகும். ஆக, இந்த அடையாளங்கள் தென்பட்டால் அதைத் தொடர்ந்து விரைவாக மறுமைநாள் நிகழ்ந்துவிடும். அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, இந்த அடையாளங்களை - அவை நபி ﷺ அவர்களிடமிருந்து எப்படி அறிவிக்கப்பட்டதோ அப்படியே - ஈமான் கொள்கின்றனர்.

مهدي **மஹ்தி உடைய வருகை:**

இவரின் பெயர் முஹம்மது இப்னு அப்தில்லாஹ் ஆகும். இவர், நபி ﷺ அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார். கிழக்கு தேசத்திலிருந்து வெளிப்படுவார். ஏழு வருடங்கள் ஆட்சி புரிவார். அநியாயங்களும் அட்டூழியங்களும் பூமியில் நிரம்பிய பின்னர் அவர் அதை நீதி நியாயத்தால் நிரப்புவார். முன்னெப்பொழுதும் இல்லாத மகிழ்ச்சியான இன்பமான வாழ்வினை மக்கள் வாழ்வார்கள். பூமி, தனது பயிர்களை செழித்தோங்க செய்யும். மழை பெய்யும். அவர் செல்வத்தை மக்களுக்கு கணக்கின்றி வழங்குவார்.

المسيح الدجال **அல் மஸீஹுத் தஜ்ஜால் வெளிப்படுதல்:**

இவன் பெரும் குழப்பக்காரன். இறைமறுப்பு, வழிகேடு, இன்னும் குழப்பங்களின் பிறப்பிடமாக இவன் இருப்பான். எல்லா நபிமார்களும் இவனை குறித்து தங்கள் மக்களை எச்சரித்தார்கள். நபி ﷺ அவர்களும் தங்கள் சமுதாயத்தை எச்சரித்தார்கள். மேலும், ஒவ்வொரு தொழுகையின் இறுதியிலும் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து பாதுகாப்புத் தேடினார்கள். (நாமும் பாதுகாப்பு தேடும்படி நமக்கு கற்பித்தார்கள்.)

عيسى **ஈஸா ؑ அவர்கள் இறங்குதல்:**

சிரியாவின் கிழக்கே வெள்ளைக் கோபுரத்திற்கு அருகில் அவர்கள் இறங்குவார்கள். முஹம்மது நபி ﷺ அவர்களது ஷரீஆவைக் கொண்டு

தீர்ப்பளிப்பவராக, அதை செயல்படுத்துபவராக இருப்பார்கள். ஈஸா ﵇ தஜ்ஜாலைக் கொல்வார்கள். நபி ﷺ அவர்கள் கொண்டுவந்த இஸ்லாமைக் கொண்டு அவர்கள் பூமியில் ஆட்சி நடத்துவார்கள். சத்தியத்திற்காகப் போராடுகின்ற, வெற்றிபெற்ற பிரிவினர் என நபி ﷺ அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட, அத் தாயிஃபா அல் மன்ஸூரா – அல்லாஹ்வின் உதவிக்குரிய கூட்டத்திற்காக ஈஸா ﵇ அவர்களது இறங்குதல் இருக்கும். அந்தக் கூட்டத்தினர் தஜ்ஜாலுக்கு எதிராக போர் செய்ய ஒன்று கூடி இருப்பார்கள். தொழுகைக்காக மக்கள் தயாராகி நிற்கும்பொழுது அவர்கள் இறங்கி, அந்த கூட்டத்தின் தலைவருக்கு பின்னால் தொழுகையை நிறைவேற்றுவார்கள்.

يأجوج ومأجوج யஃஜூஜ் – மஃஜூஜ் கூட்டத்தார் வெளிப்படுதல்

மூன்று பூகம்பங்கள் நிகழுதல். கிழக்கே ஒரு பூகம்பம்; மேற்கே ஒரு பூகம்பம்; அரேபிய தீபகற்பத்தில் ஒரு பூகம்பம் என மூன்று பூகம்பங்கள் நிகழும்.

பெரும் புகை வெளிப்படுதல். சூரியன் தனது மேற்குத் திசையிலிருந்து உதித்தல். தாப்பத்துல் அர்ழ் – பூமியிலிருந்து ஒரு மிருகம் வெளியேறி, மக்களிடம் பேசுதல். மனிதர்கள் அனைவரையும் ஒரு பெரும் நெருப்பு விரட்டி ஓர் இடத்தில் ஒன்று சேர்க்கும்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மரணத்திற்குப் பின் நிகழ இருக்கின்ற விஷயங்கள் என அல்லாஹ்வும் நபி ﷺ அவர்களும் அறிவித்த அனைத்து மறைவான விஷயங்களையும் ஈமான் கொள்கின்றனர். அதாவது, மரணத்தின் சக்ராத் – இறுதி மயக்க நிலைமைகள், உயிர் வாங்கும் வானவர்களின் வருகை, நம்பிக்கையாளர் தனது இறைவனை சந்திப்பதில் அவருக்கு ஏற்படும் மகிழ்ச்சி, மரண வேளையில் ஷைத்தான் வருதல், நிராகரிப்பாளருடைய ஈமான் மரணத் தருவாயில் ஏற்றுக் கொள்ளப்படாமல் போகுதல். عالم البرزخ ஆலமுல் பர்ஸக், – உலகத்திற்கும் பெரிய மறுமைக்கும் இடைப்பட்ட காலம், கப்ரு வேதனை, கப்ருடைய இன்பங்கள், முன்கர், நக்கீர் ஆகிய இரு மலக்குகளின் விசாரணை, அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்ட ஷஹீது – தியாகிகள் அல்லாஹ்விடத்தில் உயிரோடு இருக்கிறார்கள், அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள், நல்லவர்கள் இன்பத்திலும் கெட்டவர்கள்

தண்டனையிலும் இருப்பார்கள், இன்னும் இவை போக ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ள அனைத்தையும் அப்படியே அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்கின்றனர்.

பெரிய மறுமை நாள் உண்டு. மரணித்தவர்கள் அனைவருக்கும் அதில் அல்லாஹ் மீண்டும் உயிர் கொடுப்பான் என்றும் மண்ணறைகளில் இருந்து மக்கள் எழுப்பப்படுவார்கள்; பின்பு விசாரிக்கப்படுவார்கள் என்றும் அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்கின்றனர்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, ஸூர் - எக்காளத்தில் மூன்று முறை ஊதப்படும் எனவும் ஈமான் கொள்கின்றனர். அவையாவன:

1. نفخة الفزع - திடுக்கிடச் செய்யும் ஊதுதல்

2. نفخة الصعق - அழிவுக்கான ஊதுதல்

இந்த ஊதுதலினால் நாம் பார்க்கும் இந்த உலகத்தின் நிலை மாறி விடும். அதன் அமைப்புகள் அனைத்தையும் சீர்குலைத்துவிடும். அல்லாஹ் எவற்றை எல்லாம் அழிக்க வேண்டும் என்று முடிவு செய்தானோ அவை அனைத்தும் இந்த ஊதுதலினால் அழிந்து விடும்.

3. نفخة البعث எழுப்புதல், ஒன்று திரட்டப்படுதல், அல்லாஹ்விற்கு முன்னர் நிற்பதற்காக ஊதப்படுதல்.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மனிதர்கள் மீண்டும் எழுப்பப்பட்டு ஒன்று சேர்க்கப்படுவார்கள் என்று ஈமான் கொள்கின்றனர்.

அல்லாஹ் அனைவரையும் மண்ணறையிலிருந்து எழுப்புவான். அல்லாஹ்வின் முன்னிலையில் மக்கள் அனைவரும் செருப்பு அணியாதவர்களாக ஆடை இல்லாதவர்களாக விருத்த சேதனம் செய்யப்படாதவர்களாக நிற்பார்கள். சூரியன் அவர்களுக்கு மிகவும் சமீபமாக இருக்கும். மனிதர்கள் தமது பாவங்களுக்கு ஏற்ப வியர்வையில் மூழ்குவார்கள். பூமி பிளந்து, முதலில் எழுப்பப்படும் மனிதர் நமது இறைத்தூதர் முஹம்மது நபி ﷺ அவர்கள் ஆவார்கள்.

அந்த நாளில், மனிதர்கள் பரவிவருகின்ற வெட்டுக்கிளிகளைப் போல் மண்ணறைகளில் இருந்து வெளியேறி, அழைப்பாளரின் அழைப்பை நோக்கி விரைந்து ஓடுவார்கள். அந்த நாளில், எல்லா அசைவுகளும்

அமைதியாகிவிடும். பயம் நிறைந்த அமைதி அங்கே நிலைகொள்ளும். அப்பொழுது செயல்கள் பதியப்பட்ட பதிவேடுகள் விரிக்கப்படும். மறைக்கப்பட்டது வெளிப்படுத்தப்படும். இரகசியம் பரகசியம் ஆகிவிடும். உள்ளங்களில் மறைத்து வைக்கப்பட்டவை வெளிப்பட்டுவிடும். எவ்வித மொழி பெயர்ப்பாளர்களுமின்றி அல்லாஹ் தன் அடியார்களோடு மறுமை நாளில் பேசுவான். மனிதர்களின் பெயர்களும் அவர்களின் தந்தைமார்களின் பெயர்களும் கூறப்பட்டு அவர்கள் விசாரணைக்காக அழைக்கப்படுவார்கள்.

மறுமையில், மக்களின் செயல்கள் நிறுக்கப்படுவதற்காக ميزان - மீஸான் - தராசு நிறுத்தப்படும். அதற்கு இரண்டு தட்டுகள் இருக்கும். அதில் அடியார்களின் செயல்கள் அனைத்தும் நிறுக்கப்படும் என்று அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

செயலேடுகள் விரிக்கப்படும். ஒவ்வொருவரின் செயலேடு அவரவருக்குக் கொடுக்கப்படும். ஆக, சிலர் தமது வலது கையில் தமது செயலேட்டைப் பெற்றுக் கொள்வார்கள். இன்னும், சிலர், தமது இடது கையில் தமது செயலேடுகளைப் பெற்றுக் கொள்வார்கள். அல்லது தமது முதுகுக்குப் பின்னாலிருந்து (இடது கையில்) செயலேடுகளை பெறுவார்கள்.

صراط - ஸிராத் - பாலம் நரகத்திற்கு மேல் போடப்பட்டிருக்கும். நல்லவர்கள் அதனைக் கடந்துவிடுவார்கள். பாவிகள் அதில் சறுக்கி நரகத்தில் விழுந்து விடுவார்கள்.

சொர்க்கமும் நரகமும் படைக்கப்பட்டு இருக்கின்றன. அவை இரண்டும் இப்போதும் இருக்கின்றன. அவை இரண்டும் எப்போதும் அழியாதவை. படைப்பினங்களைப் படைக்கும் முன்னரே அவ்விரண்டையும் அல்லாஹ் படைத்துவிட்டான். சொர்க்கமானது, முஃமினூன் - நம்பிக்கையாளர்கள், முவஹ்ஹிதூன் - அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்குபவர்கள், முத்தக்கூன் - அல்லாஹ்வின் மார்க்கத்தை முறையாக பின்பற்றக்கூடிய இறையச்சமிக்க நல்லவர்கள் ஆகியோரின் தங்குமிடம் ஆகும். நரகமானது காஃபிரூன் - நிராகரிப்பாளர்களின் தங்குமிடம் ஆகும். அதாவது, இணைவைத்து வணங்கியவர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், நயவஞ்சகர்கள், நாத்திகர்கள், சிலைவழிபாடு செய்பவர்கள், பெரும் பாவிகள் ஆகியோரின் தங்குமிடம் நரகமாகும்.

மறுமையில், முஹம்மது நபி ﷺ அவர்களது சமுதாயத்தினர்தான் முதன் முதலாக விசாரிக்கப்படுவார்கள். முதன் முதலில் சொர்க்கம் நுழையும் சமுதாயமும் இவர்களே. சொர்க்கவாசிகளில் அரைப்பகுதியினர் நபி ﷺ அவர்களின் உம்மத்தினர்தான். நபி ﷺ அவர்களின் உம்மத்தினரில் எழுபதாயிரம் பேர் எவ்விதக் கேள்வி கணக்குமின்றி சொர்க்கம் நுழைவார்கள் என அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ ஈமான் கொள்கின்றனர்.

முவஹ்ஹிதூன் – அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்கியவர்கள் – நரகத்தில் நிரந்தரமாகத் தங்கவைக்கப் படமாட்டார்கள் என அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்கின்றனர். ஒரு முவஹ்ஹித், தான் செய்த குற்றத்திற்காக நரகம் நுழைவிக்கப்பட்டால், அவரின் தண்டனை முடிந்த பின்னர் கண்டிப்பாக வெளியேற்றப்படுவார். அல்லது, விசேஷமாக பாவமன்னிப்பு வழங்கப்பட்டு நரகத்திலிருந்து முற்றிலும் பாதுகாக்கப்பட்டு சொர்க்கத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவார். شرك – ஷிர்க் செய்த நிலையில் மரணித்தோர் நரகத்தில் நிரந்தரமாகவே தங்கி விடுவார்கள். அதிலிருந்து அவர்கள் வெளியேறவே முடியாது. அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, மறுமையின் விசாலமான மைதானங்களில் நபி ﷺ அவர்களுக்கு ஓர் நீர்த்தடாகம் வழங்கப்படும் என்று உறுதியாக ஈமான் கொள்கின்றனர். அதன் நீர் பாலை விட வெண்மையானது; தேனை விட இனிமையானது. அதன் வாடை கஸ்தூரியை விட நறுமணம் மிக்கது. அதன் பாத்திரங்கள் வானின் நட்சத்திரங்களின் எண்ணிக்கையை போன்றதாகும். அதன் நீளம் ஒரு மாதமாகும். அதன் அகலம் ஒரு மாதமாகும். அதில் நீர் அருந்தியவர்கள் அதன் பின்னர் தாகிக்கவே மாட்டார்கள். மார்க்கத்தில் بدعة – பித்ஆ – நூதன அனுஷ்டானங்களை செய்தவர்கள் மீது அது தடுக்கப்பட்டதாக இருக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو ﷺ قَالَ النَّبِيُّ ﷺ حَوْضِي مَسِيرَةُ شَهْرٍ، مَاؤُهُ أَبْيَضُ مِنَ

اللَّبَنِ، وَرِيحُهُ أَطْيَبُ مِنَ المِسْكِ، وَكِيزَانُهُ كَنُجُومِ السَّمَاءِ، مَنْ شَرِبَ مِنْهَا فَلَا يَظْمَأُ أَبَدًا

எனது நீர்த்தடாகம் ஒரு மாத கால நடை தூர அளவு விசாலமானது. அதன் நீர் பாலை விட வெண்மையானது. அதன் வாசனையோ கஸ்தூரியை விடவும் மணமிக்கது. அதன் குவளைகள் வானத்து நட்சத்திரங்களைப் போன்றவை ஆகும். அதில் எவர் நீர் அருந்துகிறாரோ அவர் அதன் பின்னர் ஒருபோதும் தாகிக்கவே மாட்டார்.[29]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنِّي فَرَطُكُمْ عَلَى الْحَوْضِ مَنْ مَرَّ عَلَيَّ شَرِبَ وَمَنْ شَرِبَ لَمْ يَظْمَأْ أَبَدًا لَيَرِدَنَّ عَلَيَّ أَقْوَامٌ أَعْرِفُهُمْ وَيَعْرِفُونِي ثُمَّ يُحَالُ بَيْنِي وَبَيْنَهُمْ وَفِي رِوَايَةٍ فَأَقُولُ إِنَّهُمْ مِنِّي. فَيُقَالُ إِنَّكَ لَا تَدْرِي مَا أَحْدَثُوا بَعْدَكَ. فَأَقُولُ سُحْقًا سُحْقًا لِمَنْ غَيَّرَ بَعْدِي

நான் உங்களுக்கு முன்பாக அந்த நீர் தடாகத்தில் உங்களை எதிர்பார்த்திருப்பேன். என்னைக் கடந்து செல்வோர் அதில் நீர் அருந்துவார். யார் அதில் நீர் அருந்துகிறாரோ, அவர் எப்போதுமே தாகிக்க மாட்டார். என்னிடம் சில மக்கள் வருவார்கள். அவர்களை நான் அறிவேன். அவர்களும் என்னை அறிவார்கள். பின்னர் அவர்களுக்கும் எனக்குமிடையே தடை ஏற்படுத்தப்படும். இன்னொரு அறிவிப்பில் வருகிறது: நிச்சயமாக அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள்தான் என்று நான் கூறுவேன். அதற்கு, உமக்குப் பின்னர் அவர்கள் (மார்க்கத்தில்) உருவாக்கியவற்றை நீர் அறியமாட்டீர் என்று சொல்லப்படும். ஆக, எனக்குப் பின்னர் (மார்க்கத்தை) மாற்றியோர் தூரமாகுங்கள்; தூரமாகுங்கள் என்று நான் கூறுவேன்.[30]

29. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6579.
30. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்ன் ஸஅத், அபூ ஸயீத் அல்குத்ரி ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6583.

மறுமையில் நபி ﷺ அவர்களுக்கு ஷஃபாஅத் – சிபாரிசு, அல் மகாம் அல் மஹ்மூத் – புகழுக்குரிய தகுதி பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ளன.

அல் மகாமுல் மஹ்மூது என்பது மஹ்ஷர் உடைய சிரமங்களில் தத்தளிக்கும் மக்களுக்குத் தீர்ப்பினை வழங்குமாறு நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் செய்கிற பரிந்துரையாகும். சொர்க்கவாசிகளுக்காக நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வார்கள். அதன்படி அவர்கள் சொர்க்கத்தில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். நபி ﷺ அவர்களே சொர்க்கத்தில் முதலாவதாக நுழைவார்கள். தனது பெரிய தந்தை அபூதாலிபிற்கு வேதனையைக் குறைக்குமாறு நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வார்கள்.

இந்த மூன்று பரிந்துரைகளும் நபி ﷺ அவர்களுக்கு மட்டும் பிரத்தியேகமானவை. அவர்களைத் தவிர வேறு எவருக்கும் இந்த தகுதி இருக்காது.

நபி ﷺ அவர்கள் மேற்கொள்ளும் பரிந்துரைகள் பின்வருமாறு இருக்கும்.

நபி ﷺ அவர்கள், தமது உம்மத்தினரில் சொர்க்கம் நுழைவோரின் தரஜாத் – தரங்களை உயர்த்தும்படி பரிந்துரை செய்வார்கள். மேலும், தனது உம்மத்தினரில் சிலரை எவ்விதக் கேள்வி கணக்குமின்றி சொர்க்கத்தில் நுழைவிக்க கோரியும் பரிந்துரை செய்வார்கள்.

நன்மைகளும் தீமைகளும் சமநிலையில் உள்ள சில மக்களுக்கு சொர்க்கத்தை வழங்குமாறும் சிபாரிசு செய்வார்கள். நரகவாசிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்ட சில மக்களை அவர்கள் அதில் நுழையாமல் இருக்க நபி ﷺ அவர்கள் ஷஃபாஅத் செய்வார்கள்.

நரகத்தில் நுழைந்துவிட்ட பாவம் செய்த முவஹ்ஹிதுகளை அல்லாஹ் மன்னித்து சொர்க்கத்தில் நுழைவிக்கக் கோரியும் நபி ﷺ அவர்கள் ஷஃபாஅத் செய்வார்கள்.

இந்த வகை சிபாரிசில், வானவர்கள், நபிமார்கள், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்ட தியாகிகள், ஸித்தீக்குகள் – ஈமானில் மிக உறுதியானவர்கள், ஸாலிஹ் – பொதுவான வணக்கசாலிகள், முஃமின்கள் – பொதுவான நம்பிக்கையாளர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் பங்கெடுப்பார்கள். பிறகு சில கூட்டத்தாரை அல்லாஹு

தஆலா தனது ரஹ்மத் எனும் விசேஷ அருளைக் கொண்டு வேறு யாருடைய பரிந்துரையுமின்றி தனது மகத்தான அருளாலும் சிறப்பாலும் நரகத்திலிருந்து வெளியேற்றுவான். ஆனால், இறை நிராகரிப்பாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எந்தவொரு சிபாரிசும் கிடைக்காது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَمَا تَنفَعُهُمْ شَفَٰعَةُ ٱلشَّٰفِعِينَ ﴿٤٨﴾

பரிந்துரை செய்பவர்களின் பரிந்துரை அவர்களுக்கு பலனளிக்காது. (அல்குர்ஆன் 74:48)

மறுமையில் முஃமின்கள் செய்த அமல்களும் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும். நோன்பு, குர்ஆன் ஆகிய இரண்டும் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو: أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: " الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ يَوْمَ الْقِيَامَةِ، يَقُولُ الصِّيَامُ: أَيْ رَبِّ، مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ، فَشَفِّعْنِي فِيهِ، وَيَقُولُ الْقُرْآنُ: مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ، فَشَفِّعْنِي فِيهِ "، قَالَ: «فَيُشَفَّعَانِ»

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நோன்பும் குர்ஆனும் அடியானுக்காகப் பரிந்துரை செய்யும். நோன்பானது, என் இரட்சகனே! நான் இவரை உணவிலிருந்தும் உடல் ஆசைகளிலிருந்தும் பகலில் தடுத்து வைத்தேன். ஆகவே, அவர் விஷயத்தில் என் சிபாரிசை ஏற்றுக்கொள்வாயாக! என்று கூறும். குர்ஆன், இரவில் நான் அவரை தூக்கத்தை விட்டும் தடுத்தேன். ஆகவே, அவர் விஷயத்தில் என் சிபாரிசை ஏற்றுக்கொள்வாயாக! என்று கூறும். அவை இரண்டின் சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.[31]

31. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﵄, நூல்: முஸ்னத் அஹ்மத் எண்: 6626, தரம்: ஹஸன் – அல்பானி.

மறுமையில் மரணம் கொண்டு வரப்பட்டு அறுக்கப்பட்டு விடும். இது, சொர்க்கவாசிகள், நரகவாசிகள் பற்றிய தீர்ப்புகள் முழுமையாக வழங்கப்பட்டதன் பின்னர் நடைபெறும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنِ ابْنِ عُمَرَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا صَارَ أَهْلُ الْـجَنَّةِ إِلَى الْـجَنَّةِ، وَأَهْلُ النَّارِ إِلَى النَّارِ، جِيءَ بِالْمَوْتِ حَتَّىٰ يُجْعَلَ بَيْنَ الْـجَنَّةِ وَالنَّارِ، ثُمَّ يُذْبَحُ، ثُمَّ يُنَادِي مُنَادٍ: يَا أَهْلَ الْـجَنَّةِ لَا مَوْتَ، وَيَا أَهْلَ النَّارِ لَا مَوْتَ، فَيَزْدَادُ أَهْلُ الْـجَنَّةِ فَرَحًا إِلَىٰ فَرَحِهِمْ، وَيَزْدَادُ أَهْلُ النَّارِ حُزْنًا إِلَىٰ حُزْنِهِمْ

சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்கு சென்ற பின்னர், நரகவாசிகள் நரகத்திற்கு சென்ற பின்னர் மரணம் கொண்டுவரப்பட்டு சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையில் வைக்கப்படும். பின்னர், அது அறுக்கப்படும். அழைப்பாளர் ஒருவர், சொர்க்கவாசிகளே! இனிமேல் மரணமே இருக்காது. நரகவாசிகளே! இனிமேல் மரணமே இருக்காது என்று அறிவிப்பார். உடனே சொர்க்கவாசிகளுக்கு அவர்களின் மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி அதிகரிக்கும். நரகவாசிகளுக்கு அவர்களின் துக்கத்திற்கு மேல் துக்கம் அதிகரிக்கும்.[32]

****

32. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6548.

اَلرُّكْنُ السَّادِسُ

الْإِيمَانُ بِالْقَدَرِ

ஆறாவது தூண்

விதியை நம்பிக்கை கொள்ளுதல்

الْإِيمَانُ بِالْقَدَرِ

விதியை நம்பிக்கை கொள்ளுதல்

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, எல்லா நன்மையான விஷயங்களும் தீமையான விஷயங்களும் அல்லாஹ்வின் திட்டத்தின்படியும் அவனது தீர்மானத்தின் படியுமே இடம்பெறுகின்றன என உறுதியாக ஈமான் கொள்கின்றனர். மேலும், அல்லாஹ், தான் விரும்புவதையெல்லாம் செய்பவன்; எல்லாமே அவன் நாட்டப்படியே நிகழ்கின்றன. அல்லாஹ்வின் நாட்டம் மற்றும் அவனது இயக்கத்தை விட்டு எதுவும் வெளியேறிவிட முடியாது என ஈமான் கொள்கின்றனர்.

நடந்து முடிந்தவை, நடக்க இருப்பவை பற்றிய அனைத்தையும் முன்கூட்டியே அல்லாஹ் அறிந்திருக்கிறான். பிரபஞ்சப் பொருட்கள் எல்லாவற்றையும் தனது அறிவின்படி ஒவ்வொன்றின் அளவீடுகளை அவற்றுக்கேற்ற விதத்தில் அவன் திட்டமிட்டு, அவனது அறிவின்படியும் தீர்க்கமான ஞானத்தின்படியும் நிர்ணயித்துவிட்டான். தனது அடியார்களின் நிலைமைகளை அல்லாஹ் நன்கறிந்தவன். அவர்களுடைய இரணத்தையும் ஆயுளையும் மற்றும் எல்லா செயல்களையும் அல்லாஹ் துல்லியமாக அறிந்தவன். சகல விஷயங்களும் அல்லாஹ்வின் இல்ம் - அறிவு, குத்ரத் - சக்தி, இராதா - நாட்டம் ஆகியவற்றின் மூலமே நிகழ்கின்றன என அஹ்லுஸ் ஸுன்னா ஈமான் கொள்கின்றனர்.

கதர் பற்றிச் சுருக்கமாகவும் எளிமையாகவும் கூறுவதாயின், அல்லாஹ்வின் அறிவானது அனைத்தையும் முந்திவிட்டது. அதாவது ஒன்று நடப்பதற்கு முன்பே அதை அல்லாஹ் அறிந்தவனாக இருக்கிறான். நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை என அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருந்தான், அறிந்தவனாகவே இருக்கிறான். அதை அல்லாஹ்வின் அல் கலம் - எழுதுகோல் எழுதி பதிவு செய்து விட்டது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

سُنَّةَ ٱللَّهِ فِى ٱلَّذِينَ خَلَوْا۟ مِن قَبْلُ ۚ وَكَانَ أَمْرُ ٱللَّهِ قَدَرًا مَّقْدُورًا ﴿٣٨﴾

இப்படித்தான், இதற்கு முன் சென்றவர்களில் நடைபெற்ற அல்லாஹ்வின் வழிமுறை இருந்தது. அல்லாஹ்வின் காரியம் நிர்ணயிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட விதியாக இருக்கிறது. (அல்குர்ஆன் 33:38)

إِنَّا كُلَّ شَىْءٍ خَلَقْنَـٰهُ بِقَدَرٍ ﴿٤٩﴾

நிச்சயமாக நாம் எல்லாவற்றையும் (விதியின் தாய் புத்தகத்தில் நிர்ணயிக்கப்பட்ட) ஓர் அளவில் படைத்தோம். (அல்குர்ஆன் 54:49)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ لَا يُؤْمِنُ عَبْدٌ حَتَّىٰ يُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ، حَتَّىٰ يَعْلَمَ أَنَّ مَا أَصَابَهُ لَمْ يَكُنْ لِيُخْطِئَهُ، وَأَنَّ مَا أَخْطَأَهُ لَمْ يَكُنْ لِيُصِيبَهُ

ஓர் அடியானின் நன்மைகள், தீமைகள் அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின்படியே நிகழ்கின்றன என நம்பிக்கை கொள்கிற வரை, இன்னும், தனக்கு எது நேர்ந்ததோ அது தனக்கு தவறியிருக்க முடியாது என்றும், தனக்கு எது (நடக்காமல்) தவறியதோ அது தனக்கு நேர்ந்திருக்க முடியாது என்றும் அவர் உறுதியாக அறிந்து கொள்கிற வரை எந்த ஓர் அடியானும் ஈமான் கொண்டவனாக ஆக முடியாது.[33]

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கூறுகின்றனர்:

கதர் பற்றிய நம்பிக்கையானது, அது தொடர்பான நான்கு விஷயங்களை நம்புவதன் மூலமே முழுமை பெறுகிறது. இந்த நான்கு விஷயங்களும் கதரின் படித்தரங்கள் அல்லது அதன் தூண்கள் என அழைக்கப்படுகின்றன. கதரை புரிந்து கொள்வதற்கு அடிப்படையாக இவ்விஷயங்கள் திகழ்கின்றன. கதரின் நான்கு தூண்களையும் தனக்குள் உறுதிசெய்யாத வரை கதர் பற்றிய நம்பிக்கை பூரணமடையாது.

33. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﵁, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 2144.

ஏனெனில், அந்த நான்கு படித்தரங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். ஆகவே, யார் இவற்றை உறுதியாக ஏற்றுக்கொள்கிறாரோ கதர் பற்றிய அவருடைய ஈமான் பூரணமடைகிறது. யார் அந்தப் படித்தரங்களில் ஏதாவதொன்றை நம்பவில்லையோ, அல்லது அவற்றுக்கு மேலதிகமாக ஐந்தாவது ஒன்று இருப்பதாக நம்பினாலோ கதர் - விதி மீதான அவருடைய நம்பிக்கையில் குழப்பம் ஏற்பட்டுவிடும். (அவர் ஈமானை இழந்துவிடுவார்.)

முதல் படித்தரம்: العلم **- அல் இல்ம் - அறிவு**

அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன், நடந்தவை, நடக்க இருப்பவை, இது வரை நடக்காதவை அவை நடக்கும்பொழுது எப்படி நடக்கும் ஆகிய அனைத்தையும் மொத்தமாகவும் தனித்தனியாகவும் விரிவாகவும் அல்லாஹ் நன்கு அறிந்தவன். படைப்பினங்களைப் படைப்பதற்கு முன்னரே அவை எப்படி இருக்கப்போகின்றன, அவை என்ன செய்யும் என்பதையும் அவற்றின் உணவுகள், ஆயுள்கள், செயல்கள், அசைவுகள், அமைதிகள் அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்தவனாகவே இருந்தான், நன்கறிந்தவனாகவே இருக்கிறான். மனிதர்களில் ஸஈத் - நல்லவர், ஷகீ - கெட்டவர் யார் என்பதையும் அல்லாஹ் நன்கறிவான். அல்லாஹ் இவை அனைத்தையும் தனது நிரந்தர பண்புகளில் ஒன்றாகிய அறிவினால் ஆதியிலிருந்தே அறிந்தவனாக இருக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ ﴿١١٥﴾

நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன்.

(அல்குர்ஆன் 9:115)

இரண்டாம் படித்தரம்: الكتابة **- அல் கிதாபா - பதிவு செய்தல், எழுதுதல்**

படைப்பினங்களைப் பற்றி அல்லாஹ்வின் இல்மில் இருக்கின்ற அனைத்தையும் அல் லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும் பதிவேட்டில் அல்லாஹ் எழுதிவிட்டான். அந்தப் பதிவுப் புத்தகத்தில் எழுதப்படாமல்

எந்த ஒன்றும் இல்லை. ஆக, நடந்தவை, நடப்பவை, இன்னும் மறுமை நாள் வரும் வரை நிகழ இருக்கின்ற ஒவ்வொன்றும் முழுமையாக அல்லாஹ்விடம் உம்முல் கிதாப் - விதியின் தாய் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிவேட்டினை திக்ர், இமாம், அல் கிதாபுல் முபீன் என அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

وَكُلَّ شَيْءٍ أَحْصَيْنَاهُ فِي إِمَامٍ مُّبِينٍ ﴿١٢﴾

எல்லாவற்றையும் நாம் இமாம் முபீன் - தெளிவான பதிவேட்டில் பதிவு செய்துள்ளோம். (அல்குர்ஆன் 36:12)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ أَوَّلَ مَا خَلَقَ اللَّهُ الْقَلَمَ فَقَالَ لَهُ اكْتُبْ قَالَ رَبِّ وَمَاذَا أَكْتُبُ قَالَ اكْتُبْ مَقَادِيرَ كُلِّ شَيْءٍ حَتَّى تَقُومَ السَّاعَةُ

அல்லாஹ் படைத்ததில் முதலாவது, அல் கலம் - எழுதுகோலாகும். ஆக, அதற்கு, எழுது என்றான். என் இறைவா! நான் எதை எழுத வேண்டும் என அது கூறியது. அவன் கூறினான்: மறுமை நாள் வரை வரவுள்ள எல்லாப் பொருட்களின் விதிகளை எழுது.[34]

மூன்றாம் படித்தரம்: الإرادة والمشيئة - **அல் இராதா வல் மஷீஆ - நாடுதல், விரும்புதல்**

பிரபஞ்சத்தில் நடைபெறும் அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டத்தின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. அல்லாஹ்வின் நாட்டமாகிறது அவனது அருளுக்கும் ஞானத்திற்கும் உட்பட்டதாகும். அல்லாஹ் தனது அருளால் அவன் நாடியவர்களை நேர்வழிப் படுத்துகிறான். தனது ஞானத்தினால் அவன் நாடியவர்களை வழிகெடுக்கிறான். அல்லாஹ்வின் ஞானமும், அதிகாரமும் பூரணமானது. ஆகவே, அவன் செய்வது பற்றி யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால், படைப்பினங்கள் தங்களது செயல்கள் பற்றி கேள்வி கேட்கப்படுவார்கள். எது நிகழ்கின்றதோ அது,

34. அறிவிப்பாளர்: உபாதா இப்னு அஸ் ஸாமித் ﵁, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4700.

அல் லவ்ஹுல் மஹ்ஃபூளில் எழுதப்பட்ட அவனது இல்முக்கு ஏற்பவே நிகழ்கிறது. அல்லாஹ்வின் நாட்டம் கண்டிப்பாக நிறைவேறும். அவனது வல்லமை பூரணமானது, அனைத்தையும் உள்ளடக்கியது. அல்லாஹ் எதை நாடினானோ அது நடக்கும். அவன் எதை நாடவில்லையோ அது நடக்காது. எந்த ஒன்றும் அவன் நாட்டத்திலிருந்து வெளியேற முடியாது. (–அவனது நாட்டத்தை எதுவும் மீற முடியாது. அவன் நாடி அது நடக்காமல் இருக்க முடியாது. அவன் நாடாதது நடந்துவிட முடியாது.)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا تَشَآءُونَ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُ رَبُّ ٱلْعَٰلَمِينَ ﴿٢٩﴾

அகிலத்தார்களின் இரட்சகனான அல்லாஹ் நாடினாலே தவிர, நீங்கள் எதையும் நாடமாட்டீர்கள். (அல்குர்ஆன் 81:29)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ رضي الله عنه يَقُولُ: أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: إِنَّ قُلُوبَ بَنِي آدَمَ كُلَّهَا بَيْنَ إِصْبَعَيْنِ مِنْ أَصَابِعِ الرَّحْمَنِ، كَقَلْبٍ وَاحِدٍ، يُصَرِّفُهُ حَيْثُ يَشَاءُ

ஆதமின் சந்ததிகளுடைய உள்ளங்கள் ரஹ்மானின் விரல்களில் இரு விரல்களுக்கிடையே ஒரே ஓர் உள்ளத்தைப் போல் இருக்கின்றன. அவற்றை அவன் நாடியவாறு இயக்குகிறான்.[35]

நான்காம் படித்தரம்: الخلق **– அல் கல்க் – படைத்தல்**

அனைத்தையும் அல்லாஹ்தான் படைத்தான், படைக்கிறான், அவனையன்றி வேறு ஒரு படைப்பாளன் அறவே இல்லை. அவனைத் தவிர வேறு இரட்சகன் அறவே இல்லை. அல்லாஹ்வைத் தவிர உள்ள ஏனைய அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவை. செயலை

35. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு رضي الله عنهما, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2654.

செய்பவனையும் அவனது செயலையும் அசையக்கூடிய ஒவ்வொரு பொருளையும் அதன் அசைவையும் அல்லாஹ்தான் படைப்பவன் என்று உறுதியாக நம்பிக்கை கொள்வது கதர் பற்றிய நம்பிக்கையின் நான்காவது படித்தரமாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَخَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهُۥ تَقْدِيرًا ﴿٢﴾

எல்லாவற்றையும் அவன்தான் படைத்தான். அவனே அவற்றை உரிய முறையில் திட்டமிட்டான். (அல்குர்ஆன் 25:02)

இவ்வுலகில் இடம்பெறுகின்ற அனைத்து நலவுகளும் கெடுதிகளும், ஈமானும் குஃப்ரும், வழிபாடும், மாறுபாடும் என அனைத்துமே அல்லாஹ் நாடியதுதான், அவன் திட்டமிட்டதுதான் அவன் படைத்ததுதான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا كَانَ لِنَفْسٍ أَن تُؤْمِنَ إِلَّا بِإِذْنِ ٱللَّهِ

அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த ஒரு ஆத்மாவும் ஈமான் கொள்ள முடியாது. (அல்குர்ஆன் 10:100)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُل لَّن يُصِيبَنَآ إِلَّا مَا كَتَبَ ٱللَّهُ لَنَا هُوَ مَوْلَىٰنَا
وَعَلَى ٱللَّهِ فَلْيَتَوَكَّلِ ٱلْمُؤْمِنُونَ ﴿٥١﴾

(நபியே!) நீர் கூறுவீராக! அல்லாஹ் நமக்கு எதை எழுதினானோ அதைத் தவிர வேறெதுவுமே நம்மை வந்தடையாது. அவனே நமது பொறுப்பாளன். நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே பொறுப்பு சாட்டவும். (அல்குர்ஆன் 9:51)

படைப்புகளை படைப்பதிலும் அவற்றை உருவாக்குவதிலும் உண்டாக்குவதிலும் அல்லாஹ் தனித்தவன். ஒவ்வொரு பொருளையும் அவனே படைத்தான். அவனே எல்லாப் பொருட்களின் படைப்பாளன்.

இதில் எந்த ஒரு பொருளும் விதிவிலக்கல்ல. அவனைத் தவிர வேறு இரட்சகனும் இல்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ٱللَّهُ خَٰلِقُ كُلِّ شَيۡءٖۖ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيۡءٖ وَكِيلٞ ۝٦٢

அல்லாஹ்தான் ஒவ்வொரு பொருளின் படைப்பாளன் ஆவான். மேலும், அவனே அனைத்துக்கும் பொறுப்பாளன் ஆவான்.

(அல்குர்ஆன் 39:62)

அல்லாஹ், படைப்புகள் தனக்கு கீழ்ப்படிவதை விரும்புகிறான். அவை தனக்கு மாறு செய்வதை வெறுக்கிறான். தனது அருளால் தான் நாடியோரை நேர்வழிப்படுத்துகிறான். தனது நீதியின் படி, தான் நாடியோரை அவன் வழி தவறச் செய்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِن تَكۡفُرُواْ فَإِنَّ ٱللَّهَ غَنِيٌّ عَنكُمۡۖ وَلَا يَرۡضَىٰ لِعِبَادِهِ ٱلۡكُفۡرَۖ وَإِن تَشۡكُرُواْ
يَرۡضَهُ لَكُمۡۗ وَلَا تَزِرُ وَازِرَةٞ وِزۡرَ أُخۡرَىٰۚ

நீங்கள் (அல்லாஹ்வை) நிராகரித்தால் நிச்சயமாக அல்லாஹ் உங்களை விட்டும் தேவையற்றவனாவான். அவன் தனது அடியார்களிடமிருந்து நிராகரிப்பை விரும்பமாட்டான். நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தினால் அவன் உங்களிடமிருந்து அதை ஏற்றுக்கொள்கிறான். பாவம் செய்கிற ஆன்மா, வேறு ஓர் ஆன்மாவின் பாவத்தை சுமக்காது.

(அல்குர்ஆன் 39:7)

அல்லாஹ் யாரை வழிகெடுத்தானோ அவர் தமது நிலைக்கு எந்தவொரு நியாயமோ அல்லது சாக்குப்போக்கோ சொல்ல முடியாது. ஏனெனில், அல்லாஹ் இறைத்தூதர்களை அனுப்பி அவர்களின் நியாயத்தை செல்லுபடியற்றதாக ஆக்கி விட்டான். அத்தோடு அடியார்களின் செயல்களை அவர்களின் பக்கம்தான் இணைத்திருக்கிறான். ஒரு செயலை அதைச் செய்தவருடன்தான் அல்லாஹ் சேர்க்கிறான், இன்னும் அதை அவருடைய சம்பாத்தியம் அவர் தேடிக்கொண்டது என்று

அல்லாஹ் உறுதிபடுத்துகிறான். எந்த ஓர் அடியானையும் அவனது சக்திக்கு மேலாக அல்லாஹ் சிரமப்படுத்துவதில்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ٱلْيَوْمَ تُجْزَىٰ كُلُّ نَفْسٍۭ بِمَا كَسَبَتْ ۚ لَا ظُلْمَ ٱلْيَوْمَ ۚ
إِنَّ ٱللَّهَ سَرِيعُ ٱلْحِسَابِ ﴿١٧﴾

அந்நாளில் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் அது செய்தவற்றுக்கான கூலி கொடுக்கப்படும். அந்நாளில் எவ்வித அநியாயமும் இருக்காது. நிச்சயமாக அல்லாஹ் விசாரிப்பதில் மிக விரைவானவன் ஆவான். (அல்குர்ஆன் 40:17)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّا هَدَيْنَـٰهُ ٱلسَّبِيلَ إِمَّا شَاكِرًا وَإِمَّا كَفُورًا ﴿٣﴾

நிச்சயமாக நாம் தான் அவனுக்கு பாதையைக் காட்டினோம். ஒன்று அவன் நன்றி உள்ளவனாக ஆகலாம். அல்லது நன்றி கெட்டவனாக ஆகலாம். (அல்குர்ஆன் 76:03)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

رُّسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى ٱللَّهِ حُجَّةٌۢ بَعْدَ ٱلرُّسُلِ ۚ
وَكَانَ ٱللَّهُ عَزِيزًا حَكِيمًا ﴿١٦٥﴾

தூதர்களுக்குப் பின்பு அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற) மக்களுக்கு ஓர் ஆதாரமும் இல்லாதிருக்க, நற்செய்தி கூறுபவர்களாக, (அச்சமூட்டி) எச்சரிப்பவர்களாக (பல) தூதர்களை (நமது அடியார்களுக்கு தொடர்ந்து நாம் அனுப்பினோம்). இன்னும், அல்லாஹ் மிகைத்தவனாக, மகா ஞானவானாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4:165)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۚ

அல்லாஹ், எந்த ஒரு ஆத்மாவுக்கும் அதன் சக்திக்கு மேல் சிரமப்படுத்த மாட்டான். (அல்குர்ஆன் 2:286)

அல்லாஹ் நன்மைகளைப் படைத்தது போல், தீமைகளையும் படைத்தான் என்பதற்காக தீமைகளை அல்லாஹ்வின் பக்கம் சேர்க்கப்பட மாட்டாது. ஏனெனில், அல்லாஹ் நன்மைகளைக் கடைப்பிடிக்குமாறு ஏவி, தீமைகளில் ஈடுபடுவதைத் தடுத்துள்ளான். உண்மையில், தீமைகளானது அல்லாஹ்வின் தீர்ப்பில் இல்லை. மாறாக, அவனது தீர்ப்பின்படி எது நிகழ்கிறதோ அதில்தான் தீமை இருக்கும். (மேலும், அந்த தீமையிலும் அவனுடைய ஞானமும் தத்துவமும் இருக்கும்.)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مَّآ أَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ ٱللَّهِ ۖ وَمَآ أَصَابَكَ مِن سَيِّئَةٍ فَمِن نَّفْسِكَ ۚ

நலவுகளில் உமக்கு எது ஏற்பட்டதோ அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததாகும். கெடுதிகளில் உமக்கு எது ஏற்பட்டதோ அது உமது ஆன்மாவிலிருந்து ஏற்பட்டதாகும். (அல்குர்ஆன் 4:79)

அல்லாஹ் அநியாயங்களிலிருந்து தூய்மையானவன். அவன் மிக நீதமானவன். அல்லாஹ் அணுவளவேனும் யாருக்கும் அநியாயம் இழைக்க மாட்டான். அவனது அனைத்து செயல்களும் நியாயமானவை, நீதமானவை இன்னும் அருள் நிறைந்தவை ஆகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ أَنَا۠ بِظَلَّٰمٍ لِّلْعَبِيدِ ﴿٢٩﴾

நான் அடியார்களுக்கு அநியாயம் செய்பவனே அல்ல.
(அல்குர்ஆன் 50:29)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَا يَظْلِمُ رَبُّكَ أَحَدًا ﴿٤٩﴾

உமது இரட்சகன் ஒருவருக்கும் அநியாயம் இழைக்கமாட்டான் (அல்குர்ஆன் 18:49)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يَظۡلِمُ مِثۡقَالَ ذَرَّةٖۖ

நிச்சயமாக அல்லாஹ் அணுவளவும் அநியாயம் இழைக்கமாட்டான். (அல்குர்ஆன் 4:40)

அல்லாஹ்விடம் அவன் எதை செய்கிறானோ அதைப் பற்றியும் அவன் எதை நாடுகிறானோ அதைப் பற்றியும் அவனிடம் யாரும் கேள்வி கேட்க முடியாது. அல்லாஹ்வின் செயல்கள் மீது கேள்வி கேட்கவும் ஆட்சேபிக்கவும் எவருக்கும் எவ்வித உரிமையும் அதிகாரமும் தகுதியும் அறவே இல்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يُسۡـَٔلُ عَمَّا يَفۡعَلُ وَهُمۡ يُسۡـَٔلُونَ ٢٣

அல்லாஹ், தான் செய்வதைப் பற்றி கேள்வி கேட்கப்பட மாட்டான். (மாறாக, மனிதர்களாகிய) அவர்கள்தான் கேள்வி கேட்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 21:23)

மனிதனையும் அவனுடைய செயல்களையும் அல்லாஹ்வே படைத்தான். மனிதனுக்கு என்று பிரத்யேக நாட்டம், சக்தி, தேர்வு செய்கிற உரிமை, சுய விருப்பு, வெறுப்பு என்பவற்றையும் அல்லாஹ்தான் படைத்தான். மனிதனின் ஒவ்வொரு செயலும் வெளித்தோற்றத்தில் மட்டுமல்லாமல் உண்மையில் அவனிடமிருந்தே யதார்த்தமாக உருவாக வேண்டும் என்பதற்காக அல்லாஹ் மனிதனுக்கு சுய விருப்பு, வெறுப்பையும் சுய நாட்டத்தையும் சுய சக்தியையும் கொடுத்திருக்கிறான். மேலும், அல்லாஹ் - நன்மை, தீமையை பிரித்தறியக்கூடிய அறிவையும் மனிதர்களுக்கு வழங்கியுள்ளான். மனிதன், தான் எதை விரும்பி, அவனாக அதை தேர்வு செய்கிறானோ அந்த செயல்களுக்கு அவனே பொறுப்பாளனாக இருக்கிறான். மனிதன் மீது எதுவும் நிர்ப்பந்தமாகத்

திணிக்கப்படவில்லை. மாறாக, ஒன்றை தேர்வு செய்கிற சுதந்திரம், சுயவிருப்பம் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனால் மனிதன், தான் விரும்பியதை எடுத்துக்கொள்ளவும் விரும்பாதவற்றை ஒதுக்கி விடவும் முழு சுதந்திரம் பெற்றவனாக இருக்கிறான். மனிதன் தனது சுய விருப்பத்தின்படியும் சுய ஆசையின்படியும் எதை செய்தானோ அந்த செயலுக்காகத்தான் அல்லாஹ் அவனிடம் விசாரணை செய்வான். மனிதன் (கற்களைப் போன்று) நிர்ப்பந்திக்கப்பட்டவன் அல்ல. மாறாக, அவனுக்கு என்று சுய விருப்பமும் சுய நாட்டமும் இருக்கிறது. அல்லாஹ் எதை நாடுகிறானோ அவை ஒவ்வொன்றும் நடக்கும். அவன் எதை நாடவில்லையோ அது நடக்காது. ஆக, அல்லாஹு தஆலா அடியார்களின் செயல்களைப் படைக்கிறானே தவிர அவற்றை அவன் செய்யவில்லை. அந்த செயலைச் செய்பவர்கள் அந்த செயலைச் செய்த அடியார்கள்தான், அல்லாஹ் அல்ல. ஒரு செயல் அது படைக்கப்படுதல், உருவாக்கப்படுதல் என்பதை கவனித்து அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து நிகழ்ந்ததாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த செயலை செய்தல் என்பதைக் கவனித்து அந்த செயலைச் செய்த அடியானிடமிருந்து நிகழ்ந்ததாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لِمَن شَآءَ مِنكُمۡ أَن يَسۡتَقِيمَ ٢٨

وَمَا تَشَآءُونَ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُ رَبُّ ٱلۡعَٰلَمِينَ ٢٩

உங்களில் நேர்வழி நடக்க நாடியவருக்கு (இது அறிவுரையாகும். அவர் அதன் மூலம் நல்லறிவு பெறுவார்). அகிலத்தார்களின் இறைவனான அல்லாஹ் நாடினால் தவிர, (நீங்கள் நல்லறிவு பெற) நாடமாட்டீர்கள். (அல்குர்ஆன் 81:28,29)

இணைவைப்பாளர்கள் தங்களின் பாவச் செயல்களுக்கு நியாயம் கற்பிப்பதற்காக கதர் விதியை காரணம் கூறி தர்க்கம் செய்தபோது அல்லாஹ் கூறினான்:

سَيَقُولُ ٱلَّذِينَ أَشْرَكُوا۟ لَوْ شَآءَ ٱللَّهُ مَآ أَشْرَكْنَا وَلَآ ءَابَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِن شَىْءٍ ۚ كَذَٰلِكَ كَذَّبَ ٱلَّذِينَ مِن قَبْلِهِمْ حَتَّىٰ ذَاقُوا۟ بَأْسَنَا ۗ

அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்கள் மூதாதைகளும் இணைவைத்திருக்க மாட்டோம்; இன்னும், (அனுமதிக்கப்பட்ட) எதையும் (கூடாது என) நாங்கள் தடை செய்திருக்க மாட்டோம் என்று இணைவைப்பவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறே இவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் பொய்ப்பித்தார்கள். இறுதியாக, அவர்கள் நம் தண்டனையைச் சுவைத்தனர். (அல்குர்ஆன் 6:148)

அதற்கு, அவர்களின் இந்த வாதம் பொய்யானது என அல்லாஹ் பதிலளிக்கிறான்

قُلْ هَلْ عِندَكُم مِّنْ عِلْمٍ فَتُخْرِجُوهُ لَنَآ ۖ إِن تَتَّبِعُونَ إِلَّا ٱلظَّنَّ وَإِنْ أَنتُمْ إِلَّا تَخْرُصُونَ ﴿١٤٨﴾

(நபியே! அவர்களை நோக்கி) கூறுவீராக: ("நீங்கள் இவ்வாறு செய்வதற்கு) உங்களிடம் (உறுதியான) கல்வி (ஆதாரம்) ஏதும் உண்டா? (அப்படியிருந்தால்) அதை நமக்கு வெளிப்படுத்துங்கள். நீங்கள் வீண் சந்தேகத்தைத் தவிர பின்பற்றுவதில்லை. இன்னும், கற்பனை செய்பவர்களாகவே தவிர நீங்கள் இல்லை". (அல்குர்ஆன் 6:148)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, கதர் – விதி என்பது அல்லாஹ் தனது படைப்பினங்களில் மறைத்து வைத்திருக்கும் இரகசியம் என நம்புகின்றனர். அதனை அல்லாஹ்வுக்கு நெருக்கமான வானவர்களும் அறிய முடியாது. எந்த நபியும் ரஸூலும் அறிய முடியாது. இந்த விஷயத்தில் ஆய்வு ஆராய்ச்சிகளில் மூழ்குவது வழிகேடாகும். ஏனெனில், அல்லாஹ் கதர் பற்றிய அறிவைத் தன்னிடம் மட்டுமே ரகசியமாக வைத்துள்ளான். தனது அடியார்களுக்கு அந்த அறிவை மறைத்துவிட்டான். அதை அறிய முயற்சிப்பதை அல்லாஹ் தடைசெய்துவிட்டான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يُسْـَٔلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْـَٔلُونَ ﴿٢٣﴾

அவன் செய்வதைப் பற்றி அவன் கேள்வி கேட்கப்படமாட்டான். (மனிதர்களாகிய) அவர்கள்தான் கேள்வி கேட்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 21:23)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, கதர் விஷயத்தில் தங்களுக்கு முரண்பட்ட வழிகெட்டவர்களிடமும் நெறிதவறியவர்களிடமும் அல்லாஹ்வின் வசனத்தைக் கொண்டு பதில் கூறுவார்கள்.

وَإِن تُصِبْهُمْ حَسَنَةٌ يَقُولُواْ هَٰذِهِۦ مِنْ عِندِ ٱللَّهِۖ وَإِن تُصِبْهُمْ سَيِّئَةٌ يَقُولُواْ هَٰذِهِۦ مِنْ عِندِكَۚ قُلْ كُلٌّ مِّنْ عِندِ ٱللَّهِۖ فَمَالِ هَٰٓؤُلَآءِ ٱلْقَوْمِ لَا يَكَادُونَ يَفْقَهُونَ حَدِيثًا ﴿٧٨﴾

இன்னும், அவர்களுக்கு ஒரு நன்மை ஏற்பட்டால், இது அல்லாஹ்விடமிருந்து (எங்களுக்குக்) கிடைத்தது எனக் கூறுகிறார்கள். இன்னும், அவர்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால், (நபியே!) இது உம்மிடமிருந்து (எங்களுக்கு) ஏற்பட்டது எனக் கூறுகிறார்கள். (நபியே) நீர் கூறுவீராக: எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே (ஏற்பட்டன). ஆக, இந்தக் கூட்டத்தினருக்கு என்ன நேர்ந்தது? யாதொரு பேச்சையும் அவர்கள் விரைவாக (இலகுவாக) விளங்குவதில்லையே! (அல்குர்ஆன் 4:78)

القضاء والقدر - கழா - கதர் பற்றிய நம்பிக்கையில் இதுவே ஸலஃப் ஸாலிஹ் நல்ல முன்னோர்களாகிய ஸஹாபாக்கள், தாபியீன்கள், இன்னும் அவர்களை நன்மையில் பின்பற்றிய அனைவரின் நம்பிக்கையாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

****

اَلْأَصْلُ الثَّانِي

مُسَمَّى الْإِيمَانِ عِنْدَ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

இரண்டாவது அடிப்படை:
அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவிடம் ஈமான் என்று எதற்கு சொல்லப்படும்?

مُسَمَّى الْإِيمَانِ عِنْدَ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவிடம் ஈமான் என்று எதற்கு சொல்லப்படும்?

ஸலஃபுப் ஸாலிஹ் – அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய அகீதாவின் அடிப்படைகளில் ஈமான் என்பது, உள்ளத்தால் உண்மைப்படுத்தி, நாவினால் மொழிந்து, உடல் உறுப்புகளால் செயல்படுத்துவது ஆகும். இறைக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதால் ஈமான் அதிகரிக்கிறது. இறைக் கட்டளைகளுக்கு மாறு செய்வதால் ஈமான் குறைகிறது.

ஈமான் என்பது சொல்லும் செயலுமாகும்.

ஈமான் என்பது உள்ளம் இன்னும் நாவினால் மொழிவதாகும். இன்னும், உள்ளம், நாவு மற்றும் உறுப்புகளால் செயல்படுவதாகும்.

ஆக, உள்ளம் மொழிவது என்றால் உள்ளம் நம்பிக்கை கொள்வது, உள்ளம் உண்மைப்படுத்துவது, உள்ளம் ஒப்புக்கொள்வது, உள்ளம் உறுதிகொள்வதாகும்.

நாவு மொழிவது என்றால் (மார்க்கம் கட்டளையிட்ட) செயல்களை ஏற்றுக்கொள்வதாகும். அதாவது, ஷஹாதாவை மொழிவதும் அதற்கு தேவையானவற்றை நிறைவேற்றுவதும் ஆகும். (அதாவது, ஷஹாதத்தை மொழிந்த பின்னர் ஒரு முஸ்லிமின் மீது கடமையாகக்கூடிய கடமைகளை நிறைவேற்றுவதும் ஆகும்.)

ஈமான் என்பது உள்ளத்தின் செயல் என்றால் – உள்ளம் ஈமானை நினைக்க வேண்டும்; ஈமானை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதில் மனத்தூய்மையுடன் இருக்க வேண்டும்; உள்ளம் ஈமானை நேசித்து, அதற்கு கட்டுப்பட வேண்டும்; உள்ளம் நல்லமல்களை செய்வதற்கு நாட வேண்டும் என்பதாகும்.

ஈமான் என்பது நாவு இன்னும் உறுப்புகளின் செயல் என்றால்

மார்க்கத்தில் கட்டளையிடப்பட்டவற்றை செய்வதும் தடுக்கப்பட்டவற்றை விட்டுவிடுவதும் ஆகும்.

அமல் (–செயல்) இன்றி ஈமான் (–நம்பிக்கை) இல்லை. நிய்யத் இன்றி சொல்லும் செயலும் இல்லை. ஸுன்னாவிற்கு ஒத்ததாக இல்லை என்றால் சொல்லும் இல்லை, அமலும் இல்லை, நிய்யத்தும் இல்லை. (அதாவது, ஸுன்னாவிற்கு ஒத்ததாக நமது சொல், செயல், நிய்யத்து இல்லை என்றால் அவை எதுவும் அல்லாஹு தஆலாவிடம் ஏற்றுக்கொள்ளப்படாது.)

இமாம் அவ்ஸாயீ, இமாம் ஸுஃப்யான் ஸவ்ரீ, இமாம் அல்ஹுமைதீ ﵏ கூறுகிறார்கள்:

وَلَا إِيمَانَ إِلَّا بِالْعَمَلِ، وَلَا قَوْلَ وَلَا عَمَلَ إِلَّا بِنِيَّةٍ، وَلَا قَوْلَ وَلَا عَمَلَ وَلَا نِيَّةَ إِلَّا بِمُوَافَقَةِ السُّنَّةِ

அமல் – செயல் இன்றி ஈமான் இல்லை. நிய்யத்– மனதின் உறுதியான எண்ணம் இன்றி சொல்லும் இல்லை, அமலும் இல்லை. (அதாவது, சொல்லும் செயலும் சரியான நிய்யத் இன்றி ஏற்கப்பட மாட்டாது.) ஸுன்னாவுக்கு உடன்படுவது கொண்டே தவிர சொல், செயல் நிய்யத் எதுவும் (ஏற்றுக்கொள்ளப்பட தகுதியானதாக) இல்லை.[36]

அல்லாஹு தஆலா குர்ஆனில் உண்மை முஃமின்களின் பண்பை கூறும்பொழுது, அவர்கள் மார்க்கத்தின் அடிப்படைகளையும் கிளைகளையும் ஈமான் கொண்டு, தமது ஈமானின்படி மார்க்கத்தின் வெளிப்படையான, உள்ரங்கமான எல்லா கட்டளைகளையும் எடுத்து நடப்பார்கள் என்று கூறியுள்ளான். ஈமானின் அடையாளங்கள் நம்பிக்கையாளர்களின் கொள்கைகள், மற்றும் வெளிப்படையான, மறைவான கூற்றுகள், செயல்கள் என அனைத்திலும் வெளிப்படும்.

36. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ إِذَا ذُكِرَ ٱللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ
ءَايَٰتُهُۥ زَادَتْهُمْ إِيمَٰنًا وَعَلَىٰ رَبِّهِمْ يَتَوَكَّلُونَ ﴿٢﴾ ٱلَّذِينَ يُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَمِمَّا
رَزَقْنَٰهُمْ يُنفِقُونَ ﴿٣﴾ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلْمُؤْمِنُونَ حَقًّا لَّهُمْ دَرَجَٰتٌ عِندَ رَبِّهِمْ
وَمَغْفِرَةٌ وَرِزْقٌ كَرِيمٌ ﴿٤﴾

நம்பிக்கையாளர்கள் எல்லாம், (அவர்களுக்கு முன்னர்) அல்லாஹ்வை நினைவு கூரப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் நடுங்கும். இன்னும், அவனுடைய வசனங்கள் அவர்கள் முன் ஓதப்பட்டால் அவை அவர்களுக்கு நம்பிக்கையை அதிகப்படுத்தும். இன்னும், அவர்கள் தங்கள் இறைவன் மீதே நம்பிக்கை வை(த்து அவனையே சார்ந்து இரு) ப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலைநிறுத்துவார்கள். இன்னும், நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து தர்மம் செய்வார்கள். அவர்கள்தான் உண்மையில் நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் பல பதவிகளும் மன்னிப்பும் கண்ணியமான உணவும் உண்டு. (அல்குர்ஆன் 8:2-4)

குர்ஆனில் பெரும்பாலான வசனங்களில் அல்லாஹ்ஹு தஆலா ஈமானை அமல்களோடு இணைத்தே குறிப்பிடுகிறான்.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ كَانَتْ لَهُمْ جَنَّٰتُ ٱلْفِرْدَوْسِ نُزُلًا ﴿١٠٧﴾

நிச்சயமாக எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்காரியங்களைச் செய்தார்களோ அவர்களுக்கு, ஃபிர்தவ்ஸ் என்னும் சொர்க்கங்கள் அவர்களுக்கான தங்குமிடங்களாக இருக்கின்றன. (அல்குர்ஆன் 18:107)

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ قَالُواْ رَبُّنَا ٱللَّهُ ثُمَّ ٱسْتَقَٰمُواْ تَتَنَزَّلُ عَلَيْهِمُ ٱلْمَلَٰٓئِكَةُ أَلَّا تَخَافُواْ

وَلَا تَحْزَنُواْ وَأَبْشِرُواْ بِٱلْجَنَّةِ ٱلَّتِي كُنتُمْ تُوعَدُونَ ۝٣٠

நிச்சயமாக எவர்கள், எங்கள் இறைவன், அல்லாஹ்தான் என்று கூறி, பிறகு (அதில்) உறுதியாக இருந்தார்களோ அவர்கள் மீது வானவர்கள் இறங்குவார்கள். (அந்த வானவர்கள் கூறுவார்கள்:) நீங்கள் பயப்படாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! நீங்கள் வாக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்த சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி பெறுங்கள்! (அல்குர்ஆன் 41:30)

وَتِلْكَ ٱلْجَنَّةُ ٱلَّتِيٓ أُورِثْتُمُوهَا بِمَا كُنتُمْ تَعْمَلُونَ ۝٧٢

இதுதான், நீங்கள் செய்துகொண்டிருந்த நன்மைகளின் காரணமாக உங்களுக்குச் சொந்தமாக்கி வைக்கப்பட்ட சொர்க்கமாகும். (அல்குர்ஆன் 43:72)

وَٱلْعَصْرِ ۝١ إِنَّ ٱلْإِنسَٰنَ لَفِي خُسْرٍ ۝٢ إِلَّا ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ
وَتَوَاصَوْاْ بِٱلْحَقِّ وَتَوَاصَوْاْ بِٱلصَّبْرِ ۝٣

காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில்தான் இருக்கிறான். எவர்கள் நம்பிக்கைக் கொண்டு; நற்செயல்களைச் செய்து; உண்மையை உபதேசித்துக் கொண்டு, இன்னும் பொறுமையை உபதேசித்துக் கொண்டார்களோ அவர்களைத் தவிர. (அவர்கள் நஷ்டவாளிகள் இல்லை.) (அல்குர்ஆன் 103:1–3)

ஈமான் மற்றும் அமல் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது என்பதைப் பின்வரும் நபிமொழிகளும் உறுதி செய்கின்றன:

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

قُلْ: آمَنْتُ بِاللهِ ثُمَّ اسْتَقِمْ

ஈமான் கொண்டேன் என்று கூறுவீராக! பின்னர், (அதில்) நிலைத்திருப்பீராக![37]

37. அறிவிப்பாளர்: ஸுஃப்யான் இப்னு அப்தில்லாஹ் ஸகஃபீ ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 38.

இந்த ஹதீஸில் இடம்பெற்றுள்ள "நிலைத்திருப்பீராக" என்ற கட்டளையானது ஈமானை உறுதிப்படுத்தும் விதத்தில் தனது வாழ்க்கையில் செயல்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ الْإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ - أَوْ بِضْعٌ وَسِتُّونَ - شُعْبَةً، فَأَفْضَلُهَا قَوْلُ لَا إِلَهَ إِلَّا اللهُ، وَأَدْنَاهَا إِمَاطَةُ الْأَذَىٰ عَنِ الطَّرِيقِ، وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الْإِيمَانِ

ஈமான் எழுபதுக்கு அல்லது அறுபதுக்கு மேற்பட்ட கிளைகளாகும். அவற்றில் மிக உயர்வானது, லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதாகும். அதில் மிக குறைவானது, பாதையிலிருந்து இடையூறு தருபவற்றை அகற்றுவதாகும். மேலும், வெட்கமும் ஈமானின் ஒரு கிளையாகும்.[38]

மார்க்க அறிவும் அமலும் ஒன்றுக்குள் ஒன்று இணைந்ததாகும். அவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று பிரியாது. மேலும், அமல் – செயலானது கல்வியின் வெளி வடிவமும் அதன் அலங்காரமும் ஆகும்.

ஈமான் பல்வேறு தரங்களையும், கிளைகளையும் கொண்டது; அது கூடவும் செய்யும், குறையவும் செய்யும். முஃமின்கள் அவர்களது செயல்களைப் பொறுத்து ஈமானில் பல படித்தரங்கள் உள்ளவர்களாக, ஏற்றத்தாழ்வு உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَيَزْدَادَ ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِيمَـٰنًا

நம்பிக்கை கொண்டோருடைய ஈமானை அதிகரிப்பதற்காகவும். (அல்குர்ஆன் 74:31)

38. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 35.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِذَا مَآ أُنزِلَتْ سُورَةٌ فَمِنْهُم مَّن يَقُولُ أَيُّكُمْ زَادَتْهُ هَٰذِهِۦٓ إِيمَٰنًاۚ فَأَمَّا ٱلَّذِينَ

ءَامَنُوا۟ فَزَادَتْهُمْ إِيمَٰنًا وَهُمْ يَسْتَبْشِرُونَ ﴿١٢٤﴾

இன்னும், ஓர் அத்தியாயம் (புதிதாக) இறக்கப்பட்டால், உங்களில் எவருக்கு இது நம்பிக்கையை அதிகப்படுத்தியது? என்று கேட்பவர் அவர்களில் இருக்கிறார்கள். ஆக, நம்பிக்கை கொண்டவர்கள் – அவர்களோ (இறக்கப்பட்ட அத்தியாயத்தைக் கொண்டு) மகிழ்ச்சியடைந்தவர்களாக இருக்கும் நிலையில் – அவர்களுக்கு இது நம்பிக்கையை அதிகப்படுத்தியது. (அல்குர்ஆன் 9:124)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ إِذَا ذُكِرَ ٱللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ

ءَايَٰتُهُۥ زَادَتْهُمْ إِيمَٰنًا وَعَلَىٰ رَبِّهِمْ يَتَوَكَّلُونَ ﴿٢﴾

நம்பிக்கையாளர்கள் எல்லாம், (அவர்களுக்கு முன்னர்) அல்லாஹ்வை நினைவு கூரப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் நடுங்கும். இன்னும், அவனுடைய வசனங்கள் அவர்கள் முன் ஓதப்பட்டால் அவை அவர்களுக்கு நம்பிக்கையை அதிகப்படுத்தும். இன்னும், அவர்கள் தங்கள் இறைவன் மீதே நம்பிக்கை வை(த்து அவனையே சார்ந்து இரு)ப்பார்கள். (அல்குர்ஆன் 8: 2)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

هُوَ ٱلَّذِىٓ أَنزَلَ ٱلسَّكِينَةَ فِى قُلُوبِ ٱلْمُؤْمِنِينَ لِيَزْدَادُوٓا۟ إِيمَٰنًا مَّعَ إِيمَٰنِهِمْۗ

அவன்தான் நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் அமைதியை இறக்கினான், அவர்களுக்கு அவர்களின் நம்பிக்கையுடன் மேலும் நம்பிக்கை அதிகரிப்பதற்காக. (அல்குர்ஆன் 48:04)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي أُمَامَةَ ﷺ عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ: مَنْ أَحَبَّ لِلّٰهِ، وَأَبْغَضَ لِلّٰهِ، وَأَعْطَىٰ لِلّٰهِ، وَمَنَعَ لِلّٰهِ فَقَدِ اسْتَكْمَلَ الْإِيمَانَ

யார் அல்லாஹ்வுக்காக நேசிப்பாரோ, அல்லாஹ்வுக்காக பகைப்பாரோ, அல்லாஹ்வுக்காக கொடை கொடுப்பாரோ, அல்லாஹ்வுக்காக தடுப்பாரோ அவர் ஈமானைப் பூரணப்படுத்திக் கொண்டார்.[39]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَن رَأَى مِنكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وذٰلِكَ أَضْعَفُ الْإِيمَانِ

உங்களில் யாராவது ஒரு பாவத்தைக் கண்டால், அதனைத் தன் கரத்தால் தடுக்கட்டும். ஆக, அது அவருக்கு முடியவில்லை எனில், தனது நாவினால் தடுக்கட்டும். ஆக, அது அவருக்கு முடியவில்லை எனில், தனது உள்ளத்தால் தடுக்கட்டும். அதுதான் ஈமானில் மிகவும் பலவீனமான நிலையாகும்.[40]

ஸஹாபாக்கள் ஈமான் என்பதை நபி ﷺ அவர்களிடம் இருந்து இவ்வாறுதான் கற்றுக் கொண்டார்கள். அதாவது, ஈமான் என்பது நம்பிக்கை, சொல், செயல் ஆகியவற்றை உள்ளடக்கியது. வணக்க வழிபாட்டினால் அது அதிகரிக்கிறது; பாவங்களால் அது குறைகிறது.

அமீருல் முஃமினீன் அலீ ﵁ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

أَلَا إِنَّ الصَّبْرَ مِنَ الْإِيمَانِ بِمَنْزِلَةِ الرَّأْسِ مِنَ الْجَسَدِ فَإِذَا قُطِعَ الرَّأْسُ بَادَ الْجَسَدُ ثُمَّ رَفَعَ صَوْتَهُ فَقَالَ: أَلَا إِنَّهُ لَا إِيمَانَ لِمَنْ لَا صَبْرَ لَهُ

அறிந்துகொள்ளுங்கள்! உடலில் தலையின் பகுதியை போன்றதுதான் ஈமானுக்கு பொறுமை. ஆக, தலை துண்டிக்கப்பட்டால் உடல் அழிந்துவிடும். பிறகு தனது குரலை உயர்த்தி கூறினார்கள்: அறிந்துகொள்ளுங்கள்! யாரிடம் பொறுமை இல்லையோ நிச்சயமாக அவருக்கு ஈமான் இல்லை.[41]

39. அறிவிப்பாளர்: அபூ உமாமா அல் பாஹிலீ ﵁, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4681.
40. அறிவிப்பாளர்: அபூ ஸயீதுல் குத்ரி ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 49.
41. நூல்: ஷர்ஹு உஸூலி இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

اَللَّهُمَّ زِدْنَا إِيمَانًا، وَيَقِينًا، وَفِقْهًا

அல்லாஹ்வே! எங்களுக்கு ஈமானையும் யக்கீனையும் ஃபிக்ஹ் ஞானத்தையும் அதிகப்படுத்து![42]

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அபூ ஹுரைரா, அபுத் தர்தா رضي الله عنهم ஆகியோர் கூறினார்கள்.

اَلْإِيمَانُ يَزِيدُ وَيَنْقُصُ

ஈமான் கூடும்; குறையும்.[43]

இமாம் வகீஉ இப்னுல் ஜர்ராஹ் رحمه الله கூறினார்கள்:

أَهْلُ السُّنَّةِ يَقُولُونَ: اَلْإِيمَانُ قَوْلٌ وَعَمَلٌ

ஈமான் என்பது சொல்லும் செயலும் ஆகும் என அஹ்லுஸ் ஸுன்னா கூறுகிறார்கள்.[44]

இமாமு அஹ்லிஸ் ஸுன்னா அஹ்மது இப்னு ஹன்பல் رحمه الله கூறினார்கள்:

اَلْإِيمَانُ يَزِيدُ وَيَنْقُصُ؛ فَزِيَادَتُهُ بِالْعَمَلِ، وَنُقْصَانُهُ بِتَرْكِ الْعَمَلِ

ஈமான் கூடும்; குறையும். ஆக, ஈமான், அமல்களினால் கூடுகிறது. அமல்களை விடுவதால் அது குறைகிறது.[45]

இமாம் அல் ஹஸனுல் பஸரி رحمه الله அவர்கள் கூறினார்கள்:

لَيْسَ الْإِيمَانُ بِالتَّحَلِّي وَلَا بِالتَّمَنِّي، وَلَكِنْ مَا وَقَرَ فِي الْقُلُوبِ وَصَدَّقَتْهُ الْأَعْمَالُ

42. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
43. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
44. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
45. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

ஈமான், அலங்கரிப்பதோ ஆசைவைப்பதோ இல்லை. என்றாலும், எது உள்ளத்தில் பதிந்து விட்டதோ, செயல்கள் எதை உண்மைப்படுத்தியதோ அதுதான் ஈமான் ஆகும்.[46]

இமாம் ஷாஃபிஈ ﷀ அவர்கள் கூறுகிறார்கள்:

الْإِيمَانُ قَوْلٌ وَعَمَلٌ، يَزِيدُ وَيَنْقُصُ، يَزِيدُ بِالطَّاعَةِ وَيَنْقُصُ بِالْمَعْصِيَةِ، ثُمَّ تَلَا: وَيَزْدَادَ الَّذِينَ آمَنُوا إِيمَانًا

ஈமான் என்பது சொல், செயல் ஆகும். அது கூடும்; குறையும். கீழ்ப்படிவதன் மூலம் அது அதிகரிக்கும். மாறுசெய்வதன் மூலம் அது குறையும். பிறகு,

وَيَزْدَادَ ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِيمَـٰنًا

நம்பிக்கை கொண்டோருடைய ஈமானை அதிகரிப்பதற்காகவும் (அல்குர்ஆன் 74:31)

என்ற வசனத்தை ஓதினார்கள்.[47]

இமாம் இப்னு அப்தில் பர் ﷀ 'தம்ஹீத்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்கள்:

أَجْمَعَ أَهْلُ الْفِقْهِ وَالْحَدِيثِ عَلَىٰ أَنَّ الْإِيمَانَ قَوْلٌ وَعَمَلٌ، وَلَا عَمَلَ إِلَّا بِنِيَّةٍ، وَالْإِيمَانُ عِنْدَهُمْ يَزِيدُ بِالطَّاعَةِ، وَيَنْقُصُ بِالْمَعْصِيَةِ، وَالطَّاعَاتُ كُلُّهَا عِنْدَهُمْ إِيمَانٌ

ஃபிக்ஹ் மற்றும் ஹதீஸ் துறை அறிஞர்களுடைய ஏகோபித்த கருத்தின் படி - ஈமான் என்பது, சொல்லும் செயலும் ஆகும்; நிய்யத் இல்லாமல் செயல் இல்லை. மேலும், ஈமான் என்பது கீழ்ப்படிவதன் மூலம் கூடுகிறது. மாறுசெய்வதால் குறைகிறது. வணக்க வழிபாடுகள்,

46. நூல்: கிதாபுல் ஈமான் - இப்னு தைமிய்யா.
47. நூல்: ஃபத்ஹுல் பாரீ - இப்னு ஹஜர் அல் அஸ்கலானீ.

அனைத்துமே ஈமான் ஆகும் என்பதே அவர்களின் முடிவாகும்.

இதே அடிப்படையில்தான் ஸஹாபாக்கள், தாபியீன்கள் இன்னும் அவர்களை நன்மையில் பின்பற்றிய ஹதீஸ் அறிஞர்கள், மார்க்க சட்டத்துறை அறிஞர்கள், மார்க்க இமாம்கள் இன்னும் அவர்களுக்கு பின்னால் வந்தவர்கள் அனைவரும் இருந்தனர். இந்த சத்தியத்தை விட்டு வழிதவறியவர்களைத் தவிர முன்னோர், பின்னோரில் எவரும் அவர்களுக்கு முரண்பட்டு செல்லவில்லை.

அஹ்லுஸ் ஸுன்னா கூறுகிறார்கள்: யார் ஈமானிலிருந்து அமலை பிரிப்பாரோ அவர் مرجئ முர்ஜிஃ - ஈமானிலிருந்து அமலை பிரிப்பவர், مبتدع முப்ததிஃ - நூதன கருத்துகளை சொல்பவர், ضال ழால் - வழிகெட்டவர் ஆவார்.

யார் ஒருவர் ஷஹாதத்தை தனது நாவினால் மொழிந்து, அல்லாஹ் ஒருவன்தான் இறைவன் என்பதை தனது உள்ளத்தில் நம்பிக்கை கொள்கிறாரோ, அவர் அர்கானுல் இஸ்லாம் எனும் இஸ்லாமின் தூண்களில் சிலவற்றை தனது உறுப்புகளால் நிறைவேற்றுவதில் குறை செய்தால் அவரது ஈமான் நிறைவடையாது. யார் அறவே ஷஹாதாவை மொழியவில்லையோ அவரை முஸ்லிம் என்றோ முஃமின் என்றோ சொல்ல முடியாது.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, ஈமான் விஷயத்தில், 'அல்லாஹ் நாடினால்' என்று சொல்வதை சரி காணுகிறார்கள். அதாவது, இன் ஷா அல்லாஹ் நானொரு முஃமின் என்று சொல்வது சரியானதாகும். அவர்கள் தங்களுக்கு ஈமான் இருக்கிறது, நாங்கள் முஃமின்கள்தான் என்று உறுதியாக சொல்ல மாட்டார்கள். அதற்கு காரணம் அவர்களுக்கு இருக்கும் அல்லாஹ்வின் மீதான அதிக பயமும் விதியை உறுதிப்படுத்துவதும் தற்புகழ்ச்சியைத் தவிர்ப்பதும் ஆகும்.

ஏனெனில், ஈமான் என்று பொதுவாக சொல்லும்பொழுது, அது அனைத்து வழிபாடுகளை செய்வதையும் தடுக்கப்பட்ட அனைத்தையும் விட்டு விலகுவதையும் குறிக்கிறது. அத்தகைய ஈமானாக தங்களது ஈமான் எப்படி இருக்கும் என்ற பயத்தினால் நாங்கள் முஃமின்கள் என்று மட்டும் சொல்லாமல், இன் ஷா அல்லாஹ் நாங்கள் முஃமின்கள் என்று சொல்வார்கள்.

அதே நேரம், ஈமானில் சந்தேகிப்பதின் அடிப்படையில் இன் ஷா அல்லாஹ் சொல்லக் கூடாது. அதாவது, நம்பிக்கை கொள்ள வேண்டிய விஷயங்களில் தமக்கு சந்தேகம் இருப்பதால் இன் ஷா அல்லாஹ் நான் முஃமின் என்று ஒருவர் சொல்வாரேயானால் அது தவறாகும். (அதாவது ஈமான் என்பது சந்தேகத்துடன் இருக்கக்கூடியது அல்ல. அறவே சந்தேகமின்றி இருக்கிற நம்பிக்கைதான் ஈமான் ஆகும்.)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَا تَقُولَنَّ لِشَاْىۡءٍ إِنِّي فَاعِلٌ ذَٰلِكَ غَدًا ۝٢٣ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُۚ وَٱذۡكُر رَّبَّكَ
إِذَا نَسِيتَ وَقُلۡ عَسَىٰٓ أَن يَهۡدِيَنِ رَبِّي لِأَقۡرَبَ مِنۡ هَٰذَا رَشَدًا ۝٢٤

(நபியே!) ஒரு காரியத்தைப் பற்றி, நிச்சயம் நான் நாளை அதை செய்வேன் என்று அறவே கூறாதீர், அல்லாஹ் நாடினால் தவிர (என்று சொல்லாமல்). (அல்குர்ஆன் 18:23-24)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَا تُزَكُّوٓاْ أَنفُسَكُمۡۖ هُوَ أَعۡلَمُ بِمَنِ ٱتَّقَىٰٓ ۝٣٢

ஆகவே, உங்களை நீங்களே (தூய்மையானவர்கள் என்று) சுய பரிசுத்தம் செய்து கொள்ளாதீர்கள். அல்லாஹ்வை அஞ்சியவர்கள் யார் என்பதை அவனே மிகவும் அறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 53:32)

நபி ﷺ அவர்கள் அடக்கஸ்தலங்களுக்கு செல்கிறபொழுது இந்த துஆவை ஓதுவார்கள்.

السَّلَامُ عَلَيْكُمْ أَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِينَ وَالْمُسْلِمِينَ، وَإِنَّا إِنْ شَاءَ اللهُ
بِكُمْ لَاحِقُونَ، أَنْتُمْ لَنَا فَرَطٌ وَنَحْنُ لَكُمْ تَبَعٌ، أَسْأَلُ اللهَ الْعَافِيَةَ لَنَا وَلَكُمْ

இந்த இல்லங்களில் இருக்கும் முஃமின்களே, முஸ்லிம்களே! உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகட்டும்!, அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாங்கள் உங்களை வந்து சேருவோம். நீங்கள் எங்களுக்கு முன்னால்

சென்றுவிட்டீர்கள். நாங்கள் உங்களைப் பின்தொடர்பவர்களாக இருக்கிறோம். எங்களுக்காகவும் உங்களுக்காகவும் நான் அல்லாஹ்விடம் ஆஃபியத்தை – பாதுகாப்பை கேட்கிறேன்.[48]

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﷺ கூறுகிறார்கள்:

مَنْ شَهِدَ عَلَىٰ نَفْسِهِ أَنَّهُ مُؤْمِنٌ؛ فَلْيَشْهَدْ أَنَّهُ فِي الْـجَنَّةِ

யார், நிச்சயமாக அவர் முஃமின் என்று தன்னைப் பற்றி சாட்சி சொல்வாரோ அவர், நிச்சயமாக அவர் சொர்க்கம் செல்வார் என்று சாட்சி சொல்லட்டும்.[49]

(அதாவது தனக்கு எப்படி யாரும் சொர்க்கத்தை உறுதி செய்ய முடியாதோ அது போன்றே நான் முஃமின் என்பதையும் அவர் உறுதியாக சொல்ல முடியாது. இன் ஷா அல்லாஹ் நான் சொர்க்கம் செல்வேன் என்று சொல்வதைப் போன்றே, இன் ஷா அல்லாஹ் நான் முஃமினாக இருக்கிறேன் என்று அவர் சொல்லட்டும்.)

ஜரீர் ﵀ கூறுகிறார்கள்:

மன்சூர் இப்னுல் முஃதமிர், அல் முகீரா, அல் அஃமஷ், அல் லைஸ், உமாரா இப்னுல் கஃகாஃ, இப்னு ஷுப்ருமா, அல் அலா இப்னுல் முஸய்யிப், யஸீத் இப்னு அபூ ஸியாத், ஸுஃப்யான் ஸவ்ரி, இப்னுல் முபாரக் மற்றும் நான் சந்தித்த அனைவரும் பின்வரும் கருத்தைக் கூறியதை நான் செவிமடுத்திருக்கிறேன்:

يَسْتَثْنُونَ فِي الْإِيمَانِ، وَيَعِيبُونَ عَلَىٰ مَنْ لَا يَسْتَثْنِي

இவர்கள் (எல்லாரும்) ஈமான் விஷயத்தில் இன் ஷா அல்லாஹ் (நாங்கள் முஃமின்கள்) என்று கூறுவார்கள். இன் ஷா அல்லாஹ் கூறாமல் நாங்கள் முஃமின்கள் என்று சொல்பவர்களை அவர்கள் பழிப்பார்கள்.[50]

48. அறிவிப்பாளர்: புரைதா இப்னு அல்ஹுஸைப் ﵁, நூல்: ஸுனன் நஸாயி எண்: 2040.
49. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
50. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

سُئِلَ الإِمَامُ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ عَنِ الْإِيمَانِ؟ فَقَالَ: قَوْلٌ وَعَمَلٌ وَنِيَّةٌ قِيلَ لَهُ: فَإِذَا قَالَ الرَّجُلُ: مُؤْمِنٌ أَنتَ؟ قَالَ: هَٰذِهِ بِدْعَةٌ قِيلَ لَهُ: فَمَا يَرُدُّ عَلَيْهِ؟ قَالَ: يَقُولُ: مُؤْمِنٌ إِنْ شَاءَ اللَّهُ

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்களிடம், ஈமான் பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு இமாமவர்கள், (ஈமான் என்பது) சொல், செயல், எண்ணம் ஆகும் என்று பதிலளித்தார்கள். மேலும், அவர்களிடம், 'நீ முஃமினா' என யாராவது கேட்டால் அவர் என்ன சொல்ல வேண்டும் எனக் கேட்கப்பட்டது. அதற்கு இமாமவர்கள், இவ்வாறு கேட்பது بدعة - பித்ஆ ஆகும் என்றார்கள். அப்படி என்றால் இந்த கேள்வி கேட்டவருக்கு எப்படி பதில் சொல்ல வேண்டும் என அவர்களிடம் கேட்கப்பட்டது. இன் ஷா அல்லாஹ் நான் முஃமின் என்று சொல்ல வேண்டும் என்று பதில் கூறினார்கள்.[51]

பொதுவாக ஒருவர் ஒரு பாவத்தை செய்வதால் அல்லது ஒரு கடமையான காரியத்தை விடுவதால் அவரை முஃமின் இல்லை என்று மறுக்கப்படாது. எந்த பாவம் அதை செய்பவரை நிராகரிப்பில் தள்ளிவிடுமோ அதன் மூலமாகவே ஒருவர் ஈமானை விட்டு வெளியேறுவார். இன்னும், எந்த கடமையை விடுவது ஒருவரை ஈமானை விட்டு வெளியேற்றிவிடுமோ அதன் மூலமாகவே அவர் ஈமானை விட்டு வெளியேறுவார். ஆக, ஈமானை முறிக்கக்கூடிய காரியத்தை செய்யாமல் ஒருவர் ஈமானிலிருந்து வெளியேறிவிட மாட்டார்.

ஒருவர் பெரும் பாவம் ஒன்றை செய்து விட்டால் அவர் ஈமானை விட்டு வெளியேறிவிட மாட்டார். மாறாக, அவர் ஈமானில் குறையுள்ள முஃமினாக கருதப்படுவார். அவரிடம் இருக்கின்ற ஈமானின் காரணமாக அவர் முஃமினாகவும் அவரிடம் இருக்கின்ற பாவத்தின் காரணமாக அவர் பாவியாகவும் இருப்பார். மறுமையில் அவரது நிலையானது அல்லாஹ்வின் நாட்டப்படி அமையும். அல்லாஹ் நாடினால் அவரை தண்டனை இன்றி மன்னிப்பான். அவன் நாடினால் அவரை தண்டிப்பான். பிறகு மன்னிப்பான்.

51. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

ஈமான் என்பது அதை பல பாகங்களாக, பல பகுதிகளாக பிரிக்க முடியும். ஈமானில் மிகக் குறைவான அளவு, சிறிய பகுதி ஒருவரிடம் இருந்தாலும் அவரை நரகத்திலிருந்து அல்லாஹ் வெளியேற்றுவான்.

நபி ﷺ கூறுகிறார்கள்:

عَنْ عَبْدِ اللهِ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ لَا يَدْخُلُ النَّارَ أَحَدٌ فِي قَلْبِهِ مِثْقَالُ حَبَّةِ خَرْدَلٍ مِنْ إِيمَانٍ

யாருடைய உள்ளத்தில் ஒரு கடுகுடைய விதையின் கனமளவு ஈமான் இருக்கிறதோ அவர் நரகத்தில் நுழைய மாட்டார்.[52]

இதனால்தான் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, கஅபாவை கிப்லாவாக ஏற்றுக்கொண்ட அஹ்லுல் கிப்லாவில் எவரையும் அவரின் பாவத்தின் காரணமாக காஃபிர் என்று கூற மாட்டார்கள். ஆனால், எந்த பாவத்தால் ஈமான் முழுமையாக நீங்கிவிடுமோ அந்த பாவத்தை அவர் செய்தாலே தவிர.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ۚ

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். இன்னும், அதைத் தவிர மற்றதை அவன், தான் நாடியவருக்கு மன்னிப்பான். (அல்குர்ஆன் 4:48)

நபி ﷺ கூறுகிறார்கள்:

عَنْ أَبِي ذَرٍّ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ أَتَانِي آتٍ مِنْ رَبِّي، فَأَخْبَرَنِي - أَوْ قَالَ: بَشَّرَنِي - أَنَّهُ: مَنْ مَاتَ مِنْ أُمَّتِي لَا يُشْرِكُ بِاللهِ شَيْئًا دَخَلَ الْـجَنَّةَ " قُلْتُ: وَإِنْ زَنَى وَإِنْ سَرَقَ؟ قَالَ: وَإِنْ زَنَى وَإِنْ سَرَقَ

52. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 91.

என்னிடம் ஜிப்ரீல் ﷺ வந்து, நபியே! உமது சமுதாயத்தில் யாராவது அல்லாஹ்விற்கு இணை வைக்காத நிலையில் மரணித்தால் அவர் சொர்க்கம் நுழைவார் என எனக்கு நன்மாராயம் சொன்னார்கள். அதற்கு நான், அவர் விபச்சாரம் செய்தாலுமா, திருடினாலுமா என்று கேட்டேன். அதற்கு ஜிப்ரீல் ﷺ, ஆம். விபச்சாரம் செய்தாலும், திருடினாலும்தான் என பதிலளித்தார்கள்.[53]

அபூ ஹுரைரா ﷺ அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்,

قال أبو هريرة ﷺ الْإِيمَانُ نَزِهٌ فَمَنْ زَنَا فَارَقَهُ الْإِيمَانُ فَمَنْ لَامَ نَفْسَهُ وَرَاجَعَ رَاجَعَهُ الْإِيمَانُ

ஈமான் மிகத் தூய்மையானது. ஆக, யார் விபச்சாரம் செய்வாரோ, ஈமான் அவரை விட்டும் பிரிந்து விடுகிறது. ஆக, யார் தன்னை நிந்தித்துத் திருத்திக் கொள்வாரோ, ஈமான் அவரிடம் மீண்டு விடுகிறது.[54]

அபுத்தர்தா ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَا الْإِيمَانُ إِلَّا كَقَمِيصِ أَحَدِكُمْ يَخْلَعُهُ مَرَّةً وَيَلْبَسُهُ أُخْرَى، وَاللهِ مَا أَمِنَ عَبْدٌ عَلَىٰ إِيمَانِهِ إِلَّا سُلِبَهُ فَوَجَدَ فَقْدَهُ

ஈமான் உங்களில் ஒருவரின் ஆடையைப் போன்றாகும். அவர் ஒரு முறை அதை கழற்றுகிறார். மற்றொரு முறை அதை அணிகிறார். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ஓர் அடியான் தனது ஈமான் விஷயத்தில் பயமற்றவராக ஆகிவிட்டால் அவரை விட்டு ஈமான் பறிக்கப்பட்டு விடும். ஆக, அவர் அதை இழந்ததை உணர்வார்.[55]

இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் தமது அடிமைகளை ஒருவர் ஒருவராக அழைத்து நான் உமக்கு திருமணம் முடித்து வைத்துவிடவா என்று கேட்டுவிட்டு, பிறகு கூறுவார்கள்: யார் ஓர் அடியான் விபச்சாரம்

53. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 1237.
54. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
55. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

செய்வானோ அவனிடமிருந்து ஈமானின் பிரகாசத்தை அல்லாஹ் பறித்துவிடுகிறான்.[56]

(ஒரு முறை) இப்னு அப்பாஸ் ﵄ அவர்களிடம் இக்ரிமா ﵀ கேட்டார்கள்: அவரிடமிருந்து ஈமான் எப்படி பறிக்கப்படுகிறது? அதற்கு இப்னு அப்பாஸ் கூறினார்கள்: இப்படித்தான் என்று தமது விரல்களை ஒன்றுக்குள் ஒன்று சேர்த்துவிட்டு, பிறகு அவற்றை பிரித்துக் காட்டினார்கள். ஆக, அவன் திருந்தி பாவமன்னிப்பு கேட்டுவிட்டால் ஈமான் அவனிடம் திரும்பி விடுகிறது என்று கூறி தமது விரல்களை ஒன்றுக்குள் ஒன்று சேர்த்து காண்பித்தார்கள்.[57]

****

56. நூல்: ஃபத்ஹுல் பாரீ - இப்னு ஹஜர் அஸ்கலானீ.
57. நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6809.

اَلْأَصْلُ الثَّالِثُ

مَوْقِفُ أَهْلِ السُّنَّةِ مِن مَسْأَلَةِ التَّكْفِيرِ

மூன்றாவது அடிப்படை:

தக்ஃபீர் - ஒருவரை காஃபிர் என்று தீர்ப்பளிப்பது தொடர்பாக அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் நிலைப்பாடு

مَوْقِفُ أَهْلِ السُّنَّةِ مِن مَسْأَلَةِ التَّكْفِيرِ

தக்ஃபீர் - ஒருவரை காஃபிர் என்று தீர்ப்பளிப்பது தொடர்பாக அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் நிலைப்பாடு

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் அடிப்படைகளில் ஒன்றாவது, அவர்கள் ஒரு முஸ்லிம் குஃப்ரில் தள்ளும் பாவத்தை செய்தால் அதற்குரிய உறுதியான ஆதாரத்தை நிலை நாட்டாமல் அவரை காஃபிர் என்று தீர்ப்பளிக்க மாட்டார்கள்.

அறியாமை காரணமாகவோ அல்லது பிழையான கருத்துகள், விளக்கங்கள் மூலமாகவோ ஒருவருக்கு குழப்பம் ஏற்பட்டிருப்பின் அது அவரிடமிருந்து நீங்குவதற்கு தேவையான தெளிவூட்டல்களும் அவசியமான விளக்கங்களும் வழங்கப்படும். அவர் தனது நிலைப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கு அவருக்கு இருக்கும் அனைத்துத் தடைகளும் நீக்கப்படும். இறுதியாக அவர் விஷயத்தில் كفر - குஃப்ர் உடைய தீர்ப்பு வழங்கத் தேவையான நிபந்தனைகள் நிறைவுற வேண்டும். அதன் பின்னரே அஹ்லுஸ் ஸுன்னா ஒருவரை காஃபிர் என்ற தீர்ப்பு வழங்குவார்கள். இது மார்க்கத்தில் உள்ள மறைவான வெளிப்படையற்ற விஷயங்களில் உள்ள நிலைப்பாடாகும்.

ஆனால், மார்க்கத்தின் வெளிப்படையான, எல்லோராலும் அறியப்பட்ட, உறுதியான விஷயங்களில் ஒருவர் முரண்பட்ட கருத்தை கூறினால் உடனே அவரை காஃபிர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடும். உதாரணமாக, அல்லாஹ் இருக்கிறான் என்பதை மறுத்தாலோ, அல்லது நபி ﷺ அவர்களின் தூதுத்துவத்தை மறுத்தாலோ, அல்லது அவர்கள் இறுதி நபி என்பதை மறுத்தாலோ, அவர்களின் தூதுத்துவம் உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவானது என்பதை மறுத்தாலோ அவர் காஃபிர் என்று உடனே முடிவு செய்யப்பட்டு விடுவார்.

அஹ்லுஸ் ஸுன்னா, ஈமானைக் கொண்டு உள்ளம் நிறைந்தவராக - நிம்மதிபெற்றவராக இருக்கும் ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில்

ஒரு குஃப்ரான செயலை செய்துவிட்டால் அதற்காக அவரை காஃபிர் என்று தீர்ப்பு கூற மாட்டார்கள்.

ஒரு முஸ்லிம் – شرك – ஷிர்க் அல்லாத வேறு பாவங்களை செய்தால் அந்த பாவங்கள் பெரிய பாவங்களாக இருந்தாலும் சரியே அவரை அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ காஃபிர் என்று தீர்ப்பளிக்க மாட்டார்கள். எந்த ஒரு பாவத்தைக் கொண்டும் – அது பெரும் பாவமாக இருந்தாலும் சரி – அஹ்லுஸ் ஸுன்னா முஸ்லிம்களில் எவரையும் காஃபிர் என்று கூற மாட்டார்கள்.

பொதுவாக பாவங்களை செய்கிற நபரை – அவர் ஒரு பாவி, ஈமானில் குறைவானவர் – என்றுதான் கூறுவார்கள். ஆனால், அவர் அந்த பாவத்தை ஆகுமானதாகக் கருதினால் மட்டுமே அவர் மீது كفر – குஃப்ர் உடைய தீர்ப்பு சொல்வார்கள். ஏனெனில், அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ۚ

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். இன்னும், அதைத் தவிர மற்றதை அவன், தான் நாடியவருக்கு மன்னிப்பான். (அல்குர்ஆன் 4:48)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ يَٰعِبَادِىَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ
يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ ﴿٥٣﴾

(நபியே!) கூறுவீராக! தங்கள் ஆன்மாக்கள் மீது எல்லை மீறி பாவம் செய்த என் அடியார்களே! அல்லாஹ்வின் கருணையில் இருந்து நிராசை ஆகாதீர்கள். (நீங்கள் வருந்தி, திருந்தி, அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டால் உங்களது) எல்லாப் பாவங்களையும் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன். (அல்குர்ஆன் 39:53)

ஒருவர், شرك – ஷிர்க் அல்லாத ஒரு பாவத்தை செய்தால், அவர்

அதை ஆகுமாக்கிக்கொள்ளவில்லை என்றால் அவரின் காரியம் அல்லாஹ்விடம் ஒப்படைக்கப்பட்டதாக இருக்கும். அதாவது, அல்லாஹ் நாடினால் அவன் அவரைத் தண்டிப்பான். அல்லாஹ் நாடினால் அவன் அவரை மன்னிப்பான். இதுதான் அஹ்லுஸ் ஸுன்னாவின் நம்பிக்கையாகும்.

ஆனால், வழிகெட்ட கூட்டங்களில் ஒரு பிரிவினர், பெரும் பாவத்தை செய்தவர் காஃபிர் ஆகிவிடுவார் என்று கூறுகின்றனர். இன்னொரு பிரிவினர், பெரும் பாவத்தை செய்தவர் - ஈமானுக்கும் குஃப்ருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பார் என கூறுகின்றனர்.

உறுதியான ஆதாரமின்றி ஒருவரை காஃபிர் என்று சொல்வதை நபி ﷺ அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ ابْنِ عُمَرَ ﷺ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ ﷺ أَيُّمَا امْرِئٍ قَالَ لِأَخِيهِ: يَا كَافِرُ، فَقَدْ بَاءَ بِهَا أَحَدُهُمَا، إِنْ كَانَ كَمَا قَالَ، وَإِلَّا رَجَعَتْ عَلَيْهِ

எந்த மனிதர் தமது சகோதரரை நோக்கி, ஓ காஃபிரே என்று கூறுவாரோ அவர் கூறிய வார்த்தை அவ்விருவரில் ஒருவருக்கு வந்துவிடும். அதாவது சொல்லப்பட்டவர் அதற்கு தகுதி உள்ளவராக இருந்தால் அவர் கூறியதை போன்றே அவர் ஆகிவிடுவார். அப்படி இல்லை என்றால் அந்த வார்த்தை அதை சொன்னவருக்கே திரும்பிவிடும்.[58]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَمَنْ دَعَا رَجُلًا بِالْكُفْرِ، أَوْ قَالَ: عَدُوُّ اللهِ، وَلَيْسَ كَذٰلِكَ، إِلَّا حَارَ عَلَيْهِ

யார், ஒரு மனிதரை குஃப்ருடன் சேர்த்து (காஃபிரே என்று) அழைப்பாரோ அல்லது அல்லாஹ்வின் எதிரியே என்று அழைப்பாரோ, அவர் அப்படி இல்லை என்றால் அந்த சொல் அதை சொன்னவருக்கே திரும்பிவிடும்.[59]

58. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 60.
59. அறிவிப்பாளர்: அபூ தர் அல் கிஃபாரி ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 61.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي ذَرٍّ رضي الله عنه أَنَّهُ سَمِعَ النَّبِيَّ ﷺ يَقُولُ: لَا يَرْمِي رَجُلٌ رَجُلًا بِالْفُسُوقِ، وَلَا يَرْمِيهِ بِالْكُفْرِ، إِلَّا ارْتَدَّتْ عَلَيْهِ، إِنْ لَمْ يَكُنْ صَاحِبُهُ كَذَٰلِكَ

ஒரு மனிதர், இன்னொரு மனிதரை பாவி என்றோ, காஃபிர் என்றோ குற்றம் சுமத்தினால், சொல்லப்பட்டவர் அப்படி இல்லை என்றால் அந்த சொல் அதை சொன்னவருக்கே திரும்பி விடும்.[60]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَمَن رَمَى مُؤْمِنًا بِكُفْرٍ فَهُوَ كَقَتْلِهِ

யார், ஒரு முஃமினை காஃபிர் என்று கூறுவாரோ அது அவரை அவர் கொல்வது போன்றாகும்.[61]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِذَا قَالَ الرَّجُلُ لِأَخِيهِ يَا كَافِرُ، فَقَدْ بَاءَ بِهِ أَحَدُهُمَا

எந்த மனிதர் தனது (மார்க்க) சகோதரனை நோக்கி, ஓ காஃபிரே! என்று கூறுவாரோ அந்த சொல் அவ்விருவரில் ஒருவருக்கு திரும்பி விடும்.[62]

அஹ்லுஸ் ஸுன்னா பொதுவாக தீர்ப்பளிப்பதற்கும் குறிப்பிட்ட ஒருவர் மீது தீர்ப்பளிப்பதற்கும் இடையில் வேறுபாடு காட்டுகிறார்கள்.

மார்க்கத்தில் அனாச்சாரம் செய்வோர் மீது பொதுவாக அவர்களின் அனாச்சாரத்தை வைத்து அவர்கள் மீது பாவம் அல்லது குஃப்ரைக் கொண்டு தீர்ப்பளிப்பது என்பது வேறு. முஸ்லிம் என்று உறுதியாக தெரிந்த ஒரு குறிப்பிட்ட நபரிடமிருந்து அனாச்சாரங்களில் ஓர் அனாச்சாரம் நிகழ்ந்துவிட்டால் அவர் மீது அவர் பாவி, அல்லது காஃபிர் என்று தீர்ப்பு கூறுவது வேறு.

60. அறிவிப்பாளர்: அபூ தர் அல் கிஃபாரி رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6045.
61. அறிவிப்பாளர்: ஸாபித் இப்னு அழ்ழஹ்ஹாக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6105.
62. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6103.

தனி ஒருவர் மீது தீர்ப்பளிப்பதாக இருந்தால் அவர் முரண்படுவது மார்க்கத்தில் மூடலான (எல்லாராலும் அறிந்து கொள்ள முடியாத) காரியங்களில் ஒன்றாக இருந்தால் முதலாவதாக அவருக்கு சத்தியம் தெளிவாக விவரிக்கப்பட வேண்டும், ஆதாரங்கள் அவருக்கு முன்னால் நிலை நிறுத்தப்பட்டு, அவரின் சந்தேகங்கள் நீக்கப்பட வேண்டும். மார்க்கத்தில் நன்கு அறியப்பட்ட காரியங்களில் ஒன்றாக இருந்தால் இவ்வாறு செய்ய தேவை இல்லை.

மேலும், குறிப்பிட்ட ஒரு நபரை - காஃபிர் - என்று சொல்வதாக இருந்தால் அதற்குரிய நிபந்தனைகள் அவர் விஷயத்தில் முழுமையாகி, அந்தத் தீர்ப்புக்குரிய தடைகள் நீங்கி இருக்க வேண்டும்.

قَالَ أَبُو هُرَيْرَةَ ﷺ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: " كَانَ رَجُلَانِ فِي بَنِي إِسْرَائِيلَ مُتَوَاخِيَيْنِ، فَكَانَ أَحَدُهُمَا يُذْنِبُ، وَالْآخَرُ مُجْتَهِدٌ فِي الْعِبَادَةِ، فَكَانَ لَا يَزَالُ الْمُجْتَهِدُ يَرَى الْآخَرَ عَلَى الذَّنْبِ فَيَقُولُ: أَقْصِرْ، فَوَجَدَهُ يَوْمًا عَلَىٰ ذَنْبٍ فَقَالَ لَهُ: أَقْصِرْ، فَقَالَ: خَلِّنِي وَرَبِّي أَبُعِثْتَ عَلَيَّ رَقِيبًا؟ فَقَالَ: وَاللهِ لَا يَغْفِرُ اللهُ لَكَ، أَوْ لَا يُدْخِلُكَ اللهُ الْجَنَّةَ، فَقَبَضَ أَرْوَاحَهُمَا، فَاجْتَمَعَا عِنْدَ رَبِّ الْعَالَمِينَ فَقَالَ لِهَذَا الْمُجْتَهِدِ: أَكُنْتَ بِي عَالِمًا، أَوْ كُنْتَ عَلَىٰ مَا فِي يَدِي قَادِرًا؟ وَقَالَ لِلْمُذْنِبِ: اذْهَبْ فَادْخُلِ الْجَنَّةَ بِرَحْمَتِي، وَقَالَ لِلْآخَرِ: اذْهَبُوا بِهِ إِلَى النَّارِ

இஸ்ரவேலர்களில் தங்களுக்குள் சகோதரத்துவம் செய்துகொண்ட இரு மனிதர்கள் இருந்தனர். ஒருவர் பாவம் செய்பவராகவும் மற்றொருவர் வணக்க வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுள்ளவராகவும் இருந்தார். கடின வணக்கசாலியாக இருந்தவர் மற்றவரை எப்பொழுதும் பாவத்தில் பார்ப்பவராகவே இருந்தார். மேலும், நீ (பாவத்தை) நிறுத்திக்கொள் என்று அவருக்கு கூறி வந்தார். ஒரு நாள் அதுபோன்று அவர் அவரை பாவத்தில் கண்டபொழுது, நீ நிறுத்திக்கொள் என்று கூற, அவரோ, நீ என்னை என் இறைவனோடு விட்டுவிடு! என்னை கண்காணிப்பவனாக நீ அனுப்பப்பட்டிருக்கிறாயா என்று கூறினார்.

அதற்கவர், அல்லாஹ் மீது சத்தியமாக அல்லாஹ் உன்னை மன்னிக்க மாட்டான். அல்லது, அல்லாஹ் உன்னை சொர்க்கத்திற்கு அனுப்ப மாட்டான் என்று கூறிவிட்டார். ஆக, இருவரும் உயிர் கைப்பற்றப்பட்டனர். அகிலங்களின் இறைவனிடம் இருவரும் ஒன்று சேர்ந்தனர். அவன், கடின வணக்கசாலியை பார்த்து கூறினான்: நீ என்னை (என் முடிவை) அறிந்தவனாக இருந்தாயா? அல்லது என் கரத்தில் உள்ளதின் மீது ஆற்றல் பெற்றவனாக இருந்தாயா? மேலும், பாவியை நோக்கி கூறினான்: நீ என் அருளால் சொர்க்கத்திற்கு செல்! மற்றொருவரை நோக்கி, இவரை நரகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினான்.அபூ ஹுரைரா ﷺ கூறினார்கள்: இவர் கூறிய ஒரு வார்த்தை இவரின் உலகத்தையும் மறுமையையும் நாசமாக்கி விட்டது.[63]

كفر - குஃப்ர் - நிராகரிப்பு, என்பது ஈமான் - நம்பிக்கைக்கு எதிரானதாகும். மார்க்கத்தில் كفر - குஃப்ர் என்பது இரு வகைப்படும். ஒன்று மார்க்கத்திலிருந்து முற்றிலும் வெளியேற்றிவிடக்கூடிய குஃப்ர். மற்றொன்று மார்க்கத்திலிருந்து வெளியேற்றாத குஃப்ர். அதாவது, எப்படி ஈமான் என்பது பல கிளைகளை உடையதோ அது போன்றே குஃப்ரும் பல கிளைகளை உடையதாகும்.

كفر - குஃப்ர் - நிராகரிப்பு ஏற்றத்தாழ்வுடைய பல கிளைகளை உடையதாகும். அவற்றில் சில உண்மையில் كفر - குஃப்ர் - நிராகரிப்பில் தள்ளிவிடும். அதாவது, இஸ்லாமை விட்டு வெளியேற்றி விடும். இன்னும், சில நேரடியாக அல்லாமல்كفر - குஃப்ர் உடைய குணங்களாக, குஃப்ரின் பக்கம் சேர்க்கக்கூடியதாக கருதப்படும்.

முதலாவது: كفر أكبر - குஃப்ர் அக்பர் - பெரிய நிராகரிப்பு. இதற்கு كفر اعتقادى குஃப்ர் இஃத்திக்காதி - கொள்கை சார்ந்த நிராகரிப்பு என்றும் சொல்லப்படும். இது ஒருவரை மார்க்கத்திலிருந்து வெளியேற்றி விடும்.

இது ஈமானுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இது ஒருவரின் இஸ்லாமை பாழாக்கி விடும். அவரை நரகத்தில் நிரந்தரமாக தங்க வைத்துவிடும். இது நம்பிக்கையில், சொல்லில், இன்னும் செயலில் ஏற்படலாம். இந்த வகை குஃப்ர் ஐந்து வகைப்படும்.

63. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4901.

முதலாவது:

كُفْرُ التَّكْذِيبِ

குஃப்ர் அத் தக்தீப் – பொய்ப்பித்தலுடைய நிராகரிப்பு

ரஸூல் ﷺ அவர்கள் பொய்யர், அல்லது அவர்கள் கூறியது பொய், அல்லது, அல்லாஹ் ஹலாலாக (அனுமதிக்கப்பட்டதாக) ஆக்கியதை அறிந்தே அதை ஹராம் (தடைசெய்யப்பட்டது) என்று சொல்வது, அல்லது அல்லாஹ் ஹராமாக (தடைசெய்யப்பட்டதாக) ஆக்கியதை அறிந்தே அதை ஹலால் (அனுமதிக்கப்பட்டது) என்று சொல்வது. இந்த வகையான செயல்கள் அனைத்தும் குஃப்ருத் தக்தீபில் அடங்கும்.

இரண்டாவது:

كُفْرُ الْإِبَاءِ وَالْاِسْتِكْبَارِ مَعَ التَّصْدِيقِ

குஃப்ர் அல் இபா வல் இஸ்திக்பார் மஅத் தஸ்தீக்

உண்மையை ஒப்புக்கொள்வதுடன் பெருமை இன்னும் பிடிவாதத்துடைய நிராகரிப்பு

அதாவது, ரஸூல் ﷺ அவர்கள் தமது இறைவனிடமிருந்து கொண்டு வந்ததை உண்மை என்று ஒப்புக்கொள்வதுடன் அதைப் பின்பற்றவும் ஏற்றுக்கொள்ளவும் மறுப்பது.

அதற்கு காரணம், பெருமை, அகம்பாவம், பிடிவாதம், சத்தியத்தையும் அதை பின்பற்றுவோரையும் இழிவாக பார்ப்பது. இதற்கு உதாரணம் இப்லீஸ் நிராகரித்ததை போன்று. அவன், அல்லாஹ்வை நிராகரிக்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் கட்டளையை ஏற்காமல் பெருமை பேசினான்.

மூன்றாவது:

كُفْرُ الْإِعْرَاضِ

குஃப்ர் அல் இஃராழ் – புறக்கணிப்புடைய நிராகரிப்பு

அதாவது, ரஸூல் ﷺ அவர்களை விட்டு தனது செவியையும் உள்ளத்தையும் திருப்பிக்கொள்வது, அவர்களை உண்மைப்படுத்துவதும் இல்லை. அல்லது, அவர்களை பொய்ப்பிப்பதும் இல்லை, அவர்களை நேசிப்பதும் இல்லை, அவர்களை வெறுப்பதும் இல்லை, மார்க்கத்தை கற்பதும் இல்லை, அதன்படி செயல்படுவதுமில்லை, மார்க்கம் பேசப்படக்கூடிய இடங்களை விட்டு ஒடுவது.

இத்தகைய நிலைக்கு புறக்கணிப்புடைய நிராகரிப்பு என்று கூறப்படும். இந்த தன்மை உள்ளவரும் காஃபிர் என்று கருதப்படுவார். இவருடைய குஃப்ர் - குஃப்ருல் இஃராழ் ஆகும்.

நான்காவது:

كُفْرُ النِّفَاقِ

குஃப்ர் அன்னிஃபாக் - நயவஞ்சகத்தின் நிராகரிப்பு

அதாவது, ஒருவர் வெளிப்படையில் நபி ﷺ அவர்களை பின்பற்றுவதாக, ஏற்பதாக காண்பித்துக்கொண்டு, உள்ரங்கத்தில் நபி ﷺ அவர்களை மறுப்பது ஆகும். இத்தகையவர் ஈமானை வெளிப்படுத்துபவராகவும் நிராகரிப்பை உள்ளத்தில் மறைத்து வைத்திருப்பவராகவும் இருப்பார்.

ஐந்தாவது:

كُفْرُ الشَّكِّ

குஃப்ர் அஷ்ஷக் - சந்தேகத்தின் நிராகரிப்பு

நபி ﷺ அவர்களை உண்மையாளர் என்று உறுதி கொள்வதும் இல்லை. அவர்களை பொய்ப்பிப்பதும் இல்லை. அவர்கள் விஷயத்தில் சந்தேகத்துடன் இருப்பது. அவர்களை பின்பற்றுவதில் தடுமாற்றத்துடன் இருப்பது. ஆக, இதுவும் நிராகரிப்பாகும். ஏனெனில், ஈமான் என்பது சந்தேகமின்றி உறுதியுடன் நபி ﷺ அவர்களை நம்பிக்கை கொள்வதாகும். ஆகவே, யார் நபி ﷺ அவர்கள் கொண்டு வந்ததை பின்பற்றுவதில் தடுமாற்றம் கொள்வாரோ, அல்லது, நபி ﷺ அவர்கள் காட்டியதற்கு மாற்றமானதில் உண்மை இருக்கலாம் என்று நம்புவாரோ

அது குஃப்ர் ஆகும். இந்த வகை குஃப்ருக்கு – குஃப்ர் அஷ்ஷஉக் என்று சொல்லப்படும்.

இந்த வகையான குஃப்ருகள் அனைத்தும் ஒருவரை – அவர் தவ்பா செய்யாமல் இறந்துவிட்டால் – நரகத்தில் நிரந்தரமாக தங்க வைத்துவிடும்; அவர் செய்த நல்லமல்கள் அனைத்தையும் பாழாக்கிவிடும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ كَفَرُواْ مِنْ أَهْلِ ٱلْكِتَٰبِ وَٱلْمُشْرِكِينَ فِى نَارِ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ ۚ أُوْلَٰٓئِكَ هُمْ شَرُّ ٱلْبَرِيَّةِ ۝٦

வேதக்காரர்களில் நிராகரித்தவர்களும் மற்றும் இணைவைப்பாளர்களும் ஜஹன்னம் – நரகத்தில் நிரந்தரமாகத் தங்கி இருப்பார்கள். அவர்கள்தான் படைப்பினங்களில் மிக கெட்டவர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 98:06)

لَئِنْ أَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ ٱلْخَٰسِرِينَ ۝٦٥

(நபியே!) நீர் இணைவைத்தால் உமது அமல்கள் நாசமாகிவிடும். இன்னும் நீர் நஷ்டவாளிகளில் ஆகிவிடுவீர். (அல்குர்ஆன் 39:65)

இரண்டாவது: كفر أصغر – குஃப்ர் அஸ்கர் மார்க்கத்திலிருந்து வெளியேற்றாத சிறிய வகை குஃப்ர். அல்குர்ஆனும் ஸுன்னாவும் சில பாவங்களை குறித்து எச்சரிப்பதற்காகவும் கண்டிப்பதற்காகவும் அவற்றை كفر – குஃப்ர் உடன் இணைத்துள்ளன. ஏனெனில், அப்பாவங்கள் كفر – குஃப்ர் உடைய பண்புகளில் உள்ளவையாக இருக்கின்றன. இந்த வகையை சேர்ந்த குற்றங்கள் பெரும்பாவங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வகைப் பாவங்களுக்கு நரகில் தண்டனை உண்டு என எச்சரிக்கப்பட்டுள்ளது. ஆனால், நரகத்தில் நிரந்தரமாகத் தங்குதல் இருக்காது. உதாரணமாக, முஸ்லிம்கள் தமக்கிடையே சண்டையிட்டுக்கொள்ளுதல், அல்லாஹ் அல்லாதோர் மீது சத்தியம் செய்தல், வமிச பரம்பரையைக் குத்திப்பேசுவது, முஃமினான சகோதரனை நோக்கி காஃபிர் எனக் கூறுதல், இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுதல் இன்னும் இவை போன்றவை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِن طَآئِفَتَانِ مِنَ ٱلۡمُؤۡمِنِينَ ٱقۡتَتَلُواْ فَأَصۡلِحُواْ بَيۡنَهُمَاۖ

நம்பிக்கையாளர்களில் இரு பிரிவினர் தங்களுக்குள் சண்டையிட்டால் அவ்விருவருக்கும் மத்தியில் சமாதானம் செய்து வையுங்கள்! (அல்குர்ஆன் 49:9)

இந்த வசனத்தில் எதிர் எதிரே சண்டை இட்டுக்கொண்ட இரு குழுக்களையும் அல்குர்ஆன் முஃமின்கள் என்று கூறுகிறது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: سِبَابُ المُسْلِمِ فُسُوقٌ، وَقِتَالُهُ كُفْرٌ

முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவனைக் கொலை செய்வது كفر - குஃப்ர் ஆகும்.[64]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا تَرْجِعُوا بَعْدِي كُفَّارًا، يَضْرِبُ بَعْضُكُمْ رِقَابَ بَعْضٍ

எனக்குப் பின்னால், நீங்கள் உங்களில் ஒருவர் ஒருவரை கொலை செய்கிற காஃபிர்களாக திரும்பிவிடாதீர்கள்.[65]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ حَلَفَ بِغَيرِ اللهِ فَقَدْ كَفَرَ وَأَشْرَكَ

எவர் அல்லாஹ் அல்லாதவர் மீது சத்தியம் செய்வாரோ அவர் நிராகரித்து விட்டார், இன்னும், இணைவைத்து விட்டார்.[66]

---

64. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 48.
65. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6868.
66. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 1535.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ اثْنَتَانِ فِي النَّاسِ هُمَا بِهِمْ كُفْرٌ: الطَّعْنُ فِي النَّسَبِ وَالنِّيَاحَةُ عَلَى الْمَيِّتِ

மனிதர்களிடம் இருக்கின்ற இரு செயல்கள், அவை அவர்களிடம் இருக்கின்ற كفر - குஃப்ர் - நிராகரிப்பா(ன செயல்களா)கும். வமிசத்தைக் குத்திப் பேசுவது, இறந்தவருக்காக ஒப்பாரி வைப்பது.[67]

****

67. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 67.

اَلْأَصْلُ الرَّابِعُ

الْإِيمَانُ بِنُصُوصِ الْوَعْدِ وَالْوَعِيدِ

நான்காவது அடிப்படை:

வாக்குறுதி மற்றும் எச்சரிக்கையின் ஆதாரங்களை நம்பிக்கை கொள்வது

الْإِيمَانُ بِنُصُوصِ الْوَعْدِ وَالْوَعِيدِ

வாக்குறுதி மற்றும் எச்சரிக்கையின் ஆதாரங்களை நம்பிக்கை கொள்வது

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் கொள்கையின் அடிப்படைகளில் ஒன்றுதான் வாக்கு மற்றும் எச்சரிக்கை பற்றிய ஆதாரங்களை நம்பிக்கை கொள்வது.

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, அல்லாஹ்வும் நபியவர்களும் அல் வஃது இன்னும் வயீத் பற்றி அறிவித்துள்ள அனைத்து செய்திகளையும் அப்படியே நம்பிக்கை கொள்கின்றனர்; அவை எப்படி வந்தனவோ அப்படியே அவற்றை ஏற்றுக்கொள்கின்றனர்; அவற்றில் எவ்வித மாற்று கருத்துகள் கூற மாட்டார்கள். வஃது இன்னும் வயீத் உடைய ஆதாரங்கள் அனைத்தும் முஹ்கம் - பொருளும் கருத்தும் உறுதிசெய்யப்பட்டவை (அவை முதஷாபிஹ் - குழப்பமானவை அல்ல) என்று கூறுகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ۚ وَمَن يُشْرِكْ بِٱللَّهِ فَقَدِ ٱفْتَرَىٰٓ إِثْمًا عَظِيمًا ﴿٤٨﴾

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். இதைத் தவிர உள்ளதை தான் நாடியவருக்கு மன்னிப்பான். எவர் அல்லாஹ்விற்கு இணைவைப்பாரோ அவர் திட்டமாக பெரும் பாவத்தைச் செய்துவிட்டார். (அல்குர்ஆன் 4:48)

மனிதர்களின் முடிவுகள் மூடலானவை ஆகும். அதாவது, தனது முடிவு எப்படி இருக்கும் என்பதை யாரும் அறிய மாட்டார். என்றாலும், எவனிடம் குஃப்ர் அக்பர் - பெரிய இறை நிராகரிப்பு தெளிவாக வெளிப்படுகிறதோ அவர் மீது அவர் வெளிப்படுத்தியதைக் கொண்டே முடிவு செய்யப்படும். அவரை நிராகரிப்பாளர்கள் நடத்தப்படுவது போன்றே நடத்தப்படும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ الرَّجُلَ لَيَعْمَلُ عَمَلَ أَهْلِ الْـجَنَّةِ فِيمَا يَبْدُو لِلنَّاسِ وَهُوَ مِن أَهْلِ النَّارِ وَإِنَّ الرَّجُلَ لَيَعْمَلُ عَمَلَ أَهْلِ النَّارِ فِيمَا يَبْدُو لِلنَّاسِ وَهُوَ مِن أَهْلِ الْـجَنَّةِ

நிச்சயமாக ஒரு மனிதர் சொர்க்கவாசிகளின் அமல்களைச் செய்கிறார் என்று மக்களுக்குத் தோன்றும். அவரோ நரகவாசிகளில் ஒருவராக இருப்பார். நிச்சயமாக ஒரு மனிதர் நரகவாசிகளின் செயலைச் செய்கிறார் என்று மக்களுக்கு தோன்றும். அவரோ சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[68]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْـجَنَّةِ حتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إِلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ فَيَدْخُلُهَا وإِنَّ أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إِلَّا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْـجَنَّةِ فَيَدْخُلُهَا

நிச்சயமாக உங்களில் ஒருவர் சொர்க்கவாசிகளின் செயல்களைச் செய்கிறார். இறுதியாக அவருக்கும் சொர்க்கத்திற்கும் இடையில் ஒரு முழம் அளவைத் தவிர இடைவெளி இருக்காது. ஆக, (அவருக்கு) விதி(யில் எழுதப்பட்டது) அவரை முந்தி விடுகிறது. ஆக, அவர் நரகவாசிகளின் செயலைச் செய்கிறார். அதனால் அவர் நரகத்தில் நுழைந்து விடுகிறார். இன்னும், நிச்சயமாக உங்களில் ஒருவர் நரகவாசிகளின் செயலைச் செய்கிறார். இறுதியாக அவருக்கும் நரகத்திற்கும் இடையில் ஒரு முழம் அளவைத் தவிர இடைவெளி இருக்காது. ஆக, (அவருக்கு) விதி(யில் எழுதப்பட்டது) அவரை முந்தி விடுகிறது. ஆக, அவர் சொர்க்கவாசிகளின் செயலைச் செய்கிறார். அதனால் அவர் சொர்க்கத்தில் நுழைந்து விடுகிறார்.[69]

என்றாலும், நம்பிக்கையாளர்கள், இன்னும், மார்க்கத்தை பின்பற்றுகின்ற இறையச்சமிக்கவர்களில் யார், - அவர் வெளிப்படையாக இஸ்லாமை

68. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 112.
69. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3332.

பின்பற்றி வாழ்கின்ற நிலையில் - இறந்துவிட்டாரோ அவர் இன் ஷா அல்லாஹ் சொர்க்கவாசிகளில் உள்ளவர் என்று பொதுவாக அஹ்லுஸ் ஸுன்னா சாட்சி சொல்வார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَبَشِّرِ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ أَنَّ لَهُمْ جَنَّٰتٍ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ ۖ

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு நிச்சயமாக, அவர்களுக்கு சொர்க்கங்கள் உண்டு, அவற்றின் கீழ் ஆறுகள் ஓடும் என்று நற்செய்தி கூறுவீராக. (அல்குர்ஆன் 2:25)

إِنَّ ٱلْمُتَّقِينَ فِى جَنَّٰتٍ وَنَهَرٍ ﴿٥٤﴾ فِى مَقْعَدِ صِدْقٍ عِندَ مَلِيكٍ مُّقْتَدِرٍۭ ﴿٥٥﴾

நிச்சயமாக இறையச்சமுடையவர்கள் சொர்க்கத் தோட்டங்களிலும் நதிகளிலும் இருப்பார்கள். உண்மையான பேச்சுகள் பேசப்படும் சபையில், பேராற்றலுடையவனான பேரரசனுக்கு அருகில் இருப்பார்கள். (அல்குர்ஆன் 54:54,55)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عُثْمَانَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ مَاتَ وَهُوَ يَعْلَمُ أَنَّهُ لَا إِلٰهَ إِلَّا اللهُ، دَخَلَ الْجَنَّةَ

வணங்குவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று அறிந்த நிலையில் யார் மரணிக்கின்றாரோ அவர் சொர்க்கம் நுழைவார்.[70]

காஃபிர் - நிராகரிப்பாளர்கள், முஷ்ரிக் - இணைவைப்பாளர்கள், முனாஃபிக் - நயவஞ்சகர்கள் அனைவரும் நரகவாசிகளில் உள்ளவர்கள் என்று அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ சாட்சி கூறுகிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلَّذِينَ كَفَرُواْ وَكَذَّبُواْ بِـَٔايَٰتِنَآ أُوْلَٰٓئِكَ أَصْحَٰبُ ٱلنَّارِ ۖ هُمْ فِيهَا خَٰلِدُونَ ﴿٣٩﴾

70. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 26.

எவர்கள் நிராகரித்தார்களோ, இன்னும், நம் வசனங்களைப் பொய்ப்பித்தார்களோ அவர்கள் நரகவாசிகள்! அவர்கள் அதில் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். (அல்குர்ஆன் 2:39)

إِنَّ ٱلَّذِينَ كَفَرُواْ مِنْ أَهْلِ ٱلْكِتَٰبِ وَٱلْمُشْرِكِينَ فِى نَارِ جَهَنَّمَ خَٰلِدِينَ فِيهَآ ۚ أُوْلَٰٓئِكَ هُمْ شَرُّ ٱلْبَرِيَّةِ ﴿٦﴾

வேதக்காரார்களில் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களும் மற்றும் இணைவைப்பாளர்களும் ஜஹன்னம் – நரகத்தின் நெருப்பில் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். அவர்கள்தான் படைப்பினங்களில் மிக கெட்டவர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 98: 6)

إِنَّ ٱلْمُنَٰفِقِينَ فِى ٱلدَّرْكِ ٱلْأَسْفَلِ مِنَ ٱلنَّارِ وَلَن تَجِدَ لَهُمْ نَصِيرًا ﴿١٤٥﴾

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகக் கீழ் அடுக்கில் இருப்பார்கள். அவர்களுக்கு எந்தவொரு உதவியாளரையும் நீர் காணமாட்டீர். (அல்குர்ஆன் 4:145)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, சொர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் சொல்லப்பட்ட பத்து ஸஹாபாக்களும் சொர்க்கவாசிகள் என்று நபி ﷺ அவர்கள் சாட்சி பகர்ந்தது போலவே சாட்சி பகர்கிறார்கள். மேலும், நபி ﷺ அவர்கள் யாரையெல்லாம் சொர்க்கவாசிகள் என்று சாட்சி பகர்ந்தார்களோ அவர்கள் அனைவரையும் அஹ்லுஸ் ஸுன்னாவும் சொர்க்க வாசிகள் என்றே சாட்சி பகர்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَبُو بَكْرٍ فِي الْجَنَّةِ، وَعُمَرُ فِي الْجَنَّةِ، وَعُثْمَانُ فِي الْجَنَّةِ، وَعَلِيٌّ فِي الْجَنَّةِ، وَطَلْحَةُ فِي الْجَنَّةِ، وَالزُّبَيْرُ فِي الْجَنَّةِ، وَعَبْدُ الرَّحْمَٰنِ بْنُ عَوْفٍ فِي الْجَنَّةِ، وَسَعْدُ بْنُ أَبِي وَقَّاصٍ فِي الْجَنَّةِ، وَسَعِيدُ بْنُ زَيْدٍ فِي الْجَنَّةِ، وَأَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ فِي الْجَنَّةِ

அபூ பக்ர் சொர்க்கத்தில், உமர் சொர்க்கத்தில், உஸ்மான் சொர்க்கத்தில், அலீ சொர்க்கத்தில், தல்ஹா சொர்க்கத்தில், ஸுபைர் சொர்க்கத்தில், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் சொர்க்கத்தில், ஸஅத் இப்னு

அபீ வக்காஸ் சொர்க்கத்தில், ஸஈத் இப்னு ஸைது சொர்க்கத்தில், அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் சொர்க்கத்தில் இருப்பார்கள்.[71]

இவர்களைத் தவிர இன்னும் பல ஸஹாபாக்கள் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, உகாஷா இப்னு மிஹ்ஸன், அப்துல்லாஹ் இப்னு ஸலாம், யாஸிர் அவர்களின் குடும்பம், பிலால் இப்னு ரபாஹ், ஜஅஃபர் இப்னு அபீ தாலிப், அம்ரு இப்னு ஸாபித், ஸைத் இப்னு ஹாரிஸா, அப்துல்லாஹ் இப்னு ரவாஹா, ஃபாத்திமா பின்த் ரஸூலில்லாஹ் ﷺ கதீஜா பின்த் குவைலித், ஆயிஷா, ஸஃபிய்யா, ஹஃப்ஸா, இன்னும் நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் அனைவரும், இன்னும் இவர்கள் அல்லாத பலரும் சொர்க்கத்தைக் கொண்டு சாட்சி சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

எவர்கள் நரகவாசிகள் என்று குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் கூறப்பட்டுள்ளதோ அவர்களுக்கு நாமும் நரகத்தைக் கொண்டு சாட்சி பகருவோம். அபூ லஹப் அப்துல் உஸ்ஸா இப்னு அப்தில் முத்தலிப், அவனது மனைவியாகிய உம்மு ஜமீல் அர்வா பின்த் ஹர்ப், இன்னும் இவர்களை போன்று நரகவாசிகள் என்று யாருக்கெல்லாம் நரகத்தைக் கொண்டு சாட்சி கூறப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு நரகத்தைக் கொண்டு சாட்சி கூறுகிறோம்.

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, நபி ﷺ அவர்கள் யாரை பற்றி அவர் சொர்க்கவாசி அல்லது நரகவாசி என்று உறுதியாக கூறவில்லையோ அவரை சொர்க்கவாசி என்றோ நரகவாசி என்றோ உறுதியாகக் கூற மாட்டார்கள். என்றாலும், நல்லவர்களுக்காக (அல்லாஹ்விடம்) நல்லாதரவு வைப்பார்கள். பாவிகள் விஷயத்தில் அச்சம் கொள்வார்கள்.

ஒருவருடைய அமல் எவ்வளவுதான் அழகியதாக இருந்தாலும் சொர்க்கம் அவருக்கு கட்டாயம் இல்லை. என்றாலும் அல்லாஹ் அவரை தனது அருளினால் அணைத்துக் கொண்டால் மட்டுமே அவர் அல்லாஹ்வின் கருணையினால் சொர்க்கத்தில் நுழைவார் என அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கை கொள்கின்றனர்.

71. அறிவிப்பாளர்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் ؓ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4649.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

وَلَوْلَا فَضْلُ ٱللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُۥ مَا زَكَىٰ مِنكُم مِّنْ أَحَدٍ أَبَدًا وَلَٰكِنَّ ٱللَّهَ يُزَكِّى مَن يَشَآءُ ۗ وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴿٢١﴾

அல்லாஹ்வுடைய அருளும் அவனது கருணையும் உங்கள் மீது இல்லாதிருந்தால் உங்களில் எவரும் ஒருபோதும் தூய்மை அடைந்திருக்கமாட்டார். எனினும், அல்லாஹ் தான் நாடியவரைப் பரிசுத்தப்படுத்துகிறான். அல்லாஹ் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 24:21)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: «مَا مِنْ أَحَدٍ يُدْخِلُهُ عَمَلُهُ الْجَنَّةَ فَقِيلَ: وَلَا أَنْتَ؟ يَا رَسُولَ اللهِ قَالَ: وَلَا أَنَا، إِلَّا أَنْ يَتَغَمَّدَنِي رَبِّي بِرَحْمَةٍ

யார் ஒருவரையும் அவரது அமல்கள் சொர்க்கத்தில் சேர்ப்பிக்காது என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது, நீங்களுமா? அல்லாஹ்வின் தூதரே, என நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு நபி ﷺ அவர்கள், நானும் சொர்க்கம் நுழைய மாட்டேன், எனது ரப்பு கருணையினால் என்னை போர்த்திக்கொண்டாலே தவிர எனக் கூறினார்கள்.[72]

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, குஃப்ரில் தள்ளிவிடாத மற்ற பெரும் பாவங்களை ஒருவர் செய்துவிட்டால் அதற்காக அவருக்கு கண்டிப்பாக வேதனை கிடைக்கும் என்று கருதவில்லை. ஏனெனில், ஒரு மனிதனின் பெரும் பாவங்களை அவனது வணக்க வழிபாடுகளால், அல்லது அவனது தவ்பாவினால், அல்லது அவனுக்கு நிகழும் சோதனைகளினால் அல்லது அவனுக்கு ஏற்படும் நோய் நொடிகளினால் அல்லாஹ் அவனை மன்னிக்கக் கூடும்.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

قُلْ يَٰعِبَادِىَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ

72. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2816.

يَغۡفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًاۚ إِنَّهُۥ هُوَ ٱلۡغَفُورُ ٱلرَّحِيمُ ۝٥٣

(நபியே!) கூறுவீராக! தங்கள் ஆன்மாக்கள் மீது எல்லை மீறி பாவம் செய்த என் அடியார்களே! அல்லாஹ்வின் கருணையில் இருந்து நிராசை ஆகாதீர்கள். எல்லாப் பாவங்களையும் நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன். (அல்குர்ஆன் 39:53)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: بَيْنَمَا رَجُلٌ يَمْشِي بِطَرِيقٍ، وَجَدَ غُصْنَ شَوْكٍ عَلَى الطَّرِيقِ، فَأَخَذَهُ، فَشَكَرَ اللهُ لَهُ، فَغَفَرَ لَهُ

ஒரு மனிதன் பாதையில் நடந்து செல்லும் போது முற்களை உடைய ஒரு மரக்கிளையை பாதையில் கண்டார். ஆக, அவர் அதை (பாதையிலிருந்து) அப்புறப்படுத்தினார். ஆக, அல்லாஹ் அவரின் இந்த செயலுக்கு வெகுமதி அளித்தான். இன்னும், அவரை மன்னித்துவிட்டான் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.[73]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, எல்லா படைப்புக்களுக்கும் ஒரு தவணைக் காலம் இருப்பதாக நம்புகின்றனர். அல்லாஹ் நிர்ணயித்திருக்கும் அந்த தவணையில் அல்லாஹ்வின் நாட்டப்படி எல்லா ஆத்மாவும் மரணத்தைத் தழுவும். அவர்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட தவணை வந்துவிட்டால் ஒரு நொடி கூட அவர்கள் பிற்படுத்தப்பட மாட்டார்கள். இன்னும் முற்படுத்தப்பட மாட்டார்கள். ஒருவர் கொல்லப்பட்டாலும் சரி, அல்லது தானாக இறந்தாலும் சரி, அவர் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட தவணையில்தான் மரணிக்கிறார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا كَانَ لِنَفۡسٍ أَن تَمُوتَ إِلَّا بِإِذۡنِ ٱللَّهِ كِتَٰبًا مُّؤَجَّلًاۗ

73. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2472.

இன்னும், எந்த ஓர் ஆன்மாவும் அது மரணிப்பது சாத்தியம் இல்லை, அல்லாஹ்வின் அனுமதியுடன் காலம் குறிக்கப்பட்ட விதியின் படியே தவிர. (அல்குர்ஆன் 3:145)

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, - நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் சொர்க்கத்தை வாக்களித்திருப்பதும், பாவிகளான முஸ்லிம்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் நரகத்தில் தண்டனை உண்டு என்று எச்சரித்திருப்பதும் உண்மை என - நம்புகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ سَنُدۡخِلُهُمۡ جَنَّٰتٖ تَجۡرِي مِن تَحۡتِهَا
ٱلۡأَنۡهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدٗاۖ وَعۡدَ ٱللَّهِ حَقّٗاۚ وَمَنۡ أَصۡدَقُ مِنَ ٱللَّهِ قِيلٗا ١٢٢

எவர்கள் நம்பிக்கை கொண்டு நன்மைகளை செய்தார்களோ, அவர்களை (மறுமையில்) சொர்க்கங்களில் நாம் பிரவேசிக்க செய்வோம். அவற்றின் கீழ் நதிகள் ஓடும். (அவர்கள்) அதில் என்றென்றும் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். அல்லாஹ் உண்மையான வாக்குறுதி அளிக்கிறான். சொல்லில் அல்லாஹ்வைவிட மிக உண்மையானவன் யார்? (அல்குர்ஆன் 4:122)

என்றாலும், நம்பிக்கையாளர்களான பாவிகளை அல்லாஹ் தனது அருளினாலும் கருணையாலும் மன்னிப்பான். அல்லாஹ்வை மட்டும் வணங்கியவர்களுக்கு அல்லாஹ் தனது மன்னிப்பை வாக்களித்துள்ளான். மற்றவர்களுக்கு அந்த மன்னிப்பை அவன் மறுத்துவிட்டான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ ٱللَّهَ لَا يَغۡفِرُ أَن يُشۡرَكَ بِهِۦ وَيَغۡفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُۚ

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். அது அல்லாததை தான் நாடுபவருக்கு மன்னிப்பான். (அல்குர்ஆன் 4:116)

****

اَلْأَصْلُ الْخَامِسُ

الْمُوَالَاةُ وَالْمُعَادَاةُ فِي عَقِيدَةِ أَهْلِ السُّنَّةِ

ஐந்தாவது அடிப்படை:

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கையில் நட்பு வைப்பது மற்றும் பகைமை கொள்வது

الْمُوَالَاةُ وَالْمُعَادَاةُ فِي عَقِيدَةِ أَهْلِ السُّنَّةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கையில் நட்பு வைப்பது மற்றும் பகைப்பது

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கையின் அடிப்படைகளில் ஒன்று, அல்லாஹ்விற்காக நட்பு பாராட்டுவதும் அல்லாஹ்விற்காக பகைமை பாராட்டுவதும் அல்லாஹ்விற்காக நேசிப்பதும் அல்லாஹ்விற்காக வெறுப்பதும் ஆகும்.

அதாவது, முஃமின்களை - நம்பிக்கையாளர்களை நேசிக்க வேண்டும், அவர்களுடன் நட்பு பாராட்ட வேண்டும். இஸ்லாமை எதிர்க்கின்றவர்கள், முஸ்லிம்களிடம் சண்டை செய்கிறவர்களாகிய நிராகரிப்பாளர்களை வெறுக்க வேண்டும், அவர்களிடம் பகைமை பாராட்ட வேண்டும், அவர்களை விட்டு விலகி இருக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلْمُؤْمِنُونَ وَٱلْمُؤْمِنَـٰتُ بَعْضُهُمْ أَوْلِيَآءُ بَعْضٍ ۚ
يَأْمُرُونَ بِٱلْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ ٱلْمُنكَرِ

நம்பிக்கை கொண்ட ஆண்கள், இன்னும், நம்பிக்கை கொண்ட பெண்கள் அவர்களில் சிலர் சிலருக்கு பொறுப்பாளர்கள் - நேசர்கள் ஆவார்கள். அவர்கள், நன்மையை ஏவுகிறார்கள்; இன்னும், தீமையை விட்டும் தடுக்கிறார்கள். (அல்குர்ஆன் 9:71)

لَّا يَتَّخِذِ ٱلْمُؤْمِنُونَ ٱلْكَـٰفِرِينَ أَوْلِيَآءَ مِن دُونِ ٱلْمُؤْمِنِينَ ۖ وَمَن يَفْعَلْ ذَٰلِكَ
فَلَيْسَ مِنَ ٱللَّهِ فِى شَىْءٍ

நம்பிக்கையாளர்கள், நம்பிக்கையாளர்களைத் தவிர நிராகரிப்பாளர்களை (தங்களது) பாதுகாவலர்களாக (உற்ற நேசர்களாக) எடுத்துக்கொள்ள வேண்டாம். எவர் இதைச் செய்வாரோ அவர் அல்லாஹ்வை விட்டும் நீங்கிவிட்டார். (அல்குர்ஆன் 3:28)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, முவாலாத், - நட்பு பாராட்டுதல் இன்னும் முஆதாத் பகைமை பாராட்டுதல் என்பது மார்க்கத்தின் முக்கியமான அடிப்படைகளில் ஒன்றாக இருக்கிறது என நம்புகின்றனர். இதற்கு மார்க்கத்தில் மிக மகத்தான முக்கியத்துவம் இருப்பது பின்வரும் காரணங்களைக் கொண்டு தெளிவாகிறது.

முதலாவது:

இஸ்லாமின் அடிப்படையான لا إله إلا الله - லா இலாஹ இல்லல்லாஹ் என்ற ஷஹாதாவின் ஒரு பகுதியாக இது இருக்கிறது. இந்த ஷஹாதாவின் பொருளாவது, அல்லாஹ்வை அன்றி வணங்கப்படுகின்ற அனைத்தையும் விட்டு நீங்கியிருத்தல் என்பதாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَنِ ٱعۡبُدُواْ ٱللَّهَ وَٱجۡتَنِبُواْ ٱلطَّٰغُوتَۖ

அல்லாஹ்வை வணங்குங்கள்! தாகூத்தை விட்டும் விலகிவிடுங்கள் (அல்குர்ஆன் 16:36)

இரண்டாவது:

ஈமானின் வளையங்களில் இது மிக உறுதிமிக்கதாக இருக்கிறது.

قَالَ رسُولُ اللهِ ﷺ لِأَبِي ذَرٍّ ﷺ أَيُّ عُرَى الْإِيمَانِ أَظُنُّهُ قَالَ أَوْثَقُ؟ قَالَ اللهُ وَرَسُوْلُهُ أَعْلَمُ قَالَ: اَلْمُوَالَاةُ فِي اللهِ، وَالْمُعَادَاةُ فِي اللهِ، وَالْحُبُّ فِي اللهِ، وَالْبَغْضُ فِي اللهِ عَزَّ وَجَلَّ

நபி ﷺ அவர்கள், அபூ தர் ﷺ அவர்களிடம் ஈமானின் வளையங்களில் மிக உறுதியானது எது எனக் கேட்டார்கள். அதற்கு அவர், அல்லாஹ்வும் அவனது ரஸூலும் மிக அறிவார்கள் என்றார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்விற்காக நட்பு பாராட்டுவது, அல்லாஹ்விற்காக பகைமை பாராட்டுவது, அல்லாஹ்விற்காக

அன்பு வைப்பது, இன்னும் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்விற்காக வெறுப்பதாகும்.[74]

மூன்றாவது:

ஈமான் - இறைவிசுவாசத்தின் இனிமையையும், யகீன் - உறுதியான நம்பிக்கையின் இன்பத்தையும் உள்ளம் சுவைப்பதற்கு இது ஒரு காரணமாக இருக்கிறது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَنَسٍ ﵁ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ ثَلَاثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلَاوَةَ الْإِيمَانِ: أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا، وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لَا يُحِبُّهُ إِلَّا لِلّٰهِ، وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ

மூன்று தன்மைகள் யாரிடம் இருக்குமோ அவர் ஈமானின் இனிமையை பெற்றுக்கொள்வார். ஒருவருக்கு அல்லாஹ்வும் ரஸூலும் அவ்விருவர் அல்லாதவர்களை விட மிக நேசமிக்கவர்களாக ஆகிவிடுவது. ஒருவர், அவர் ஓர் அடியாரை நேசித்தால் அவரை அல்லாஹ்விற்காக மட்டுமே நேசிப்பது. ஒருவர், அவரை அல்லாஹ் நிராகரிப்பிலிருந்து பாதுகாத்த பின்னர், அவர் நெருப்பில் போடப்படுவதை வெறுப்பது போன்று அவர் நிராகரிப்பின் பக்கம் திரும்புவதை வெறுப்பது.[75]

நான்காவது:

இந்த கொள்கையை நமக்குள் உறுதிப்படுத்துவதன் மூலம் ஈமானை முழுமைப்படுத்திக் கொள்ள முடியும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي أُمَامَةَ ﵁ عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ: مَنْ أَحَبَّ لِلّٰهِ، وَأَبْغَضَ لِلّٰهِ، وَأَعْطَى لِلّٰهِ، وَمَنَعَ لِلّٰهِ فَقَدِ اسْتَكْمَلَ الْإِيمَانَ

74. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﵄, நூல்: அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா அல்பானீ எண்: 998.

75. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6941.

யார் அல்லாஹ்விற்காக நேசிப்பாரோ, அல்லாஹ்விற்காக பகைப்பாரோ, அல்லாஹ்விற்காக கொடுப்பாரோ, அல்லாஹ்விற்காக தடுப்பாரோ அவர் ஈமானை முழுமைப்படுத்திக் கொண்டார்.[76]

ஐந்தாவது:

அல்லாஹ் அல்லாதோரையும், அவர்களது மதங்களையும் மனப்பூர்வமாக யார் விரும்புவார்களோ, இன்னும், அல்லாஹ்வையும் அவனது மார்க்கத்தையும் அந்த மார்க்கத்தை பின்பற்றுபவர்களையும் யார் வெறுப்பார்களோ அவர்கள் காஃபிர்களாக – நிராகரிப்பாளர்களாக ஆகிவிடுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلۡ أَغَيۡرَ ٱللَّهِ أَتَّخِذُ وَلِيّٗا فَاطِرِ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ وَهُوَ يُطۡعِمُ وَلَا يُطۡعَمُۗ قُلۡ إِنِّيٓ أُمِرۡتُ أَنۡ أَكُونَ أَوَّلَ مَنۡ أَسۡلَمَۖ وَلَا تَكُونَنَّ مِنَ ٱلۡمُشۡرِكِينَ

(நபியே!) கூறுவீராக: வானங்கள் மற்றும் பூமியின் படைப்பாளனாகிய அல்லாஹ் அல்லாதவனையா நான் பாதுகாவலனாக – நேசனாக எடுத்துக் கொள்வேன்? அவன்தான் உணவளிக்கிறான். அவனுக்கு (யாராலும்) உணவளிக்கப்படுவதில்லை. (மேலும்) கூறுவீராக! அல்லாஹ்விற்கு (முற்றிலும்) பணிந்தவர்களில் முதன்மையானவனாக நான் இருக்க வேண்டுமென ஏவப்பட்டுள்ளேன். (நபியே!) நீர் ஒருபோதும் இணைவைப்பவர்களில் ஆகிவிடாதீர். (அல்குர்ஆன் 6:14)

ஆறாவது:

இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் முஸ்லிம் சமுதாயத்தின் சமூக அமைப்பு நிற்கிறது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَنَسٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا يُؤْمِنُ أَحَدُكُمْ، حَتَّىٰ يُحِبَّ لِأَخِيهِ مَا يُحِبُّ لِنَفْسِهِ

76. அறிவிப்பாளர்: அபூ உமாமா அல் பாஹிலீ ؓ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4681.

உங்களில் ஒருவர் நம்பிக்கை கொள்ள மாட்டார், அவர் தான் விரும்பியதைத் தன் சகோதரருக்கு விரும்புகிற வரை.[77]

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ - நட்பு பாராட்டுவதும் பகைமை பாராட்டுவதும் மார்க்கத்தின் கட்டாயக் கடமைகளில் ஒன்று என நம்புகின்றனர். அது மட்டுமல்லாமல், இது, லா இலாஹ இல்லல்லாஹ் என்று சாட்சி கூறுவது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும். மேலும், இது நமது அகீதா, மற்றும் ஈமானின் மிகப்பெரிய அடிப்படைகளில் நாம் மிகவும் கவனமாகப் பேணவேண்டிய மகத்தான ஓர் அடிப்படையாகும். இந்த அடிப்படையை வலியுறுத்தி பல வசனங்கள் அல்குர்ஆனில் வந்துள்ளன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ إِن كَانَ ءَابَآؤُكُمْ وَأَبْنَآؤُكُمْ وَإِخْوَٰنُكُمْ وَأَزْوَٰجُكُمْ وَعَشِيرَتُكُمْ وَأَمْوَٰلٌ ٱقْتَرَفْتُمُوهَا وَتِجَٰرَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَٰكِنُ تَرْضَوْنَهَآ أَحَبَّ إِلَيْكُم مِّنَ ٱللَّهِ وَرَسُولِهِۦ وَجِهَادٍ فِى سَبِيلِهِۦ فَتَرَبَّصُوا۟ حَتَّىٰ يَأْتِىَ ٱللَّهُ بِأَمْرِهِۦ ۗ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلْفَٰسِقِينَ ﴿٢٤﴾

(நபியே! நம்பிக்கையாளர்களை நோக்கி) கூறுவீராக: "உங்கள் தந்தைமார்களும், (உங்கள் தாய்மார்களும்) உங்கள் ஆண் பிள்ளைகளும், (உங்கள் பெண் பிள்ளைகளும்) உங்கள் சகோதரர்களும், (உங்கள் சகோதரிகளும்) உங்கள் மனைவிகளும், (நீங்கள் பெண்களாக இருந்தால் உங்கள் கணவன்மார்களும்) உங்கள் குடும்பமும், நீங்கள் சம்பாதித்த செல்வங்களும், அது மந்தமாகிவிடுமோ என்று நீங்கள் பயப்படும் வர்த்தகமும், நீங்கள் விரும்பும் வீடுகளும் அல்லாஹ்வை விட; இன்னும், அவனுடைய தூதரை விட; இன்னும், அவனுடைய பாதையில் போரிடுவதை விட உங்களுக்கு மிக விருப்பமாக இருந்தால் எதிர்பார்த்திருங்கள் இறுதியாக, அல்லாஹ் (உங்களிடம்)

77. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 13.

தன் (தண்டனையின்) கட்டளையைக் கொண்டு வருவான். அல்லாஹ் பாவிகளான மக்களை நேர்வழி செலுத்த மாட்டான்." (அல்குர்ஆன் 9:24)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تَتَّخِذُواْ عَدُوِّى وَعَدُوَّكُمْ أَوْلِيَآءَ تُلْقُونَ إِلَيْهِم بِٱلْمَوَدَّةِ

நம்பிக்கையாளர்களே! எனது எதிரிகளையும் உங்கள் எதிரிகளையும் அவர்களிடம் நீங்கள் அன்பை வெளிப்படுத்துகின்ற உற்ற நண்பர்களாக - பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள்! (அல்குர்ஆன் 60:01)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ, நட்பு பாராட்டுதல், இன்னும் பகைமை பாராட்டுதலில் மக்களை மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர்.

முதலாவது: பொதுவாக, நிபந்தனையற்ற நட்புப் பாராட்ட தகுதி உடையவர்கள்.

அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் ஈமான் கொண்டவர்கள், அல்லாஹ்விற்கு உளத்தூய்மையுடன் மார்க்க கடமைகளை நிறைவேற்றுபவர்கள் இந்த வகையில் வருவார்கள்.

إِنَّمَا وَلِيُّكُمُ ٱللَّهُ وَرَسُولُهُۥ وَٱلَّذِينَ ءَامَنُواْ ٱلَّذِينَ يُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُونَ ٱلزَّكَوٰةَ وَهُمْ رَٰكِعُونَ ﴿٥٥﴾ وَمَن يَتَوَلَّ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَٱلَّذِينَ ءَامَنُواْ فَإِنَّ حِزْبَ ٱللَّهِ هُمُ ٱلْغَـٰلِبُونَ ﴿٥٦﴾

உங்கள் நண்பர்களெல்லாம் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், இன்னும் தொழுகையை நிலை நிறுத்துகின்ற, ஸகாத்தைக் கொடுக்கின்ற நம்பிக்கையாளர்களும்தான். இன்னும், அ(ந்த நம்பிக்கை கொண்ட) வர்கள் (அல்லாஹ்விற்குமுன்) தலைகுனிவார்கள். இன்னும், எவர் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், நம்பிக்கையாளர்களையும்

நேசி(த்து அவர்களுடன் நட்பு வை)க்கிறார்களோ (அவர்கள் அல்லாஹ்வின் படையினர்.) நிச்சயமாக அல்லாஹ்வின் படையினர்தான் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 5:55,56)

இரண்டாவது: ஒரு பக்கம் நட்பு பாராட்டவும், மறுபுறம் விலகியிருக்கவும் தகுதி உடையவர்கள்.

பாவம் செய்கிற முஸ்லிம்கள் இந்த வகையில் அடங்குவார்கள். அதாவது, இவர்கள் இஸ்லாமின் கடமைகளில் சிலவற்றை அலட்சியம் செய்வார்கள். நிராகரிப்பில் தள்ளிவிடாத பாவங்களை அவர்கள் செய்பவர்களாக இருப்பார்கள். இத்தகையவர்களுக்கு நல்லுபதேசம் செய்ய வேண்டும். அவர்களைக் கண்டிக்க வேண்டும். அவர்களின் பாவங்களை கண்டுகொள்ளாமல் மௌனமாக இருக்க கூடாது. அவர்கள் பாவங்களை விடுகின்ற வரை, இன்னும் அவர்கள் தங்கள் குற்றங்களுக்காக பாவமன்னிப்புக் கோரி, திருந்துகிற வரை அவர்களுக்கு நன்மையை ஏவ வேண்டும். தீமையிலிருந்து அவர்களைத் தடுக்க வேண்டும்.

நபி ﷺ அவர்களது காலத்தில் அப்துல்லாஹ் இப்னு ஹிமார் என்பவர் மது அருந்திய நிலையில் கொண்டுவரப்பட்டார். அவரை சில நபித்தோழர்கள் திட்டியபோது நபி ﷺ அவர்கள், அவரை சபிக்காதீர்கள். நிச்சயமாக அவர் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கிறார் என்று கூறிவிட்டு, அவர் மீது நிறைவேற்ற வேண்டிய தண்டனையையும் நபி ﷺ அவர்கள் நிறைவேற்றினார்கள்.[78]

மூன்றாவது: பொதுவாக விலகியிருக்க தகுதியானவர்கள்.

இவ்வகையில் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாகச் செயல்படுகின்ற இணைவைப்பாளர்கள், மார்க்கத்தை எதிர்க்கின்ற நிராகரிப்பாளர்கள் வருவார்கள். அவர்கள், யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக, நெருப்பு வணங்கிகளாக, அல்லது நாத்திகர்களாக, அல்லது சிலை வணங்கிகளாக இருந்தாலும் சரியே. அதுபோன்றே முஸ்லிம்களின் போர்வையில் இருந்துகொண்டு

78. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6780.

நிராகரிப்பை அல்லது இணைவைத்தலை ஏற்படுத்தக்கூடிய செயல்களை செய்கிறவர்களுக்கும் இதே சட்டம்தான் பொருந்தும். அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தனை கேட்பது, அல்லாஹ் அல்லாதவர்களிடம் இரட்சிப்பை தேடுவது, அல்லாஹ்வை அல்லது அவனது ரஸூலை அல்லது அவனது தீனை ஏசுவது, அல்லது மார்க்கத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் தொடர்பு இல்லை என்று சொல்வது, இந்த மார்க்கம் தற்காலத்திற்கு பொருந்தாது என்று நம்புவது அல்லது இது போன்ற குஃப்ரான செயல்களை செய்பவர்களுக்கு ஆதாரங்களை எடுத்து விளக்கிய பின்னர் அவர்கள் திருந்தவில்லை என்றால் அவர்களிடமும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும். இன்னும் அவர்கள் இந்த பூமியில் சீர்கேடு செய்வதிலிருந்து தடுக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلنَّبِىُّ جَـٰهِدِ ٱلْكُفَّارَ وَٱلْمُنَـٰفِقِينَ وَٱغْلُظْ عَلَيْهِمْ ۚ
وَمَأْوَىٰهُمْ جَهَنَّمُ ۖ وَبِئْسَ ٱلْمَصِيرُ ﴿٩﴾

நபியே! நிராகரிப்பாளர்களிடமும், நயவஞ்சகர்களிடமும் ஜிஹாது செய்வீராக! அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்வீராக! அவர்களின் தங்குமிடம் நரகம்தான். மீளுமிடங்களில் (நரகம்) மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 66:9)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَّا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ يُوَآدُّونَ مَنْ حَآدَّ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَلَوْ
كَانُوٓا۟ ءَابَآءَهُمْ أَوْ أَبْنَآءَهُمْ أَوْ إِخْوَٰنَهُمْ أَوْ عَشِيرَتَهُمْ ۚ

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்கிற மக்கள் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் முரண்படுபவர்களை (மார்க்க சட்டங்களை எதிர்ப்பவர்களை) நேசிப்பவர்களாக இருப்பதை நீர் காணமாட்டீர். (மார்க்க சட்டத்தை எதிர்க்கிற) அவர்கள் தங்கள்

தந்தைகளாக; அல்லது, தங்கள் பிள்ளைகளாக; அல்லது, தங்கள் சகோதரர்களாக; அல்லது, தங்கள் குடும்பத்தினராக இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 58:22)

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ - அல்லாஹ்விற்காக நட்பு பாராட்டுவதில் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய சில கடமைகள் இருப்பதாகக் கருதுகின்றனர்.

அவை பின்வருமாறு,

முதலாவது:

كفر - குஃப்ர் - நிராகரிப்பு மிகைத்துள்ள பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களின் பிரதேசங்களுக்கு ஹிஜ்ரத் செய்தல் வேண்டும். ஆனால், ஹிஜ்ரத் செல்ல முடியாத பலவீனர்கள், இன்னும் ஹிஜ்ரத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டவர்கள் மீது இந்த ஹிஜ்ரத் கட்டாயமில்லை.

இரண்டாவது:

முஸ்லிம்களுக்கு உதவி செய்தல், உடலாலும் பொருளாலும் முஸ்லிம்களுக்கு உறுதுணையாக இருத்தல், அவர்களின் மகிழ்ச்சிகளிலும் துக்கங்களிலும் பங்கெடுத்தல் வேண்டும்.

மூன்றாவது:

தனக்கு விரும்புவதை முஸ்லிம்களுக்கும் விரும்ப வேண்டும். தனக்கு விரும்பும் நன்மையை முஸ்லிம்களுக்கும் விரும்ப வேண்டும். தன்னை விட்டு தீமையை தடுப்பது போன்று முஸ்லிம்களை விட்டும் தீமையை தடுக்க வேண்டும். அவர்களை பரிகாசம் செய்யக் கூடாது. அவர்களோடு நேசத்தோடும் தோழமையோடும் பழக வேண்டும். அவர்களிடம் கலந்தாலோசித்துக்கொள்ள வேண்டும்.

நான்காவது:

இஸ்லாம் விதியாக்கியுள்ள கடமைகள் மற்றும் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். நோயாளிகளை நலன் விசாரிக்க செல்லுதல், ஜனாஸாக்களை

– முஸ்லிம்களில் இறந்தவர்களின் பிரேதங்களை பின்தொடர்ந்து செல்லுதல், முஸ்லிம்களிடம் மென்மையாக நடந்துகொள்ளுதல், அவர்களுடன் பரிவு காட்டுதல், அவர்களுக்காகப் பிரார்த்தனை புரிதல், அவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுதல், அவர்களுக்கு ஸலாம் கூறுதல், கொடுக்கல் வாங்கல்களின் போது அவர்களை ஏமாற்றாதிருத்தல், அவர்களுக்கு மோசடி செய்யாமல் இருத்தல், அவர்களின் செல்வத்தை அநியாயமாக அனுபவிக்காமல் இருத்தல் வேண்டும்.

ஐந்தாவது:

முஸ்லிம்களை உளவு பார்ப்பதையும் அவர்களின் தகவல்கள் மற்றும் இரகசியங்களை அவர்களின் எதிரிகளுக்குப் பகிர்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு தொந்தரவு தருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆறாவது:

எல்லா முஸ்லிம்களோடும் இணைந்திருக்க வேண்டும். அவர்களை விட்டுப் பிரியக் கூடாது. நல்ல காரியங்களிலும், இறையச்சம் சார்ந்த விஷயங்களிலும், நன்மைகளை ஏவி, தீமைகளைத் தடுப்பதிலும் ஒருவர் மற்றவருக்குப் பரஸ்பர ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ – அல்லாஹ்விற்காக விலகியிருத்தல் அல்லது பகைமை பாராட்டுவதில் சில விஷயங்கள் பின்பற்றுதல் வேண்டும் எனக் கருதுகின்றனர்.

முதலாவது:

شرك – ஷிர்க் – இணைவைப்பு, كفر – குஃப்ர் – இறை நிராகரிப்பை வெறுத்தல் வேண்டும்.

இரண்டாவது:

முஸ்லிம்களிடம் சண்டை செய்கிற இறை நிராகரிப்பாளர்களை உற்ற நண்பர்களாகவும், பாதுகாவலர்களாகவும், நேசர்களாகவும் எடுக்காமல் இருத்தல் வேண்டும். அவர்களுடன் நேசம் பாராட்டாமல் இருத்தல்

வேண்டும், அவர்களை விட்டு தூரமாக விலகி இருத்தல் வேண்டும், அவர்கள் நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் சரியே!

மூன்றாவது:

மார்க்கத்தை பின்பற்ற நெருக்கடி தரும் நிராகரிப்பாளர்களின் நாடுகளை விட்டு வெளியேறுதல், அந்த நாடுகளுக்கு பயணம் செய்வதை தவிர்த்தல் வேண்டும்.

மார்க்கத்தை பின்பற்றுவதற்கும், வணக்க வழிபாடுகளை கடைப்பிடிப்பதற்கும் தடை இல்லை என்றால் அவசியத்தின் அடிப்படையில் அந்த நாடுகளுக்கு பயணம் செய்யலாம்.

நான்காவது:

முஸ்லிமல்லாதவர்களின் கலாச்சார விஷயங்களில் அவர்களுக்கு ஒப்பாக இருப்பதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். உண்பது, குடிப்பது, உடுத்துவது போன்ற அவர்களுக்கு என்று தனியாக இருக்கும் கலாச்சார அடையாளங்களில் அவர்களை பின்பற்றக் கூடாது. வெளிப்படையான இந்த காரியங்களில் அவர்களை பின்பற்றுவது அவர்கள் மீது உள்ளத்தில் நேசத்தை உண்டாக்கிவிடும்.

ஐந்தாவது:

முஸ்லிம்களுக்கு எதிராக நிராகரிப்பாளர்களுக்கு உதவி ஒத்தாசை புரியக்கூடாது. அவர்களைப் புகழக்கூடாது. அவர்களைப் போன்ற இறைநிராகரிப்பாளர்களிடம் சண்டை செய்வதற்கே தவிர மற்ற சந்தர்ப்பங்களில் அவர்களிடம் உதவி தேடக்கூடாது. அவர்களை சார்ந்திருத்தல் கூடாது, அவர்களிடம் தோழமை கொள்வதை விட்டும் அவர்களின் சபைகளுக்கு செல்வதை விட்டும் ஒதுங்கி இருக்க வேண்டும். நமது அந்தரங்கக் காரியதரிசிகளாக, நமது ரகசியங்களின் காப்பாளர்களாக, நமது முக்கிய காரியங்களை நிர்வகிக்கும் நிர்வாகிகளாக அவர்களை ஆக்கிக்கொள்ளக் கூடாது.

ஆறாவது:

அவர்களின் பண்டிகைகளிலும் அவர்களின் மத விழாக்களிலும்

கலந்துகொள்ளக் கூடாது. அந்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வாழ்த்துக் கூறக்கூடாது. அவர்களை அதிகம் மதித்து, பெருமைப்படுத்தி தலைவர் அல்லது எஜமானர் என்று புகழ்ந்து பேசுவது கூடாது.

ஏழாவது:

அவர்களில் இறந்துவிட்டவர்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடக்கூடாது. கருணை வேண்டி பிரார்த்திக்கக் கூடாது.

எட்டாவது:

மார்க்க விஷயங்களில் அவர்களுக்கு விட்டுக்கொடுத்தல், அவர்களுடன் வளைந்து செல்லுதல், அவர்களிடம் பணிந்து போகுதல் கூடாது.

ஒன்பதாவது:

அவர்களிடம் தீர்ப்புக் கேட்டு செல்வது கூடாது. அவர்களின் தீர்ப்பைக் கொண்டு திருப்திபடக் கூடாது. அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றக்கூடாது. அவர்களின் மதக் காரியங்களில் எதையும் பின்பற்றக் கூடாது. அவர்களை பின்பற்றுவது அல்லாஹ் இன்னும் அவனது தூதரின் சட்டத்தைப் புறக்கணிப்பதைக் குறிக்கிறது.

பத்தாவது:

அவர்களுக்கு நாம் முந்திக்கொண்டு அஸ்ஸலாமு அலைக்கும் என்று முகமனைக் கூறக்கூடாது.

****

اَلْأَصْلُ السَّادِسُ

التَّصْدِيقُ بِكَرَامَاتِ الْأَوْلِيَاءِ

ஆறாவது அடிப்படை:
இறைநேசர்களின் அற்புதங்களை உண்மைப்படுத்துதல்

التَّصْدِيقُ بِكَرَامَاتِ الْأَوْلِيَاءِ

இறை நேசர்களின் அற்புதங்களை உண்மைப்படுத்துதல்

ஸலஃப் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய அகீதாவின் அடிப்படைகளில் ஒன்று, இறை நேசர்களின் அற்புதங்களை உண்மைப்படுத்துதல் ஆகும்.

كرامة - கராமத் என்பது, நன்மக்கள் சிலரின் வாழ்க்கையில் அவர்களைக் கண்ணியப்படுத்துவதற்காக வழமைக்கு மாற்றமான சில செயல்களை அல்லாஹ் நிகழ்த்துவதாகும். இதைக் குர்ஆனும் ஹதீஸும் அறிவிக்கின்றன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ ٱللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٦٢﴾ ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَكَانُوا۟ يَتَّقُونَ ﴿٦٣﴾ لَهُمُ ٱلْبُشْرَىٰ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا وَفِى ٱلْـَٔاخِرَةِ ۚ لَا تَبْدِيلَ لِكَلِمَٰتِ ٱللَّهِ ۚ ذَٰلِكَ هُوَ ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ﴿٦٤﴾

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் நண்பர்கள், - அவர்கள் மீது ஒரு பயமுமில்லை; இன்னும், அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். அவர்கள் (அல்லாஹ்வை) நம்பிக்கை கொள்வார்கள். இன்னும், அவனை அஞ்சுபவர்களாக இருப்பார்கள். உலக வாழ்க்கையிலும், இன்னும் மறுமை வாழ்க்கையிலும் அவர்களுக்கே நற்செய்தி உண்டு. அல்லாஹ்வுடைய வாக்குகளில் மாற்றம் அறவே இல்லை. இதுதான் மகத்தான வெற்றியாகும். (அல்குர்ஆன் 10:62-64)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ اللهَ قَالَ: مَنْ عَادَى لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْـحَرْبِ

நிச்சயமாக அல்லாஹு தஆலா கூறுகிறான்: எனது நேசர் ஒருவரை யார் பகைப்பானோ அவனுக்கு நான் போரை அறிவித்துவிட்டேன்.[79]

கராமத் உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதில் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ மார்க்க ரீதியான சில சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றுகின்றனர். வழக்கத்திற்கு மாற்றமாக நடக்கும் அனைத்தும் கராமத் என்ற தகுதியை பெறாது. மாறாக கராமத் என்று கருதப்படுகிற காரியங்களில் சில சூனியம், வித்தை, சித்து விளையாட்டாகவும், ஷைத்தானின் உதவியினால் செய்யப்படுகிற மாயமந்திரமாகவும் இருக்கலாம். அல்லது அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒருவனை மயக்குவதற்காக, விட்டுப்பிடிப்பதற்காக செய்யப்படும் ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கலாம்.

கராமத்திற்கும் வித்தைகளுக்கும் உள்ள வேறுபாடு மிகத் தெளிவானதாகும்.

கராமத் – அற்புதம்

இது, அல்லாஹ்விடமிருந்து கொடுக்கப்படக்கூடியதாகும். அதற்குக் காரணம், கராமத் யாரிடமிருந்து வெளிப்படுகிறதோ அவரிடம் இருக்கின்ற வணக்க வழிபாடுகளாகும். மார்க்கத்தை முறையாக பேணி நடக்கின்ற இறையச்சமிக்க நல்லோருக்கு இந்த சிறப்பு கிடைக்கப்பெறுகிறது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا كَانُوٓاْ أَوۡلِيَآءَهُۥٓۚ إِنۡ أَوۡلِيَآؤُهُۥٓ إِلَّا ٱلۡمُتَّقُونَ

அவர்கள் அவனின் நேசர்களாக இருக்கவில்லை. அவனுடைய நேசர்கள் இல்லை, இறையச்சமுள்ளவர்களே தவிர. (அல்குர்ஆன் 8:34)

வித்தை, சித்து விளையாட்டு, மாய மந்திரம்

இவை தந்திரத்தால் அல்லது ஷைத்தானின் துணையுடன் செய்யப்படுகிற ஒன்றாகும். இதை செய்பவர்கள் பாவிகளாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும், வழிகேடர்களாகவும் இருப்பார்கள்.

79. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6502.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِنَّ ٱلشَّيَـٰطِينَ لَيُوحُونَ إِلَىٰٓ أَوْلِيَآئِهِمْ لِيُجَـٰدِلُوكُمْ ۖ
وَإِنْ أَطَعْتُمُوهُمْ إِنَّكُمْ لَمُشْرِكُونَ ﴿١٢١﴾

உங்களிடம் அவர்கள் தர்க்கிப்பதற்காக நிச்சயமாக ஷைத்தான்கள் தங்கள் நண்பர்களுக்கு சொல்லித் தருகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு கீழ்ப்படிந்தால் நிச்சயமாக நீங்கள் இணை வைப்பவர்களாக ஆகிவிடுவீர்கள். (அல்குர்ஆன் 6:121)

அஹ்லுஸ் ஸுன்னா, இந்த உலகில் சூனியமும், சூனியக்காரர்களும் இருப்பதை உண்மை என்று நம்புகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَمَّا جَآءَ ٱلسَّحَرَةُ قَالَ لَهُم مُّوسَىٰٓ أَلْقُوا۟ مَآ أَنتُم مُّلْقُونَ ﴿٨٠﴾

சூனியக்காரர்கள் வந்தபோது, அவர்களை நோக்கி மூஸா கூறினார்: நீங்கள் (சூனியம் செய்வதற்காக) எதை எறிய இருந்தீர்களோ அதை (மைதானத்தில்) எறியுங்கள்! (அல்குர்ஆன் 10:80)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قَالَ أَلْقُوا۟ ۖ فَلَمَّآ أَلْقَوْا۟ سَحَرُوٓا۟ أَعْيُنَ ٱلنَّاسِ وَٱسْتَرْهَبُوهُمْ
وَجَآءُو بِسِحْرٍ عَظِيمٍ ﴿١١٦﴾

(நீங்கள்) எறியுங்கள் என்று (மூஸா) கூறினார். ஆக, அவர்கள் எறிந்தபோது மக்களுடைய கண்களை அவர்கள் மயக்கினர்; இன்னும், அவர்களைத் திடுக்கிடவும் செய்தனர். மேலும், அவர்கள் ஒரு மகத்தான சூனியத்தை செய்து காட்டினர். (அல்குர்ஆன் 7:116)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَـٰكِنَّ ٱلشَّيَـٰطِينَ كَفَرُوا۟ يُعَلِّمُونَ ٱلنَّاسَ ٱلسِّحْرَ

எனினும், ஷைத்தான்கள் அல்லாஹ்வை நிராகரித்தனர். அவர்கள் மனிதர்களுக்கு சூனியத்தையும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

(அல்குர்ஆன் 2:102)

எனினும், சூனியக்காரர்கள் அல்லாஹ்வின் நாட்டமின்றி யாருக்கும் தீங்கு செய்ய முடியாது என அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ நம்புகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا هُم بِضَآرِّينَ بِهِۦ مِنْ أَحَدٍ إِلَّا بِإِذْنِ ٱللَّهِۚ
وَيَتَعَلَّمُونَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْۚ

ஆனால், அல்லாஹ்வின் அனுமதி கொண்டே தவிர அதன் மூலம் அவர்கள் ஒருவருக்கும் தீங்கிழைப்பவர்களாக இல்லை. மேலும், அவர்களுக்கு எது தீங்கிழைக்குமோ, அறவே பலனளிக்காதோ அதையே அவர்கள் கற்கிறார்கள். (அல்குர்ஆன் 2:102)

சூனியம் அல்லாஹ்வின் நாட்டமின்றி தீங்கு விளைவிக்கும் அல்லது நன்மை பயக்கும் என நம்புவது كفر - குஃப்ர் - இறை நிராகரிப்பு ஆகும். சூனியம் செய்வது ஆகுமானது என்று கூறுபவனைக் கொல்வது கட்டாயமாகும். சூனியம் செய்வது ஹராம் என்பது முஸ்லிம்கள் எல்லோரின் ஏகோபித்த முடிவாகும்.

சூனியக்காரனிடம் தவ்பா செய்யும்படி கூறப்படும். அவன் தவ்பா செய்து திருந்திவிட்டால் அவன் விடப்படுவான். இல்லை என்றால் அவன் கொல்லப்படுவான். (இது சில அறிஞர்களின் கூற்றாகும். மற்ற அறிஞர்களோ சூனியக்காரனுக்கு அவனது தவ்பா இவ்வுலகத்தில் பலனளிக்காது. யார் சூனியம் செய்பவனாக கண்டுபிடிக்கப்பட்டானோ அவன் கொல்லப்படுவான். அவன் தவ்பா செய்துவிட்டால் அது அவனுக்கு மறுமையில் பலனளிக்கும் என்று கூறுகின்றனர்.)

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவின் அடிப்படைகளில் ஒன்று, நல்ல கனவுகளை உண்மைப்படுத்துதல் ஆகும். நல்ல கனவுகள் நபித்துவத்தின் ஒரு பகுதியாகும். நல்லோருக்கு இருக்கின்ற உண்மையான فراسة

– ஃபிராஸத் – நுண்ணறிவு உண்மையாகும். (ஃபிராஸத் என்றால் ஒருவரை பார்த்து, அவரின் நிலைமைகளைக் கவனித்து அவரைப் பற்றி கருத்து சொல்வது. இது சில நல்லோருக்கு இறைவன் புறத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஓர் அருளாகும்.)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَمَّا بَلَغَ مَعَهُ ٱلسَّعْىَ قَالَ يَٰبُنَىَّ إِنِّىٓ أَرَىٰ فِى ٱلْمَنَامِ أَنِّىٓ أَذْبَحُكَ فَٱنظُرْ مَاذَا تَرَىٰ ۚ قَالَ يَٰٓأَبَتِ ٱفْعَلْ مَا تُؤْمَرُ ۖ سَتَجِدُنِىٓ إِن شَآءَ ٱللَّهُ مِنَ ٱلصَّٰبِرِينَ ﴿١٠٢﴾

ஆக, (அந்தக் குழந்தை) அவருடன் உழைக்கின்ற பருவத்தை அடைந்தபோது அவர் கூறினார்: "என் மகனே! நிச்சயமாக நான் உன்னை பலியிடுவதாக கனவில் பார்க்கிறேன். ஆகவே, நீ என்ன கருதுகிறாய் என்று நீ யோசி(த்துச் சொல்)!" (மகனார்) கூறினார்: என் தந்தையே! உமக்கு எது ஏவப்படுகிறதோ அதை நீர் நிறைவேற்றுவீராக! இன் ஷா அல்லாஹ் (–அல்லாஹ் நாடினால் அல்லாஹ்வின் தீர்ப்பின் மீது) பொறுமையாக இருப்பவர்களில் ஒருவராக என்னை நீர் காண்பீர். (அல்குர்ஆன் 37:102)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: لَمْ يَبْقَ مِنَ النُّبُوَّةِ إِلَّا الْمُبَشِّرَاتُ قَالُوا: وَمَا الْمُبَشِّرَاتُ؟ قَالَ: الرُّؤْيَا الصَّالِحَةُ

நபித்துவத்தில் முபஷ்ஷிராத் மட்டுமே எஞ்சி இருக்கின்றன என நபி ﷺ அவர்கள் சொன்னபோது, முபஷ்ஷிராத் என்றால் என்னவென்று தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி ﷺ அவர்கள், நல்ல கனவு எனக் கூறினார்கள்.[80]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ ஜின்களில் ஷைத்தான்களை அல்லாஹ் படைத்திருக்கிறான் எனவும்; அவர்கள் மனிதர்களின் உள்ளங்களில் ஊசலாட்டத்தை ஏற்படுத்துகின்றனர் எனவும்; அவர்களுக்குத் தீமையைச் செய்கின்றனர், அவர்களை மனக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றனர் எனவும் நம்புகின்றனர்.

80. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6990.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِنَّ ٱلشَّيَـٰطِينَ لَيُوحُونَ إِلَىٰٓ أَوْلِيَآئِهِمْ لِيُجَـٰدِلُوكُمْ ۖ
وَإِنْ أَطَعْتُمُوهُمْ إِنَّكُمْ لَمُشْرِكُونَ ﴿١٢١﴾

இன்னும், நிச்சயமாக ஷைத்தான்கள் தங்கள் நண்பர்களுக்கு சொல்லித் தருகிறார்கள், அவர்கள் உங்களிடம் தர்க்கிப்பதற்காக. நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தால் நிச்சயமாக நீங்கள் இணை வைப்பவர்களாக ஆகிவிடுவீர்கள். (அல்குர்ஆன் 6:121)

அல்லாஹ், ஒரு ஞானத்தின் அடிப்படையில் தனது அடியார்களில் தான் நாடியவர்கள் மீது ஷைத்தான்களைச் சாட்டிவிடுகிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱسْتَفْزِزْ مَنِ ٱسْتَطَعْتَ مِنْهُم بِصَوْتِكَ وَأَجْلِبْ عَلَيْهِم بِخَيْلِكَ وَرَجِلِكَ
وَشَارِكْهُمْ فِى ٱلْأَمْوَٰلِ وَٱلْأَوْلَـٰدِ وَعِدْهُمْ ۚ وَمَا يَعِدُهُمُ ٱلشَّيْطَـٰنُ إِلَّا غُرُورًا ﴿٦٤﴾

இன்னும், அவர்களில் உனக்கு இயன்றவர்களை உன் சப்தத்தைக் கொண்டு தூண்டிவிடு; இன்னும், உன் குதிரைப் படைகளையும், காலாட் படைகளையும் அவர்கள் மீது ஏவிவிடு; மேலும், (அவர்களுடைய) செல்வங்களிலும் சந்ததிகளிலும் அவர்களுடன் இணைந்து விடு; இன்னும், அவர்களுக்கு வாக்களி. ஆனால், ஏமாற்றுவதற்கே தவிர ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டான். (அல்குர்ஆன் 17:64)

மேலும் அல்லாஹு தஆலா தனது அடியார்களில் தான் நாடியோரை ஷைத்தானின் சூழ்ச்சிகளில் இருந்தும் சதிகளிலிருந்தும் பாதுகாக்கிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّهُۥ لَيْسَ لَهُۥ سُلْطَـٰنٌ عَلَى ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَلَىٰ رَبِّهِمْ يَتَوَكَّلُونَ ﴿٩٩﴾ إِنَّمَا
سُلْطَـٰنُهُۥ عَلَى ٱلَّذِينَ يَتَوَلَّوْنَهُۥ وَٱلَّذِينَ هُم بِهِۦ مُشْرِكُونَ ﴿١٠٠﴾

நிச்சயமாக எவர்கள் (அல்லாஹ்வை) நம்பிக்கை கொண்டு, தங்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்(து அவனை மட்டுமே சார்ந்) திருக்கிறார்களோ அவர்கள் மீது அவனுக்கு (-ஷைத்தானுக்கு) அதிகாரம் எதுவும் இல்லை. நிச்சயமாக அவனுடைய அதிகாரமெல்லாம் அவனுடன் நட்பு வைப்பவர்கள் மீதும் அல்லாஹ்விற்கு இணைவைப்பவர்கள் மீதும்தான். (அல்குர்ஆன் 16:99,100)

****

اَلْأَصْلُ السَّابِعُ
مَنْهَجُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ
فِي التَّلَقِّي وَالْاسْتِدْلَالِ

ஏழாவது அடிப்படை:
கல்வி எடுப்பதிலும் ஆதாரங்களை பயன்படுத்துவதிலும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய வழிமுறை

مَنْهَجُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ فِي التَّلَقِّي وَالاسْتِدْلَالِ

கல்வி எடுப்பதிலும் ஆதாரங்களைப் பயன்படுத்துவதிலும் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய வழிமுறை

ஸலஃபுஸ் ஸாலிஹ் - அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய அகீதாவின் அடிப்படைகளில் ஒன்று;

التلقى والإستدلال - அத் தலக்கி வல் இஸ்தித்லால் - கல்வி எடுப்பது, மற்றும் ஆதாரங்களை பயன்படுத்துவதில் பின்பற்ற வேண்டிய வழிமுறையாகும். அதாவது கண்ணியமிக்க, கம்பீரமிக்க அல்லாஹ்வின் வேதத்தில் வந்ததையும் அல்லாஹ் உடைய நபி ﷺ அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்ட ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ளதையும் உள்ளும் புறமும் பின்பற்ற வேண்டும். அவ்விரண்டுக்கும் முழுமையாக கட்டுப்பட வேண்டும், கீழ்ப்படிய வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى ٱللَّهُ وَرَسُولُهُۥٓ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ
ٱلْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ ۗ وَمَن يَعْصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدْ ضَلَّ ضَلَٰلًا مُّبِينًا ﴿٣٦﴾

நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கும் - அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவுசெய்துவிட்டால் - அவர்களின் (அந்த) காரியத்தில் அவர்களுக்கு என்று வேறு ஒரு விருப்பம் இருப்பது ஆகுமானதல்ல. ஆக, யார் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மாறுசெய்வாரோ அவர் திட்டமாக தெளிவாக வழிகெட்டுவிட்டார். (அல்குர்ஆன் 33:36)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

تَرَكْتُ فِيْكُمْ أَمْرَيْنِ لَنْ تَضِلُّوا مَا تَمَسَّكْتُمْ بِهِمَا : كِتَابَ اللهِ وسُنَّةَ نَبِيِّهِ ﷺ

உங்களிடம் இரு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் கடைப்பிடிக்கும் போதெல்லாம் வழி தவறமாட்டீர்கள். அல்லாஹ்வின் வேதமும், அவனது இறைத்தூதரின் வழிமுறையும் ஆகும்.[81]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ கூறுவதாவது: ஆதாரங்களை அணுகுவதில் முதலில் அல்லாஹ்வின் வேதம், அதற்கு பிறகு நபி ﷺ அவர்களின் வழிமுறை என்று கூறக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் வேதமும் அவனது ரஸூலின் ஸுன்னாவும் என இரண்டையும் இணைத்தே கூற வேண்டும். ஏனெனில், ஸுன்னா அல்லாஹ்வின் வேதத்தோடு ஒன்றிணைக்கப்பட்டதாகும். மேலும், அல்லாஹ்வின் தூதருக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதை அல்லாஹ் நமக்கு கட்டாயமாக்கினான். நபி ﷺ அவர்களின் ஸுன்னாதான் அல்லாஹ்வின் நோக்கத்தை நமக்கு விளக்கக் கூடியதாக இருக்கிறது.

அடுத்ததாக, இதற்குப் பின்னர் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ முஹாஜிர்கள், அன்ஸாரிகளாகிய நபித்தோழர்களை பொதுவாகவும் நேர்வழி பெற்ற நான்கு கலீஃபாக்களை குறிப்பாகவும் பின்பற்றுவார்கள். நபி ﷺ அவர்கள் குறிப்பாக நேர்வழிபெற்ற கலீஃபாக்களைப் பின்பற்றுமாறு உபதேசித்துள்ளார்கள்.

பின்னர், நபித்தோழர்களைத் தொடர்ந்து வந்த அவர்களுக்குப் பின்னர் தோன்றிய சிறப்பிற்குரிய தலைமுறையினரையும் பின்பற்றுவார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الْمَهْدِيِّينَ الرَّاشِدِينَ، تَمَسَّكُوا بِهَا وَعَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ، فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ، وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ

உங்களுக்கு நான் எனது ஸுன்னாவையும் நேர்வழிபெற்ற நல்லறிவுடைய

81. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ؓ, நூல்: முஸ்தத்ரக் அல்ஹாகிம் எண்: 319.

கலீஃபாக்களின் ஸுன்னாவையும் ஏவுகிறேன். அவற்றை நீங்கள் பற்றிக்கொள்ளுங்கள். அவற்றை நீங்கள் கடைவாய்ப் பற்களால் கவ்விக்கொள்ளுங்கள். புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களைக் குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்தும் بدعة - பித்ஆ ஆகும். அனைத்து பித்ஆக்களும் வழிகேடு ஆகும்.[82]

இதனடிப்படையில், கருத்து முரண்பாடுகள் ஏற்படும்போது அஹ்லுஸ் ஸுன்னா - அல்லாஹ்வின் வேதத்தின் பக்கமும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவின் பக்கமும் திரும்பி விடுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ٥٩

ஆக, (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் உங்களுக்குள் ஒரு விஷயத்தில் கருத்து முரண்பட்டால், (மெய்யாகவே) நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் திருப்பிவிடுங்கள். இதுதான் உங்களுக்கு சிறந்ததும், மிக அழகான முடிவும் ஆகும். (அல்குர்ஆன் 4:59)

குர்ஆனையும், ஸுன்னாவையும் விளங்கிக் கொள்வதற்கு ஒரு மீளுமிடமாக அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவிடம் நபித்தோழர்கள் விளங்குகிறார்கள். குர்ஆன், இன்னும் ஸஹீஹான ஹதீஸ்களில் எதற்கும் நாம் நமது அறிவு, அனுமானம், ஞான உதிப்பு, நமது உணர்வு, இன்ன ஷைக் உடைய கூற்று, இன்ன இமாமுடைய கூற்று என்று இப்படி எதைக் கொண்டும் முரண்படக் கூடாது. ஏனெனில், நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் வாழ்நாளிலேயே மார்க்கம் முழுமை அடைந்துவிட்டது.

82. அறிவிப்பாளர்: அல்இர்பாழ் இப்னு ஸாரியா ؓ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4607.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

ٱلۡيَوۡمَ أَكۡمَلۡتُ لَكُمۡ دِينَكُمۡ وَأَتۡمَمۡتُ عَلَيۡكُمۡ نِعۡمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلۡإِسۡلَٰمَ دِينٗاۚ

இன்று உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை நான் முழுமையாக்கி விட்டேன். மேலும், என் அருட்கொடையை உங்கள் மீது நிறைவு செய்து விட்டேன். இன்னும், இஸ்லாமை உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன். (அல்குர்ஆன் 5:03)

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ அல்லாஹ் உடைய சொல்லுக்கு மேலாகவும் நபி ﷺ அவர்களுடைய சொல்லுக்கு மேலாகவும் மனிதர்களில் எந்த ஒருவருடைய கூற்றையும் முற்படுத்த மாட்டார்கள்.

அல்லாஹ்ஹு தஆலா கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تُقَدِّمُواْ بَيۡنَ يَدَيِ ٱللَّهِ وَرَسُولِهِۦۖ وَٱتَّقُواْ ٱللَّهَۚ إِنَّ ٱللَّهَ سَمِيعٌ عَلِيمٞ ۝١

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முன்பாக நீங்கள் முந்தாதீர்கள். இன்னும், அல்லாஹ்வை அஞ்சுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 49:01)

அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் முன்னால் முந்துவது, அதாவது அவர்களின் கூற்றை விட பிறர் கூற்றுக்கு முன்னுரிமை கொடுப்பது அல்லாஹ்வின் மீது கல்வி அறிவின்றி பேசுவதில் அடங்கும். இது, ஷைத்தான் மனிதனுக்கு அலங்கரித்து காட்டும் செயலாகும்.

தெளிவான அறிவு, சரியான அறிவிப்புக்கு (ஸஹீஹான ஹதீஸுக்கு) எப்போதும் ஒத்துப்போகக் கூடியதாகவே இருக்கும். குழப்பம் ஏற்பட்டால் நாம் அறிவிப்பைத்தான் (ஹதீஸைதான்) முற்படுத்த வேண்டும். அறிவால் ஏற்றுக்கொள்ள முடியாத எந்த ஒரு செய்தியையும் அறிவிப்பு

கூறாது. அறிவு திகைத்துப் போகும்படியான செய்திகள் அறிவிப்புகளில் இருக்கலாம். ஆனால், அறிவால் ஏற்றுக்கொள்ள முடியாத செய்திகள் எதுவும் அறிவிப்புகளில் இருக்காது. அறிவுப்புகளில் வந்துள்ள அத்தனை செய்திகளையும் அறிவு உண்மைப்படுத்த வேண்டும். அறிவில் வரக்கூடிய அனைத்தையும் அறிவிப்பு உண்மைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. (அறிவிப்பு என்பது குர்ஆனையும் ஸஹீஹான ஹதீஸையும் குறிக்கும் சொல்லாகும்.)

அஹ்லுஸ் ஸுன்னா அறிவைக் குறைவாக மதிக்க மாட்டார்கள். ஒரு மனிதன் مكلف முகல்லஃப் - அல்லாஹ்வின் சட்டத்திற்கு உட்பட்டவனாக ஆகுவதற்கு அறிவு அடிப்படையாக இருக்கிறது. என்றாலும் அறிவு ஒருபோதும் ஷரீஅத்தை முந்திவிட முடியாது. அப்படி இருக்குமேயானால் மனிதர்கள் இறைத்தூதர்களின் தேவை இல்லாமல் ஆகி இருப்பார்கள். என்றாலும் அறிவு மார்க்கத்தின் எல்லைக்குள் இருந்து செயல்பட வேண்டும். ஆகவேதான் நமக்கு அஹ்லுஸ் ஸுன்னா என்று சொல்லப்படுகிறது. காரணம், நாம் நபி ﷺ அவர்களின் வழிமுறையைத்தான் உறுதியாக பற்றிப்பிடிப்போம், அதைத்தான் பின்பற்றுவோம், அதற்குத்தான் கட்டுப்படுவோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَإِن لَّمْ يَسْتَجِيبُوا۟ لَكَ فَٱعْلَمْ أَنَّمَا يَتَّبِعُونَ أَهْوَآءَهُمْ ۚ وَمَنْ أَضَلُّ مِمَّنِ ٱتَّبَعَ
هَوَىٰهُ بِغَيْرِ هُدًى مِّنَ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلظَّـٰلِمِينَ ﴿٥٠﴾

ஆக, அவர்கள் உமக்கு பதிலளிக்கவில்லை என்றால், நிச்சயமாக அவர்கள் பின்பற்றுவதெல்லாம் தங்கள் மன விருப்பங்களைத்தான் என்பதை நீர் அறிவீராக!. அல்லாஹ்வின் நேர்வழி இன்றி தனது மன விருப்பத்தைப் பின்பற்றியவனை விட பெரும் வழிகேடன் யார்? நிச்சயமாக அல்லாஹ் (அவனது கட்டளைகளை மீறுகிற) அநியாயக்கார மக்களை நேர்வழி செலுத்த மாட்டான். (அல்குர்ஆன் 28:50)

குர்ஆன், ஸுன்னாவிற்கு பிறகு உம்மத்தின் மார்க்க அறிஞர்கள் எதை ஏகோபித்த முடிவோடு ஏற்றுக்கொண்டார்களோ அதை

அஹ்லுஸ் ஸுன்னா எடுத்துக்கொள்வார்கள், இன்னும் அதை சார்ந்திருப்பார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ ابْنِ عُمَرَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: إِنَّ اللهَ لَا يَجْمَعُ أُمَّتِي عَلَىٰ ضَلَالَةٍ، وَيَدُ اللهِ مَعَ الْـجَمَاعَةِ، وَمَنْ شَذَّ شَذَّ إِلَى النَّارِ

நிச்சயமாக அல்லாஹ் என் உம்மத்தை வழிகேட்டில் ஒன்றிணைக்க மாட்டான். அல்லாஹ்வின் கரம் ஜமாஆவின் மீது இருக்கிறது. யார் தனித்துச் செல்வாரோ அவர் நரகத்தில் தனித்துவிடுவார்.[83]

ஆக, இந்த உம்மத் ஒரு பொய்யான, தவறான கருத்தில் ஒருமித்துவிடுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டதாகும். உம்மத் எல்லோரும் சேர்ந்து சத்தியத்தை விட்டுவிட்டார்கள் என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும்.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் அல்லாத யார் ஒருவரும் معصوم மஃஸூம் – குற்றம் குறைகளிலிருந்து முற்றிலும் பாதுகாக்கப்பட்டவர் என்று அஹ்லுஸ் ஸுன்னா நம்ப மாட்டார்கள். நமக்குத் தெளிவற்ற மார்க்க சட்டங்களில் தேவைக்கு ஏற்ப ஆய்வு செய்வதை ஆகுமானதாகக் கருதுகிறார்கள். இருப்பினும் எவர் ஒருவருடைய கருத்துக்கும் அவர்கள் பிடிவாதம் பிடிக்க மாட்டார்கள், அது குர்ஆன், ஸுன்னாவுக்கும் தோதுவானதாக, உடன்பட்டதாக இருந்தாலே தவிர.

இன்னும், ஆய்வு செய்பவர் சரியான முடிவையும் எட்டலாம், அல்லது தவறும் இழைக்கலாம் என அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர். ஆக, ஆய்வு செய்பவர் சரியான முடிவை எட்டிவிட்டால் அவருக்கு இரு கூலிகள் உண்டு. அவர் தவறிழைத்துவிட்டால் அவருக்கு அவர் ஆய்வு செய்ததற்காக ஒரு கூலி உண்டு. ஆய்வுக்குரிய சட்டங்களில் ஆய்வு செய்வது அவர்களுக்கு மத்தியில் பகைமையையோ அல்லது ஒருவர் ஒருவரை வெறுப்பதையோ ஏற்படுத்தி விடாது.

83. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 2167.

மாறாக, அவர்கள் தங்களுக்குள் ஒருவர் ஒருவரை நேசிப்பார்கள். ஒருவர் ஒருவருக்கு உதவியாக ஒத்தாசையாக இருப்பார்கள். ஒருவர் தொழுகை நடத்தும்போது அவருக்கு பின்னர் மற்றவர் தொழுவார். கிளை விஷயங்களில் அவர்களுக்கு மத்தியில் மாறுபட்ட கருத்து இருந்தாலும் அவர்கள் தங்களுக்குள் இத்தகைய பண்புகளைத்தான் பின்பற்றி நடப்பார்கள்.

ஒரு குறிப்பிட்ட ஃபிக்ஹ் மத்ஹபை மட்டும் முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்த மாட்டார்கள். ஒருவர் ஆதாரம் தெரிந்து ஒரு மத்ஹபை பின்பற்ற வேண்டும், கண்மூடித்தனமாக பின்பற்றுதல் இருக்கக் கூடாது என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர். ஒரு மத்ஹபுடைய ஆதாரம் வலிமையாக இருப்பதை அறிந்துகொண்டால் தனது மத்ஹபை விட்டு அந்த மத்ஹபுக்கு மாறுவது முஸ்லிம் மீது கட்டாயமாகும். கல்வி கற்கிற மாணவரிடம் தகுதி இருந்தால் அவர் அதன் மூலம் ஆதாரங்களை நன்கு தெளிவாக அறிந்து அந்த ஆதாரங்களுக்கு ஏற்ப அமல் செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் ஒரு இமாமுடைய கருத்தை விட இன்னொரு இமாமின் கருத்து ஆதாரத்தால் சரியானதாகவும் வலிமையானதாகவும் இருந்தால் அவர் அந்த கருத்தின் பக்கம் மாறிவிட வேண்டும். ஆதாரத்தை அறியாமல் ஒருவரின் கருத்தை ஏற்று ஒருவரின் கருத்தை விடுவது கூடாது. இவ்வாறு செய்வது அந்த கல்வி எடுக்கும் மாணவரை முகல்லிதாக மாற்றிவிடும். கருத்து வேறுபாடு உடைய விஷயங்களில் தன்னால் முடிந்தளவு ஆராய்ச்சி செய்து, ஆதாரங்களை ஆய்வு செய்து தன்னிடம் எந்த கருத்து தெளிவாக உறுதியாகிறதோ அதை மட்டுமே அவர் எடுத்துக்கொள்ள வேண்டும். அவரால் மாறுபட்ட இரு கருத்துகளுக்கு இடையில் ஆய்வு செய்து முடிவெடுக்க முடியவில்லை என்றால் அவருடைய சட்டம் பொதுமக்களின் சட்டத்தை போன்றுதான். அதாவது நம்பத்தகுந்த கல்வியாளர்களிடம் கருத்து கேட்டு அவர்களின் வழிகாட்டுதல் படி நடக்க வேண்டும்.

ஆதாரங்களைக் கற்றறிய முடியாத பாமரருக்கு என்று எந்த ஒரு பொதுவான மத்ஹபும் இல்லை. மாறாக, அவருடைய மத்ஹப் அவரின்

முஃப்தியுடைய - அதாவது அவர் யாரிடம் சட்டம் கேட்கிறாரோ அவருடைய மத்ஹபாக இருக்கும். ஆகவே, குர்ஆனையும் ஸுன்னாவையும் நன்கு கற்ற அறிஞரைத் தேடிச் சென்று அவர் தனக்குத் தேவையான சட்டங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَسۡـَٔلُوٓاْ أَهۡلَ ٱلذِّكۡرِ إِن كُنتُمۡ لَا تَعۡلَمُونَ ٤٣

ஆகவே, நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் ஞானமுடையவர்களைக் கேளுங்கள்! (அல்குர்ஆன் 16:43)

மேலும், அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ கூறுவதாவது: மார்க்கத்தில் ஞானம் பெறுவது என்பது கல்வி கற்பது இன்னும் கற்றபடி அமல் செய்வதைக் கொண்டுதான் முழுமை அடையும். யார் அதிகமான கல்விகளைக் கற்று, பின்னர் அதன்படி அமல் செய்யவில்லையோ அல்லது நபி ﷺ அவர்களின் வழியைப் பின்பற்றவில்லையோ, அவர்களின் ஸுன்னாவின்படி அமல் செய்யவில்லையோ அவர் மார்க்க ஞானமுடையவர் இல்லை.

****

اَلْأَصْلُ الثَّامِنُ

وُجُوبُ طَاعَةِ وُلَاةِ أَمْرِ الْمُسْلِمِينَ بِالْمَعْرُوفِ

எட்டாவது அடிப்படை:

முஸ்லிம்களின் காரியங்களுக்குப் பொறுப்பேற்றவர்களுக்கு நல்ல காரியத்தில் கட்டாயமாக கீழ்ப்படிந்து நடத்தல்

وُجُوبُ طَاعَةِ وُلَاةِ أَمْرِ الْمُسْلِمِينَ بِالْمَعْرُوفِ

முஸ்லிம்களின் காரியங்களுக்குப் பொறுப்பேற்றவர்களுக்கு நல்ல காரியத்தில் கட்டாயமாக கீழ்ப்படிந்து நடத்தல்

ஸலஃப் ஸாலிஹ் – அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கையின் அடிப்படைகளில் ஒன்றாவது: முஸ்லிம்களின் காரியங்களுக்குப் பொறுப்பேற்ற ஆட்சியாளர்களுக்கு நன்மையான விஷயங்களில் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதாகும். அவர்கள் பாவமான காரியத்தை ஏவினால் அதில் அவர்களுக்கு கீழ்ப்படிதல் கூடாது. பாவமல்லாத மற்ற எல்லா காரியங்களிலும் நல்ல முறையில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ٥٩

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்விற்குக் கீழ்ப்படியுங்கள். இன்னும், (அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் ஆட்சியாளர்களுக்கும் கீழ்ப்படியுங்கள். ஆக, (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் உங்களுக்குள் ஒரு விஷயத்தில் தகராறு செய்தால், (மெய்யாகவே) நீங்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் திருப்பிவிடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பைத் திருப்தியுடன் ஒப்புக் கொள்ளுங்கள்.) இதுதான் உங்களுக்கு சிறந்ததும், மிக அழகான முடிவும் ஆகும். (அல்குர்ஆன் 4:59)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ أَطَاعَنِي فَقَدْ أَطَاعَ اللَّهَ، وَمَنْ عَصَانِي فَقَدْ عَصَى اللَّهَ، وَمَنْ يُطِعِ الْأَمِيرَ فَقَدْ أَطَاعَنِي، وَمَنْ يَعْصِ الْأَمِيرَ فَقَدْ عَصَانِي

யார் எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பாரோ அவர் திட்டமாக அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்தார். யார் எனக்கு மாறுசெய்வாரோ அவர் திட்டமாக அல்லாஹ்விற்கு மாறுசெய்தார். யார் அமீருக்கு கீழ்ப்படிவாரோ அவர் திட்டமாக எனக்கு கீழ்ப்படிந்தார். யார் அமீருக்கு மாறுசெய்வாரோ அவர் திட்டமாக எனக்கு மாறுசெய்தார்.[84]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ اسْمَعُوا وَأَطِيعُوا، وَإِنِ اسْتُعْمِلَ عَلَيْكُمْ عَبْدٌ حَبَشِيٌّ، كَأَنَّ رَأْسَهُ زَبِيبَةٌ

நீங்கள் செவிதாழ்த்துங்கள், கீழ்ப்படியுங்கள், உலர்ந்த திராட்சையை போன்று தலையுடைய நீக்ரோ அடிமை உங்களுக்கு ஆளுனராக ஆக்கப்பட்டாலும் சரியே![85]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنِ ابْنِ عَبَّاسٍ ﷺ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ: مَنْ كَرِهَ مِنْ أَمِيرِهِ شَيْئًا، فَلْيَصْبِرْ عَلَيْهِ، فَإِنَّهُ لَيْسَ أَحَدٌ مِنَ النَّاسِ خَرَجَ مِنَ السُّلْطَانِ شِبْرًا، فَمَاتَ عَلَيْهِ، إِلَّا مَاتَ مِيتَةً جَاهِلِيَّةً

யார் தனது அமீரிடம் சில செயலை வெறுப்பாரோ அவர் அவரை பொருத்துக்கொள்ளட்டும். ஏனெனில், மக்களிலிருந்து யார் ஒருவர் சுல்தானைவிட்டு ஒரு ஜான் அளவு வெளியேறி, அவர் அதே நிலையில் இறந்துவிட்டால் அவருடைய மரணம் ஜாஹிலிய்யா உடைய மரணமாகவே தவிர இருக்காது.[86]

84. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2957.
85. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 7142.
86. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1849.

ஆக, அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ கூறுவதாவது: நல்ல விஷயங்களில் ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது இஸ்லாமிய கொள்கையின் அடிப்படைகளில் ஒரு பெரிய அடிப்படையாகும். ஆகவேதான் ஸலஃப் இமாம்கள், ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிவதைக் கொள்கைகளில் ஒன்றாக வைத்திருக்கிறார்கள். கொள்கை நூல்களில் இதை விரிவாக தெளிவுப்படுத்தி பேசாத நூல் மிகக் குறைவாகவே இருக்கும். இது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்க ரீதியான கடமையாகும். காரணம், இஸ்லாமிய அரசாங்கத்தில் இணைவதற்கு, (அதன் உறுப்பினர்களில் ஒருவராக ஆகுவதற்கு) இது அடிப்படையான காரியமாக இருக்கிறது.

அதிகாரிகள், ஆளுநர்கள், ஆட்சியாளர்கள் நல்லவர்களோ அல்லது கெட்டவர்களோ அவர்களுக்கு பின்னால் ஜுமுஆ மற்றும் ஈத் தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும், அவர்களுடன் சேர்ந்து நன்மையை ஏவ வேண்டும், தீமையிலிருந்து தடுக்க வேண்டும், அவர்களுடன் சேர்ந்து ஹஜ் செய்ய வேண்டும் என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர். அவர்களின் சீர்திருத்தத்திற்காக, நேர்மையான நடத்தைக்காக துஆ கேட்க வேண்டும். அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். அவர்கள் كفر – குஃப்ர் அல்லாத வேறு ஒரு முரண்பாடான காரியத்தைச் செய்தாலும் அவர்களுக்கு எதிராக வாளேந்தி யுத்தம் செய்வது கூடாது என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர். இது விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆட்சியாளர்களிடம் வெளிப்படையான நிராகரிப்பு நிகழாத வரை பாவமல்லாத காரியத்தில் அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று நபி ﷺ அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். இன்னும், முஸ்லிம்கள் ஒரு தலைமையின் கீழ் ஒற்றுமையான பின்னர் அந்த ஒற்றுமையை யார் பிரிக்க நாடி யுத்தம் செய்கிறார்களோ அவர்களுக்கு துணை போகக் கூடாது, இன்னும், முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏற்படும் குழப்பங்களில் (ஒரு சாராரை ஆதரித்து) யுத்தம் செய்யக் கூடாது என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَوْفِ بْنِ مَالِكٍ ﷺ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ: خِيَارُ أَئِمَّتِكُمُ الَّذِينَ تُحِبُّونَهُمْ

وَيُحِبُّونَكُمْ، وَيُصَلُّونَ عَلَيْكُمْ وَتُصَلُّونَ عَلَيْهِمْ، وَشِرَارُ أَئِمَّتِكُمُ الَّذِينَ تُبْغِضُونَهُمْ وَيُبْغِضُونَكُمْ، وَتَلْعَنُونَهُمْ وَيَلْعَنُونَكُمْ، قِيلَ: يَا رَسُولَ اللهِ، أَفَلَا نُنَابِذُهُمْ بِالسَّيْفِ؟ فَقَالَ: لَا، مَا أَقَامُوا فِيكُمُ الصَّلَاةَ، وَإِذَا رَأَيْتُمْ مِنْ وُلَاتِكُمْ شَيْئًا تَكْرَهُونَهُ، فَاكْرَهُوا عَمَلَهُ، وَلَا تَنْزِعُوا يَدًا مِنْ طَاعَةٍ

உங்கள் தலைவர்களில் சிறந்தவர்கள் யாரென்றால் அவர்களை நீங்கள் நேசிப்பீர்கள், அவர்களும் உங்களை நேசிப்பார்கள். அவர்கள் உங்களுக்கு துஆ கேட்பார்கள். நீங்கள் அவர்களுக்கு துஆ கேட்பீர்கள். உங்கள் தலைவர்களில் தீயவர்கள் யாரென்றால் அவர்களை நீங்கள் வெறுப்பீர்கள், அவர்களும் உங்களை வெறுப்பார்கள். நீங்கள், அவர்களை சபிப்பீர்கள்; அவர்களும் உங்களைச் சபிப்பார்கள். அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அவர்களிடம் வாளேந்தி சண்டை செய்ய வேண்டாமா? என்று கேட்கப்பட்டது. ஆக, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அவர்கள் உங்களுக்குத் தொழுகையை நிலை நிறுத்தித் தரும் காலமெல்லாம் அது கூடாது. நீங்கள் உங்கள் ஆட்சியாளர்களிடம் நீங்கள் வெறுக்கும்படியான எதையும் கண்டால் அவர்களின் செயலை வெறுங்கள்! கீழ்ப்படிவதிலிருந்து விலகி விடாதீர்கள்![87]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أُمِّ سَلَمَةَ ﵂ زَوْجِ النَّبِيِّ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ: إِنَّهُ يُسْتَعْمَلُ عَلَيْكُمْ أُمَرَاءُ، فَتَعْرِفُونَ وَتُنْكِرُونَ، فَمَنْ كَرِهَ فَقَدْ بَرِئَ، وَمَنْ أَنْكَرَ فَقَدْ سَلِمَ، وَلَكِنْ مَنْ رَضِيَ وَتَابَعَ، قَالُوا: يَا رَسُولَ اللهِ، أَلَا نُقَاتِلُهُمْ؟ قَالَ: لَا، مَا صَلَّوْا

நிச்சயமாக உங்கள் மீது பல அமீர்கள் நியமிக்கப்படலாம். அவர்களின் செயல்களில் சில நீங்கள் ஏற்கும்படியாகவும் இருக்கும். சில நீங்கள் வெறுக்கும்படியாகவும் இருக்கும். ஆக, யார் (அவர்களின் செயல்களை) வெறுத்தாரோ அவர் குற்றத்திலிருந்து நீங்கிவிட்டார். யார் அவர்களை

87. அறிவிப்பாளர்: அவ்ஃப் இப்னு மாலிக் அல் அஷ்ஜயீ ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1855.

கண்டித்தாரோ அவர் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்பு பெற்றார். என்றாலும், யார் அவர்களின் செயல்களை திருப்திப்படுகின்றாரோ இன்னும் பின்பற்றுவாரோ அவர் - (அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாகிவிடுவார்). தோழர்கள் கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதரே நாங்கள் அவர்களிடம் யுத்தம் செய்ய வேண்டாமா? நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: இல்லை, அவர்கள் தொழுபவர்களாக இருக்கின்ற வரை (அவர்களிடம் யுத்தம் செய்ய வேண்டாம்).[88]

ஆட்சியாளர்களுக்கு பாவமான காரியங்களில் கீழ்ப்படிதல் கூடாது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: السَّمْعُ وَالطَّاعَةُ عَلَى الْمَرْءِ الْمُسْلِمِ فِيمَا أَحَبَّ وَكَرِهَ، مَا لَمْ يُؤْمَرْ بِمَعْصِيَةٍ، فَإِذَا أُمِرَ بِمَعْصِيَةٍ فَلَا سَمْعَ وَلَا طَاعَةَ

செவியுறுவதும் கீழ்ப்படிவதும் முஸ்லிமான மனிதர் மீது கட்டாயமாகும் - அவருக்கு விருப்பமானவற்றிலும் வெறுப்பானவற்றிலும். ஆக, அவர் ஒரு பாவமான காரியத்திற்கு அவர் பணிக்கப்பட்டால் அவர் ஒருபொழுதும் (ஆட்சியாளரின் கட்டளைக்கு) செவியுறுதலும் கீழ்ப்படிதலும் கூடாது.[89]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَا طَاعَةَ فِي مَعْصِيَةِ اللهِ، إِنَّمَا الطَّاعَةُ فِي الْمَعْرُوفِ

அல்லாஹ்விற்கு மாறுசெய்வதில் கீழ்ப்படிதல் அறவே இல்லை. கீழ்ப்படிவதெல்லாம் நல்ல காரியத்தில்தான்.[90]

இமாம் - ஆட்சியாளர் பொதுமக்கள் விஷயத்தில் அல்லாஹ்வை பயந்துகொள்ள வேண்டும். உம்மத்திற்கு பணிவிடை செய்வதற்காகவும் அவர்களை பராமரிப்பதற்காகவும் அல்லாஹ் உடைய மார்க்கத்திற்கு

88. அறிவிப்பாளர்: உம்மு ஸலமா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1854.
89. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 7144.
90. அறிவிப்பாளர்: அலீ இப்னு அபீ தாலிப் ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1840.

சேவை செய்வதற்காகவும் அல்லாஹ்வின் சட்டங்களை, ஹுதூதுகளை – குற்றவியல் தண்டனைகளை பொதுமக்கள், பிரமுகர்கள், சமுதாயத்தில் முக்கியமானவர்கள் என எல்லோர் மீதும் சமமாக, பாரபட்சம் காட்டாமல் நிலை நாட்டுவதற்காகவும் அல்லாஹ் அவரை ஒரு பணியாளராக பணி அமர்த்தி இருக்கிறான் என்பதை அவர் உணர வேண்டும்.

ஆட்சியாளர் வலிமையானவராக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பை அவர் பொருட்படுத்தக் கூடாது. உம்மத்திற்கும் அவர்களின் மார்க்கத்திற்கும் அவர்களின் செல்வங்களுக்கும் அவர்களின் மான மரியாதைக்கும் அவர்களின் நலன்களுக்கும் அவர்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் காரியங்களுக்கும் அவர் நம்பிக்கைக்குரியவராக, அவற்றைப் பேணிப் பாதுகாப்பவராக இருக்க வேண்டும். அவர் தனக்காக பழிவாங்கக் கூடாது. அவரின் கோபம் அல்லாஹ்விற்காக மட்டுமே இருக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ عَبْدٍ يَسْتَرْعِيهِ اللهُ رَعِيَّةً، يَمُوتُ يَوْمَ يَمُوتُ وَهُوَ غَاشٌّ لِرَعِيَّتِهِ، إِلَّا حَرَّمَ اللهُ عَلَيْهِ الْجَنَّةَ

அல்லாஹ் எந்த ஓர் அடியானை மக்களுக்கு மேய்ப்பாளராக – ஆட்சியாளராக ஆக்குகிறானோ அவர் மரணிக்கும்பொழுது தனது மக்களுக்கு மோசடி செய்த நிலையில் மரணிப்பாரேயானால் அல்லாஹ் அவர் மீது சொர்க்கத்தை ஹராம் – தடுக்கப்பட்டதாக ஆக்கிவிடுவான்.[91]

****

91. அறிவிப்பாளர்: மஃகல் இப்னு யசார் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 142.

اَلْأَصْلُ التَّاسِعُ

عَقِيدَةُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ فِي الصَّحَابَةِ وَآلِ الْبَيْتِ وَالْخِلَافَةِ

ஒன்பதாவது அடிப்படை:
நபி ﷺ அவர்களின் தோழர்கள், குடும்பத்தார்கள், மற்றும் கிலாஃபத் - ஆட்சி விஷயத்தில் அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கை

عَقِيدَةُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ فِي الصَّحَابَةِ وَآلِ الْبَيْتِ وَالْخِلَافَةِ

நபி ﷺ அவர்களின் தோழர்கள், குடும்பத்தார்கள் மற்றும் கிலாஃபத் - ஆட்சி விஷயத்தில் அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கை

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையின் அடிப்படைகளில் ஒன்று ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தோழர்களை நேசிக்க வேண்டும், அவர்கள் விஷயத்தில் உள்ளத்தையும் நாவையும் பாதுகாக்க வேண்டும். நிச்சயமாக அவர்கள் ஈமானிலும் இஹ்சானிலும் பிற மக்களை பார்க்கிலும் முழுமையானவர்களாக இருந்தார்கள். கீழ்ப்படிவதிலும் ஜிஹாத் செய்வதிலும் மக்கள் அனைவரையும் விட மிக மகத்தானவர்களாக இருந்தார்கள். அல்லாஹ், தனது நபி ﷺ உடைய தோழமைக்கு அவர்களைத் தேர்வு செய்தான். அவர்களுக்கு பின்னால் வந்தவர்கள் எவ்வளவுதான் கண்ணியம் உயர்வுடையவர்களாக இருந்தாலும் அவர்களில் யாரும் நபித்தோழரின் உயர்வையும் கண்ணியத்தையும் எட்ட முடியாது. அதாவது, ஸஹாபா - நபித்தோழர்கள், நபி ﷺ அவர்களைப் பார்த்தது, அவர்களோடு ஒன்றாக வாழ்ந்தது என்ற மகத்தான சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

கண்ணியத்திற்குரிய நபித்தோழர்கள் எல்லோரும் நம்பிக்கைக்குரிய நல்லவர்கள் ஆவார்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்களை அப்படி ஆக்கி இருக்கிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் நேசர்களாகவும் அவனுக்கு மிக உகப்பான அடியார்களாகவும் அவனுடைய படைப்பில் மிகச் சிறந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும், நபி ﷺ அவர்களுக்குப் பின்னர் இந்த உம்மத்தில் நபித்தோழர்கள்தான் மிக மேன்மையானவர்கள் ஆவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلسَّـٰبِقُونَ ٱلْأَوَّلُونَ مِنَ ٱلْمُهَـٰجِرِينَ وَٱلْأَنصَارِ وَٱلَّذِينَ ٱتَّبَعُوهُم بِإِحْسَـٰنٍ

رَّضِيَ ٱللَّهُ عَنْهُمْ وَرَضُوا۟ عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّٰتٍ تَجْرِى تَحْتَهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًا ۚ ذَٰلِكَ ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ﴿١٠٠﴾

(இஸ்லாமை ஏற்பதில்) முதலாமவர்களாகவும் முந்தியவர்களாகவும் இருந்த முஹாஜிர்கள்; இன்னும், அன்ஸாரிகள்; இன்னும், இவர்க(ளுக்குப் பின்னர் வந்து இவர்க)ளை நன்மையில் பின்பற்றிய(மற்ற)வர்க(ள் ஆகிய இவர்க)ளைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைந்தான். இன்னும், இவர்களும் அவனைப் பற்றி திருப்தியடைந்தனர். இன்னும், சொர்க்கங்களை இவர்களுக்கு (அவன்) தயார் செய்து வைத்திருக்கிறான். அவற்றின் கீழ் நதிகள் ஓடும். அவற்றில் எப்போதும் (அவர்கள்) நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். இதுதான் மகத்தான வெற்றியாகும். (அல்குர்ஆன் 9:100)

நபித்தோழர்களின் ஈமானுக்கும் சிறப்பிற்கும் சாட்சி சொல்வது மார்க்கத்தில் நன்கு அறியப்பட்ட உறுதியான ஓர் அடிப்படையாகும். அவர்களை நேசிப்பது மார்க்கமும், ஈமானும் ஆகும். அவர்களை வெறுப்பது நிராகரிப்பும் நயவஞ்சகமும் ஆகும். அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, நபித்தோழர்களை எப்பொழுதும் சிறப்பாகவே பேசுவார்கள், உயர்வாகவே நினைவு கூர்வார்கள். ஏனெனில், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தங்கள் தோழர்களை நேசித்தார்கள், இன்னும் அவர்களை நாம் நேசிக்க வேண்டும் என்று நமக்கு உபதேசித்தார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: خَيْرُ النَّاسِ قَرْنِي، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ

மக்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர், பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள், பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள்.[92]

யாரெல்லாம் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை பார்த்து, அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டாரோ, இன்னும் அதே நிலையில் அவர் மரணித்தாரோ அவர் நபித்தோழர்களில் உள்ளவர் ஆவார். அவருக்கு

92. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6429.

நபி ﷺ அவர்களின் தோழமை ஓர் ஆண்டு அல்லது ஒரு மாதம் அல்லது ஒரு நாள் அல்லது சில மணி நேரம் கிடைத்திருந்தாலும் சரியே.

நபி ﷺ அவர்களிடம் ஹுதைபிய்யா ஒப்பந்தத்தில் மரத்தின் கீழ் பைஅத் செய்துகொடுத்தவர் எவரும் நரகத்தில் நுழைய மாட்டார். அது மட்டுமல்ல, அல்லாஹ் அவர்களை பொருந்தி கொண்டான், அவர்களும் அவனைப் பொருந்திக்கொண்டார்கள். அவர்கள் ஆயிரத்தி நானூறுக்கும் அதிகமாக இருந்தார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ جَابِرٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ لَا يَدْخُلُ النَّارَ أَحَدٌ مِمَّنْ بَايَعَ تَحْتَ الشَّجَرَةِ

மரத்திற்கு கீழ் பைஅத் – சத்திய வாக்குப் பிரமாணம் செய்து கொடுத்த எவரும் நரகம் நுழைய மாட்டார்.[93]

நபித்தோழர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பிரச்சனைகளில் அஹ்லுஸ் ஸுன்னா விமர்சனம் செய்வதைத் தவிர்த்துக்கொள்வார்கள், அவர்களின் காரியத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவார்கள். ஆக, அவர்களில் யார் சரியான நிலைப்பாட்டில் இருந்தாரோ அவருக்கு இரு கூலிகள் கிடைக்கும். அவர்களில் யார் தவறான நிலைப்பாட்டில் இருந்தாரோ அவருக்கு ஒரு கூலி கிடைக்கும். இன்னும், அல்லாஹ் நாடினால் அவரின் தவறும் அவருக்கு மன்னிக்கப்பட்டுவிடும்.

அஹ்லுஸ் ஸுன்னா நபித்தோழர்களில் ஒருவரையும் ஏச மாட்டார்கள். மாறாக அவர்களுக்குத் தகுதியான அழகிய புகழைக் கொண்டு அவர்களை நினைவு கூர்வார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ لَا تَسُبُّوا أَصْحَابِي، لَا تَسُبُّوا

93. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﷺ, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 3860.

أَصْحَابِي، فَوَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا، مَا أَدْرَكَ مُدَّ أَحَدِهِمْ، وَلَا نَصِيفَهُ

என் தோழர்களை ஏசாதீர்கள்! என் தோழர்களை ஏசாதீர்கள்! ஆக, என் ஆன்மா எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக உங்களில் ஒருவர் உஹுத் மலை போன்று தங்கத்தை தர்மம் செய்தாலும் அவர்களில் ஒருவர் இரு கை அளவு செய்த தர்மத்தின் நன்மையையோ அல்லது அதில் பாதியளவு செய்த தர்மத்தின் நன்மையையோ அவர் அடைய மாட்டார்.[94]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய நம்பிக்கையாவது, நிச்சயமாக ஸஹாபா உடைய ஜமாஆ அதாவது ஸஹாபா என்ற அந்த கூட்டம் தவறுகளை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்களில் தனிப்பட்ட நபர்கள் தவறுகளை விட்டு பாதுகாக்கப்பட்டவர்கள் அல்லர். தவறுகளை விட்டு முழுமையான பாதுகாப்பு என்பது அல்லாஹ் தேர்ந்தெடுத்த ரஸூல்மார்கள் இன்னும் நபிமார்களுக்கு மட்டும்தான். இன்னும், இந்த உம்மத்தை பொதுவாக மொத்தமாக அல்லாஹ் தவறிலிருந்து பாதுகாத்திருக்கிறானே தவிர, தனி நபர்களை அல்ல. இதுதான் அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கையாகும்.

மேலும், அஹ்லுஸ் ஸுன்னாவின் கொள்கையாவது, இந்த உம்மத்தில் நபி ﷺ அவர்களுக்கு பின்னர் அபூ பக்ர், உமர், உஸ்மான், அலீ ஆகிய நான்கு நபித்தோழர்கள் மிகச் சிறந்தவர்கள் ஆவார்கள். இந்த வரிசை முறைப்படி இவர்கள் இந்த உம்மத்தில் நேர்வழிபெற்ற நேர்வழி நடந்த ஆட்சியாளர்களாக கலீஃபாக்களாக திகழ்கிறார்கள். இவர்கள் சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்களாக இருக்கிறார்கள். நபி ﷺ அவர்கள் வாக்களித்தபடி நபித்துவத்தின் பிரதிநிதித்துவமாக அமைந்த முப்பது ஆண்டுகளின் ஆட்சி என்பது இந்த நான்கு கலீஃபாக்களுடன் சேர்ந்து ஹஸன் இப்னு அலீ رضي الله عنه அவர்களின் ஆட்சியோடு நிறைவுறுகிறது.

94. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2540.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ سَفِينَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ الْـخِلَافَةُ فِي أُمَّتِي ثَلَاثُونَ سَنَةً، ثُمَّ مُلْكٌ بَعْدَ ذَٰلِكَ

எனது உம்மத்தில் கிலாஃபத் முப்பது ஆண்டுகள் ஆகும். பிறகு அதற்கு பின்னர் அரசாட்சியாக இருக்கும்.[95]

இன்னும், சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்களில் இந்த நான்கு கலீஃபாக்கள் போக மீதமுள்ள நபித்தோழர்களையும் அஹ்லுஸ் ஸுன்னா மேன்மைப்படுத்துகின்றனர். அந்த நபித்தோழர்கள், 1. தல்ஹா இப்னு உபைதில்லாஹ், 2. அஸ் ஸுபைர் இப்னு அல் அவ்வாம், 3. ஸஅத் இப்னு அபீ வக்காஸ், 4. ஸயீத் இப்னு ஸைத், 5. அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப், 6. அமீனு ஹாதிஹில் உம்மா - இந்த உம்மத்தின் நம்பிக்கையாளர் என்று பெயர் பெற்ற அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் - ﷺ அல்லாஹ் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

நபித்தோழர்களில் இவர்களுக்குப் பின்னர் சிறந்தவர்கள் பத்ர் போரில் கலந்துகொண்டவர்கள். அதற்குப் பின்னர், பைஅத்துர் ரிழ்வான் - என்ற ஹுதைபிய்யா ஒப்பந்தத்தில் கலந்துகொண்டவர்கள், அதற்குப் பின்னர் மற்ற எல்லா நபித்தோழர்களும் சிறப்பிற்குரியவர்கள் ஆவார்கள்.

ஆக, யார் நபித்தோழர்களை நேசிப்பாரோ, அவர்களுக்காக துஆக்கள் கேட்பாரோ, அவர்களின் தகுதிகளை பேணி நடப்பாரோ, அவர்களின் சிறப்புகளை அறிந்து அவற்றை ஏற்று நடப்பாரோ அவர் நற்பாக்கியம் பெற்ற வெற்றியாளர்களில் ஆகிவிடுவார். யார் நபித்தோழர்களை வெறுப்பாரோ அவர்களை ஏசுவாரோ அவர் நாசமடைந்தவர்களில் ஆகிவிடுவார்.

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ நபி ﷺ அவர்களின் குடும்பத்தினரை நேசிப்பார்கள்.

---

95. அறிவிப்பாளர்: ஸஃபீனா மவ்லா ரஸூலில்லாஹ் ﷺ, நூல்: ஸுனன் அத் திர்மிதீ எண்: 2226.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي أُذَكِّرُكُمُ اللَّهَ فِي أَهْلِ بَيْتِي

என் குடும்பத்தாருடைய விஷயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். என் குடும்பத்தாருடைய விஷயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். என் குடும்பத்தாருடைய விஷயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.[96]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ وَاثِلَةَ بْنِ الْأَسْقَعِ، يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: إِنَّ اللهَ اصْطَفَى كِنَانَةَ مِنْ وَلَدِ إِسْمَاعِيلَ، وَاصْطَفَى قُرَيْشًا مِنْ كِنَانَةَ، وَاصْطَفَى مِنْ قُرَيْشٍ بَنِي هَاشِمٍ، وَاصْطَفَانِي مِنْ بَنِي هَاشِمٍ

நிச்சயமாக அல்லாஹ் இஸ்மாயிலின் சந்ததிகளில் கினானாவைத் தேர்ந்தெடுத்தான். கினானா குடும்பத்தில் குறைஷியைத் தேர்ந்தெடுத்தான். குறைஷிகளில் ஹாஷிம் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தான். ஹாஷிம் குடும்பத்தில் என்னைத் தேர்ந்தெடுத்தான்.[97]

நபி ﷺ அவர்களின் குடும்பத்தாரில் நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் அடங்குவார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திகொள்வானாக! அவர்கள் உம்மஹாத்துல் முஃமினீன் - நம்பிக்கையாளர்களின் தாய்மார்கள் ஆவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَٰنِسَآءَ ٱلنَّبِيِّ لَسۡتُنَّ كَأَحَدٖ مِّنَ ٱلنِّسَآءِ إِنِ ٱتَّقَيۡتُنَّۚ فَلَا تَخۡضَعۡنَ بِٱلۡقَوۡلِ فَيَطۡمَعَ ٱلَّذِي فِي قَلۡبِهِۦ مَرَضٞ وَقُلۡنَ قَوۡلٗا مَّعۡرُوفٗا ٣٢ وَقَرۡنَ فِي بُيُوتِكُنَّ

96. அறிவிப்பாளர்: ஸைத் இப்னு அர்கம் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2408.
97. அறிவிப்பாளர்: வாஸிலா இப்னு அல் அஸ்கஃ رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2276.

وَلَا تَبَرَّجۡنَ تَبَرُّجَ ٱلۡجَٰهِلِيَّةِ ٱلۡأُولَىٰۖ وَأَقِمۡنَ ٱلصَّلَوٰةَ وَءَاتِينَ ٱلزَّكَوٰةَ وَأَطِعۡنَ ٱللَّهَ وَرَسُولَهُۥٓۚ إِنَّمَا يُرِيدُ ٱللَّهُ لِيُذۡهِبَ عَنكُمُ ٱلرِّجۡسَ أَهۡلَ ٱلۡبَيۡتِ وَيُطَهِّرَكُمۡ تَطۡهِيرٗا ٣٣

நபியின் மனைவிகளே! நீங்கள் (பொதுவான) பெண்களில் ஒருவரைப் போன்று இல்லை, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி (மார்க்கத்தைப் பின்பற்றி) நடந்தால் (தகுதியால் மிக மேலானவர்களாக இருப்பீர்கள்). ஆகவே, (அந்நிய ஆண்களுடன் குழைந்து) மென்மையாகப் பேசாதீர்கள். அப்படிப் பேசினால் தனது உள்ளத்தில் நோய் உள்ளவன் (உங்கள் மீது) தப்பான ஆசைப்படுவான். ஆகவே, சரியான (முறையான) பேச்சைப் பேசுங்கள். இன்னும், உங்கள் இல்லங்களில் தங்கியிருங்கள். (அவசிய தேவை இன்றி வெளி இடங்களுக்குச் செல்லாதீர்கள்.) முந்திய அறியாமைக் காலத்தில் அலங்காரங்களை வெளிப்படுத்தி(யவர்களாக வெளியே சுற்றி)யது போன்று நீங்கள் அலங்காரங்களை வெளிப்படுத்தாதீர்கள். (முகத்தை திறந்தவர்களாக வெளியே செல்லாதீர்கள்.) இன்னும், தொழுகையை நிலைநிறுத்துங்கள்! ஸகாத்தைக் கொடுங்கள்! அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்! (நபியின்) வீட்டார்களே! அல்லாஹ் நாடுவதெல்லாம் உங்களை விட்டும் அசுத்தத்தை (-பாவத்தை)ப் போக்குவதற்கும் உங்களை முற்றிலும் சுத்தப்படுத்துவதற்கும்தான். (அல்குர்ஆன் 33:32,33)

நபி ﷺ அவர்களின் மனைவிமார்களின் பெயர்கள்: 1. கதீஜா பின்த் குவைலித், 2. ஆயிஷா பின்த் அபீ பக்ர், 3. ஹஃப்ஸா பின்த் உமர் இப்னுல் கத்தாப், 4. உம்மு ஹபீபா பின்த் அபீ ஸுஃப்யான், 5. உம்மு ஸலமா பின்த் அபீ உமய்யா இப்னுல் முகீரா, 6. ஸவ்தா பின்த் ஸம்ஆ இப்னு கைஸ், 7. ஸைனப் பின்த் ஜஹ்ஷ், 8. மைமூனா பின்த் அல் ஹாரிஸ், 9. ஜுவைரியா பின்த் அல் ஹாரிஸ் இப்னு அபீ ழிரார், 10. ஸஃபிய்யா பின்த் ஹுயய் இப்னு அக்தப், 11. ஸைனப் பின்த் குஸைமா.

நிச்சயமாக இவர்கள் எல்லோரும் தூய்மையானவர்கள், ஒவ்வொரு கெட்ட செயலை விட்டும் நீங்கியவர்கள், நபி ﷺ அவர்களின் மனைவிகளாக இவ்வுலகத்தில் இருந்தார்கள். மறுமையிலும் நபி ﷺ

அவர்களின் மனைவிகளாக இருப்பார்கள். இவர்கள் அனைவரையும் அல்லாஹ் பொருந்திகொள்வானாக! ஆமீன்.

இவர்களில் மிகச் சிறந்தவர்கள் கதீஜா பின்த் குவைலித் ﵂ அவர்களும் ஆயிஷா அஸ்ஸித்தீக்கா ﵂ அவர்களும் ஆவார்கள்.

ஆயிஷா ﵂ அவர்களை அல்லாஹ் தனது கண்ணியமிகு வேதத்தில் பரிசுத்தப்படுத்தி, அவர் குற்றங்களை விட்டு நீங்கியவர் என்று சான்று பகர்ந்துள்ளான். ஆகவே, ஆயிஷா ﵂ அவர்களை கெட்ட செயலை விட்டும் நீங்கியவர் என்று பரிசுத்தப்படுத்திய பின்னர் யார் ஆயிஷா ﵂ அவர்கள் மீது கெட்ட செயலைக் கொண்டு பழிசுமத்துவாரோ நிச்சயமாக அவர் காஃபிர் - நிராகரிப்பாளராக ஆகிவிடுவார்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﵁ يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: فَضْلُ عَائِشَةَ ﵂ عَلَى النِّسَاءِ، كَفَضْلِ الثَّرِيدِ عَلَىٰ سَائِرِ الطَّعَامِ

எல்லாப் பெண்களைப் பார்க்கிலும் ஆயிஷாவின் சிறப்பு, எல்லா உணவுகளைப் பார்க்கிலும் ஸரீத் உணவின் சிறப்பைப் போன்றாகும்.[98]

****

98. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 3770.

اَلْأَصْلُ الْعَاشِرُ

مَوْقِفُ أَهْلِ السُّنَّةِ مِنْ أَهْلِ الْأَهْوَاءِ وَالْبِدَعِ

பத்தாவது அடிப்படை:

அஹ்வா - மனோஇச்சைகள், இன்னும் பித்ஆ - அனாச்சாரங்களைப் பின்பற்றுவோர் குறித்து அஹ்லுஸ் ஸுன்னாவின் நிலைப்பாடு

مَوْقِفُ أَهْلِ السُّنَّةِ مِنْ أَهْلِ الْأَهْوَاءِ وَالْبِدَعِ

மனோஇச்சைகள், மற்றும் அனாச்சாரங்களைப் பின்பற்றுவோர் குறித்து அஹ்லுஸ் ஸுன்னாவின் நிலைப்பாடு

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கைகளின் அடிப்படைகளில் ஒன்றாவது, மார்க்கத்தில் அதில் இல்லாததைத் புதிதாக உண்டாக்கியவர்களாகிய மனோஇச்சைகளைப் பின்பற்றுபவர்கள், இன்னும் அனாச்சாரங்களைச் செய்பவர்களை வெறுப்பதும், அவர்களை நேசிக்காமல் இருப்பதும், அவர்களிடம் தோழமை கொள்ளாமல் இருப்பதும், அவர்களின் பேச்சுகளைச் செவியுறாமல் இருப்பதும், அவர்களிடம் பழகாமல் இருப்பதும், அவர்களின் சபைக்கு செல்லாமல் இருப்பதும், மார்க்கத்தில் அவர்களிடம் தர்க்கம் செய்யாமல் இருப்பதும் ஆகும். மேலும், அவர்களின் பொய்யான தவறான செய்திகளைக் கேட்பதைவிட்டும் நமது காதுகளைப் பாதுகாக்க வேண்டும். அவர்களின் நிலைமைகளையும் தீமைகளையும் மக்களுக்கு விளக்க வேண்டும். அவர்களைக் குறித்து சமுதாய மக்களை எச்சரிக்க வேண்டும். அவர்களை விட்டு மக்களை விலக்கி வைக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي رَافِعٍ، عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: مَا مِنْ نَبِيٍّ بَعَثَهُ اللهُ فِي أُمَّةٍ قَبْلِي إِلَّا كَانَ لَهُ مِنْ أُمَّتِهِ حَوَارِيُّونَ، وَأَصْحَابٌ يَأْخُذُونَ بِسُنَّتِهِ وَيَقْتَدُونَ بِأَمْرِهِ، ثُمَّ إِنَّهَا تَخْلُفُ مِنْ بَعْدِهِمْ خُلُوفٌ يَقُولُونَ مَا لَا يَفْعَلُونَ، وَيَفْعَلُونَ مَا لَا يُؤْمَرُونَ، فَمَنْ جَاهَدَهُمْ بِيَدِهِ فَهُوَ مُؤْمِنٌ، وَمَنْ جَاهَدَهُمْ بِلِسَانِهِ فَهُوَ مُؤْمِنٌ، وَمَنْ جَاهَدَهُمْ بِقَلْبِهِ فَهُوَ مُؤْمِنٌ، وَلَيْسَ وَرَاءَ ذَٰلِكَ مِنَ الْإِيمَانِ حَبَّةُ خَرْدَلٍ

எனக்கு முன்னர் அல்லாஹ் அனுப்பிய எல்லா நபிமார்களுக்கும் அவர்களின் சமுதாயத்தில் உற்ற தோழர்கள் பலர் இருப்பார்கள். இன்னும் பொதுவான பல தோழர்களும் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் நபியின் ஸுன்னாவை பற்றிப்பிடித்து நடப்பார்கள். அவரின் கட்டளைகளைப் பின்பற்றுவார்கள். பிறகு, அந்த தோழர்கள் சென்ற பின்னர் சில வழித்தோன்றல்கள் (-புதிய மக்கள்) தோன்றுவார்கள். அவர்கள் தாங்கள் செய்யாததைச் (செய்வதாகச்) சொல்வார்கள். அவர்களுக்கு எது கட்டளையிடப்படவில்லையோ அதைச் செய்வார்கள். ஆக, யார் அவர்களிடம் தனது கரத்தால் ஜிஹாத் செய்தாரோ அவர் முஃமின் ஆவார். இன்னும், யார் அவர்களிடம் தனது நாவால் ஜிஹாத் செய்தாரோ அவர் முஃமின் ஆவார். இன்னும், யார் அவர்களிடம் தனது உள்ளத்தால் ஜிஹாத் செய்தாரோ அவர் முஃமின் ஆவார். இதற்கு பின்னர் கடுகின் விதை அளவு கூட ஈமான் இல்லை.[99]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ: سَيَكُونُ فِي آخِرِ أُمَّتِي أُنَاسٌ يُحَدِّثُونَكُمْ مَا لَمْ تَسْمَعُوا أَنْتُمْ، وَلَا آبَاؤُكُمْ، فَإِيَّاكُمْ وَإِيَّاهُمْ

எனது உம்மத்தின் இறுதியில் சில மக்கள் வருவார்கள். நீங்களும் உங்கள் முன்னோரும் செவியுறாததை உங்களுக்கு அறிவிப்பார்கள். அவர்களை விட்டு உங்களை எச்சரிக்கிறேன். அவர்களை விட்டும் தூரமாக இருங்கள்![100]

அஹ்லுஸ் ஸுன்னா பித்ஆ - அனாச்சாரம் என்பதற்கு கூறும் விளக்கமாவது: நபி ﷺ அவர்களுக்குப் பின்னர் இந்த மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட அஹ்வா - மனோஇச்சைகள் - மனம் விரும்பிய கருத்துகள், செயல்கள் பித்ஆ ஆகும். எந்த ஒரு செயலுக்கு அல்லது கருத்துக்கு குர்ஆன் இன்னும் ஸஹீஹான ஸுன்னாவில் எவ்வித ஆதாரமும் இல்லையோ அவை அனைத்தும் பித்ஆ - புதுமை, அனாச்சாரம் என்று சொல்லப்படும். அல்லாஹ்வை வழிபடுவது,

99. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 50.
100. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 6.

அல்லாஹ்வின் பக்கம் நெருக்கம் தேடுவது என்ற நோக்கத்தில் மார்க்கத்தில் ஷரீஅத்திற்கு ஒப்பாக புதிதாக உருவாக்கப்பட்ட எல்லா செயல்களும் பித்ஆ - அனாச்சாரமாகும்.

ஆக, பித்ஆ என்பது ஸுன்னாவிற்கு எதிரான ஒன்றாகும். ஸுன்னா, நேர்வழியாகும். பித்ஆ வழிகேடாகும்.

அஹ்லுஸ் ஸுன்னா பித்ஆவை இருவகையாக பிரிக்கின்றனர். ஒன்று شرك - ஷிர்க் - இணைவைத்தல், كفر - குஃப்ர் - நிராகரிப்பு உடைய பித்ஆ. அதாவது இந்த வகை பித்ஆ, அதை செய்வோரை شرك - ஷிர்க் அல்லது குஃப்ரில் தள்ளிவிடும்.

இன்னொரு வகை, முழுமையான ஈமானுக்கு முரணான பாவத்தை உண்டாக்கும் பித்ஆ ஆகும். அதாவது, இதை செய்வது பெரும் பாவத்தை விடக் கொடிய பாவமாக இருக்கும். ஆனால், அதை செய்பவர் شرك - ஷிர்க் அல்லது குஃப்ரில் வீழ்ந்துவிட மாட்டார்.

பித்ஆ என்பது شرك - ஷிர்க் உடைய வழிகளில் ஒரு வழியாகும். பித்ஆ என்பது அல்லாஹ்வை அவன் மார்க்கமாக ஆக்காததைக் கொண்டு வணங்க நாடுவதாகும்.

மார்க்கத்தில் நோக்கங்களுக்கு என்ன சட்டமோ அதே சட்டம்தான் அதன் பக்கம் சென்று சேர்க்கும் வழிகளுக்கும் கொடுக்கப்படும். ஆகவே, அல்லாஹ்வை வணங்குவதில் شرك - ஷிர்க்கின் பக்கம் சேர்க்கக்கூடிய வழிகளையும் அல்லது மார்க்கத்தில் சொல்லப்படாத செயலை வணக்கமாக செய்வதன் பக்கம் தள்ளக்கூடிய வழிகளையும் கண்டிப்பாக அடைத்தாக வேண்டும். ஏனெனில், மார்க்கம் முற்றிலும் முழுமை அடைந்துவிட்டது. இனி யாரும் அதில் எந்த ஒரு வணக்கத்தையோ, வழிபாட்டு முறையையோ புதிதாக சேர்க்க வேண்டிய எவ்வித அவசியமும் இல்லை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ٱلۡيَوۡمَ أَكۡمَلۡتُ لَكُمۡ دِينَكُمۡ وَأَتۡمَمۡتُ عَلَيۡكُمۡ نِعۡمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلۡإِسۡلَٰمَ دِينٗاۚ

இன்று உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை நான் முழுமையாக்கினேன். என் அருட்கொடையை உங்கள் மீது நிறைவு செய்தேன். இஸ்லாமை உங்களுக்கு மார்க்கமாக திருப்தியடைந்தேன். (அல்குர்ஆன் 5:3)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَائِشَةَ ﵂ قَالَتْ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ فِيهِ، فَهُوَ رَدٌّ

யார் நமது காரியத்தில் அதில் இல்லாததை புதிதாக உருவாக்குவாரோ அது மறுக்கப்பட்டதாகும்.[101]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَائِشَةَ ﵂ قَالَتْ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَن عَمِلَ عَمَلًا ليسَ عَلَيْهِ أَمْرُنا فَهو رَدٌّ

யார் நாம் கட்டளையிடாத ஒரு காரியத்தை செய்வாரோ அது மறுக்கப்பட்டதாகும்.[102]

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَإِنَّ خَيْرَ الْـحَدِيثِ كِتَابُ اللهِ وَخَيْرُ الهُدَىٰ هُدَى مُحَمَّدٍ وَشَرُّ الأُمُورِ مُحْدَثَاتُهَا وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

ஆக, பேச்சுகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் சிறந்தது முஹம்மதுடைய வழிமுறையாகும். காரியங்களில் கெட்டது அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவையாகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.[103]

101. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2697.
102. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1718.
103. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 867.

அஹ்லுஸ் ஸுன்னா கூறுவதாவது, பித்ஆக்கள் எல்லாம் ஒரே தரத்தில் உள்ளவை அல்ல. அவை பல படித்தரங்கள் உடையவை ஆகும். சில பித்ஆ, மார்க்கத்தை விட்டு வெளியேற்றிவிடும். சில பித்ஆ பெரும்பாவங்களின் தரத்தில் இருக்கின்றன. இன்னும், சில பித்ஆக்கள் சிறு பாவங்களின் தரத்தில் இருக்கின்றன. என்றாலும், எல்லா பித்ஆக்களும் வழிகேடு என்ற தன்மையில் ஒன்றுபடுகின்றன.

ஆக, இதனடிப்படையில் பித்ஆக்களைச் செய்வோரின் சட்டமும் வேறுபடுகிறது. அஹ்லுல் பித்ஆ - அனாச்சாரங்களை செய்வோர் அனைவருக்கும் ஒரே விதமான சட்டத்தை அஹ்லுஸ் ஸுன்னா கூறுவதில்லை. பித்ஆவையும் அதை செய்பவரையும் கவனித்து சட்டம் மாறுபடும். உதாரணமாக ஒருவர், அவர் அறியாத நிலையிலும் தவறாக புரிந்துகொண்டும் ஒரு பித்ஆவை செய்தால் அவருடைய சட்டம் வேறு, அறிந்த நிலையில் பித்ஆ செய்பவருடைய சட்டம் வேறு. ஒருவர், அவர் மட்டும் பித்ஆ செய்கிறார், ஆனால், அவர் அதை மக்களுக்கு சொல்லவோ அதன் பக்கம் மக்களை அழைக்கவோ செய்வதில்லை என்றால் அவரின் சட்டம் வேறு. யார், தானும் பித்ஆ செய்வதுடன் அதை மக்களுக்கு மத்தியில் பரப்புகிறாரோ, அதை வெளிப்படுத்திச் செய்கிறாரோ அவருடைய சட்டம் வேறு.

ஆகவே, யாருடைய தீமை மற்றவருக்கும் பரவும்படி இருக்கிறதோ அத்தகைய பித்ஆவாதிகளை பற்றி மக்களிடம் எச்சரிக்கை செய்ய வேண்டும், அவர்களின் பித்ஆக்களை மக்களிடம் வெளிப்படுத்தி அவரை விட்டும் விலகி இருக்கும்படி மக்களுக்கு அறிவுரை கூற வேண்டும். அவரை பற்றி மக்களிடம் பேசுவது புறம்பேசுவதாக ஆகாது. அவர் செய்கிற பித்ஆவை விட்டும் தடுக்கும்படியாக அவரைத் தண்டிக்க வேண்டும். பித்ஆக்களை யார் பகிரங்கப்படுத்துகிறாரோ, அதன் பக்கம் மக்களை அழைத்து, அவர்களை வழிகெடுக்கிறாரோ அவர் தண்டனைக்கு உரியவராக ஆகிவிடுகிறார்.

ஆக, பித்ஆவாதிகளில் ஒவ்வொருவருக்கும் அவரவரின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப அஹ்லுஸ் ஸுன்னா தீர்ப்பு தருகின்றனர். அஹ்லுல் பித்ஆவில் உள்ள பொதுமக்களைப் பொருத்தவரை அவர்கள் மார்க்கத்தை அறியாத பாமரர்கள். அவர்கள் தங்களின் தலைவர்களைப்

பின்பற்றி அதை செய்கிற முகல்லிதுகளாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மீது கருணை காட்டி, அவர்களுக்கு நேர்வழி கிடைக்க பிரார்த்தனை செய்ய வேண்டும். அவர்கள் நேர்வழி பெறுவார்கள், ஸுன்னாவை பின்பற்றுவார்கள் என்று நல்லாதரவு வைக்க வேண்டும். அவர்களுக்கு சத்தியத்தைத் தெளிவுப்படுத்த வேண்டும். அவர்கள் தவ்பா செய்து, திருந்தி வரும் வரை அவர்களிடம் பரிவுடன் நடந்து, நேரான பாதையின் பக்கம் அவர்களை அழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். அவர்களின் பித்ஆ, كفر - குஃப்ர் - நிராகரிப்பில் தள்ளக்கூடியதாக இல்லை என்றால் அவர்களின் வெளிப்படையான நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்கள் மீது தீர்ப்பளிக்க வேண்டும். அவர்களின் உள்ரங்கத்தையும், அவர்களின் இரகசியங்களையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

அஹ்லுல் அஹ்வா, அஹ்லுல் பித்ஆ - மனோஇச்சைக்காரர்கள், பித்ஆ வாதிகளுடைய அடையாளங்கள்.

அஹ்லுல் பித்ஆவிற்கு சில அடையாளங்கள் உள்ளன. அவற்றை வைத்து அவர்கள் அடையாளம் காணப்படுவார்கள். அல்லாஹ் தனது வேதத்திலும் அவனது தூதர் ﷺ அவர்கள் தமது ஸுன்னாவிலும் அந்த அடையாளங்களை விவரித்து உம்மத்தை அவர்களிடமிருந்து எச்சரித்துள்ளார்கள், அவர்களின் பாதையில் செல்வதிலிருந்து நம்மைத் தடுத்துள்ளார்கள்.

அவர்களின் அடையாளங்களில் சில:

1. மகாஸிதுஷ் ஷரீஆ - மார்க்கத்தின் நோக்கங்களை அறியாமல் இருப்பது.

2. மார்க்கத்தில் பிரிவுகளை, பிளவுகளை உண்டாக்குவது.

3. முஸ்லிம்களின் ஜமாஆவை விட்டு பிரிந்து செல்வது.

4. தர்க்கம் செய்வது, குதர்க்கம் பேசுவது.

5. மனோஇச்சையைப் பின்பற்றுவது. (அதாவது, சுய சிந்தனையில் தோன்றியதை நல்லதாக நினைத்து, அதை மார்க்கமாக ஆக்கி, அதை செய்து நன்மையைத் தேடுவது.)

6. மார்க்க ஆதாரத்தை விட அறிவை முற்படுத்துவது.

7. ஸுன்னா – நபிவழியை அறியாமல் இருப்பது.

8. முதஷாபிஹ் – பொருள் தெளிவில்லாத வசனங்களில் மூழ்குவது, அதைப் பற்றி கல்வி அறிவின்றி பேசுவது, அவற்றுக்குக் கற்பனையான வியாக்கியானம் கூறுவது.

9. குர்ஆனைக் கொண்டு ஸுன்னாவிற்கு முரண்படுவது. அதாவது, இன்ன ஹதீஸ், இன்ன வசனத்திற்கு முரணாக இருக்கிறது என்று சொல்வது. ஆகவே, அந்த ஹதீஸை ஏற்க மாட்டோம் என வாதிப்பது.

10. குறிப்பிட்ட நபர்களை மட்டும் அளவுகடந்து மதிப்பது.

11. வணக்க வழிபாட்டில் எல்லை மீறுவது.

12. காஃபிர் – இறைமறுப்பாளர்களுக்கு ஒப்பாகுவது.

13. அஹ்லுஸ் ஸுன்னாவிற்கு தவறான பட்டப் பெயர்களைக் கூறுவது.

14. ஹதீஸ் கலை அறிஞர்களைப் பகைப்பது, அவர்களைக் கீழ்த்தரமாகப் பேசுவது, அவர்களை மட்டம்தட்டுவது.

15. தங்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துடையவர்களை தெளிவான ஆதாரமின்றி காஃபிர் என்று சொல்வது.

16. சத்தியவாதிகளுக்கு எதிராக ஆட்சியாளர்களைத் தூண்டுவது.

இன்னும் இவை போன்ற பல பண்புகள், செயல்கள் அஹ்லுல் பித்ஆ உடைய அடையாளங்களாக இருக்கின்றன.

பித்ஆ உடைய அடிப்படைகள் நான்கு வகைப்படுகின்றன என்று அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ கருதுகின்றனர்.

ராஃபிழா, ரவாஃபிழ். (அதாவது, அபூ பக்ர் ﷺ, உமர் ﷺ, உஸ்மான் ﷺ அவர்களை வெறுப்பவர்கள், சபிப்பவர்கள். அல்லது, குறிப்பிட்ட சில தோழர்களை தவிர எல்லா தோழர்களையும் சபிப்பவர்கள்.)

காரிஜிய்யா, கவாரிஜ். (அதாவது, ஸஹாபாக்களைக் காஃபிர் என்று கூறுபவர்கள், ஒருவர் அறிவிக்கும் ஹதீஸ்களை மறுப்பவர்கள், பெரும் பாவம் செய்தவன் காஃபிர் ஆகிவிட்டான் என்று கூறுபவர்கள். இன்னும் பல வழிகேடுகள் இவர்களிடம் இருக்கின்றன.)

கதரிய்யா, கதரிய்யூன் (அல்லாஹ்வின் விதியை மறுப்பவர்கள்.)

முர்ஜிஆ, முர்ஜிஊன். (ஈமானுக்கு சொல்மட்டும் போதும், செயல்கள் அவசியமில்லை என்று கூறுபவர்கள்).

இந்த ஒவ்வொரு கூட்டத்திலும் பல பிரிவுகள் பிரிகின்றனர். ஆக, நபி ﷺ அவர்கள் கூறியது போன்று இந்த கூட்டங்கள் மொத்தம் எழுபத்தி இரண்டு பிரிவுகளாக பிரிந்திருக்கின்றனர்.

மனோஇச்சைவாதிகள் இன்னும் பித்ஆவாதிகளை அடையாளப்படுத்துவதிலும் அவர்களுக்கு மறுப்பு தெரிவிப்பதிலும் அஹ்லுஸ் ஸுன்னா உடைய போற்றத்தக்க உழைப்புகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. பித்ஆவாதிகளைப் பற்றி அஹ்லுஸ் ஸுன்னா உடைய கூற்றுகள் ஏராளம் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு நாம் எடுத்துக் கூறுகிறோம்.

இமாம் அஹ்மத் இப்னு சினான் அல் கத்தான் ؒ கூறுகிறார்கள்:

لَيْسَ فِي الدُّنْيَا مُبْتَدِعٌ إِلَّا وَهُوَ يُبْغِضُ أَهْلَ الْـحَدِيثِ، فَإِذَا ابْتَدَعَ الرَّجُلُ نُزِعَتْ حَلَاوَةُ الْـحَدِيثِ مِنْ قَلْبِهِ

உலகத்தில் இருக்கின்ற பித்ஆவாதி யாராக இருந்தாலும் அவர் அஹ்லுல் ஹதீஸை - ஹதீஸ்களை பின்பற்றுவோரை வெறுப்பவராக இருப்பார். ஆக, எந்த மனிதர்கள் பித்ஆக்களை உருவாக்குவார்களோ அவர்களின் உள்ளங்களிலிருந்து ஹதீஸின் இனிமை பிடுங்கப்பட்டுவிடும்.[104]

104. நூல்: தத்கிரா, ஆசிரியர்: இமாம் நவவி.

عَلَامَةُ أَهْلِ الْبِدَعِ الْوَقِيعَةُ فِي أَهْلِ الْأَثَرِ، وَعَلَامَةُ الزَّنَادِقَةِ تَسْمِيَتُهُمْ أَهْلَ الْأَثَرِ حَشَوِيَّةً، يُرِيدُونَ إِبْطَالَ الْآثَارِ، وَعَلَامَةُ الْـجَهْمِيَّةِ تَسْمِيَتُهُمْ أَهْلَ السُّنَّةِ مُشَبِّهَةً، وَعَلَامَةُ الْقَدَرِيَّةِ تَسْمِيَتُهُمْ أَهْلَ السُّنَّةِ مُجْبِرَةً، وَعَلَامَةُ الْمُرْجِئَةِ تَسْمِيَتُهُمْ أَهْلَ السُّنَّةِ مُخَالِفَةً وَنُقْصَانِيَّةً، وَعَلَامَةُ الرَّافِضَةِ تَسْمِيَتُهُمْ أَهْلَ السُّنَّةِ نَاصِبَةً، وَلَا يَلْحَقُ أَهْلَ السُّنَّةِ إِلَّا اسْمٌ وَاحِدٌ، وَيَسْتَحِيلُ أَنْ تَجْمَعَهُمْ هٰذِهِ الْأَسْمَاءُ

இமாம் அபூ ஹாத்திம் ஹன்ளலீ ராஸீ ﵀ கூறுகிறார்கள்: அஹ்லுல் ஹதீஸை விமர்சிப்பது அஹ்லுல் பித்ஆ உடைய அடையாளமாகும். ஸிந்தீக் – உள்ரங்கமான நிராகரிப்பாளர்களுடைய அடையாளம் அஹ்லுல் ஹதீஸை ஹஷவி – அதாவது மார்க்கத்தின் வெளிப்படையை மட்டும் அறிந்தவர்கள் என்று பெயரிடுவதாகும். ஸிந்தீக்குகளுடைய நோக்கம் ஹதீஸ்களைச் செயல்படுத்தாமல் விட்டுவிடுவதாகும். ஜஹ்மிய்யா உடைய அடையாளம், அஹ்லுஸ் ஸுன்னாவை முஷப்பிஹா – இறைவனைப் படைப்புகளுக்கு ஒப்பிடுபவர்கள் – என்று பெயர் கூறுவதாகும். கதரிய்யா உடைய அடையாளம், அஹ்லுஸ் ஸுன்னாவை முஜ்பிரா – எல்லாம் அல்லாஹ்வின் விதி, மனிதனுக்கு எவ்வித சுய விருப்பமும் இல்லை என்று கூறுபவர்கள் என பெயர் இடுவதாகும். முர்ஜிஆக்களுடைய அடையாளம், அஹ்லுஸ் ஸுன்னாவை முரண்படுபவர்கள், ஈமானில் குறைவை ஏற்றுக்கொள்பவர்கள் என்று பெயரிடுவதாகும். ராஃபிழாக்களுடைய அடையாளம், அஹ்லுஸ் ஸுன்னாவை நாஸிபா – நபி ﷺ அவர்களின் குடும்பத்தை வெறுப்பவர்கள் என்று பெயரிடுவதாகும். ஆனால், அஹ்லுஸ் ஸுன்னாவிற்கு சேருவதோ ஒரே ஒரு பெயர் மட்டுமே. இந்த பெயர்கள் அவர்களுக்கு பொருந்துவது சாத்தியமில்லாத ஒன்றாகும்.[105]

105. நூல்: அஸ்லுஸ் ஸுன்னா வ இஃத்திகாதுத் தீன், ஆசிரியர்: ராஸீ.

وَقِيلَ لِلْإِمَامِ أَحْمَدَ بْنِ حَنْبَلٍ ﵀ ذَكَرُوا لِابْنِ قَتِيلَةَ بِمَكَّةَ أَصْحَابَ الْحَدِيثِ، فَقَالَ: أَصْحَابُ الْحَدِيثِ قَوْمُ سُوءٍ! فَقَامَ أَحْمَدُ بْنُ حَنْبَلٍ وَهُوَ يَنْفُضُ ثَوْبَهُ وَيَقُولُ: زِنْدِيقٌ، زِنْدِيقٌ، زِنْدِيقٌ؛ حَتَّىٰ دَخَلَ الْبَيْتَ.

மக்காவில் இருந்த இப்னு கத்தீலா என்பவரிடம் அஹ்லுல் ஹதீஸை பற்றி கூறப்பட்டதற்கு, அவர்கள் கெட்ட மக்கள் என்று கூறினார் என இமாம் அஹ்மத் அவர்களிடம் கூறப்பட்டது. உடனே இமாம் அவர்கள் தனது ஆடையை உதறியவராக அவன் ஸிந்தீக் ஸிந்தீக் ஸிந்தீக் என்று கூறிக்கொண்டே வீட்டுக்குள் சென்று விட்டார்கள்.[106]

அஹ்லுல் ஹதீஸை, அஹ்லுஸ் ஸுன்னாவை அவர்களுக்கு சொல்லப்பட்ட இந்த கெட்ட பெயர்களிலிருந்து அல்லாஹ் பாதுகாத்திருக்கின்றான். அவர்கள் சிறப்பான ஸுன்னாவை உடையவர்கள். அவ்வளவுதான். அதைத் தவிர அவர்களுக்கு வேறு பெயர் இல்லை. அவர்கள் அழகிய பண்புக்கும் நேரான பாதைக்கும் உறுதியான மிகைக்க முடியாத ஆதாரத்திற்கும் உரியவர்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் வேதத்தைப் பின்பற்றுவதற்கும் அவனது நபி ﷺ அவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றி நடப்பதற்கும் அல்லாஹ் அவருக்கு அருள் புரிந்தான். நபி ﷺ அவர்களை நேசிப்பதற்கும் மார்க்கத்தின் இமாம்களை நேசிப்பதற்கும் இந்த உம்மத்தின் உண்மையான ஆலிம்களை, கற்ற கல்வியின்படி செயல்பட்ட அறிஞர்களை நேசிப்பதற்கும் அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிந்திருக்கின்றான். யார், ஒரு கூட்டத்தை நேசிக்கிறாரோ அவர், அவர்களைச் சேர்ந்தவராகவே இருப்பார்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ: الْمَرْءُ مَعَ مَنْ أَحَبَّ

106. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா, ஆசிரியர்: பர்பஹாரீ.

மனிதன், அவன் யாரை நேசித்தானோ அவருடன் இருப்பான்.[107]

ஆக, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களையும், அவர்களின் தோழர்களையும், அந்தத் தோழர்களைப் பின்பற்றி நடந்த தாபியீன்களையும், தபவுத் தாபியீன்களையும், நேர்வழி நடந்த இமாம்களையும், அறிஞர்களையும், ஹதீஸ் அறிவிப்பாளர்களையும், மேலும் இன்றைய நாள் வரை இந்த நல்லோரை பின்பற்றுபவர்களையும் யார் நேசிப்பாரோ – அவர் ஸாஹிபுஸ் ஸுன்னா – ஸுன்னாவை உடையவர், ஸுன்னாவை பின்பற்றுபவர், ஸுன்னாவை நேசிப்பவர் என்று அறிந்துகொள்ளுங்கள்!

****

107. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6168.

مِنْ وَصَايَا أَئِمَّةِ السَّلَفِ فِي التَّحْذِيرِ مِنْ أَهْلِ الْبِدَعِ

ஸலஃப் உடைய இமாம்கள் அஹ்லுல் பித்ஆவைக் குறித்து எச்சரித்துக் கூறிய அறிவுரைகளில் சில

அமீருல் முஃமினீன் உமர் இப்னுல் கத்தாப் ﵁ அவர்கள் கூறினார்கள்:

سَيَأْتِي أُنَاسٌ يُجَادِلُونَكُمْ بِشُبَهِ الْقُرْآنِ فَخُذُوهُمْ بِالسُّنَنِ؛ فَإِنَّ أَصْحَابَ السُّنَنِ أَعْلَمُ بِكِتَابِ اللهِ عَزَّ وَجَلَّ

உங்களிடம் சில மக்கள் வருவார்கள். குர்ஆனில் உள்ள வெளிப்படையாக பொருள் அறியமுடியாத சில வசனங்களைக் கூறி உங்களிடம் தர்க்கம் செய்வார்கள். நீங்கள் அவர்களை ஸுன்னா - ஹதீஸ்களைக் கொண்டு பிடியுங்கள். ஏனெனில், ஹதீஸ்களை அறிந்தவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை நன்கறிவார்கள்.[108]

விதியை மறுப்பவர் பற்றி அப்துல்லாஹ் இப்னு உமர் ﵁ அவர்களிடம் கேட்கப்பட்டது.

إِذَا لَقِيتَ أُولَئِكَ؛ فَأَخْبِرْهُمْ أَنَّ ابْنَ عُمَرَ مِنْهُمْ بَرِيءٌ، وَهُمْ مِنْهُ بُرَآءُ؛ ثَلَاثَ مَرَّاتٍ

அதற்கு, நீ அவர்களை சந்தித்தால் நிச்சயமாக இப்னு உமர் அவர்களை விட்டு நீங்கியவர், அவர்களும் அவரை விட்டு நீங்கியவர்கள் என்று அவர்களுக்கு அறிவித்து விடு என்று மூன்று முறை கூறினார்கள்.[109]

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﵁ அவர்கள் கூறினார்கள்:

لَا تُجَالِسْ أَهْلَ الْأَهْوَاءِ؛ فَإِنَّ مُجَالَسَتَهُمْ مُمْرِضَةٌ لِلْقَلْبِ

அஹ்லுல் அஹ்வா - மனோஇச்சை வாதிகளிடம் நீங்கள் பழகாதீர்கள்,

108. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
109. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

அவர்களுடன் நீங்கள் அமராதீர்கள். ஏனெனில், நிச்சயமாக அவர்களுடன் பழகுவது, அவர்களுடன் அமர்வது உள்ளங்களை நோயுறச் செய்துவிடும்.[110]

ஃபுழைல் இப்னு இயாழ் ﷫ கூறுகிறார்கள்:

صَاحِبُ بِدْعَةٍ لَا تَأْمَنْهُ عَلَىٰ دِينِكَ، وَلَا تُشَاوِرْهُ فِي أَمْرِكَ، وَلَا تَجْلِسْ إِلَيْهِ، وَمَنْ جَلَسَ إِلَىٰ صَاحِبِ بِدْعَةٍ أَوْرَثَهُ اللهُ الْعَمَىٰ يَعْنِي فِي قَلْبِهِ.

பித்ஆவாதிகளை உமது மார்க்க விஷயத்தில் ஒருபோதும் நம்பிவிடாதே! உனது காரியத்தில் அவர்களிடம் ஆலோசனை கேட்டுவிடாதே! அவர்களிடம் சென்று அமராதே! யார் ஒரு பித்ஆவாதியிடம் அமருவானோ அல்லாஹ் அவருக்கு குருட்டுத்தனத்தை ஏற்படுத்திவிடுவான். அதாவது, அவருடைய உள்ளத்தில் குருட்டுத்தனம் ஏற்பட்டுவிடும்.[111]

இமாம் அல்ஹஸன் பஸரி ﷫ கூறுகிறார்கள்:

أَبَى اللهُ تَبَارَكَ وَتَعَالَىٰ أَنْ يَأْذَنَ لِصَاحِبِ هَوًى بِتَوْبَةٍ

மனோஇச்சையைப் பின்பற்றுபவர்களுக்கு தவ்பா – பாவமன்னிப்பு கேட்டுத் திருந்துவதற்குரிய வாய்ப்பளிக்க அல்லாஹ் மறுத்துவிட்டான்.[112]

இமாம் அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் ﷫ கூறுகிறார்கள்:

اللّٰهُمَّ لَا تَجْعَلْ لِصَاحِبِ بِدْعَةٍ عِندِي يَدًا؛ فَيُحِبَّهُ قَلْبِي.

அல்லாஹ்வே! பித்ஆவாதி ஒருவர் எனக்கு ஒரு உதவிசெய்யும்படி ஆக்கிவிடாதே! அப்படி நடந்துவிட்டால் என் உள்ளம் அவரை நேசித்துவிடும்![113]

110. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
111. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
112. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
113. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

ஹதீஸ்கலையின் அமீர் ஸுஃப்யான் ஸவ்ரீ ﵀ கூறுகிறார்கள்:

مَنْ أَصْغَىٰ سَمْعَهُ إِلَىٰ صَاحِبِ بِدْعَةٍ وَهُوَ يَعْلَمُ أَنَّهُ صَاحِبُ بِدْعَةٍ؛ نُزِعَتْ مِنْهُ الْعِصْمَةُ، وَوُكِلَ إِلَىٰ نَفْسِهِ

யார் ஒருவர் பித்ஆவாதியுடைய பேச்சை – அவர் பித்ஆவாதி என்று அறிந்த நிலையில் – காது கொடுத்து கேட்பாரோ அவரிடமிருந்து அல்லாஹ்வின் பாதுகாப்பு எடுக்கப்பட்டுவிடும். அவர், தனது நஃப்ஸிடமே சாட்டப்பட்டுவிடுவார். (அதாவது, அல்லாஹ் அவரை விட்டும் அவனது நேர்வழி என்ற அருளை எடுத்துவிடுவான். பிறகு அவர் தனது மனம்போன போக்கில் மார்க்கத்தை பின்பற்ற ஆரம்பித்து விடுவார்.)[114]

இமாம் அவ்ஸாயீ ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا تُمَكِّنُوا صَاحِبَ بِدْعَةٍ مِنْ جَدَلٍ؛ فَيُورِثَ قُلُوبَكُمْ مِنْ فِتْنَتِهِ ارْتِيَابًا

பித்ஆவாதிக்கு தர்க்கம் செய்ய வாய்ப்பு கொடுத்து விடாதீர்கள். அவன் உங்கள் உள்ளங்களில் குழப்பத்தை, சந்தேகத்தை உண்டு பண்ணிவிடுவான்.[115]

முஹம்மத் இப்னு ஸீரீன் ﵀ கூறுகிறார்கள்:

مَا أَحْدَثَ رَجُلٌ بِدْعَةً فَرَاجَعَ سُنَّةً

யார் ஒருவர் பித்ஆவை உருவாக்குவாரோ அவர் ஒருபோதும் ஸுன்னாவின் பக்கம் திரும்ப மாட்டார்.[116]

இமாம் மாலிக் இப்னு அனஸ் ﵀ கூறுகிறார்:

لَا تُنْكِحُوا أَهْلَ الْبِدَعِ وَلَا يُنْكَحُ إِلَيْهِمْ وَلَا يُسَلَّمُ عَلَيْهِمْ .

114. நூல்: அல்பிதஃ வன்னஹ்யு அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.
115. நூல்: அல்பிதஃ வன்னஹ்யு அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.
116. நூல்: முகத்திமா முஸ்லிம் – முஸ்லிம்.

பித்ஆவாதிகளுக்கு (உங்கள் பெண்களை) மணம் முடித்துத் தராதீர்கள். அவர்களிடம் திருமண உறவு பேசாதீர்கள். அவர்களுக்கு ஸலாம் சொல்லக் கூடாது.[117]

இமாம் ஷாஃபியீ ﵀ அவர்கள், இல்முல் கலாம் - இறையியலை தர்க்கக் கலையின்படி பேசிக்கொண்டிருந்தவர்களைப் பார்த்தபொழுது ஒன்று நீங்கள் எங்களுக்கு அருகில் இருப்பதாக இருந்தால் நல்லதைப் பேசுங்கள். அல்லது எங்களை விட்டு எழுந்து சென்றுவிடுங்கள் என்று சத்தமாகக் கூறினார்கள்.[118]

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ﵀ கூறுகிறார்கள்:

إِنَّ أَهْلَ الْبِدَعِ وَالْأَهْوَاءِ؛ لَا يَنْبَغِي أَنْ يُسْتَعَانَ بِهِمْ فِي شَيْءٍ مِنْ أُمُورِ الْـمُـسْلِمِينَ؛ فَإِنَّ فِي ذَٰلِكَ أَعْظَمَ الضَّرَرِ عَلَى الدِّينِ

அஹ்லுல் பித்ஆ மற்றும் அஹ்லுல் அஹ்வாவிடம் முஸ்லிம்களின் காரியங்களில் எந்த ஒன்றிலும் உதவி பெறக்கூடாது. ஏனெனில், நிச்சயமாக அதில் மார்க்கத்திற்கு மிகப் பெரிய தீங்கு இருக்கிறது.[119]

இமாம் அஹ்மத் ﵀ கூறுகிறார்கள்:

احْذَرِ الْبِدَعَ كُلَّهَا، وَلَا تُشَاوِرْ أَحَدًا مِنْ أَهْلِ الْبِدَعِ فِي دِينِكَ

பித்ஆக்கள் அனைத்தையும் விட்டு நீ விலகி கவனமாக இரு! அஹ்லுல் பித்ஆவிலிருந்து யாரிடமும் உனது மார்க்க விஷயத்தில் நீ ஆலோசனை கேட்காதே![120]

இமாம் அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தி ﵀ கூறுகிறார்கள்:

لَيْسَ فِي أَصْحَابِ الْأَهْوَاءِ شَرٌّ مِنْ أَصْحَابِ جَهْمٍ؛ يُرِيدُونَ عَلَىٰ أَنْ يَقُولُوا: لَيْسَ فِي السَّمَاءِ شَيْءٌ: أَرَى وَاللهِ أَلَّا يُنَاكَحُوا، وَلَا يُوَارَثُوا

117. நூல்: அல்முதவ்வனா அல்குப்ரா - இமாம் மாலிக்.

118. நூல்: முக்தஸர் கிதாப் அல்ஹுஜ்ஜா அலா தாரிக்கில் மஹஜ்ஜா - நஸ்ர் இப்னு இப்ராஹீம் மக்திஸீ.

119. நூல்: மனாகிபுல் இமாம் அஹ்மத் - இப்னுல் ஜவ்ஸீ.

120. நூல்: மனாகிபுல் இமாம் அஹ்மத் - இப்னுல் ஜவ்ஸீ.

மனோஇச்சைகளைப் பின்பற்றுவோரில் ஜஹ்மை பின்பற்றுபவர்களை விட கெட்டவர்கள் யாரும் இல்லை. வானத்திற்கு மேல் எதுவும் இல்லை என்ற கொள்கையில்தான் அவர்கள் சுற்றி வருகிறார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக அவர்களுக்கு திருமணம் முடித்து வைக்கக் கூடாது, அவர்கள் நமது சொத்துகளுக்கு வாரிசாக ஆக்கப்படக் கூடாது என்றே நான் கருதுகிறேன்.[121]

அபூ கிலாபா அல்பஸரி ﵀ கூறுகிறார்கள்:

لَا تُجَالِسُوا أَهْلَ الْأَهْوَاءِ؛ فَإِنَّكُمْ إِنْ لَمْ تَدْخُلُوا فِيمَا دَخَلُوا فِيهِ لَبَسُوا عَلَيْكُمْ مَا تَعْرِفُونَ

அஹ்லுல் அஹ்வா – மனோஇச்சைவாதிகளிடம் நீங்கள் பழகாதீர்கள், அவர்களுடன் சேராதீர்கள். ஏனெனில், நிச்சயமாக நீங்கள் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் நீங்கள் அறிந்து வைத்திருந்த (சத்தியத்)தை உங்களுக்கு அவர்கள் குழப்பிவிடுவார்கள்.[122]

இமாம் அய்யூப் ஸக்த்தியானி ﵀ கூறுகிறார்கள்:

إِنَّ أَهْلَ الْأَهْوَاءِ أَهْلُ ضَلَالَةٍ وَلَا أَرَىٰ مَصِيرَهُمْ إِلَّا النَّارَ

மனோஇச்சைகளைப் பின்பற்றுவோர் வழிகேடர்கள். அவர்களின் மீளுமிடம் நரகத்தின் பக்கம்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.[123]

காழீ அபூ யூஸுஃப் ﵀ கூறுகிறார்கள்:

لَا أُصَلِّي؛ خَلْفَ جَهْمِيٍّ، وَلَا رَافِضِيٍّ، وَلَا قَدَرِيٍّ

ஜஹ்மிய்யா, ராஃபிழா, கதரிய்யா கொள்கையை சேர்ந்தவர் பின்னால் நான் தொழ மாட்டேன்.[124]

ஷைகுல் இஸ்லாம் அபூ உஸ்மான் அஸ் ஸாபூனீ ﵀ கூறுகிறார்கள்:

121. நூல்: கிதாபுஸ் ஸுன்னா – அப்துல்லாஹ் இப்னு அஹ்மத்.
122. நூல்: இபானா – இப்னு பத்தா.
123. நூல்: இபானா – இப்னு பத்தா.
124. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

وَعَلَامَاتُ أَهْلِ البِدَعِ عَلَىٰ أَهْلِهَا بَادِيَةٌ ظَاهِرَةٌ، وَأَظْهَرُ آيَاتِهِمْ وَعَلَامَاتِهِمْ شِدَّةُ مُعَادَاتِهِمْ لِحَمَلَةِ أَخْبَارِ النَّبِيِّ ﷺ وَاحْتِقَارُهُمْ لَهُمْ، وَتَسْمِيَتُهُمْ حَشَوِيَّةً، وَجَهَلَةً، وَظَاهِرِيَّةً، وَمُشَبِّهَةً؛ اِعْتِقَادًا مِّنْهُمْ فِي أَخْبَارِ رَسُولِ اللهِ ﷺ أَنَّهَا بِمَعْزَلٍ عَنِ الْعِلْمِ، وَأَنَّ الْعِلْمَ مَا يُلْقِيهِ الشَّيْطَانُ إِلَيْهِمْ مِنْ نَتَائِجِ عُقُولِهِمْ الفَاسِدَةِ، وَوَسَاوِسِ صُدُورِهِمْ المُظْلِمَةِ

அஹ்லுல் பித்ஆவை அடையாளப்படுத்தும் அடையாளங்கள் அவர்களிடம் மிக வெளிப்படையாகத் தெளிவாகக் காணப்படும். அவர்களின் அடையாளங்களில் மிக வெளிப்படையானது என்னவெனில், அவர்கள் நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களை அறிவிக்கக்கூடியவர்களை, அவற்றை பின்பற்றக்கூடியவர்களைக் கடுமையாகப் பகைப்பார்கள். இன்னும், அவர்களைக் கேவலப்படுத்துவார்கள். அவர்களை ஹஷவிய்யா[125] என்றும் ஜஹலா[126] என்றும் ளாஹிரிய்யா[127] என்றும் முஷப்பிஹா[128] என்றும் வசைப்பாடுவார்கள். அதாவது நபி ﷺ அவர்களின் ஹதீஸ்கள் கல்வி ஆதாரத்தைக் கொடுக்காது, அவர்களின் தர்க்க ரீதியான அறிவு ஆதாரங்கள்தான், எதை ஷைத்தான்கள் அவர்களில் சிந்தனைகளில் போடுகிறானோ அந்த சிந்தனை ஆதாரங்கள்தான் சரியானவை என்று அவர்கள் நம்பியதின் விளைவாக இப்படி செய்வார்கள்.[129]

இமாம் ஷாஃபியீ رحمه الله கூறுகிறார்கள்:

حُكْمِي فِي أَصْحَابِ الْكَلَامِ أَنْ يُضْرَبُوا بِالْجَرِيدِ، وَيُحْمَلُوا عَلَىٰ الْإِبِلِ، وَيُطَافَ

125. ஹஷவிய்யா: கல்வியில் முதிர்ச்சியற்ற சிறியவர்கள், மேலோட்டமானவர்கள், தீர்க்கமான கல்வி இல்லாதவர்கள்.

126. ஜஹலா: அறியாதவர்கள்.

127. ளாஹிரிய்யா: ஆதாரங்களின் உள் கருத்துகளை அறியாமல், வெளிப்படையானதை மட்டும் பின்பற்றுபவர்கள்.

128. முஷப்பிஹா: அல்லாஹ்வின் தன்மைகளை ஒப்பிடுபவர்கள்.

129. ஷரஹ் உசூலி இதிகாதீ அஹ்லிசுன்னா - லாள்காயி.

بِهِمْ فِي الْعَشَائِرِ وَالْقَبَائِلِ؛ وَيُقَالُ: هَذَا جَزَاءُ مَنْ تَرَكَ الْكِتَابَ وَالسُّنَّةَ، وَأَخَذَ فِي الْكَلَامِ

யார் இல்முல் கலாம் – தர்க்கக் கலையைக் கற்கிறார்களோ அவர்கள் விஷயத்தில் எனது தீர்ப்பாவது, அவர்களை மட்டைகளால் அடிக்க வேண்டும். அவர்களை ஒட்டகங்களில் ஏற்றி மக்களுக்கு மத்தியில் சுற்றி வர வேண்டும். யார் குர்ஆன், ஸுன்னாவை விட்டுவிட்டு, இல்முல் கலாமை கற்றாரோ அவரின் தண்டனை இதுதான் என்று பறைசாட்டப்பட வேண்டும்.[130]

அபூ முஹம்மத் அல்ஹுஸைன் இப்னு மஸ்வூத் இப்னுல் ஃபர்ரா அல் பகவி ﷺ கூறுகிறார்கள்:

قَدْ مَضَى الصَّحَابَةُ وَالتَّابِعُونَ وَأَتْبَاعُهُمْ وَعُلَمَاءُ السُّنَّةِ عَلَىٰ مُعَادَاةِ أَهْلِ الْبِدَعِ وَمُهَاجَرَتِهِمْ

நபித்தோழர்கள், தாபியீன்கள், தபவுத் தாபியீன்கள், இன்னும் ஸுன்னாவின் அறிஞர்கள் இவர்கள் எல்லாரும் அஹ்லுல் பித்ஆவை வெறுத்தும் அவர்களை விட்டு விலகியும் வந்திருக்கிறார்கள்.[131]

இமாம் இஸ்மாயீல் அஸ்ஸாபூனீ ﷺ அவர்கள் தமது சிறப்பான நூலாகிய அகீதத்துஸ் ஸலஃபி – அஸ்ஹாபில் ஹதீஸ் என்பதில், அஹ்லுல் பித்ஆவை அடக்கி வைக்க வேண்டும், அவர்களைத் தாழ்த்தி வைக்க வேண்டும் என்பதில் அஹ்லுஸ் ஸுன்னா ஒருமித்த கருத்தில் இருப்பதாக குறிப்பிடுகிறார்கள்.

அஹ்லுல் பித்ஆவை குறித்து அஹ்லுஸ் ஸுன்னா உடைய கூற்றுகளை ஸாபூனீ அவர்கள் பதிவு செய்த பின்னர் அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

وَهَٰذِهِ الْجُمَلُ الَّتِي أَثْبَتُّهَا فِي هَذَا الْجُزْءِ؛ كَانَتْ مُعْتَقَدَ جَمِيعِهِمْ لَمْ يُخَالِفْ فِيهَا

130. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா – பகவி.
131. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா – பகவி.

بَعْضُهُمْ بَعْضًا؛ بَلْ أَجْمَعُوا عَلَيْهَا كُلِّهَا، وَاتَّفَقُوا مَعَ ذَٰلِكَ عَلَى الْقَوْلِ بِقَهْرِ أَهْلِ الْبِدَعِ، وَإِذْلَالِهِمْ، وَإِخْزَائِهِمْ، وَإِبْعَادِهِمْ، وَإِقْصَائِهِمْ، وَالتَّبَاعُدِ عَنْهُمْ، وَمِنْ مُصَاحَبَتِهِمْ، وَمُعَاشَرَتِهِمْ، وَالتَّقَرُّبِ إِلَى اللهِ -عَزَّ وَجَلَّ- بِمُجَانَبَتِهِمْ، وَمُهَاجَرَتِهِمْ

இந்த பகுதியில் நான் கொண்டுவந்த வாசகங்கள் எல்லாம் அஹ்லுஸ் ஸுன்னா அனைவரின் நம்பிக்கையாக, கொள்கையாக இருந்தது. அவர்களில் சிலர் சிலருக்கு இது விஷயத்தில் முரண்பட்ட கருத்து கொண்டிருக்கவில்லை. அதுமட்டுமல்ல, இந்த கூற்றுகள் அனைத்தும் அவர்களின் ஒருமித்த கருத்தாகவே இருந்து வந்தது.

அஹ்லுல் பித்ஆவை அடக்கி வைக்க வேண்டும், அவர்களைத் தாழ்த்தி வைக்க வேண்டும், அவர்களைத் தூரமாக வைத்திருக்க வேண்டும், அவர்களை விட்டு விலகி இருக்க வேண்டும், அவர்களிடம் பழகுவதை விட்டும் அவர்களிடம் உறவுமுறைகள் வைப்பதை விட்டும் விலகி இருக்க வேண்டும். மேலும், அவர்களை விட்டு விலகுவது, இன்னும் அவர்களுடன் பேசாமல் இருப்பதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேட வேண்டும் என்பதில் அஹ்லுஸ் ஸுன்னா அனைவரும் ஒரே கருத்தில் ஒருமித்து இருக்கின்றனர்.

****

اَلْأَصْلُ الْحَادِي عَشَرَ

مَنْهَجُ أَهْلِ السُّنَّةِ فِي السُّلُوكِ وَالْأَخْلَاقِ

பதினொன்றாவது அடிப்படை:
நன்னடத்தை மற்றும் குணாதிசயங்களில் அஹ்லுஸ் ஸுன்னாவின் வழிமுறை

مَنْهَجُ أَهْلِ السُّنَّةِ فِي السُّلُوكِ وَالْأَخْلَاقِ

நன்னடத்தை மற்றும் குணாதிசயங்களில் அஹ்லுஸ் ஸுன்னாவின் வழிமுறை

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையின் அடிப்படைகளில் உள்ளதுதான் பின்வரும் பண்புகள்:

நிச்சயமாக அவர்கள் நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள், நிச்சயமாக இந்த சமுதாயத்தின் நன்மையானது இந்த அடிப்படையைக் கொண்டுதான் நீடித்து நிலையாக இருக்கும். நிச்சயமாக இந்த அடிப்படை (-அதாவது நன்மையை ஏவுவது, தீமையைத் தடுப்பது) இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டங்களில் மிக மகத்தானதும், இஸ்லாமிய சமூகம் பாதுகாக்கப்படுவதற்குரிய காரணமும் ஆகும்.

நிச்சயமாக நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் அவரவர் சக்திக்கு உட்பட்டு செய்ய வேண்டிய ஒரு முக்கியமான கடமையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِٱلْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ ٱلْمُنكَرِ وَتُؤْمِنُونَ بِٱللَّهِ ۗ

(நம்பிக்கையாளர்களே!) மக்களுக்காக உருவாக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நன்மையை (மக்களுக்கு) ஏவுகிறீர்கள்; இன்னும், தீமையை விட்டும் (மக்களைத்) தடுக்கிறீர்கள். இன்னும், அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறீர்கள்.

(அல்குர்ஆன் 3:110)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَن رَأَىٰ مِنكُم مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ فإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ فإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ وذٰلِكَ أَضْعَفُ الْإِيمَانِ

உங்களில் யார் தீமையைப் பார்ப்பாரோ அவர் அதைத் தனது கரத்தால் மாற்றட்டும். ஆக, அது அவருக்கு இயலவில்லை என்றால் அவர் தனது நாவினால் அதை மாற்றட்டும். ஆக, அதுவும் அவருக்கு இயலவில்லை என்றால் அவர் தனது உள்ளத்தால் அதை வெறுக்கட்டும். அதுதான் ஈமானின் பலவீனமான நிலையாகும்.[132]

நன்மையை ஏவுவதிலும் தீமையை தடுப்பதிலும் மென்மையை முற்படுத்த வேண்டும். ஞானத்தைக் கொண்டும் அழகிய உபதேசங்களைக் கொண்டும் அழைப்புப் பணி செய்ய வேண்டும் என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ٱدْعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِٱلْحِكْمَةِ وَٱلْمَوْعِظَةِ ٱلْحَسَنَةِ ۖ
وَجَـٰدِلْهُم بِٱلَّتِى هِىَ أَحْسَنُ ۚ

(நபியே!) ஞானம்; இன்னும், அழகிய உபதேசத்தின் மூலம் உம் இறைவனுடைய பாதையின் பக்கம் (மக்களை) அழைப்பீராக! மேலும், மிக அழகிய முறையில் அவர்களிடம் தர்க்கிப்பீராக!

(அல்குர்ஆன் 16:125)

நன்மையை ஏவும்பொழுதும் தீமையைத் தடுக்கும்பொழுதும் மக்கள் தொந்தரவு செய்தால், சிரமம் கொடுத்தால் அதைத் சகித்துக்கொள்ள வேண்டும், பொறுமையாக உறுதியாக இருக்க வேண்டும் என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகின்றனர்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأْمُرْ بِٱلْمَعْرُوفِ وَٱنْهَ عَنِ ٱلْمُنكَرِ وَٱصْبِرْ عَلَىٰ مَآ أَصَابَكَ ۖ
إِنَّ ذَٰلِكَ مِنْ عَزْمِ ٱلْأُمُورِ ﴿١٧﴾

என் மகனே! தொழுகையை நிலைநிறுத்து! (மக்களுக்கு) நன்மையை ஏவு! தீமையை விட்டும் (மக்களைத்) தடு! உனக்கு ஏற்பட்ட சோதனையில்

132. அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல்குத்ரீ ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 49.

பொறுமையாக இரு! நிச்சயமாக இவைதான் உறுதிமிக்க (உயர்வான) காரியங்களில் உள்ளவை ஆகும். (அல்குர்ஆன் 31:17)

அஹ்லுஸ் ஸுன்னா நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது என்ற இந்த கடமையைச் செய்கிறபொழுது கண்டிப்பாக முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பாதுகாப்பதையும் உள்ளங்களை ஒருங்கிணைப்பதையும் பிரிவுகள், பிளவுகள் ஏற்படாமல் இருப்பதையும் தலைமைத்துவம் ஒன்றுபட்டிருப்பதையும் கவனத்தில் வைப்பார்கள்.

எல்லா முஸ்லிம்களுக்கும் நன்மையை நாடவேண்டும், நன்மையான, இறையச்சமிக்க காரியங்களில் ஒருவர் ஒருவருக்கு உதவ வேண்டும் என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகிறார்கள்.

عَنْ تَمِيمٍ الدَّارِيِّ ﷺ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: الدِّينُ النَّصِيحَةُ قُلْنَا: لِمَنْ؟ قَالَ: لِلَّهِ وَلِكِتَابِهِ وَلِرَسُولِهِ وَلِأَئِمَّةِ الْمُسْلِمِينَ وَعَامَّتِهِمْ

மார்க்கம் என்பது நன்மையை நாடுவதாகும் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். நாங்கள், யாருக்கு என்று கேட்டோம். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்விற்கு, அவனது வேதத்திற்கு, அவனது ரஸூலுக்கு, முஸ்லிம்களின் தலைவர்களுக்கு, இன்னும் பொதுவாக எல்லா முஸ்லிம்களுக்கும்.[133]

அஹ்லுஸ் ஸுன்னா, இஸ்லாமின் அடையாள சின்னமாக விளங்கும் மார்க்க கடமைகளை பேணிப் பாதுகாத்து நிறைவேற்றுவார்கள். உதாரணமாக, ஜுமுஆ தொழுகை, ஜமாஆ - கூட்டுத்தொழுகை, ஹஜ், ஜிஹாத், பெருநாள் தொழுகைகள் ஆகிய இவற்றைத் தங்கள் ஆட்சியாளர்களுடன் நிறைவேற்றுவார்கள். அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சரி, அல்லது கெட்டவர்களாக இருந்தாலும் சரி. ஆனால், அஹ்லுல் பித்ஆ இதற்கு முரண்படுவார்கள்.

ஐங்கால தொழுகைகளை நிறைவேற்றுவதில் விரைந்து செயல்படுவார்கள். அந்த தொழுகைகளை ஜமாஅத்துடன் அவற்றின் முதல் நேரத்தில் தொழுவார்கள். முதல் நேரம்தான் இறுதி நேரத்தை விட மிக சிறந்ததாகும்.

133. அறிவிப்பாளர்: தமீம் அத்தாரீ ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 55.

ஆனால், இஷா தொழுகையைத் தவிர. அதைப் பிற்படுத்துவது சிறந்ததாகும். தொழுகையில் உள்ளச்சத்தையும், நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் ஏவுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قَدْ أَفْلَحَ ٱلْمُؤْمِنُونَ ۝١ ٱلَّذِينَ هُمْ فِى صَلَاتِهِمْ خَـٰشِعُونَ ۝٢

திட்டமாக நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் தங்கள் தொழுகையில் மிகுந்த பணிவுடன் உள்ளச்சமுள்ளவர்களாக இருப்பார்கள். (அல்குர்ஆன் 23:1,2)

அஹ்லுஸ் ஸுன்னா தங்களுக்குள் இரவுத் தொழுகையை ஒருவர் மற்றவருக்கு உபதேசித்துக்கொள்வார்கள். நிச்சயமாக இரவுத் தொழுகை நபி ﷺ அவர்களின் மிக விசேஷமான ஒரு வழிமுறையாகும். மேலும், அல்லாஹு தஆலா நபி ﷺ அவர்களுக்கு இரவுத் தொழுகையை தொழ வேண்டும் என்றும் இரவில் அவனை வணங்குவதில் மிகுந்த ஈடுபாடு காட்ட வேண்டும், முயற்சி செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுத்திருக்கிறான்.

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّ نَبِيَّ اللهِ ﷺ كَانَ يَقُومُ مِنَ اللَّيْلِ حَتَّىٰ تَتَفَطَّرَ قَدَمَاهُ، فَقَالَتْ عَائِشَةُ ﵂ لِمَ تَصْنَعُ هَذَا يَا رَسُولَ اللهِ، وَقَدْ غَفَرَ اللهُ لَكَ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِكَ وَمَا تَأَخَّرَ؟ قَالَ: أَفَلَا أُحِبُّ أَنْ أَكُونَ عَبْدًا شَكُورًا

நபி ﷺ அவர்கள் இரவில் தங்களது இரு பாதங்களும் வீங்கி வெடிக்கும் அளவிற்கு தொழுவார்கள். அல்லாஹ்வின் தூதரே இப்படி ஏன் செய்கிறீர்? அல்லாஹ் உங்களுக்கு முன் பின் பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிட்டானே! என்று ஆயிஷா ﵂ கூறினார்கள். நபி ﷺ கூறினார்கள்: ஆக, நான் நன்றியுள்ள அடியானாக ஆக ஆசைப்பட வேண்டாமா?[134]

134. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 4837.

அஹ்லுஸ் ஸுன்னா, குழப்ப காலத்திலும், சோதனைகள் இன்னும் சிரமங்களின் பொழுதும் உறுதியாக, சகிப்போடு நிலைகுலையாமல் இருப்பார்கள். வசதியின்போதும் செழிப்பின்போதும் நன்றி உணர்வோடு இருப்பார்கள். அத்துடன் விதியில் உள்ள கசப்பானதையும் பொருந்திக் கொள்வார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّمَا يُوَفَّى ٱلصَّٰبِرُونَ أَجْرَهُم بِغَيْرِ حِسَابٍ ﴿١٠﴾

பொறுமையாளர்களுக்கு அவர்களது கூலி (மறுமையில்) வழங்கப்படுவதெல்லாம் கணக்கின்றிதான். (அல்குர்ஆன் 39:10)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ: عِظَمُ الْجَزَاءِ مَعَ عِظَمِ الْبَلَاءِ، وَإِنَّ اللَّهَ إِذَا أَحَبَّ قَوْمًا ابْتَلَاهُمْ، فَمَنْ رَضِيَ فَلَهُ الرِّضَا، وَمَنْ سَخِطَ فَلَهُ السُّخْطُ

மகத்தான நற்கூலி பெரிய சோதனைக்குப் பின்னர் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் – அஸ்ஸ வ ஜல்ல – (கண்ணியமானவன், கம்பீரமானவன்) ஒரு கூட்டத்தை விரும்பினால் அவர்களைச் சோதிக்கிறான். ஆக, யார் பொருந்திக்கொள்கிறாரோ அவருக்கு (அல்லாஹ்வின்) பொருத்தம் உண்டு. யார் அதிருப்தி அடைகிறாரோ அவருக்கு (அல்லாஹ்வின்) அதிருப்திதான் கிடைக்கும்.[135]

அஹ்லுஸ் ஸுன்னா சோதனைகளை ஆசைப்பட மாட்டார்கள், அதை அல்லாஹ்விடம் வேண்ட மாட்டார்கள். ஏனெனில், அந்த சோதனைகளின் போது நாம் உறுதியாக இருக்க முடியுமா, முடியாதா என்பது நமக்குத் தெரியாது. என்றாலும் அவர்கள் சோதிக்கப்பட்டால் சகிப்போடும் பொறுமையோடும் உறுதியாக இருப்பார்கள்.

135. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: இப்னு மாஜா எண்: 4031.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أَيُّهَا النَّاسُ، لَا تَتَمَنَّوْا لِقَاءَ الْعَدُوِّ، وَسَلُوا اللَّهَ الْعَافِيَةَ، فَإِذَا لَقِيتُمُوهُمْ فَاصْبِرُوا، وَاعْلَمُوا أَنَّ الْـجَنَّةَ تَحْتَ ظِلَالِ السُّيُوفِ

மக்களே! எதிரிகளைச் சந்திக்க ஆசைப்படாதீர்கள். அல்லாஹ்விடம் ஆஃபியத்தை - நற்சுகத்தை கேளுங்கள்! ஆக, நீங்கள் அவர்களை சந்தித்துவிட்டால் உறுதியாக இருங்கள்! அறிந்துகொள்ளுங்கள், நிச்சயமாக சொர்க்கம் வாள்களின் நிழல்களுக்குக் கீழே இருக்கிறது.[136]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, சோதனைகளின் நேரத்தில் நிராசையடைய மாட்டார்கள், நம்பிக்கை இழக்க மாட்டார்கள். ஏனெனில் நிச்சயமாக நிராசையடைவதை அல்லாஹ் தடுத்திருக்கிறான். என்றாலும் விரைவில் சிரமங்கள் நீங்கும், துன்பங்கள் விலகும், அல்லாஹ்வின் உதவி உறுதியாக வரும் என்ற நல்லாதரவுடன் வாழ்வார்கள். நிச்சயமாக அவர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி மீது உறுதியான நம்பிக்கை இருக்கும். சிரமத்துடன் இலேசு இருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். சோதனைக்கான காரணங்கள் தங்களிடம் என்ன காணப்படுகின்றன என்பதை ஆராய்வார்கள். மனிதர்களுக்கு அவர்களின் கரங்கள் சம்பாதித்த தீமையினால் சோதனைகள், சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதை அவர்கள் அறிவார்கள். பாவத்தில் வீழ்ந்துவிடுவதாலும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றுவதில் ஏற்படுகிற குறைகளினாலும் உதவி தாமதமாகலாம் என்று அவர்கள் அறிவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَآ أَصَٰبَكُم مِّن مُّصِيبَةٍ فَبِمَا كَسَبَتْ أَيْدِيكُمْ

சோதனைகளில் எது உங்களுக்கு ஏற்பட்டதோ அது உங்கள் கரங்கள் செய்தவற்றினால்தான் (ஏற்பட்டது). (அல்குர்ஆன் 42:30)

---

136. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 2965, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1742.

சோதனைகளிலும் மார்க்கத்திற்கு உதவுவதிலும் உலக காரணங்களின் மீதும் உலக நியதிகள் மீதும் வெளிப்படையான தூண்டுதல்கள் மீதும் அவர்கள் சார்ந்திருக்க மாட்டார்கள். அதே நேரத்தில் அவற்றை அலட்சியமும் செய்ய மாட்டார்கள். எல்லா காரணங்களுக்கும் முன்பாக அல்லாஹ்வின் அச்சமும் பாவத்திலிருந்து பாவமன்னிப்புப் கேட்டுத் திருந்துவதும் அல்லாஹ்வின் மீது சார்ந்திருப்பதும் சுகமான காலங்களில் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி வாழ்வதும் சிரமங்கள் சீக்கிரமாக நீங்குவதற்கான முக்கியமான காரியங்களில் உள்ளவை என்று அஹ்லுஸ் ஸுன்னா கருதுகிறார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ, அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி கெட்டத்தனமாக நடப்பதை அஞ்சுவார்கள். அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதிலும் அவனை புகழ்வதிலும் அதிகம் ஆசையுள்ளவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்வின் அருள் சிறியதோ பெரியதோ அதற்குத் தொடர்ந்து எப்பொழுதும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவர்களாக, அல்லாஹ்வைப் புகழ்ந்தவர்களாக இருப்பார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ انْظُرُوا إِلَى مَنْ أَسْفَلَ مِنْكُمْ، وَلَا تَنْظُرُوا إِلَى مَنْ هُوَ فَوْقَكُمْ، فَهُوَ أَجْدَرُ أَنْ لَا تَزْدَرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ

நீங்கள் உங்களுக்குக் கீழுள்ளவர்களைப் பாருங்கள்! உங்களுக்கு மேலுள்ளவர்களைப் பார்க்காதீர்கள்! ஏனெனில், நிச்சயமாக அதுதான் உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருளை நீங்கள் குறைத்து மதிப்பிடாமல் இருக்க மிக உகந்ததாகும்.[137]

அஹ்லுஸ் ஸுன்னா உயர்வான கண்ணியமான குணங்களை உடையவர்களாக சிறப்பான அழகான செயல்களை உடையவர்களாக இருக்க வேண்டும்.

137. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2963.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ أَكْمَلُ الْمُؤْمِنِينَ إِيمَانًا أَحْسَنُهُمْ خُلُقًا

முஃமின்களில் ஈமானால் முழுமையானவர் அவர்களில் குணத்தால் மிக அழகானவரே![138]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ وَأَقْرَبِكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ القِيَامَةِ أَحَاسِنَكُمْ أَخْلَاقًا

நிச்சயமாக உங்களில் எனக்கு மிக விருப்பமானவர், மறுமை நாளில் உங்களில் எனக்கு சபையில் நெருக்கமானவர், உங்களில் குணங்களால் மிக அழகானவர்களே![139]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ شَيْءٍ يُوضَعُ فِي الْمِيزَانِ أَثْقَلُ مِنْ حُسْنِ الْخُلُقِ، وَإِنَّ صَاحِبَ حُسْنِ الْخُلُقِ لَيَبْلُغُ بِهِ دَرَجَةَ صَاحِبِ الصَّوْمِ وَالصَّلَاةِ

தராசில் வைக்கப்படும் எதுவும் நற்குணத்தை விட மிக கணமானதாக இருக்காது. நிச்சயமாக நற்குணசாலி நற்குணத்தின் மூலம் (உபரியான) நோன்பாளி இன்னும் (உபரியான) தொழுகையாளியின் தகுதியை அடைந்துகொள்கிறார்.[140]

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய குணாதிசயங்களில் சில:

கல்வி கற்பிப்பது, கல்வி கற்பது, அமல் செய்வது என அனைத்திலும் அல்லாஹ்வின் திருமுகம் மட்டுமே அவர்களுக்கு நாட்டமாக இருக்கும்.

138. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸுனன் அபீ தாவூத் எண்: 4682.
139. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ﷺ, நூல்: ஸுனன் அத்திர்மிதீ எண்: 2018.
140. அறிவிப்பாளர்: அபுத் தர்தா ﷺ, நூல்: ஸுனன் அத்திர்மிதீ எண்: 2003.

இல்ம் - கல்வியிலும் அமலிலும் மனத்தூய்மையோடு இருப்பார்கள். முகஸ்துதியை அதிகம் பயப்படுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَلَا لِلَّهِ ٱلدِّينُ ٱلْخَالِصُ

அறிந்து கொள்ளுங்கள்! பரிசுத்தமான வணக்க வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்விற்கே உரியன. (அல்குர்ஆன் 39:3)

இன்னும், ஹுருமாத்துல்லாஹ் - அல்லாஹ்வின் புனிதங்களை அவர்கள் பெரிதும் மதித்து நடப்பார்கள். அல்லாஹ்வின் புனிதங்கள் பாழாக்கப்பட்டால் அதற்காக அவர்கள் ரோஷப்படுவார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவியாளர்களாக இருப்பார்கள். முஸ்லிம்களின் உடல், பொருள், மான மரியாதைகளை கண்ணியப்படுத்துவார்கள். முஸ்லிம்களுக்கு நன்மையை விரும்புவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يُعَظِّمْ شَعَٰٓئِرَ ٱللَّهِ فَإِنَّهَا مِن تَقْوَى ٱلْقُلُوبِ ﴿٣٢﴾

இன்னும் எவர் அல்லாஹ்வின் அடையாளங்களை கண்ணியப்படுத்துவாரோ நிச்சயமாக அது உள்ளங்களின் இறையச்சத்திலிருந்து வெளிப்படக் கூடியதாகும். (அல்குர்ஆன் 22:32)

நயவஞ்சகத்தைக் கண்டிப்பாக அஹ்லுஸ் ஸுன்னா தவிர்த்திருப்பார்கள். நன்மையில் அவர்களின் உள்ரங்கமும் வெளிரங்கமும் ஒரே சமமாக இருக்கும். தாங்கள் செய்யக்கூடிய அமல்களை எப்போதும் குறைவாகவேக் கருதுவார்கள். உலகத்தின் காரியங்களை விட மறுமையின் காரியங்களை முற்படுத்துவார்கள்.

அவர்களின் உள்ளங்கள் மென்மையாக இருக்கும். அல்லாஹ்வின் கடமைகளில் தாங்கள் செய்த குறைகளை நினைத்து அதிகம் அழுது அல்லாஹ்விடம் அவனது கருணையை ஆதரவு வைப்பார்கள். ஒரு

ஜனாஸாவை கண்டால் மரணத்தை நினைவு கூர்ந்து அழுவார்கள், அதிலிருந்து படிப்பினை பெறுவார்கள். மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்குக் தேவையான அமல்களை செய்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். மரணத்தையும் அதன் இறுதி மயக்க நிலைமைகளையும் வாழ்க்கையின் கெட்ட முடிவையும் அவர்கள் நினைவு கூர்ந்துவிட்டால் அவர்களின் உள்ளங்கள் நடுநடுங்கி அழுவார்கள்.

அவர்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கம் அதிகமாக அதிகமாக அவர்களின் பணிவும் பயமும் அதிகமாகும்.

இரவு பகலாக அதிகம் அதிகம் தவ்பா கேட்டவர்களாக, பாவமன்னிப்பு தேடியவர்களாக இருப்பார்கள். பாவத்திலிருந்து யார் தப்பிக்க முடியும் என்ற அச்சத்தினாலும் வணக்க வழிபாட்டில் கூட நாம் தவறு செய்துவிடலாம் என்ற பயத்தினாலும் அதிகம் இஸ்திக்ஃபார் பாவமன்னிப்பு தேடிக்கொண்டே இருப்பார்கள். அல்லாஹ் அவர்களின் அமல்களைக் கண்காணிக்கிறான் என்ற உணர்வோடு இருப்பதுடன் தங்களின் அமல்களில் எந்த ஒரு அமலைக் கொண்டும் பெருமைப்பட மாட்டார்கள். பிரபலமாகுவதை விரும்ப மாட்டார்கள். தங்கள் தவறுகளை நினைத்து மட்டுமல்ல, வணக்க வழிபாட்டில் செய்துவிட்ட குறைகளை நினைத்தும் வருந்திக் கொண்டே இருப்பார்கள்.

அதிகம் அல்லாஹ்வை பயப்படுவார்கள், மிகுந்த பேணுதலுடன் இருப்பார்கள். அவர்களில் யாரும் தன்னைப் பற்றி நான் தக்வா உள்ளவன் என்று வாதிட மாட்டார். அல்லாஹ்வின் பயம் அவர்களுக்கு அதிகம் இருக்கும்.

கெட்ட முடிவை குறித்து அதிகம் பயப்படுவார்கள், அல்லாஹ்வின் நினைவை அலட்சியம் செய்ய மாட்டார்கள், திக்ரை மறக்க மாட்டார்கள், துன்யா - உலகத்தை அற்பமாகக் கருதுவார்கள், அதை அதிகம் உதறித்தள்ளுவார்கள், பங்களாக்கள், மாட மாளிகைகளில் கவனம் செலுத்த மாட்டார்கள், ஆடம்பரமின்றி தங்களுக்குத் தேவையான அளவு வீடுகளை அமைத்துக்கொள்வார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

واللهِ مَا الدُّنْيا في الآخِرَةِ إلَّا مِثْلُ مَا يَجْعَلُ أَحَدُكُمْ إصْبَعَهُ هذِه -وأَشارَ يَحْيَىٰ بالسَّبَّابَةِ- فِي اليَمِّ فَلْيَنْظُرْ بِمَ تَرْجِعُ؟

அல்லாஹ்வின் மீதாணையாக இந்த உலகம் மறுமையைக் கவனித்து உங்களில் ஒருவர் தமது விரலை கடலில் நுழைப்பதைப் போன்றே தவிர இல்லை. ஆக, அது எதைத் திரும்பக்கொண்டு வருகிறது என்று அவர் கவனிக்கட்டும்.(அவரின் விரலின் நுனியில் ஒட்டி இருக்கும் நீரின் அளவுதான் இந்த உலகம். மறுமையோ கடல் போன்றதாகும்.)[141]

மார்க்கத்தை அல்லது முஸ்லிம்களைக் களங்கப்படுத்தும் தவறுகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்தகைய தவறுகளை மறுத்துவிடுவார்கள். யாரும் அத்தகைய தவறான செய்திகளைச் சொல்லிவிட்டால் – அவர் நல்லவர் என்று அறியப்பட்டவராக இருந்தால் – அவருக்காக மன்னிப்புக் கேட்பார்கள். அவர் ஏதோ ஒரு காரணத்தினால் அப்படி சொல்லி இருக்கலாம் என்று நல்லெண்ணம் வைப்பார்கள். தங்களது முஸ்லிமான சகோதரர்களின் குறைகளை அதிகம் மறைத்துவிடுவார்கள். பேணுதலுக்காக தங்கள் செயல்களைப் பற்றித் தங்களிடம் அதிகம் கேள்வி கேட்டுக்கொள்வார்கள். பிறருடைய குறை வெளிப்பட வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார்கள். மக்களின் குறைகளை ஆராய்வதை விட தங்களின் குறைகளை ஆராய்வார்கள். பிறருடைய குறைகளை மறைப்பதில் அதிகம் முயற்சிப்பார்கள். பிறருடைய இரகசியங்களை மறைத்துவிடுவார்கள். ஒருவரைப் பற்றி தாங்கள் கேள்விப்படுவதை அவரிடம் சொல்ல மாட்டார்கள். மக்களிடம் பகைமை பாராட்ட மாட்டார்கள். அவர்களிடம் அன்பாகப் பழக அதிகம் முயற்சிப்பார்கள். யாருக்கும் தீங்கு செய்ய மாட்டார்கள். இப்படித்தான் அஹ்லுஸ் ஸுன்னாவின் குணாதிசயங்கள் இருக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

لا يَدْخُلُ الْـجَنَّةَ قَتّاتٌ

141. அறிவிப்பாளர்: அல்முஸ்தவ்ரித் இப்னு ஷத்தாஹ் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2858.

கோள்சொல்பவன் சொர்க்கம் நுழைய மாட்டான்.[142]

அஹ்லுஸ் ஸுன்னா, தங்களது சபைகளில் புறம் பேசுவதை முற்றிலுமாக தவிர்த்திருக்க வேண்டும்; புறம் பேசுவதின் வாசலை அடைத்தே வைத்திருக்க வேண்டும்; தங்களது சபைகள் பாவத்தின் சபைகளாக மாறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தங்களது நாவுகளைப் புறம் பேசுவதிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَلَا يَغْتَب بَّعْضُكُم بَعْضًا ۚ
أَيُحِبُّ أَحَدُكُمْ أَن يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ ۚ

உங்களில் சிலர், சிலரைப் பற்றி புறம் பேசவேண்டாம். உங்களில் ஒருவர் - இறந்த நிலையில் உள்ள தனது சகோதரனின் மாமிசத்தைச் - சாப்பிட விரும்புவாரா? அதை நீங்கள் வெறுப்பீர்களே! (அல்குர்ஆன் 49:12)

அதிக வெட்கம், ஒழுக்கம், அன்போடு பழகுதல், பாசம் வைத்தல், அமைதியாக அடக்கமாக இருத்தல், கண்ணியமாக நடந்து கொள்ளுதல், பேச்சைக் குறைத்தல், சிரிப்பைக் குறைத்தல், அதிகம் வாய்மூடி மௌனமாக இருத்தல், பேசினால் ஞானமான சொற்களைப் பேசுதல், உலக பொருட்களில் எதைக் கொண்டும் பெருமை அடிக்காமல் இருத்தல் இவை எல்லாம் அஹ்லுஸ் ஸுன்னாவிடம் இருக்க வேண்டும். இது அவர்களின் அறிவு நிறைவடைந்தது என்பதற்குச் சான்றாக இருக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவராக இருக்கிறாரோ அவர் நல்லதைப் பேசட்டும், அல்லது வாய்மூடி இருக்கட்டும்.[143]

142. அறிவிப்பாளர்: ஹுதைஃபா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6056.
143. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 6138.

மேலும், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو ؓ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ صَمَتَ نَجَا

யார் வாய்மூடி மௌனமாக இருப்பாரோ அவர் தப்பித்தார்.[144]

தங்களுக்கு யாரும் தொந்தரவு தந்தால், தங்களது செல்வத்தை எடுத்துக் கொண்டால், தங்களை அடித்தால், தங்களுடைய மான மரியாதையில் விளையாடினால் அவை அனைத்தையும் அவர்கள் மன்னித்து பெருந்தன்மையாக விட்டுவிடுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلۡكَٰظِمِينَ ٱلۡغَيۡظَ وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ وَٱللَّهُ يُحِبُّ ٱلۡمُحۡسِنِينَ ١٣٤

இன்னும், கோபத்தை மென்றுவிடுவார்கள்; இன்னும், மக்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) நல்லறம் புரிபவர்கள் மீது அன்பு வைக்கிறான். (அல்குர்ஆன் 3:134)

இப்லீஸிடம் யுத்தம் செய்வதை மறந்துவிட மாட்டார்கள். அவனது சூழ்ச்சிகளையும் அவனது வலைகளையும் அறிய முயற்சிப்பார்கள்.

உளூ, தொழுகை என வணக்க வழிபாடுகளில் வீண் சந்தேகங்கள் படமாட்டார்கள். ஏனெனில், இவை எல்லாம் ஷைத்தானின் புறத்திலிருந்து வருபவை என்று அவர்கள் அறிந்திருப்பார்கள்.

தங்கள் தேவைகளுக்கு போக மீதமானவற்றை இரவு, பகல், இரகசியமாக, வெளிப்படையாக என எல்லா நேரங்களிலும் தர்மம் செய்வார்கள். தங்கள் நண்பர்கள், இன்னும் தோழர்களின் நிலைமைகளைப் பற்றி அதிகம் அக்கறையுடன் விசாரிப்பார்கள். தங்களது நண்பர்கள் இன்னும் தோழர்களின் தேவைக்கு ஏற்ப அவர்களுக்கு உணவு உடை இன்னும் செல்வத்தைக் கொடுத்து அவர்களை பராமரித்துக் கொள்வார்கள். செல்வங்கள் கிடைத்தால் அவற்றை வீண்விரயம் செய்ய மாட்டார்கள்.

கஞ்சத்தனம் அவர்களுக்குப் பிடிக்காத குணமாக இருக்கும். அதிகம் தர்மம் செய்வதை, கொடை கொடுப்பதை, நல்ல வழிகளில் செல்வத்தைச்

144. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ؓ, நூல்: முஸ்னத் அஹ்மத் எண்: 6481.

செலவழிப்பதை விரும்புவார்கள். உள்ளூரிலும் பயணத்திலும் தங்கள் சகோதரர்களை நன்கு கவனித்துக்கொள்வார்கள். நிச்சயமாக இதன் மூலம் அவர்களின் நோக்கமாகிய மார்க்கத்திற்கு உதவுவதில் ஒருவர் ஒருவருக்கு தோள்கொடுக்க முடியும். தங்கள் சகோதரர்களுக்கு நன்மைகள் செய்வதில் அதிகம் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள், அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கு முயற்சிப்பார்கள், தங்களை விட தங்கள் சகோதரர்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

விருந்தாளிகளை கண்ணியப்படுத்த வேண்டும், முடிந்தளவு அவர்களுக்கு தாமே முன்வந்து பணிவிடை செய்ய வேண்டும். இவ்வளவு செய்தும் விருந்தாளிக்கு உணவளிப்பதன் மூலமும் அவருக்கு பணிவிடை செய்ததன் மூலமும் அவரை தங்க வைத்ததன் மூலமும் அவருக்குத் தாம் கைமாறு செய்ததாக நினைக்க கூடாது. விருந்தாளியின் மீது நல்லெண்ணம் வைக்க வேண்டும். தங்கள் நண்பர்கள் விருந்துக்கு அழைத்தால் அந்த விருந்து ஹராமாக இல்லை என்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது விருந்தில் செல்வந்தர்கள் மட்டும் அழைக்கப்பட்டு, ஏழைகள் தவிர்க்கப்பட்டிருந்தால் அல்லது விருந்தில் பாவமான காரியம் கலந்திருந்தால் அந்த விருந்துகளைக் தவிர்க்க வேண்டும்.

பெரியவர்களிடம் மட்டுமல்ல சிறியவர்களிடமும், நெருக்கமானவர்களிடம் மட்டுமல்ல தூரமானவர்களுடனும், அறிஞர்களிடம் மட்டுமல்ல கல்வி அறியாத பாமரர்களிடமும் அழகிய ஒழுக்கத்துடன் நல்ல பண்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

மக்களுக்கு மத்தியில் சமாதானத்தை உண்டாக்க வேண்டும். இது நல்லறங்களின் வகைகளில் மிக சிறந்த வகையாகும். இருவருக்கு இடையில் சமாதானம் செய்து வைப்பது ஷைத்தானின் திட்டங்களையும் நோக்கங்களையும் வீணடித்துவிடும். அதாவது, ஷைத்தானின் நோக்கம், முஸ்லிம்களுக்கு மத்தியில் பகைமையை உண்டாக்குவது, வெறுப்பை விதைப்பது, இன்னும், அவர்களின் உறவை கெடுப்பதுதான் ஷைத்தானின் முயற்சியாகும்.

பொறாமையைத் தடுக்க வேண்டும், பொறாமையானது பகைமையையும் வெறுப்பையும் ஈமானின் பலவீனத்தையும் உலகம் இன்னும்

அதன் செல்வத்தை மார்க்க நோக்கமின்றி ஆசைப்படுவதையும் உண்டாக்கிவிடுகிறது.

பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களுக்கு உதவி உபகாரம் செய்ய வேண்டும், அதை மக்களுக்கு ஏவவேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَوَصَّيْنَا ٱلْإِنسَـٰنَ بِوَٰلِدَيْهِ حُسْنًا ۖ

மனிதனுக்கு, அவன் தனது பெற்றோரிடம் அழகிய முறையில் நடக்க வேண்டும் என நாம் உபதேசித்தோம். (அல்குர்ஆன் 29:8)

அண்டை வீட்டாருடன் அழகிய உறவைப் பின்பற்ற வேண்டும், அடியார்களுடன் மென்மையாக நடக்க வேண்டும், உறவுகளைச் சேர்த்து வாழவேண்டும், ஸலாமைப் பரப்ப வேண்டும், ஏழைகள், வறியவர்கள், அனாதைகள், இன்னும் வழிப்போக்கர்களுக்கு உதவ வேண்டும்.

தற்பெருமை அடிப்பது, தற்புகழ்ச்சி செய்வது, மமதை கொள்வது, கர்வம், ஆணவம், பிறர் மீது எல்லை மீறுவது, இன்னும் அநியாயம் செய்வதை விட்டுத் தவிர்ந்திருக்க வேண்டும், பிறரையும் தடுக்க வேண்டும். எல்லா காரியங்களிலும் நீதத்தைப் பின்பற்றி நடப்பதுடன் நீதத்தைப் பிறருக்கும் ஏவ வேண்டும்.

மார்க்கம் நமக்கு ஆர்வமூட்டிய சிறப்பான எந்தப் பண்புகளையும், காரியங்களையும் அலட்சியம் செய்யக் கூடாது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي ذَرٍّ، قَالَ: قَالَ لِيَ النَّبِيُّ ﷺ لَا تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوفِ شَيْئًا، وَلَوْ أَنْ تَلْقَى أَخَاكَ بِوَجْهٍ طَلْقٍ

நன்மையில் எதையும் நீ அற்பமாகக் கருதிவிடாதே! அது உன் சகோதரனை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதாக இருந்தாலும் சரி.[145]

145. அறிவிப்பாளர்: அபூ தர் அல் கிஃபாரீ ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம் எண்: 2626.

பிறர் பற்றிய கெட்ட எண்ணங்களையும் பிறர் குறைகளைத் துருவித்துருவி ஆராய்வதையும் தவிர்க்க வேண்டும். முஸ்லிம்களின் குறைகளைத் தேடுவது கூடாது. இது சமூக உறவுகளைக் கெடுத்துவிடும். சகோதரர்களுக்கு மத்தியில் பிரிவினையை உண்டாக்கிவிடும். குழப்பத்தை விதைத்துவிடும்.

அஹ்லுஸ் ஸுன்னா தங்களுக்காக கோபம் கொள்ள மாட்டார்கள், கோபம் ஏன், எதற்காக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து நடப்பார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَٱلۡكَٰظِمِينَ ٱلۡغَيۡظَ وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ وَٱللَّهُ يُحِبُّ ٱلۡمُحۡسِنِينَ ١٣٤

இன்னும், கோபத்தை மென்றுவிடுவார்கள்; இன்னும், மக்களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) நல்லறம் புரிபவர்கள் மீது அன்பு வைக்கிறான். (அல்குர்ஆன் 3:134)

அஹ்லுஸ் ஸுன்னா, - மேற்கூறப்பட்ட நற்குணங்கள் மட்டுமல்லாமல் நபி ﷺ கற்றுக்கொடுத்த எல்லா நற்பண்புகளையும் உயர்வான ஒழுக்கங்களையும் - தாங்களும் பின்பற்றுவதுடன் பிற மக்களுக்கும் அவற்றை ஏவுவார்கள்!

****

فَصْلٌ

وَصَايَا وَأَقْوَالُ أَئِمَّةِ أَهْلِ السُّنَّةِ فِي الْاتِّبَاعِ وَالنَّهيِ عَنِ الْابْتِدَاعِ

பிரிவு:

ஸுன்னாவைப் பின்பற்றுதல், அனாச்சாரங்களைத் தடுத்தல் குறித்து அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் கூற்றுகளும் உபதேசங்களும்

وَصَايَا وَأَقْوَالُ أَئِمَّةِ أَهْلِ السُّنَّةِ فِي الْاتِّبَاعِ وَالنَّهيِ عَنِ الْابْتِدَاعِ

ஸுன்னாவைப் பின்பற்றுதல், அனாச்சாரங்களைத் தடுத்தல் குறித்து அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் கூற்றுகளும் உபதேசங்களும்

1. முஆத் இப்னு ஜபல் ﷺ கூறுகிறார்கள்:

أَيُّهَا النَّاسُ، عَلَيْكُمْ بِالْعِلْمِ قَبْلَ أَنْ يُرْفَعَ، أَلَا وَإِنَّ رَفْعَهُ ذَهَابُ أَهْلِهِ، وَإِيَّاكُمْ وَالْبِدَعَ وَالتَّبَدُّعَ وَالتَّنَطُّعَ، وَعَلَيْكُمْ بِأَمْرِكُمُ الْعَتِيقِ

மக்களே! கல்வியை - அது உயர்த்தப்படுவதற்கு முன்னர் - கற்றுக்கொள்ளுங்கள்! கல்வி உயர்த்தப்படுவது என்பது கல்வியாளர்கள் போய்விடுவதாகும். அனாச்சாரங்களை விட்டும், அனாச்சாரங்களை புதிது புதிதாக உருவாக்குவதை விட்டும் மார்க்கத்தில் வீண் சிரமம் எடுப்பதை விட்டும் (தேவை இல்லாத விஷயத்தில் சர்ச்சை செய்வதை விட்டும்) உங்களை நான் எச்சரிக்கிறேன். (இந்த மார்க்கத்தில் தொன்று தொட்டு வரக்கூடிய) உறுதியான பழையதை மட்டும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்![146]

2. ஹுதைஃபா இப்னுல் யமான் ﷺ கூறுகிறார்கள்:

كُلُّ عِبَادَةٍ لَمْ يَتَعَبَّدْ بِهَا أَصْحَابُ رَسُولِ اللهِ ﷺ فَلا تَتَعَبَّدُوا بِهَا؛ فَإِنَّ الْأَوَّلَ لَمْ يَدَعْ لِلْآخِرِ مَقَالًا؛ فَاتَّقُوا اللَّهَ يَا مَعْشَرَ الْقُرَّاءِ، خُذُوا طَرِيقَ مَنْ كَانَ قَبْلَكُمْ

எந்த இபாதத்தை - வணக்க வழிபாட்டை ரஸூலுல்லாஹ் ﷺ மற்றும் அவர்களுடைய தோழர்கள் செய்யவில்லையோ அதை நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில், நிச்சயமாக முந்தியவர் பிந்தியவருக்கு பேச்சுக்கு எந்த இடத்தையும் விட்டுச்செல்லவில்லை. ஆக, அறிஞர்களின்

146. நூல்: அல்பிதஃ வன்னஹ்யு அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.

சமுதாயமே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! உங்களுக்கு முன்னால் இருந்தவர்களின் பாதையைப் பிடித்துக்கொள்ளுங்கள்![147]

3. அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ﵁ கூறுகிறார்கள்:

مَنْ كَانَ مُسْتَنًّا فَلْيَسْتَنَّ بِمَنْ قَدْ مَاتَ، أُولَٰئِكَ أَصْحَابُ مُحَمَّدٍ ﷺ كَانُوا خَيْرَ هَٰذِهِ الْأُمَّةِ، أَبَرَّهَا قُلُوبًا، وَأَعْمَقَهَا عِلْمًا، وَأَقَلَّهَا تَكَلُّفًا، قَوْمٌ اخْتَارَهُمُ اللهُ لِصُحْبَةِ نَبِيِّهِ ﷺ،وَنَقْلِ دِينِهِ، فَتَشَبَّهُوا بِأَخْلَاقِهِمْ وَطَرَائِقِهِمْ، فَهُمْ كَانُوا عَلَى الْهَدْيِ الْمُسْتَقِيمِ

யார் ஒருவர் பின்பற்றி நடக்க ஆசைப்படுவாரோ அவர் தனக்கு முன்னால் இறந்துவிட்டவர்களைப் பின்பற்றி நடக்கவும். அவர்கள்தான் முஹம்மத் ﷺ அவர்களின் தோழர்கள் ஆவார்கள். அவர்கள், இந்த சமுதாயத்திலேயே சிறந்தவர்களாக, உள்ளங்களால் நல்லவர்களாக, கல்வியால் ஆழமானவர்களாக, வீண் சிரமத்தால் மிகக் குறைவானவர்களாக இருந்தார்கள். அல்லாஹு தஆலா தனது நபியின் தோழமைக்கும் தனது மார்க்கத்தை எடுத்துரைப்பதற்கும் அவர்களைத் தேர்வு செய்தான். அவர்களின் குணங்களையும் அவர்களின் வழிமுறைகளையும் பின்பற்றுங்கள்! ஏனெனில், அவர்கள் மிக நேரான வழிமுறையில் இருந்தார்கள்.[148]

மேலும், இப்னு மஸ்வூத் ﵁ கூறுகிறார்கள்:

اتَّبِعُوا وَلَا تَبْتَدِعُوا فَقَدْ كُفِيتُمْ عَلَيْكُمْ بِالْأَمْرِ الْعَتِيقِ

நீங்கள் ஸுன்னாவைப் பின்பற்றுங்கள்! அனாச்சாரங்களை உண்டாக்காதீர்கள்! அதன் தேவை உங்களுக்கு இல்லை. (இந்த மார்க்கத்தில் தொன்று தொட்டு வரக்கூடிய) உறுதியான பழையதை மட்டும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்![149]

---

147. நூல்: அல் இபானா, ஆசிரியர்: இப்னு பத்தா.

148. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா, ஆசிரியர்: அல்பகவீ.

149. நூல்: அஸ் ஸுனன், ஆசிரியர்: அத்தாரமீ.

4. அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ கூறுகிறார்கள்:

لَا يَزَالُ النَّاسُ عَلَى الطَّرِيقِ مَا اتَّبَعُوا الْأَثَرَ

ஹதீஸை மக்கள் பின்பற்றுகிற காலமெல்லாம் அவர்கள் நேரான பாதையில் இருப்பார்கள்.[150]

மேலும், அவர்கள் கூறினார்கள்:

كُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ وَإِنْ رَآهَا النَّاسُ حَسَنَةً

ஒவ்வொரு அனாச்சாரமும் - மக்கள் அதை அழகாக பார்த்தாலும் - வழிகேடாகும்.[151]

5. அபுத் தர்தா ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَنْ تَضِلَّ مَا أَخَذْتَ بِالأَثَرِ

நீ ஹதீஸைப் பற்றிப்பிடித்திருக்கும் காலமெல்லாம் ஒருபோதும் வழிகெட மாட்டாய்.[152]

6. அலீ இப்னு அபீ தாலிப் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَوْ كَانَ الدِّينُ بِالرَّأْيِ لَكَانَ بَاطِنُ الْخُفَّيْنِ أَحَقَّ بِالْمَسْحِ مِنْ ظَاهِرِهِمَا وَلَكِنْ رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ يَمْسَحُ عَلَى ظَاهِرِهِمَا

மார்க்கம் சிந்தனையின்படி அமைந்திருந்தால் காலுறைகளின் மேல் பாகத்தை விட அதன் கீழ்பாகத்தைதான் மஸ்ஹ் செய்வது மிக ஏற்றமாக இருந்திருக்கும். என்றாலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் காலுறைகளின் மேல்பாகத்தின் மீது மஸ்ஹ் செய்வதைத்தான் நான் பார்த்திருக்கிறேன்.[153]

---

150. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
151. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
152. நூல்: அல் இபானா, ஆசிரியர்: இப்னு பத்தா.
153. நூல்: முஸன்னஃப், ஆசிரியர்: இப்னு அபீ ஷைபா.

7. அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﷺ கூறுகிறார்கள்:

مَا ابْتُدِعَتْ بِدْعَةٌ إِلَّا ازْدَادَتْ مَضِيًّا، وَلا نُزِعَتْ سُنَّةٌ إِلَّا ازْدَادَتْ هَرَبًا

ஒரு பித்ஆ உருவாக்கப்பட்டுவிட்டால் அது தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருக்கும். ஒரு ஸுன்னா எடுக்கப்பட்டுவிட்டால் அது இல்லாமல் போய்க்கொண்டே இருக்கும்.[154]

8. ஆபிஸ் இப்னு ரபீஆ ﵀ கூறுகிறார்கள்:

رَأَيْتُ عُمَرَ بْنَ الخَطَّابِ ﷺ يُقَبِّلُ الحَجَرَ يَعْنِي الْأَسْوَدَ وَيَقُولُ: إِنِّي أَعْلَمُ أَنَّكَ حَجَرٌ، لَا تَضُرُّ وَلَا تَنْفَعُ، وَلَوْلَا أَنِّي رَأَيْتُ النَّبِيَّ ﷺ يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ

உமர் இப்னுல் கத்தாப் ﷺ அவர்கள் அல்ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவதை நான் பார்த்தேன். அப்பொழுது அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக நீ ஒரு கல் என்பதை நான் அறிவேன். நீ தீங்கும் செய்ய முடியாது, நீ பலனும் தர முடியாது. ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் பார்த்திருக்கவில்லை என்றால் நானும் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன்.[155]

9. உமர் இப்னு அப்தில் அஸீஸ் ﵀ கூறுகிறார்கள்:

قِفْ حَيْثُ وَقَفَ الْقَوْمُ، فَإِنَّهُمْ عَنْ عِلْمٍ وَقَفُوا، وَبِبَصَرٍ نَافِذٍ كَفُّوا، وَهُمْ عَلَىٰ كَشْفِهَا كَانُوا أَقْوَىٰ، وَبِالْفَضْلِ لَوْ كَانَ فِيهَا أُخْرَىٰ، فَلَئِنْ قُلْتُمْ: حَدَثَ بَعْدَهُمْ؛ فَمَا أَحْدَثَهُ إِلَّا مَنْ خَالَفَ هَدْيَهُمْ، وَرَغِبَ عَنْ سُنَّتِهِمْ، وَلَقَدْ وَصَفُوا مِنْهُ مَا يُشْفِي، وَتَكَلَّمُوا مِنْهُ بِمَا يَكْفِي، فَمَا فَوْقَهُمْ مُحْسِرٌ وَمَا دُونَهُمْ مُقَصِّرٌ، لَقَدْ قَصَّرَ عَنْهُمْ قَوْمٌ فَجَفَوْا وَتَجَاوَزَهُمْ آخَرُونَ فَغَلَوْا، وَإِنَّهُمْ فِيمَا بَيْنَ ذَٰلِكَ لَعَلَىٰ هُدًى مُسْتَقِيمٍ

154. நூல்: அல் இபானா, ஆசிரியர்: இப்னு பத்தா.

155. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் நூல்: ஸஹீஹுல் புகாரி எண்: 1605, ஸஹீஹ் முஸ்லிம் எண்: 1270.

அந்த மக்கள் (-நபித்தோழர்கள்) எங்கு நின்றார்களோ அங்கு நீயும் நின்றுவிடு! அவர்கள் அறிந்துதான் அங்கு நின்றார்கள். தெளிவான ஆழமான தீர்க்கமான புரிதலின் காரணமாகத்தான் அவர்கள் வாய்மூடி இருந்தார்கள். அவர்கள் அதை வெளிப்படுத்தி பேச ஆற்றல் உள்ளவர்கள்தான். அதை வெளிப்படுத்திப் பேசுவதில் சிறப்பு இருந்திருந்தால் அவர்கள் அதைப் பற்றிப் பேசி அந்தச் சிறப்பைப் பெற அவர்களே தகுதியானவர்களாக இருப்பார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் அவர்களுக்குப் பின்னால் புதிதாக இப்போது உருவானவை. எனவே நாம் அவற்றைப் பற்றி பேசித்தான் ஆகவேண்டும் என்று நீ கூறினால், ஆம். இவை அவர்களுக்குப் பின்னால் வந்தவை என்றால் -அவர்களின் நேர்வழிக்கு மாற்றமாக யார் சென்றார்களோ, அவர்களின் வழிமுறைகளை யார் புறக்கணித்தார்களோ அவர்கள்தான் இவற்றை புதிதாக உருவாக்கினார்கள் என்பதை அறிந்து கொள்! மனதுக்குக் தெளிவு கிடைக்கும் அளவிற்கு அவர்கள் (ஸஹாபா) விளக்கமளித்து விட்டார்கள். தேவையான மற்றும் போதுமான அளவு அவர்கள் இது விஷயமாகப் பேசிவிட்டார்கள். அவர்கள் பேசியதைத் தாண்டி பேசுகின்றவர் கைசேதப்படுவார். அவர்கள் பேசியதைப் பேசாமல் விலகியவர் குறைசெய்தவர் ஆவார். அவர்கள் அறிவித்த விஷயங்களை விட்டும் ஒரு கூட்டம் ஒதுங்கிக் கொண்டது. அப்படி செய்த கூட்டம் முரண்டு பிடித்தவர்கள் ஆவார்கள். அவர்கள் கூறியதைத் தாண்டி ஒரு கூட்டம் மேலதிகமாகப் பேசியது. அந்தக் கூட்டம் வரம்பு மீறிய கூட்டம் ஆகும். நிச்சயமாக அந்த நபித்தோழர்கள் மேற்கூறப்பட்ட இரண்டு நிலைப்பாட்டுக்கும் நடுவில், நேரான, கோணலற்ற நேர்வழியில் இருந்தார்கள். (-மார்க்கம் எதைக் கூறியதோ அதைப் பேச அவர்கள் தயங்கவில்லை, மார்க்கம் கூறாததைப் பேச அவர்கள் துணியவில்லை.)[156]

10. அவ்ஸாயீ ﷺ கூறுகிறார்கள்:

عَلَيْكَ بِآثَارِ مَنْ سَلَفَ، وَإِنْ رَفَضَكَ النَّاسُ وَإِيَّاكَ وَآرَاءَ الرِّجَالِ، وَإِنْ زَخْرَفُوهُ بِالْقَوْلِ فَإِنَّ الْأَمْرَ يَنْجَلِي، وَأَنْتَ عَلَىٰ طَرِيقٍ مُسْتَقِيمٍ

156. நூல்: லும்அத்துல் இஃதிகாத், ஆசிரியர்: இப்னு குதாமா.

உனக்கு முன்சென்றோர் உடைய செய்திகளை நீ பின்பற்று! மக்கள் உன்னை எறிந்தாலும் சரி! பிற்கால மனிதர்களின் சிந்தனைகளை விட்டு உன்னை எச்சரிக்கிறேன். அவர்கள் தங்கள் சொற்களால் அவற்றை உனக்கு அலங்கரித்தாலும் சரி! ஏனெனில், நிச்சயமாக காரியம் (ஒரு நாள்) தெளிவடையும், அப்போது நீ நேர்ப்பாதையில் இருப்பாய்.[157]

11. அய்யூப் அஸ்ஸக்தியானீ ﵀ கூறுகிறார்கள்:

مَا ازْدَادَ صَاحِبُ بِدْعَةٍ اجْتِهَادًا إِلَّا ازْدَادَ مِنَ اللهِ بُعْدًا

பித்அ செய்பவர் (அல்லாஹ்வை நெருங்க) எவ்வளவுதான் கடும் முயற்சி எடுத்தாலும் அவர் அல்லாஹ்விடமிருந்து தூரமாகத்தான் ஆவார்.[158]

12. ஹஸ்ஸான் இப்னு அதிய்யா ﵀ கூறுகிறார்கள்:

مَا ابْتَدَعَ قَوْمٌ بِدْعَةً فِي دِيْنِهِمْ إِلَّا نُزِعَ مِنْ سُنَّتِهِمْ مِثْلُهَا

எந்த மக்கள் தங்கள் மார்க்கத்தில் அனாச்சாரத்தை உருவாக்குவார்களோ அவர்களிடமிருந்து அது போன்ற ஸுன்னா பறிக்கப்பட்டுவிடும்.[159]

13. முஹம்மத் இப்னு ஸீரீன் ﵀ கூறுகிறார்கள்:

كَانُوا يَقُولُونَ: مَا دَامَ عَلَى الْأَثَرِ؛ فَهُوَ عَلَى الطَّرِيقِ

ஒருவர் எது வரை ஹதீஸ் மீது இருக்கிறாரோ அவர் சரியான பாதையில் இருக்கிறார்.[160]

14. ஸுஃப்யான் ஸவ்ரீ ﵀ கூறுகிறார்கள்:

الْبِدْعَةُ أَحَبُّ إِلَىٰ إِبْلِيسَ مِنَ الْمَعْصِيَةِ، الْمَعْصِيَةُ يُتَابُ مِنْهَا، وَالْبِدْعَةُ لَا يُتَابُ مِنْهَا

157. நூல்: ஷரஃபு அஸ்ஹாபில் ஹதீஸ், ஆசிரியர்: அல் கதீப்.
158. நூல்: அல்பிதஃ வன்னஹ்யி அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.
159. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
160. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

இப்லீஸுக்கு பாவத்தை விட பித்ஆதான் மிக விருப்பமானது. திருந்தி, பாவத்தை விட்டு விலக முடியும். ஆனால், பித்ஆவிலிருந்து திருந்த முடியாது.[161]

15. அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் ﵀ கூறுகிறார்கள்:

لِيَكُنِ الَّذِي تَعْتَمِدُ عَلَيْهِ الْأَثَرُ، وَخُذْ مِنَ الرَّأْيِ مَا يُفَسِّرُ لَكَ الْحَدِيثَ

நீ சார்ந்திருப்பது ஹதீஸாக இருக்கட்டும். ஹதீஸை விளக்குவதற்குத் தேவையான அளவு அறிவை (அறிஞர்களின் கருத்தை) நீ எடுத்துக்கொள்![162]

16. ஷாஃபியீ ﵀ கூறுகிறார்கள்:

كُلُّ مَسْأَلَةٍ تَكَلَّمْتُ فِيهَا بِخِلَافِ السُّنَّةِ؛ فَأَنَا رَاجِعٌ عَنْهَا؛ فِي حَيَاتِي وَبَعْدَ مَمَاتِي

ஸுன்னாவிற்கு மாற்றமாக நான் பேசிய அனைத்துச் சட்டங்களை விட்டும் நான் எனது வாழ்க்கையிலும் எனது மரணத்திற்கு பின்னரும் விலகி விடுகிறேன். ![163]

ரபீஃ இப்னு ஸுலைமான் ﵀ கூறுகிறார்:

رَوَى الشَّافِعِيُّ يَوْمًا حَدِيثًا فَقَالَ لَهُ رَجُلٌ: أَتَأْخُذُ بِهَذَا يَا أَبَا عَبْدِ اللهِ" فَقَالَ مَتَىٰ مَا رَوَيْتُ عَنْ رَسُولِ اللهِ ﷺ حَدِيثًا صَحِيحًا، فَلَمْ آخُذْ بِهِ فَأُشْهِدُكُمْ أَنَّ عَقْلِي قَدْ ذَهَبَ

ஷாஃபியீ அவர்கள் ஒரு நாள் ஹதீஸ் ஒன்றை அறிவித்தார்கள். ஆக, ஒருவர், அபூ அப்தில்லாஹ் அவர்களே இந்த ஹதீஸை நீங்கள் அமலுக்கு எடுக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு ஷாஃபியீ கூறினார்கள்: நான் எப்போது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்து

161. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா, ஆசிரியர்: அல்பகவீ.
162. நூல்: அஸ்ஸுனன் அல்குப்ரா, ஆசிரியர்: அல் பைஹக்கீ.
163. நூல்: அல் ஃபகீஹ் வல் முதஃபக்கிஹ், ஆசிரியர்: அல்கதீப்.

ஒரு சரியான ஹதீஸை அறிவித்துவிட்டு அதை அமலுக்கு எடுத்துக்கொள்ளவில்லையோ அப்போது என் அறிவு சென்றுவிட்டது என்பதற்கு உங்களை சாட்சியாக்குகிறேன்.[164]

17. நூஹ் அல்ஜாமியி ﷺ கூறுகிறார்:

عَنْ نُوحٍ الجَامِعِ قَالَ: قُلْتُ لِأَبِي حَنِيفَةَ ﷺ مَا تَقُولُ فِيمَا أَحْدَثَ النَّاسُ مِنَ الْكَلَامِ فِي الْأَعْرَاضِ وَالْأَجْسَامِ؟ فَقَالَ مَقَالَاتُ الْفَلَاسِفَةِ عَلَيْكَ بِالْأَثَرِ وَطَرِيقَةِ السَّلَفِ وَإِيَّاكَ وَكُلَّ مُحْدَثَةٍ فَإِنَّهَا بِدْعَةٌ

நான் அபூ ஹனீஃபா ﷺ அவர்களிடம் கேட்டேன், மக்கள் புதிதாகப் பேசுகின்ற عرض அர்ழ், جسم ஜிஸ்ம் (-அல்லாஹ் உடல் அற்றவனா? அல்லது அல்லாஹ்விற்கு உடல் இருக்கிறதா) போன்ற தத்துவ வாதங்களை பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அதற்கு இமாம் கூறினார்கள்: இவை எல்லாம் தர்க்கவாதிகளின் பேச்சுகளாகும். நீ ஹதீஸையும் ஸலஃப் உடைய வழியையும் பற்றிப்பிடி! புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றை விட்டும் உன்னை நான் எச்சரிக்கிறேன். நிச்சயமாக அவை அனைத்தும் அனாச்சாரமாகும்.[165]

18. மாலிக் இப்னு அனஸ் ﷺ கூறுகிறார்கள்:

السُّنَّةُ سَفِينَةُ نُوحٍ، مَن رَكِبَهَا نَجَا وَمَنْ تَخَلَّفَ عَنْهَا غَرِقَ

ஸுன்னா என்பது நூஹ் ﷺ உடைய கப்பலாகும். யார் அதில் ஏறிக்கொண்டாரோ அவர் தப்பித்துவிட்டார். யார் அதிலிருந்து பின்தங்கி விட்டாரோ அவர் மூழ்கிவிட்டார்.[166]

இன்னும், மாலிக் ﷺ கூறினார்கள்:

لَوْ كَانَ الْكَلَامُ عِلْمًا، لَتَكَلَّمَ فِيهِ الصَّحَابَةُ وَالتَّابِعُونَ، كَمَا تَكَلَّمُوا فِي الأَحْكَامِ، وَلَكِنَّهُ بَاطِلٌ يَدُلُّ عَلَىٰ بَاطِلٍ

164. நூல்: அல் இபானா, ஆசிரியர்: இப்னு பத்தா.

165. நூல்: அல் ஃபகீஹ் வல் முதஃபக்கிஹ், ஆசிரியர்: அல்கதீப்.

166. நூல்: மிஃப்தாஹுல் ஜன்னா ஃபில் இஃதிஸாம் பிஸ் ஸுன்னா, ஆசிரியர்: அஸ்ஸுயூத்தி.

கலாம் - கிரேக்கக் தர்க்கவாதம் ஒரு கல்வியாக இருந்திருந்தால் நபித்தோழர்கள், மற்றும் தாபியீன்கள் மார்க்க சட்டங்கள் பற்றி பேசியது போன்று அதிலும் பேசி இருப்பார்கள். என்றாலும் அது ஒரு பொய்யாகும். அது பொய்யுக்குத்தான் வழிகாட்டும்.[167]

மாலிக் ﵀ அவர்களிடம் கேட்டதாக இப்னுல் மாஜிஷூன் கூறுகிறார்:

مَنِ ابْتَدَعَ فِي الإِسْلَامِ بِدْعَةً يَرَاهَا حَسَنَةً، فَقَدْ زَعَمَ أَنَّ مُحَمَّدًا ﷺ خَانَ الرِّسَالَةَ لِأَنَّ اللَّهَ يَقُولُ الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ فَمَالَمْ يَكُنْ يَوْمَئِذٍ دِينًا، فَلَا يَكُونُ الْيَوْمَ دِينًا

யார் இஸ்லாமில் அனாச்சாரம் ஒன்றை உருவாக்கி, அதை அழகாகக் கருதுவாரோ, அவர் முஹம்மத் ﷺ அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ரிசாலத் - தூதுத்துவத்திற்கு மோசடி செய்துவிட்டதாகக் கூறுகிறார். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹு தஆலா கூறுகிறான்: இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை நிறைவு செய்துவிட்டேன். ஆக, எது அப்போது மார்க்கமாக இருக்கவில்லையோ அது இன்றும் மார்க்கமாக ஆகாது.[168]

19. அஹ்மத் இப்னு ஹன்பல் ﵀ கூறுகிறார்கள்:

أُصُولُ السُّنَّةِ عِندَنَا: التَّمَسُّكُ بِمَا كَانَ عَلَيْهِ أَصْحَابُ النَّبِيِّ ﷺ وَالْاِقْتِدَاءُ بِهِمْ وَتَرْكُ الْبِدَعِ وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

எங்களிடம் ஸுன்னாவின் அடிப்படைகளாவன, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எதன் மீதிருந்தார்களோ அதை உறுதியாகப் பிடிப்பது, அவர்களைப் பின்பற்றுவதும், அனாச்சாரங்களை விடுவதும் ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.[169]

---

167. நூல்: ஷர்ஹுஸ் ஸுன்னா, ஆசிரியர்: அல் பகவீ.
168. நூல்: இஃதிஸாம், ஆசிரியர்: அஷ் ஷாத்திபீ.
169. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

20. ஹஸன் பஸரி ﷀ கூறுகிறார்கள்:

لَوْ أَنَّ رَجُلًا أَدْرَكَ السَّلَفَ الْأَوَّلَ ثُمَّ بُعِثَ الْيَوْمَ مَا عَرَفَ مِنَ الْإِسْلَامِ شَيْئًا , قَالَ: وَوَضَعَ يَدَهُ عَلَىٰ خَدِّهِ ثُمَّ قَالَ: إِلَّا هٰذِهِ الصَّلَاةَ , ثُمَّ قَالَ: أَمَا وَاللهِ مَا ذٰلِكَ لِمَنْ عَاشَ فِي هٰذِهِ النَّكْرَاءِ , وَلَمْ يُدْرِكْ هَذَا السَّلَفَ الصَّالِحَ , فَرَأَىٰ مُبْتَدِعًا يَدْعُو إِلَىٰ بِدْعَتِهِ , وَرَأَىٰ صَاحِبَ دُنْيَا يَدْعُو إِلَىٰ دُنْيَاهُ , فَعَصَمَهُ اللهُ عَنْ ذٰلِكَ , وَجَعَلَ قَلْبَهُ يَحِنُّ إِلَىٰ ذٰلِكَ السَّلَفِ الصَّالِحِ , يَسْأَلُ عَنْ سَبِيلِهِمْ , وَيَقْتَصُّ آثَارَهُمْ , وَيَتَّبِعُ سَبِيلَهُمْ؛ لِيُعَوَّضَ أَجْرًا عَظِيمًا , فَكَذٰلِكَ فَكُونُوا إِنْ شَاءَ اللهُ

நிச்சயமாக யாராவது முற்கால மக்களைப் (-ஸஹாபாக்களை) பெற்றுக்கொண்ட ஒருவர் இன்றைய காலத்தில் உயிரோடு எழுப்பப்பட்டால் அவர் இஸ்லாமில் எதையும் அறிய மாட்டார். பிறகு, தனது கரத்தை கன்னத்தில் வைத்தவராக - இந்தத் தொழுகையைத் தவிர - என்று கூறினார்கள். மேலும், கூறினார்கள்: ஸலஃப் ஸாலிஹை - சிறந்த சான்றோரைப் பெற்றுக்கொள்ளாமல், இந்த தீமையான காலத்தில் யார் வாழ்கிறாரோ, அவருக்கு இது புரியாது. ஆக, அவர் பித்ஆவின் பக்கம் அழைக்கும் ஒரு பித்ஆவாதியை காணும்போது, தனது உலக மோகத்தின் பக்கம் அழைக்கும் ஒரு உலகமோகம் உடையவரைக் காணும்போது அதிலிருந்து அல்லாஹ் அவரைப் பாதுகாத்துவிட்டால், அவரது உள்ளத்தை அந்த ஸலஃப் ஸாலிஹின் பக்கம் ஏங்கக்கூடியதாக ஆக்கிவிட்டால், அவர்களைப் பற்றி விசாரிக்கக் கூடியதாக, அவர்களின் அடிச்சுவடுகளை அவர் பின்பற்றக்கூடியவராக, அவர்களின் வழியைப் பின்பற்றக்கூடியவராக அவரை அல்லாஹ் ஆக்கிவிட்டால் அவர் மகத்தான நற்கூலியைப் பகரமாக பெறுவார். அதுதான் பாக்கியமாகும். இன் ஷா அல்லாஹ் நீங்களும் அப்படி ஆகிவிடுங்கள்![170]

21. ஃபுழைல் இப்னு இயாழ் ﷀ கூறுகிறார்கள்:

اتَّبِعْ طُرُقَ الْهُدَىٰ وَلَا يَضُرُّكَ قِلَّةُ السَّالِكِينَ وَإِيَّاكَ وَطُرُقَ الضَّلَالَةِ وَلَا تَغْتَرَّ بِكَثْرَةِ الْهَالِكِينَ

170. நூல்: அல்பிதஃ வன்னஹ்யி அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.

நேர்வழியின் வழிகளை நீ பின்பற்று! அதில் செல்பவர்கள் குறைவாக இருப்பது உனக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. வழிகேட்டின் வழிகளை விட்டு உன்னை எச்சரிக்கிறேன். (அதில் சென்று) அழிந்துபோகக்கூடியவர்கள் அதிகமாக இருப்பதைக் கொண்டு நீ ஏமாந்து விடாதே![171]

22. அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄ அவர்களிடம் ஒரு சட்டத்தைக் குறித்து, உமது தந்தை அதிலிருந்து தடுப்பவராக இருந்தார் என்று ஒருவர் கேட்டபோது,

أَأَمْرُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَعَلَىٰ آلِهِ وَسَلَّمَ أَحَقُّ أَنْ يُتَّبَعَ أَمْ أَمْرُ أَبِي

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய கட்டளை பின்பற்ற தகுந்ததா அல்லது என் தந்தையின் கட்டளையா? என்று கூறினார்கள்.[172]

பித்ஆவை கண்டிப்பதிலும் ஸுன்னாவைப் பின்பற்றுவதிலும் நபித்தோழர்களில் இப்னு உமர் மிகக் கடுமையானவராக இருந்தார்கள். ஒருவர், தும்மிய பிறகு, அல்ஹம்து லில்லாஹ், வஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ் என்று கூறினார். ஆக, அவரிடம் இப்னு உமர் கூறினார்கள்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எங்களுக்கு இப்படிக் கற்றுத்தரவில்லை. மாறாக, உங்களில் ஒருவர் தும்மினால் அவர் அல்ஹம்து லில்லாஹ் என்று கூறட்டும் என்றுதான் நபி ﷺ அவர்கள் கற்பித்தார்கள். ரஸூலுல்லாஹ் மீது ஸலவாத் சொல்லுங்கள் என்று சொல்லவில்லை.[173]

23. நபி ﷺ அவர்களின் ஸுன்னா சொல்லப்பட்டபோது அதற்கு எதிராக அபூ பக்ர், உமர் ﵄ அவர்களின் கூற்றைக் கூறிய நபரை நோக்கி இப்னு அப்பாஸ் ﵄ கூறினார்கள்: விரைவில் உங்கள் மீது வானத்திலிருந்து கல் மழை இறங்கும். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் சொன்னார்கள் என்று நான் உங்களுக்குக் கூற நீங்களோ அபூ பக்ர், உமர் கூறினார்கள் என்று கூறுகிறீர்களே![174]

171. நூல்: இஃதிஸாம், ஆசிரியர்: அஷ் ஷாத்திபீ.
172. நூல்: ஸாதுல் மஆத், ஆசிரியர்: இப்னுல் கய்யிம்.
173. நூல்: ஸுனன், ஆசிரியர்: அத் திர்மிதீ.
174. நூல்: முஸன்னஃப், ஆசிரியர்: அப்துர் ரஸ்ஸாக்.

அஹ்லுஸ் ஸுன்னாவை வர்ணித்து இப்னு அப்பாஸ் ﷺ கூறுகிறார்கள்:

النَّظَرُ إِلَى الرَّجُلِ مِنْ أَهْلِ السُّنَّةِ يَدْعُو إِلَى السُّنَّةِ وَيَنْهَىٰ عَنِ الْبِدْعَةِ

அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த மனிதரைப் பார்ப்பது ஸுன்னாவின் பக்கம் (நம்மை) அழைக்கிறது, பித்ஆவைவிட்டு (நம்மைத்) தடுக்கிறது.[175]

24. ஸுஃப்யான் ஸவ்ரீ ﵀ கூறுகிறார்:

إِذَا بَلَغَكَ عَنْ رَجُلٍ بِالْمَشْرِقِ أَنَّهُ صَاحِبُ سُنَّةٍ فَابْعَثْ إِلَيْهِ بِالسَّلَامِ فَقَدْ قَلَّ أَهْلُ السُّنَّةِ

கிழக்கு தேசத்தில், அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த ஒருவர் இருப்பதாக உனக்குச் செய்தி எட்டினால் அவருக்கு ஸலாம் கூறி அனுப்பு! (அவரோடு அறிமுகத்தை ஏற்படுத்திக்கொள்!) ஏனெனில், நிச்சயமாக அஹ்லுஸ் ஸுன்னா குறைவாக இருக்கின்றார்கள்.[176]

25. அய்யூப் ஸக்தியானீ ﵀ கூறுகிறார்கள்:

إِنِّي أُخْبَرُ بِمَوْتِ الرَّجُلِ مِنْ أَهْلِ السُّنَّةِ وَكَأَنِّي أَفْقِدُ بَعْضَ أَعْضَائِي

அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த ஒருவரின் மரண செய்தி எனக்கு அறிவிக்கப்படுகிறது. ஆக, (அப்போது) எனது உறுப்புகளில் சிலவற்றை நான் இழந்ததைபோன்று உணர்கிறேன்.[177]

26. குதைபா ﵀ கூறுகிறார்:

إِذَا رَأَيْتَ الرَّجُلَ يُحِبُّ أَهْلَ الْحَدِيثِ مِثْلَ يَحْيَى بْنِ سَعِيدٍ وَعَبْدِ الرَّحْمَنِ بْنِ مَهْدِيٍّ وَأَحْمَدَ بْنِ حَنْبَلٍ وَإِسْحَاقَ بْنِ رَاهَوَيْهِ وَذَكَرَ قَوْمًا آخَرِينَ فَإِنَّهُ عَلَى السُّنَّةِ وَمَنْ خَالَفَ هَؤُلَاءِ فَاعْلَمْ إِنَّهُ مُبْتَدِعٌ

175. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
176. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
177. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.

யஹ்யா இப்னு ஸயீத், அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தி, அஹமத் இப்னு ஹன்பல், இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி போன்ற அஹ்லுல் ஹதீஸை ஒருவர் நேசிப்பதை நீ பார்த்தால் அவர் ஸுன்னாவின் மீது இருக்கிறார் என்றும் இவர்களுக்கு யார் முரண்பட்டாரோ அவர் பித்ஆவாதி என்று நீ அறிந்து கொள்![178]

27. இப்ராஹீம் நகயீ ﵀ கூறுகிறார்:

لَوْ أَنَّ أَصْحَابَ مُحَمَّدٍ مَسَحُوا عَلَىٰ ظُفْرٍ لَمَا غَسَلْتُهُ الْتِمَاسَ الْفَضْلِ فِي اتِّبَاعِهِمْ

முஹம்மத் ﷺ அவர்களின் தோழர்கள் (உளூ அல்லது குளிப்பில்) ஒரு நகத்தை மஸஹ்தான் செய்தார்கள், அதைக் கழுவவில்லை என்று எனக்குத் தெரியவந்தால் நானும் அதைக் கழுவி இருக்க மாட்டேன். ஏனெனில், அவர்களைப் பின்பற்றுவதில்தான் சிறப்பை நான் தேடுவேன்.[179]

28. அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் ﵀ கூறுகிறார்:

اعْلَمْ أَخِي أَنَّ الْمَوْتَ الْيَوْمَ كَرَامَةٌ لِكُلِّ مُسْلِمٍ لَقِيَ اللَّهَ عَلَى السُّنَّةِ؛ فَإِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ , فَإِلَى اللهِ نَشْكُو وَحْشَتَنَا , وَذَهَابَ الْإِخْوَانِ , وَقِلَّةَ الْأَعْوَانِ , وَظُهُورَ الْبِدَعِ , وَإِلَى اللهِ نَشْكُو عَظِيمَ مَا حَلَّ بِهٰذِهِ الْأُمَّةِ مِنْ ذَهَابِ الْعُلَمَاءِ وَأَهْلِ السُّنَّةِ , وَظُهُورِ الْبِدَعِ

என் சகோதரனே! அறிந்துகொள்! நிச்சயமாக இன்று ஸுன்னாவின் மீது இருந்த நிலையில் மரணித்து அல்லாஹ்வை சந்திப்பது ஒவ்வொரு முஃமினுக்கும் கண்ணியமாகும். இன்னா லில்லாஹி, வ இன்னா இலைஹி ராஜிவூன் – நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்விற்காகவே இருக்கிறோம். இன்னும், நிச்சயமாக நாங்கள் அவன் பக்கமே திரும்பக்கூடியவர்கள் ஆவோம். ஆக, அல்லாஹ்வின் பக்கமே நாங்கள் எங்களின் வெருட்சியையும் கொள்கைச் சகோதரர்கள் சென்றுவிட்டதையும் உதவியாளர்கள் குறைந்துவிட்டதையும்

178. நூல்: ஷர்ஹு உஸூல் இஃதிகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
179. நூல்: ஸுனன், ஆசிரியர்: அபூ தாவூத்.

அனாச்சாரங்கள் பரவிவிட்டதையும் முறையிடுகிறோம். அறிஞர்களும் அஹ்லுஸ் ஸுன்னாவும் சென்றதாலும் பித்ஆக்கள் பரவிவிட்டதாலும் இந்த உம்மத்திற்கு ஏற்பட்ட பெரும் சோதனையை அல்லாஹ்விடமே நாங்கள் முறையிடுகிறோம்.[180]

29. ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ கூறுகிறார்:

إِنَّ لِلّٰهِ عِبَادًا يُحْيِي بِهِمُ الْبِلَادَ وَهُمْ أَصْحَابُ السُّنَّةِ

நிச்சயமாக அல்லாஹ்விற்கு என்று சில அடியார்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அல்லாஹ் ஊர்களை உயிர்ப்பிக்கிறான். அவர்கள்தான் ஸுன்னாவை உடையவர்கள்.[181]

30. இமாம் ஷாஃபியீ ﵀ கூறுகிறார்கள்:

إِذَا رَأَيْتُ رَجُلًا مِنْ أَصْحَابِ الْحَدِيْثِ فَكَأَنِّيْ رَأَيْتُ رَجُلًا مِنْ أَصْحَابِ رَسُوْلِ اللّٰهِ ﷺ

அஹ்லுல் ஹதீஸ் - ஹதீஸ்களைப் பின்பற்றுபவர்களில் ஒரு மனிதரை நான் பார்த்தால் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தோழர்களிலிருந்து ஒருவரைப் பார்ப்பதுபோன்று உணர்கிறேன்.[182]

31. இமாம்களின் கூற்றுகளிலிருந்து இது வரை நான் கூறிய கருத்துகளை எல்லாம் சுருக்கமாக ஒரு சட்டத்திற்குள் அடக்கும் விதமாக இமாம் மாலிக் ﵀ கூறுகிறார்:

لَنْ يَصْلُحَ آخِرُ هٰذِهِ الْأُمَّةِ إِلَّا بِمَا صَلُحَ بِهِ أَوَّلُهَا فَمَالَمْ يَكُنْ يَوْمَئِذٍ دِيْنًا لَا يَكُوْنُ الْيَوْمَ دِيْنًا

இந்த உம்மத்தின் இறுதி மக்கள் சீர் பெற மாட்டார்கள், இந்த உம்மத்தின் முதல் மக்கள் எதைக் கொண்டு சீர்பெற்றார்களோ அதைக் கொண்டே

180. நூல்: அல்பிதஃ வன்னஹ்யி அன்ஹா, ஆசிரியர்: இப்னு வழ்ழாஹ்.
181. நூல்: ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா, ஆசிரியர்: லால்காயீ.
182. நூல்: ஷரஃபு அஸ்ஹாபில் ஹதீஸ், ஆசிரியர்: அல்கதீப்.

தவிர. ஆக, அன்று எது தீனாக இல்லையோ அது இன்றும் தீனாக இருக்க முடியாது.[183]

அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த ஸலஃப் ஸாலிஹ் என்ற சான்றோரின் இமாம்களுடைய சில கூற்றுகளை இது வரை நாம் கூறினோம். அவர்கள் இந்த உம்மத்திற்கு நன்மையை நாடக்கூடியவர்களாகவும் நல்லதை செய்யக்கூடியவர்களாகவும் இந்த உம்மத்தின் சீர்திருத்தமும் நேர்வழியும் எதில் இருக்கிறது என்பதை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

குர்ஆனையும் ஸுன்னாவையும் பற்றிப்பிடிக்க வேண்டுமென்று அவர்கள் நமக்கு உபதேசிக்கிறார்கள்; மார்க்கத்தில் புதிது புதிதாக உருவாக்கப்படும் காரியங்களிலிருந்தும் அனாச்சாரங்களிலிருந்தும் அவர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள். இப்படித்தான் நபி ﷺ அவர்கள் அந்தச் சான்றோருக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அதாவது, நிச்சயமாக நாம் தப்பிப்பதற்கும் வெற்றி பெறுவதற்கும் உள்ள ஒரே வழியாவது, நபி ﷺ அவர்களின் ஸுன்னாவையும் அவர்களின் வழிமுறையையும் பின்பற்றுவதும் பற்றிப்பிடிப்பதும் மட்டுமே.

****

183. நூல்: அஷ்ஷிஃபா, ஆசிரியர்: காழி இயாழ்.

شُرُوطُ وَضَوَابِطُ الدَّعْوَةِ إِلَى عَقِيدَةِ السَّلَفِ الصَّالِحِ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ – ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையின் பக்கம் அழைப்பதற்கான நிபந்தனைகளும் ஒழுக்கங்களும்!

شُرُوطُ وَضَوَابِطُ الدَّعْوَةِ إِلَىٰ عَقِيدَةِ السَّلَفِ الصَّالِحِ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையின் பக்கம் அழைப்பதற்கான நிபந்தனைகளும் ஒழுக்கங்களும்!

அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ - ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையின் பக்கம் அழைப்பதற்கு மூன்று நிபந்தனைகள் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

முதலாவதாக: ஸலாமத்துல் முஃத்தகத் - கொள்கை சரியானதாக இருக்க வேண்டும்.

அதாவது, தவ்ஹீதுர் ருபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத் ஆகிய தவ்ஹீதுடைய மூன்று வகைகளிலும் இன்னும், கொள்கை தொடர்பான அனைத்துச் சட்டங்களிலும் ஈமானுடைய பாடங்கள் அனைத்திலும் நமது நம்பிக்கையும் கொள்கையும் ஸலஃப் உடைய நம்பிக்கைக்கும் கொள்கைக்கும் உட்பட்டதாக, நேர்பட்டதாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக: ஸலாமத்துல் மன்ஹஜ் - வழிமுறை சரியானதாக இருக்க வேண்டும்.

அதாவது, நமது சான்றோர் என்ன அடிப்படைகளை, சட்டங்களை அமைத்தார்களோ அதன் வெளிச்சத்தில் குர்ஆனையும் ஸுன்னாவையும் புரிந்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக: ஸலாமத்துல் அமல் - செயல்பாடு சரியாக இருக்க வேண்டும்.

அதாவது, அதில் எவ்விதப் புதுமையை நாம் உண்டாக்கக் கூடாது. கொள்கை சார்ந்த அமல், செயல் சார்ந்த அமல், இன்னும் சொல் சார்ந்த அமல் என ஒவ்வொரு அமலும் அல்லாஹ்வின் திரு முகத்திற்காக மட்டும் இருக்க வேண்டும். இன்னும், அல்லாஹ்வின் ஷரீஆவிற்கு உட்பட்டதாக, நேர்பட்டதாக இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது சிறந்த அமல்களில் ஒன்றாகும், உயர்வான வணக்க வழிபாடுகளில் ஒன்றாகும். இது இறைத்தூதர்களின் மிக விஷேசமானப் பணியாகும். மற்றும், அல்லாஹ்வின் நல்லடியார்களில் உள்ள மிகச் சிறப்பானவர்கள், இன்னும் இறைநேசர்களின் முக்கியமான வேலையாகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِّمَّن دَعَآ إِلَى ٱللَّهِ وَعَمِلَ صَٰلِحًا
وَقَالَ إِنَّنِى مِنَ ٱلْمُسْلِمِينَ ﴿٣٣﴾

யார் அல்லாஹ்வின் பக்கம் அழைத்து, தானும் நல்லமலைச் செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுவாரோ அவரைவிட பேச்சால் மிக அழகானவர் யார்? (அல்குர்ஆன் 41:33)

மக்களின் பக்கம் இந்த அழைப்பை நாம் எப்படி எடுத்துச் செல்ல வேண்டும், அதை எப்படி எடுத்து வைக்க வேண்டும் என்று நமக்கு ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கற்பித்திருக்கிறார்கள். அதை அறிய விரும்புகிறவர்களுக்கு நபி ﷺ அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் அநேக பாடங்களும் படிப்பினைகளும் உள்ளன.

ஸலஃப் உடைய அகீதாவின் பக்கம் அழைப்பவர் தனது அழைப்புப் பணியில் நபி ﷺ அவர்களின் அழகிய வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். நிச்சயமாக, அல்லாஹ்வின் பக்கம் எப்படி அழைக்க வேண்டும் என்ற வழிமுறைக்குத் தேவையான போதுமான தெளிவான விளக்கம் நபி ﷺ அவர்களின் வழிமுறையில் இருக்கிறது. ஆகவே, நபி ﷺ அவர்களின் வழிமுறைக்கும் வாழ்க்கைக்கும் முரணான முறையில் மக்கள் உருவாக்கிய புதிய வழிமுறைகள் நமக்குத் தேவை இல்லை.

ஆக, நமது முன் சென்ற நல்ல சான்றோர் எப்படி அழைப்புப் பணி செய்தார்களோ அப்படித்தான் அழைப்பாளர்கள் அல்லாஹ்வின் பக்கம் அழைக்க வேண்டும். அதே நேரம் காலம் மற்றும் இடத்தின் வேறுபாடுகளையும் கவனத்தில் வைக்க வேண்டும்.

இந்த புரிதலில் நடந்தவனாக என்னால் முடிந்தளவு முயற்சி செய்து அழைப்பாளர்களுக்காக சில ஒழுக்கங்களையும், சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் நான் இங்கு கூறுகிறேன். இன் ஷா அல்லாஹ் நாம் விரும்பக்கூடிய சீர்திருத்தப் பணியில் இவை பலன் தருபவையாக இருக்கும்.

****

ضَوَابِطُ وَمُنْطَلَقَاتُ الدُّعَاةِ

அழைப்பாளர்களுக்கான கட்டுப்பாடுகளும் தொடக்கப் புள்ளிகளும்

1. அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது, - இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நாம் தப்பிப்பதற்குறிய வழிகளில் ஒரு வழியாகும்.. உன் மூலமாக அல்லாஹ் ஒருவருக்கு நேர்வழி காட்டுவது உமக்கு சிவப்பு ஒட்டகைகள் கிடைப்பதை விடச் சிறந்ததாகும். ஆக, அழைப்புப் பணியின் கூலி என்பது நாம் அழைத்ததைக் கொண்டே நமக்கு கிடைத்துவிடும். அழைக்கப்பட்டவர் அதை ஏற்றுக்கொண்டால்தான் நமக்கு நன்மை கிடைக்கும் என்பது இல்லை. இஸ்லாமிற்கு வெற்றி கிடைப்பது அல்லாஹ்வின் கரத்தில் இருக்கிறது. அழைப்பாளர் அழைப்புப் பணியில் தனது முயற்சியைக் கொடுக்க வேண்டும் என்றுதான் பணிக்கப்பட்டிருக்கிறார். அவ்வளவுதான். அழைப்பாளர் அழைப்புப் பணிக்கு தயாராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனை, அல்லாஹ்வின் புறத்திலிருந்து உதவி வருவது அவனது வாக்காகும். அழைப்பு பணியும் ஜிஹாதுடைய வழிகளில் ஒரு வழியாகும். ஜிஹாத் இன்னும் அழைப்பு பணி ஆக இரண்டின் நோக்கமும் ஒன்றுதான்.

2. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய வழிமுறையில்தான், இந்த உம்மத்தின் சான்றோர் உடைய வழிமுறையில்தான் நீ இருக்கிறாய் என்பதை உறுதி செய்துகொள்! இந்த வழிமுறைதான் ஆழமானதும் நடுநிலையானதும், விசாலமானதும், நீதமானதும் குறைத்தல் மற்றும் கூட்டுதலை விட்டு தூரமானதும் ஆகும்.

குர்ஆன் இன்னும் சரியான ஹதீஸ்களில் இருந்து பெறப்பட்டக் கல்வியைக் கொண்டு இந்த பாதையில் நாம் செல்வது - இடறி விழுவதிலிருந்து நமக்கு பாதுகாப்பாகவும் நபிமார்களின் பாதையில் செல்வதற்கு நமக்கு ஒளியாகவும் இருக்கும்.

3. முஸ்லிம்களை ஒரு ஜமாஅத்தாக நாம் உருவாக்குவதற்கும்; சத்தியத்தில் அவர்களின் ஆற்றலை ஒருங்கிணைப்பதற்கும் நாம் பேராவல்

கொள்ள வேண்டும். . தவ்ஹீதின் வாக்கியம்தான் நமக்கு ஒற்றுமையின் அஸ்திவாரமாகும். தவ்ஹீதுதான் நமது அடிப்படையாகும். இன்று எது முஸ்லிம்களின் ஜமாஅத்துகளை பிளவுப்படுத்துகிறதோ அதை விட்டும் தூரமாக இருக்க வேண்டும். அதாவது, கட்சிகளாக பிரிவதை விட்டும் விலகி இருக்க வேண்டும். ஏனெனில், இது முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி, அவர்களின் உள்ளங்களுக்கு மத்தியில் தூரத்தை ஏற்படுத்திவிடும்.

அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்காக நாம் ஒவ்வொரு முறை ஒன்று சேரும்போது – நாம் முஸ்லிம்களிலிருந்து ஒரு ஜமாஆ என்றுதான் சொல்ல வேண்டும். நாம்தான் முஸ்லிம்களின் ஜமாஆ என்று சொல்லக் கூடாது. இதுதான் சரியானப் புரிதல் ஆகும்.

4. நமது விசுவாசம் மார்க்கத்திற்கு இருக்க வேண்டுமே தவிர, தனி நபர்களுக்கு அல்ல. சத்தியம் அது என்றும் நிலைத்திருக்கும். தனி நபர்கள் சென்றுவிடுவார்கள். ஆகவே, நீ சத்தியத்தைத் தெரிந்து கொண்டால் சத்தியவாதிகளைத் தெரிந்து கொள்வாய்!

5. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பாக இருப்பதற்கு அழைக்க வேண்டும். பிளவுபடுவது, முரண்படுவது, இன்னும், முரண்பாட்டை உண்டாக்கும் காரணங்களை விட்டு விலகி தூரமாக இருக்க வேண்டும். நம்மில் சிலர் சிலருக்கு துணையாகவும் உதவியாகவும் இருக்க வேண்டும். நமக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு சாத்தியமான விஷயங்களில் கருத்து வேறுபாடு இருந்தால் அதில் ஒருவர் மற்றவருக்கு நஸீஹா – நல்லுபதேசம் செய்ய வேண்டும், நன்மையை நாட வேண்டும். ஒருவர் ஒருவரை வெறுப்பதோ பகைப்பதோ தவிர்க்கப்பட வேண்டும்.

நீதமான நேர்மையான பல இஸ்லாமிய ஜமாஆக்களுக்கு மத்தியில் இருக்க வேண்டிய அடிப்படையாவது, அவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையையும் ஒருங்கிணைந்த செயல்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும். அது முடியவில்லை என்றால் அவரவர் இடத்தில் அவரவர் பணி செய்வதுடன் பொதுவான காரியங்களில் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதுவும் முடியவில்லை என்றால் குறைந்தபட்சம் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுவும் முடியவில்லை என்றால் நான்காவது அழிவுதான் மிச்சம் இருக்கிறது.

6. அழைப்புப் பணி செய்கிற தனி நபர் எந்த ஒரு ஜமாஆவை சேர்ந்திருக்கிறாரோ அந்த ஜமாஆவிற்காக பிடிவாதம் பிடிப்பதும்

முரண்டு பிடிப்பதும் கூடாது. மற்றவர்கள் செய்கிற நல்ல பணிகளையும் தியாகங்களையும் வரவேற்க வேண்டும். ஆனால், நிபந்தனை என்னவென்றால் அந்தப் பணி மார்க்கத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும், மார்க்கத்தை எந்த வகையிலும் மீறியதாகவோ, உடைப்பதாகவோ இருக்கக் கூடாது.

7. மார்க்கத்தின் கிளை சட்டங்களில் இருக்கின்ற கருத்து மாறுபாடுகள் அழகியப் பேச்சுவார்த்தைக்கும் ஒருவருக்கு ஒருவர் நல்லுபதேசம் செய்து வழிகாட்டுவதற்கும் இட்டுச்செல்ல வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டை செய்வதற்கோ, வாக்குவாதம் செய்து பிணங்கிக் கொள்வதற்கு இழுத்துச் சென்று விடக்கூடாது.

8. சுய பரிசோதனை செய்துகொண்டே இருக்க வேண்டும், தொடர்ச்சியாக தன்னைச் சீர்செய்துகொண்டே இருக்க வேண்டும், தனது திறமைகளை, ஆற்றல்களைத் தொடர்ந்து வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

9. கருத்து வேறுபாடு வரும்பொழுது பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களைக் கற்க வேண்டும், பேச்சு வார்த்தைக்குரிய அடிப்படைகளை நன்கு ஆழமாகக் தெரிந்திருக்க வேண்டும், இவை இரண்டும் மிக முக்கியமானவை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த ஒழுக்கங்களையும், அடிப்படைகளையும் தன்னிடம் கொண்டிருப்பது மிக அவசியம் என்பதை அழைப்பாளர் உணர வேண்டும்.

10. பொத்தாம் பொதுவாக தீர்ப்பளிப்பதை விட்டு தூரமாக இருக்க வேண்டும், அதன் ஆபத்துகளை அஞ்ச வேண்டும், தனி நபர்கள் மீது தீர்ப்பளிப்பதாக இருந்தால் மிக நீதமாகத் தீர்ப்பளிக்க வேண்டும். கருத்துகள் மீது தீர்ப்பளிக்க வேண்டுமே தவிர அந்த மனிதர்கள் மீதல்ல.

11. நோக்கம், மற்றும் அந்த நோக்கத்தை நிறைவேற்றித்தர உதவும் வசீலா - சாதனம் ஆக, இந்த இரண்டையும் நன்கு புரிய வேண்டும். அதாவது நமக்கு நோக்கம் தஃவா - அழைப்புப் பணிதான். மற்றபடி இயக்கங்கள், ஜமாஆக்கள், அமைப்புகள், நிறுவனங்கள், மையங்கள் எல்லாம் தஃவாவிற்கானக் வசீலா - சாதனங்கள் ஆகும். (தஃவா இறுதி நாள் வரை நீடித்து இருந்துகொண்டே இருக்கும். சாதனங்களாக இருக்கும் அமைப்புகள், நிறுவனங்கள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறிக்கொண்டே இருக்கலாம்.)

12. நோக்கத்தில் உறுதியாக நிலையாக இருக்க வேண்டும். சாதனங்களைப் பொறுத்தவரை மார்க்க எல்லைக்கு உட்பட்டு நெகிழ்வுத்தன்மையோடு, மென்மையோடு, அனுசரணையோடு நடந்து கொள்ள வேண்டும்.

13. முக்கியத்துவம் வாய்ந்தவை, முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவை எவை என்பதைக் கவனித்துச் செயல்பட வேண்டும். எல்லா காரியங்களையும் அதன் அவசிய, தேவைக்கு ஏற்ப வரிசைப்படுத்த வேண்டும். ஒரு பிரிவு காரியத்திற்கு, அல்லது ஒரு உள் காரியத்திற்கு அதிகம் தேவை இருக்கிறது என்றால் அதை அதற்குரிய இடத்தில், அதற்குரிய நேரத்தில், அதற்குரிய சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும். (அதாவது, எப்போதும் ஒரே காரியத்திற்கு முன்னுரிமை கொடுத்து விட்டு அவசரமான தேவைகளை – அவை பிரிவு விஷயங்கள்,, அல்லது உள் விஷயங்கள் – என்று ஒதுக்கி விடக்கூடாது.)

14. அழைப்பாளர்கள் தங்களுக்குள் தங்கள் அனுபவங்களையும் திறமைகளையும் பரிமாறிக்கொள்ள வேண்டும். முன் சென்றவர்களின் அனுபவங்களைக் கொண்டு படிப்பினை எடுத்துக்கொள்ள வேண்டும், அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அழைப்பாளர், தனது பணியை ஒரு வெற்றிடத்திலிருந்து ஆரம்பிக்க மாட்டார். எந்த ஒரு அழைப்பாளரும் இந்த அழைப்புப் பணிக்கு அவர்தான் முதலாமவர் என்பது இல்லை. இந்த மார்க்கத்திற்குச் சேவை செய்த முதல் நபர் என்று யாரையும் நாம் சொல்ல முடியாது. அது போன்று இவர்தான் மார்க்கத்தின் இறுதி சேவகர், இறுதி அழைப்பாளர் என்றும் யாரையும் நாம் கூற முடியாது. அறிவுரை, வழிகாட்டல் தேவைப்படாத நபர் என்று யாரும் இல்லை. அல்லது சரியான, உண்மையான நிலைப்பாடு இவர் ஒருவரிடம் மட்டுமே இருக்கிறது என்று சொல்ல முடியாது. யாரும் நல்லதை தனக்கு மட்டும்தான் என்று மறைத்து பதுக்கவும் கூடாது. அல்லது ஒரு அழைப்பாளரிடம் அறவே நன்மை இல்லவே இல்லை என்று கண்மூடித்தனமாக மறுக்கவும் முடியாது.

15. ஸுன்னாவைப் பின்பற்றியும் சரியான கொள்கையைப் பின்பற்றியும் வாழ்ந்த அறிஞர்களை மதிக்க வேண்டும், கண்ணியப்படுத்த வேண்டும், அவர்களிடம் கல்வி எடுக்க வேண்டும், அவர்கள் மீது பழிபோடுவதோ, அவர்களை இழிவுபடுத்தும் விதமாக விமர்சிப்பதோ கூடாது. அவர்களின் மானமரியாதைகளைக் களங்கப்படுத்தக் கூடாது.

அவர்களின் எண்ணங்களில் மக்களுக்குக் சந்தேகத்தை உண்டுபண்ணக் கூடாது. அவர்கள் மீது குற்றங்களையும் பழிகளையும் சுமத்தக் கூடாது. அதே நேரம் அவர்கள் விஷயத்தில் கண்மூடித்தனமாக பிடிவாதம் பிடிப்பதும் முரண்டுபிடிப்பதும் அவர்கள் சார்பாக பக்க சார்புடன் நடந்து கொள்வதும் கூடாது. ஒவ்வொரு ஆலிமும் ஆய்வு செய்கிறபொழுது அவர் சரியாகக் சொல்லவும் செயல்படவும் செய்வார், தவறும் செய்வார். தவறை நாம் அவரிடமே விட்டுவிட வேண்டும். அவரின் சிறப்பை, மதிப்பை நாம் கெடுக்கக் கூடாது.

16. முஸ்லிம்கள் விஷயத்தில் எப்பொழுதும் நல்லெண்ணம் வைக்க வேண்டும், அவர்களின் பேச்சை நல்ல அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களின் குறைகளை மறைக்க வேண்டும், அதே நேரம் குறைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துச் சொல்வதில் அலட்சியம் செய்துக் விடக்கூடாது.

17. ஒருவரிடம் நன்மைகளும் சீர்திருத்தங்களும் அதிகமாக இருந்தால் அவரின் சில குறைகளை வெளிப்படையாக விமர்சிக்கக் கூடாது. அதில் ஏதாவது ஒரு அடிப்படைக் காரணம் இருந்தாலே தவிர. ஒருவரிடம் தீமைகளும், குழப்பங்களும் அதிகமாக இருந்தால் அவரின் நன்மைகளை, சிறப்புகளை வெளிப்படையாக சொல்லக் கூடாது. காரணம், அது பொது மக்களுக்கு அவர் விஷயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி விடும். (அதாவது, பொதுமக்கள் அவரை எல்லா விஷயத்திலும் பின்பற்ற ஆரம்பித்து விடுவார்கள்.)

18. மார்க்கத்தில் பயன்படுத்தப்பட்டச் சொற்களையே நாமும் பயன்படுத்த வேண்டும். அந்தச் சொற்கள் மிக நுணுக்கமானவையும் வரைமுறைக்கும் உட்பட்டவையும் ஆகும். உதாரணமாக ஷூரா – ஆலோசனை என்ற வார்த்தை குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்நியக் கலாச்சாரத்திலிருந்து நமது சமுதாயத்தில் புதிதாக புகுத்தப்பட்டக் கோணலான சொற்களைக் தவிர்க்க வேண்டும்.

19. ஃபிக்ஹ் – மார்க்க சட்டத் துறையில் இருந்து வரும் மத்ஹபுகள் விஷயத்தில் சரியான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். நிச்சயமாக இது, மார்க்க சட்டத்துறையில் மகத்தான ஒரு பொக்கிஷமாகும். நாம் அவற்றைக் கற்க வேண்டும், அதிலிருந்து பயன் பெற வேண்டும்,

ஆனால், அவற்றை வைத்து பிடிவாதம் காட்டக் கூடாது, முரண்டு பிடிக்கக் கூடாது. மொத்தமாக மத்ஹபுகளை மறுப்பது கூடாது. அவற்றில் இருக்கும் பலவீனமான செய்திகளைத் தவிர்க்க வேண்டும். அதில் உள்ள உண்மையை, சரியானதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். மத்ஹபுகளில் எந்த சட்டம், எந்த கருத்து - குர்ஆன், ஸுன்னா மற்றும் ஸலஃப் உடைய வழிமுறையின் வெளிச்சத்தில் - சரியானதோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

20. மேற்கத்தியர்கள் மற்றும் அவர்களின் கலாச்சாரத்தைக் குறித்து சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதாவது, அவர்களின் அனுபவத்தினால் அவர்கள் கண்டுபிடித்த கல்விகள் மூலம் நமது மகத்தான மார்க்கச் சட்டங்களுக்கு உட்பட்டு நாம் பலன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

21. அழைப்புப் பணியில் ஷூரா - ஆலோசனை மிக முக்கியம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆலோசனை கேட்பதுடைய ஒழுக்கம், சட்டம், முறை ஆகியவற்றை அழைப்பாளர் கற்றுக்கொள்ள வேண்டும்.

22. அழகிய முன்மாதிரியாகத் திகழ வேண்டும். அழைப்பாளர் தனது அழைப்புப் பணிக்கு அவரே ஒரு முகக் கண்ணாடியாக இருக்கிறார். தனது அழைப்புப் பணியை மக்களுக்குச் செயலால் எடுத்துச் சொல்கிற முன்மாதிரியாக அழைப்பாளர் இருக்கிறார். ஆகவே, அவர் தன்னை தன் அழைப்புக்கு ஏற்ப அழகிய முன்மாதிரியாக உருவாக்க வேண்டும்.

23. ஞானமிக்க உரைகள், அழகிய உபதேசங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ٱدْعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِٱلْحِكْمَةِ وَٱلْمَوْعِظَةِ ٱلْحَسَنَةِ ۖ وَجَٰدِلْهُم بِٱلَّتِى هِىَ
أَحْسَنُ ۚ

(நபியே!) ஞானம்; இன்னும், அழகிய உபதேசத்தின் மூலம் உம் இறைவனுடைய பாதையின் பக்கம் (மக்களை) அழைப்பீராக! மேலும், மிக அழகிய முறையில் அவர்களிடம் தர்க்கிப்பீராக!

(அல்குர்ஆன் 16:125)

என்ற வசனத்தைத் தன் அழைப்புப் பணிக்கு ஒரு தராசாகவும் தத்துவமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

24. பொறுமையைக் கொண்டு தன்னை அலங்கரிக்க வேண்டும். பொறுமைதான் நபிமார்கள், ரஸூல்மார்களின் பண்பும் அவர்களின் அழைப்புப் பணியின் வெற்றியின் ரகசியமும் ஆகும்.

25. கடும்போக்கை விட்டுத் தூரமாக இருக்க வேண்டும். கடும்போக்கின் ஆபத்துகள், அதன் விபரீதங்கள், அதனுடைய தவறான பக்க விளைவுகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மார்க்கம் அனுமதித்த எல்லைக்குள் மென்மையான, இலகுவான வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

26. முஸ்லிமாக இருப்பவர் சத்தியத்தை, உண்மையைத் தேடுபவராக இருக்க வேண்டும். உண்மையிலும் சத்தியத்திலும் வீரமாக இருப்பது அழைப்புப் பணியில் மிக அவசியமானத் தேவையாகும். உன்னால் உண்மையைச் சொல்ல முடியவில்லை என்றாலும் ஒருபொழுதும் பொய்யை, அசத்தியத்தைச் சொல்லி விடாதே!

27. சோர்வுறுவது, பின்தங்கிவிடுவது, அக்கறையின்மை ஏற்படுவது குறித்தும்; இவற்றின் கெட்ட பக்கவிளைவுகள் குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலும், இவற்றின் காரணங்களை தெரிந்து கொள்வதிலும் அவற்றை சரிசெய்வதற்கான வழிகளை அறிவதிலும் கவனமின்மை இருக்கக் கூடாது.

28. வதந்திகளைக் குறித்தும் அவற்றைப் பரப்புவது குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனால் இஸ்லாமிய சமுதாயத்தில் கெட்ட, மோசமான விளைவுகள் ஏற்படும்.

29. நமக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வு உடைய அளவுகோல், தக்வா – இறையச்சம், அமல் ஸாலிஹ் – நல்லமல் ஆகியவற்றின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும். அறியாமைக்கால வெறிகளை விட்டு தூய்மையாகவும், தூரமாகவும் இருக்க வேண்டும். அந்த வெறி தேச வெறியாக இருந்தாலும் சரி, அல்லது வமிச வெறியாக இருந்தாலும் சரி, அல்லது கட்சி வெறியாக இருந்தாலும் சரி, அல்லது இயக்க வெறியாக இருந்தாலும் சரி.

30. அழைப்புப் பணியில் மிக சிறப்பான நெறிமுறையாவது, முதலில் இஸ்லாமுடைய அடிப்படை உண்மைகளையும் அதன் வழிமுறைகளையும் கூற வேண்டும். இஸ்லாமின் மீது வைக்கப்படும் சந்தேகங்களையும் விமர்சனங்களையும் எடுத்துக்கூறிவிட்டு, கூடி இருக்கும் மக்கள் தீர்ப்பளித்துக் கொள்ளட்டும் என்று விடுவது சரியான அழைப்பு முறை அல்ல. மக்களுக்கு முதலில் மார்க்கத்தின் அடிப்படைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களின் ஆன்மாவின் நுழைவாயில்களை அறிவது அவர்களைச் சரியாக வழிநடத்துவதற்கு ஒரு நல்ல வழியாகும்.

31. அழைப்பாளரும் அழைப்புப் பணி செய்கிற ஜமாஅத்துகளும் எப்பொழுதும் அல்லாஹ்வை நம்பி அவனை பற்றிப்பிடித்திருக்க வேண்டும். நமது முயற்சிகளைச் செய்ய வேண்டும். அல்லாஹ்விடம் உதவி கோர வேண்டும். அல்லாஹ்தான் நம்மை வழிநடத்தக்கூடியவன், அவனே அழைப்புப் பணியின் பயணத்தை இயக்கக்கூடியவன், அழைப்பாளர்களை நேர்ப்படுத்தக்கூடியவன், நிச்சயமாக மார்க்கம் மற்றும் எல்லா அதிகாரமும் அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா உடைய கையில்தான் இருக்கிறது என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும்.

இது வரை கூறப்பட்ட ஒழுக்கங்கள், வழிமுறைகள், ஆலோசனைகள் அனைத்தும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் அழைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள் மற்றும் அழைப்பாளர்களின் அனுபவங்களின் பலனாகக் கிடைத்தவை ஆகும். அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்கள் இந்த ஒழுக்கங்களை நன்கு விளங்கிக் கொண்டு, இவற்றின் படி அவர்கள் நடந்தார்களேயானால் கண்டிப்பாக அழைப்புப் பணியின் பயணத்தில் நிறைய நன்மைகள் இருக்கும்.

அல்லாஹ்வை பற்றிப்பிடிப்பது, எல்லா காரியத்திலும் அவனை மட்டுமே சார்ந்து, அவன் மீது நம்பிக்கை வைத்திருப்பது, அவனிடம் நல்வாய்ப்பையும் நல்லருளையும் வேண்டுவது, எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருப்பது, மனோஇச்சையிலிருந்து விலகி இருப்பது, எல்லா காரியத்தையும் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்வது, எல்லா

காரியத்தையும் அல்லாஹ்விற்காக மட்டுமே ஆக்கிவிடுவது ஆகிய பண்புகளைக் கொண்டு மட்டுமே நமக்குச் சீர்திருத்தமும் அழைப்புப் பணியின் வெற்றியும் கிடைக்கும் என்பதை எல்லா அழைப்பாளர்களும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

****

مُؤَلَّفَاتٌ فِي اعْتِقَادِ السَّلَفِ الصَّالِحِ

ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கைகள் குறித்து தொகுக்கப்பட்ட நூல்கள்!

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய அறிஞர்கள் ஸலஃப் உடைய கொள்கைக் தொடர்பாக பல நூல்களைத் தொகுத்து எழுதி இருக்கிறார்கள். கொள்கையின் அடிப்படைகளை குர்ஆன், ஸுன்னாவுடன் ஆதாரத்துடன் மிகுந்த கவனத்துடன் அந்த நூல்களில் பதிவு செய்துள்ளார்கள். அஹ்லுல் பித்ஆ உடைய குழப்பங்கள், சந்தேகங்கள், சிந்தனைகள் என அனைத்திற்கும் தெளிவான விளக்கமான பதில்களை கொடுத்துள்ளார்கள். அஹ்லுல் பித்ஆவின் பொய்யிற்கு உண்மையைக் கொண்டும் அறியாமைக்குக் கல்வியறிவைக் கொண்டும், அனாச்சாரத்திற்கு நபிவழியைக் கொண்டும் பதில் கொடுத்துள்ளார்கள். அஹ்லுல் பித்ஆ உடைய அத்தனை பொய் புரட்டுகளையும் மக்களுக்கு வெளிப்படுத்தி, உண்மையை உண்மை என்றும் பொய்யைப் பொய் என்றும் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற தூய எண்ணத்தில் அவர்கள் செய்தார்கள்.

இந்த அல் வஜீஸ் என்ற நூலை நான் தொகுக்க எனக்கு ஆதாரங்களாக இருந்த சில கிரந்தங்களை நான் இங்கு பெயர் குறிப்பிட விரும்புகிறேன். இதன் மூலம் முஸ்லிம்கள் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய கொள்கைகளைத் தெளிவான ஆதாரத்தோடும் கல்வியறிவோடும் விளங்கிக் கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல் இந்தக் கொள்கைதான் நமது ஸலஃப் ஸாலிஹ் – சிறப்பான சான்றோர் உடையக் கொள்கையாக இருந்தது என்பதையும் அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதுபோக எந்தக் கொள்கை நபி ﷺ அவர்கள் இன்னும் ஸஹாபா, தாபியீனிடமிருந்து பெறப்பட்ட இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கைகளில் புகுத்தப்பட்ட தவறான சிந்தனைகள், சீர்கெட்ட கொள்கைகளையும் முஸ்லிம்கள் இந்த நூல், மற்றும் அதன் ஆதாரங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கைகளை இந்த உம்மத்தின் அறிஞர்களின் பெரியக் கூட்டம் ஒன்று தொகுத்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை உதாரணத்திற்காக இங்கு குறிப்பிடுகிறோம்.

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
கிதாபுஸ் ஸுன்னா	அஹ்மத் இப்னு ஹன்பல்	241
கிதாபுஸ் ஸுன்னா	அப்துல்லாஹ் இப்னு அஹ்மத்	290
கிதாபுஸ் ஸுன்னா	அபூ பக்ர் அஹ்மத் இப்னு யஸீத் அல் கல்லால்	211
கிதாபுஸ் ஸுன்னா	அபூ பக்ர் இப்னு அபீ ஆஸிம்	287
கிதாபுஸ் ஸுன்னா	முஹம்மத் இப்னு நஸ்ர்	294
ஷர்ஹுஸ் ஸுன்னா	ஹசன் இப்னு அலீ பர்பஹாரீ	329
ஷர்ஹுஸ் ஸுன்னா	அல்ஹுஸைன் இப்னு மஸ்வூத் பகவீ	436
அஷ்ஷரீஆ	அபூ பக்ர் முஹம்மத் அல் ஆஜுரீ	360
கிதாப் அஸ்லிஸ் ஸுன்னா வ இஃதிகாதித் தீன்	அபூ ஹாதம் அர் ராஸீ	327
ஸரீஹுஸ் ஸுன்னா	முஹம்மத் இப்னு ஜரீர் அத் தபரீ	310
ஷர்ஹ் மதாஹிபி அஹ்லிஸ் ஸுன்னா வ மஃரிஃபத்தி ஷராயிஃ அத் தீனி வத் தமஸ்ஸுக்கி பிஸ் ஸுனன்	உமர் இப்னு அஹ்மத் இப்னு உஸ்மான் இப்னு ஷாஹீன்	279
உஸூலுஸ் ஸுன்னா	இப்னு அபீ ஸமனைன் உந்துலுஸீ	399
கிதாபுன் நுஸூல்	அலீ இப்னு உமர் தாரகுத்னீ	385
கிதாபுஸ் ஸிஃபாத்	அலீ இப்னு உமர் தாரகுத்னீ	385

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
கிதாபுத் தவ்ஹீத் வ இஸ்பாதுஸ் ஸிஃபாத்	இப்னு குஸைமா	311
முகத்திமா இப்னு அபீ ஸைத் அல்கைருவானீ ஃபில் அகீதா	அப்துல்லாஹ் இப்னு அபீ ஸைத் அல் அகைருவானீ	386
அல் இபானா அன் ஷரீஅத்தில் ஃபிர்கத்தின் நாஜியா வ முஜானபத்தி அல் ஃபிரக்கில் மத்மூமத்தி	இப்னு பத்தா	387
இஃத்திகாத் அயிம்மதில் ஹதீஸ்	அபூ பக்ர் இஸ்மாயீலீ	371
அல் இபானா அன் உஸூலித் தியானா	அபுல் ஹஸன் அல் அஷ்அரீ	320
ரிஸாலா இலா அஹ்லிஸ் சகர்	அபுல் ஹஸன் அல் அஷ்அரீ	320
மகாலாத்துல் இஸ்லாமிய்யீன்	அபுல் ஹஸன் அல் அஷ்அரீ	320
அகீதத்து ஸலஃப் அஸ் ஹாபில் ஹதீஸ்	இஸ்மாயீல் இப்னு அப்திர் ரஹ்மான் அஸ்ஸாபூனீ	449
அல் முக்தார் ஃபீ உஸூலிஸ் ஸுன்னா	அபூ அலீ அல் ஹஸன் இப்னு அஹ்மத் இப்னு அல் பன்னா	471
ஷர்ஹு உஸூல் இஃத்திகாத் அஹ்லிஸ் ஸுன்னா	அபுல் காசிம் அல் லால்காயீ	418
கிதாபுல் அர்பயீன் ஃபீ தலாயில்த் தவ்ஹீத்	அபூ இஸ்மாயீல் அல்ஹரவீ	481
கிதாபுல் அள்மா	அபுஷ் ஷைக் அல் அஸ்ஃபஹானீ	369
அல் இஃத்திகாத் வல் ஹிதாயா	அபூ பக்ர் அஹ்மத் இப்னு அல் ஹுஸைன் அல் பைஹக்கீ	458
அல் ஹுஜ்ஜா ஃபீ பயானில் மஹஜ்ஜா வ ஷர்ஹ் அகீததி அஹ்லிஸ் ஸுன்னா	இஸ்மாயீல் இப்னு முஹம்மத் அல் அஸ்ஃபஹானீ	535

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
அல் அகீதத்துத் தஹாவிய்யா	அபூ ஜஃபர் அத் தஹாவீ	321
லும்அத்துல் இஃத்திகாத் அல் ஹாதீ இலா சபீலிர் ரஷாத்	இப்னு குதாமா அல் மக்திஸீ	620
அன் நஸீஹா ஃபீ ஸிஃபாத்திர் ரப்பி ஜல்ல வ அலா	அபூ முஹம்மத் அல் ஜுவைனீ	438
கிதாபுத் தவ்ஹீத்	முஹம்மத் இப்னு இஸ்மாயீல் அல் புகாரீ	256
கிதாபுத் தவ்ஹீத் வ மஃரிஃபத்தி அஸ்மாயில்லாஹ் வ ஸிஃபாத்திஹி	இப்னு மந்தா	395
கிதாபுல் ஈமான்	அல் காஸிம் இப்னு ஸல்லாம்	224
கிதாபுல் ஈமான்	முஹம்மத் இப்னு யஹ்யா அல் அதனீ	243
கிதாபுல் ஈமான்	இப்னு அபீ ஷைபா	235
கிதாபுல் ஈமான்	இப்னு மந்தா	395
ஷுஅபுல் ஈமான்	அபூ அப்தில்லாஹ் அல் ஹலீமீ அல் புகாரீ	403
மஸாயிலுல் ஈமான்	காழீ அபூ யஃலா	458
அர் ரத் அலல் ஜஹ்மிய்யா	இப்னு மந்தா	359
அர் ரத் அலல் ஜஹ்மிய்யா	உஸ்மான் இப்னு ஸயீத் அத்தாரமீ	280
அர் ரத் அலல் ஜஹ்மிய்யா வஸ்ஸனாதிகா	அஹ்மத் இப்னு ஹன்பல்	241

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
அர் ரத் அலா மன் அன்கர அல் ஹர்ஃப வஸ் ஸவ்த்த	அபூ நஸ்ர் உபைதுல்லாஹ் அஸ் ஸஜ்ஸீ	444
அல் இக்திலலாஃப் ஃபில் லஃப்ளி வர் ரத் அலல் ஜஹ்மிய்யா வல் முஷப்பிஹா	அப்துல்லாஹ் இப்னு முஸ்லிம் இப்னு குதைபா அத் தைனூரீ	276
கல்கு அஃப்ஆலில் இபாத், வர் ரத் அலல் ஜஹ்மிய்யா வ அஸ்ஹாபித் தஃதீல்	அல் புகாரீ	256
மஸ் அலத்துல் உலுவ் வன்னுஸூல் ஃபில் ஹதீஸ்	இப்னுல் கைஸரானீ	507
அல் உலுவ் லில் அலிய் அல் அளீம் வ ஈழாஹ் ஸஹீஹில் அக்பார் மின் ஸகீமிஹா	தஹபீ	748
அல் அர்பயீன் ஃபீ ஸிஃபாத்தி ரப்பில் ஆலமீன்	தஹபீ	748
கிதாபுல் அர்ஷ் வ மா ருவிய ஃபீஹி	முஹம்மத் இப்னு உஸ்மான் இப்னு அபீ ஷைபா	297
இஸ்பாத் ஸிஃபத் அல் உலுவ்	இப்னு குதாமா அல் மக்திஸி	620
அகாவீல் அஸ் ஸிகாத் ஃபீ தஃவீலில் அஸ்மா வஸ் ஸிஃபாத்	ஸைனுத்தீன் அல்மக்திஸி	1033
கிதாபுல் அஸ்மா வஸ்ஸிஃபாத்	பைஹக்கீ	458
அல் பஃஸ் வன்னுஷூர்	பைஹக்கீ	458
இஸ்பாத் அதாபில் கப்ர்	பைஹக்கீ	458
அத் தஸ்தீக் பின் நள்ர் இலல்லாஹி தஆலா ஃபில் ஆகிரா	அபூபக்ர் அல் ஆஜுரீ	360
அல் இஃத்திகாத் அல் காலிஸ் மினஷ் ஷக் வல் இன்திகாத்	அலாவுத் தீன் இப்னுல் அத்தார்	724

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
அல் வுயூன் வல் அஸர் ஃபீ அகாயிதி அஹ்லில் அஸர்	அப்துல் பாக்கீ	1071
கத்ஃபுஸ் ஸமர் ஃபீ பயானி அகீததி அஹ்லில் அஸர்	முஹம்மத் ஸித்தீக் கான் அல் கன்னூஜீ	1307
அத்தீனுல் காலிஸ்	முஹம்மத் ஸித்தீக் கான் அல் கன்னூஜீ	1307
லவாமிவுல் அன்வார் அல் பஹிய்யா வ ஸவாதிவுல் அஸ்ரார் அல் அஸரிய்யா	முஹம்மத் இப்னு அஹ்மத் அஸ்ஸஃபாரீனீ	1188
லவாமிவுல் அன்வார் அஸ் ஸனிய்யா	முஹம்மத் இப்னு அஹ்மத் அஸ்ஸஃபாரீனீ	1188
தஜ்ரீதுத் தவ்ஹீத் அல் முஃபீத்	அஹ்மத் இப்னு அலீ அல்முக்ரீஸீ	845
மின்ஹாஜுஸ் ஸுன்னா	இப்னு தைமிய்யா	728
தர்வு த ஆருழில் அக்ல் வன்னக்ல்	இப்னு தைமிய்யா	728
புக்யத்துல் முர்தாத் ஃபிர் ரத் அலல் முதஃபல்ஸிஃபதி வ அஹ்லில் இல்ஹாத்	இப்னு தைமிய்யா	728
இக்திழாவுஸ் ஸிராத் அல் முஸ்த்தகீம்	இப்னு தைமிய்யா	728
அஸ்ஸாரிமுல் மஸ்லூல் அலா ஷாதிமிர் ரஸூல்	இப்னு தைமிய்யா	728
கிதாபுல் ஈமான்	இப்னு தைமிய்யா	728
அரி ரிஸாலா அத் தத்முரிய்யா	இப்னு தைமிய்யா	728
அர் ரத் அலல் மன்திக்கிய்யீன்	இப்னு தைமிய்யா	728

நூல் பெயர்	ஆசிரியர் பெயர்	இறப்பு ஹிஜ்ரீ
அல் அகீதத்துல் வாசிதிய்யா	இப்னு தைமிய்யா	728
அல் அகீதத்துல் ஹமவிய்யா	இப்னு தைமிய்யா	728
அர் ரிஸாலா அத் திஸ்யீனிய்யா	இப்னு தைமிய்யா	728
பயான் தல்பீஸ் அல்ஜஹ்மிய்யா	இப்னு தைமிய்யா	728
அன் நுபுவ்வாத்	இப்னு தைமிய்யா	728
ஷர்ஹ் அல் அகீதா அல் அஸ்ஃபஹானிய்யா	இப்னு தைமிய்யா	728
ஷர்ஹ் ஹதீஸ் அன் நுஸூல்	இப்னு தைமிய்யா	728
மஜ்மூவுல் ஃபதாவா	இப்னு தைமிய்யா	728
அஸ்ஸவாயிகுல் முர்சலா அலல் ஜஹ்மிய்யா வல் முஅத்திலா	இப்னுல் கய்யிம்	752
இஜ்திமாவுல் ஜுயூஷ் அல் இஸ்லாமிய்யா அலா கஸ்வில் முஅத்திலா வல் ஜஹ்மிய்யா	இப்னுல் கய்யிம்	752
அல் கஸீதா அன்னூனிய்யா	இப்னுல் கய்யிம்	752
ஷிஃபாவுல் அலீல் ஃபீ மசாயிலில் கழா வல் கதர் வல்ஹிக்மா வத் தஃலீல்	இப்னுல் கய்யிம்	752
தரீக்குல் ஹிஜ்ரதைன் வபாபுஸ் ஸஆதத்தைன்	இப்னுல் கய்யிம்	752

****

இவைதான் இந்தச் சமுதாயத்தின் முதல் தலைமுறையின் கொள்கையாகும். இது தூய்மையான, பாதுகாப்பான, நேரான, சரியான கொள்கையும் வழியுமாகும். இது குர்ஆன், ஸுன்னாவின் மீதும் இந்த சமுதாயத்தின் சான்றோர் மற்றும் அக்காலத்தில் வாழ்ந்த இமாம்களின் கூற்றுகள் மீது அமையப்பெற்றதாகும். இந்த சமுதாயத்தின் முன்னோர்களின் உள்ளங்களுக்கு உயிர்கொடுத்தது இந்தக் கொள்கைதான்.

இதுதான் ஸலஃப் ஸாலிஹ் உடைய கொள்கையாகும். இதுதான் வெற்றி பெற்ற, ஈடேற்றம் பெற்ற அல்லாஹ்வின் உதவிக்குரிய அஹ்லுல் ஹதீஸ் – அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கையாகும். இதுதான் பின்பற்றப்படும் நான்கு இமாம்களின் கொள்கையாகும். இதுதான் மார்க்க சட்டவல்லுநர்கள், ஹதீஸ் கலை அறிஞர்கள், சீர்பெற்ற கல்விமான்கள், இன்னும் அவர்களின் பாதையில் இது நாள் வரை பயணித்து வந்த நல்லோரின் கொள்கையாகும். இந்தக் கொள்கை இறுதி நாள் வரை நீடித்து நிலையாக இருக்கும்.

ஆகவே அகீதா – கொள்கையை எந்த சுத்தமான ஊற்றிலிருந்து நமது ஸலஃப் ஸாலிஹ் எடுத்தார்களோ அதே ஊற்றின் பக்கம் நாம் திரும்ப வேண்டும், அதிலிருந்தே நாமும் கொள்கையை எடுக்க வேண்டும். அவர்கள் எதில் மௌனம் காத்தார்களோ அதில் நாமும் மௌனம் காக்க வேண்டும். அவர்கள் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றியது போன்றே நாமும் நிறைவேற்ற வேண்டும். குர்ஆனையும் ஸுன்னாவையும் இந்த சமுதாயத்தின் சான்றோர் உடைய ஏகோபித்த முடிவையும் இந்த உம்மத்தின் இமாம்களின் ஏகோபித்த முடிவையும் நாம் பற்றிபிடிக்க வேண்டும். அவ்வாறே, புதிது புதிதாக உருவாகும் பிரச்சனைகளில் சரியாக ஆய்வு செய்து எடுக்கப்படும் முடிவையும் நாம் ஏற்றுச் செயல்பட வேண்டும்.

உமர் இப்னுல் கத்தாப் ﵁ கூறுகிறார்கள்:

قَدْ عَلِمْتُ مَتَىٰ صَلَاحُ النَّاسِ وَمَتَىٰ فَسَادُهُمْ إِذَا جَاءَ الْفِقْهُ مِنْ قِبَلِ الصَّغِيرِ اسْتَعْصَىٰ عَلَيْهِ الْكَبِيرُ وَإِذَا جَاءَ الْفِقْهُ مِنْ قِبَلِ الْكَبِيرِ تَابَعَهُ الصَّغِيرُ فَاهْتَدَيَا

மக்களின் சீர்திருத்தம் எப்பொழுது ஏற்படும், மக்களின் சீர்கேடு எப்பொழுது ஏற்படும் என்பதை நான் திட்டமாக அறிந்துகொண்டேன். மார்க்க ஞானம் சிறுவர்களிடமிருந்து வந்தால் அதை ஏற்கப் பெரியவர்கள் சிரமப்படுவார்கள். மார்க்க ஞானம் பெரியவர்களிடமிருந்து வந்தால் அதைச் சிறியவர்கள் பின்பற்றிவிடுவார்கள். ஆக (பெரியவர், சிறியவர்) இருவரும் நேர்வழி பெறுவார்கள்.[184]

அலீ இப்னு அபீ தாலிப் ﷺ கூறுகிறார்கள்:

انْظُرُوا عَمَّنْ تَأْخُذُونَ هَذَا الْعِلْمَ فَإِنَّمَا هُوَ الدِّيْنُ

இந்த கல்வியை நீங்கள் யாரிடமிருந்து எடுக்கிறீர்கள் என்று நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்! நிச்சயமாக கல்விதான் மார்க்கமாகும்.[185]

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ கூறுகிறார்கள்:

لَا يَزَالُ النَّاسُ بِخَيْرٍ مَا أَخَذُوا الْعِلْمَ عَنْ أَكَابِرِهِمْ فَإِذَا أَخَذُوهُ مِنْ أَصَاغِرِهِمْ وَشِرَارِهِمْ هَلَكُوا

கல்வியைத் தங்கள் பெரியவர்களிடமிருந்து மக்கள் எடுக்கின்ற வரை அவர்கள் நலவில் இருப்பார்கள். ஆக, அதை அவர்கள் தங்கள் சிறியவர்களிடமிருந்தும் தங்களின் தீயவர்களிடமிருந்தும் எடுத்தால் அவர்கள் அழிந்து விடுவார்கள்.[186]

எனது முஸ்லிமான சகோதரனே! அல்லாஹ் உனக்கும் நமக்கும் சத்தியத்தின் பக்கம் வழிகாட்டுவானாக! நிச்சயமாக யார் நேர்வழியை குர்ஆன், ஸுன்னா இன்னும் ஸலஃப் ஸாலிஹ் உடைய புரிதல் ஆகிய இவை அல்லாததிலிருந்து நேர்வழியைத் தேடுவாரோ, அல்லது அல்லாஹ்

184. நூல்: ஜாமிஃ பயானில் இல்ம், ஆசிரியர்: இப்னு அப்தில் பர்.
185. நூல்: அல் கிஃபாயா ஃபீ இல்மிர் ரிவாயா, ஆசிரியர்: அல் கதீப்.
186. நூல்: ஜாமிஃ பயானில் இல்ம், ஆசிரியர்: இப்னு அப்தில் பர்.

மார்க்கத்தில் சட்டமாக்காததை மார்க்கத்தில் அதிகப்படுத்துவாரோ அவர் சந்தேகமில்லாமல் தெளிவான வழிகேட்டில்தான் மூழ்கிவிட்டார், நேரான பாதையை விட்டு தூரமாகிவிட்டார், முஃமின்கள் – நம்பிக்கையாளர்கள் உடைய பாதை அல்லாத பாதையை அவர் பின்பற்றிவிட்டார்.

ஸுன்னாக்களையே முழுமையாக நாம் பின்பற்றி முடிப்பதற்குள் நாம் மரணித்துவிடுவோம் என்றிருக்க நமக்கு மார்க்கத்தில் ஏன் பித்ஆக்கள்? அவற்றின் அவசியம்தான் நமக்கு ஏன்?

அல்லாஹ் இமாம் மாலிக் ﷀ அவர்களுக்குக் கருணை காட்டுவானாக! அவர்கள் பெரும்பாலும் ஒரு கவிதையைச் சொல்வார்கள்.

خَيْرُ أُمُورِ الدِّينِ مَا كَانَ سُنَّةً وشرُّ الأُمُورِ الْمُحْدَثَاتُ الْبَدَائِعُ

மார்க்கத்தில் சிறந்த காரியம் ஸுன்னாவாக இருப்பது மட்டுமே! காரியங்களில் மிகக் கெட்டது புதிய அனாச்சாரங்களே![187]

அல்லாஹ்வை வணங்கியவர்களில் மிகச் சிறந்தவர்கள் ஏகோபித்த முடிவுபடி ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள்தான். ஆகவே, அவர்களின் வழிபாட்டுக்கு மாற்றமான எல்லா வழிபாடுகளும் بدعة – பித்ஆதான் – அனாச்சாரம்தான். அது, அதைச் செய்பவர்களை அல்லாஹ்வின் பக்கம் ஒருபோதும் நெருக்கமாக்கி வைக்காது. மாறாக, அல்லாஹ்விடமிருந்து அவர்களைத் தூரமாக்கிதான் வைக்கும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ثُمَّ جَعَلْنَٰكَ عَلَىٰ شَرِيعَةٍ مِّنَ ٱلْأَمْرِ فَٱتَّبِعْهَا
وَلَا تَتَّبِعْ أَهْوَآءَ ٱلَّذِينَ لَا يَعْلَمُونَ ﴿١٨﴾

பிறகு, நாம் உம்மை இந்த மார்க்கத்தின் (உறுதியான) தெளிவான சட்டங்கள் மீது அமைத்தோம். ஆகவே, அதை நீர் பின்பற்றுவீராக! அறியாதவர்களின் மன விருப்பங்களை நீர் பின்பற்றாதீர்! (அல்குர்ஆன் 45:18)

187. நூல்: அல் இஃதிஸாம், ஆசிரியர்: ஷாதிபி.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَن يَرْغَبُ عَن مِّلَّةِ إِبْرَٰهِـۧمَ إِلَّا مَن سَفِهَ نَفْسَهُۥ ۚ

பெரிய மடையனாக இருப்பவனைத் தவிர இப்ராஹீமுடைய (இஸ்லாம்) மார்க்கத்தை (வேறு) யார் வெறுப்பார்? (அல்குர்ஆன் 2:130)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَنْ أَحْسَنُ دِينًا مِّمَّنْ أَسْلَمَ وَجْهَهُۥ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ وَٱتَّبَعَ مِلَّةَ إِبْرَٰهِيمَ
حَنِيفًا ۗ وَٱتَّخَذَ ٱللَّهُ إِبْرَٰهِيمَ خَلِيلًا ﴿١٢٥﴾

யார் அல்லாஹ்விற்கு தன் முகத்தை முற்றிலும் பணியவைப்பாரோ – அவரோ நற்குணமுடையவராக இருக்கும் நிலையில், – இன்னும், இப்ராஹீமுடைய மார்க்கத்தை (அதில்) உறுதியானவராக பின்பற்றுவாரோ அவரை விட கொள்கையால் மிக அழகானவர் யார்?

(அல்குர்ஆன் 4:125)

முஸ்லிம்களின் முழுமையான ஒற்றுமை என்பது இந்த உம்மத்தின் முதல் தலைமுறை நம்பிக்கை கொண்டிருந்த பரிசுத்தமான தெளிவான கொள்கையில் ஒற்றுமை ஏற்படுவதைத் கொண்டுதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த தூய கொள்கையைக் கொண்டுதான் அவர்கள் உலகத்தை நீதத்துடனும், நேர்மையுடனும் ஆட்சி செய்தார்கள்.

தெள்ளத் தெளிவான, ஏற்றமான சொல்!

எது மிக மிக முக்கியமோ அதை நாம் முதலில் நமது அழைப்புப் பணியில் சரி செய்ய வேண்டும். பிறகு அதற்கு அடுத்த தரத்தில் இருக்கும் முக்கியமானதை, இப்படியாக நாம் நமது அழைப்புப் பணியில் பயணிக்க வேண்டும். அப்போதுதான் நமக்குள் சீர்திருத்தமும் நமது அழைப்புப் பணிக்கு வெற்றியும் கிடைக்கும். ஆகவே, முதலில் நாம் தவ்ஹீதுடைய கொள்கையிலிருந்து தஃவாவை ஆரம்பிக்க வேண்டும். அதன் மீதுதான் நமது அரசியலைக் கட்டி அமைக்க வேண்டும். நமது சட்டங்கள், நற்பண்புகள், நல்லொழுக்கங்கள், நமது வர்த்தகங்கள் என அனைத்தையும் தவ்ஹீதின் மீதுதான் கட்டி எழுப்ப வேண்டும்.

இவை அனைத்திலும் குர்ஆன், ஸுன்னாவுடைய வழிகாட்டலை பின்பற்ற வேண்டும், நமது ஸலஃப் உடைய புரிதல் மீது நாம் செயல்பட

வேண்டும். அதுதான் அல்லாஹ் நமக்கு ஏவிய நேரான வழியும், மிகச் சரியான பாதையும் அணுமுறையும் ஆகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأَنَّ هَٰذَا صِرَٰطِي مُسْتَقِيمًا فَٱتَّبِعُوهُ ۖ وَلَا تَتَّبِعُوا۟ ٱلسُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَن سَبِيلِهِۦ ۚ ذَٰلِكُمْ وَصَّىٰكُم بِهِۦ لَعَلَّكُمْ تَتَّقُونَ ﴿١٥٣﴾

இன்னும், நிச்சயமாக (இஸ்லாமாகிய) இது என் நேரான பாதை (-மார்க்கம்) ஆகும். ஆக, அதைப் பின்பற்றுங்கள்; இன்னும், (அதைத் தவிர மற்ற) பாதைகளை (-கொள்கைகளைப்) பின்பற்றாதீர்கள். அவை அவனுடைய பாதையிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். இவை, - நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுவதற்காக (அவன்) இவற்றின் மூலம் உங்களுக்கு உபதேசிக்கிறான். (அல்குர்ஆன் 6:153)

ஸலஃப் - சான்றோர் உடைய கொள்கைதான் இந்த சமுதாயத்தின் நிலைமை சீர்பெறுவதற்குரிய ஒரே பாதை ஆகும்.

அல்லாஹ்விடம் நாம் வேண்டுகிறோம், அவன் நமக்கு ஸலஃப் ஸாலிஹ் உடைய வழிமுறையின் பக்கம் வழிகாட்டியது போன்று நம்மை அந்த ஸலஃப் - சான்றோரைச் சேர்ந்தவர்களில் ஆக்குவானாக! படைப்புகளின் தலைவராகிய பரிந்துரை செய்பவராகிய பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுபவராகிய முஹம்மத் ﷺ அவர்களின் கொடிக்குக் கீழ் அந்தச் சான்றோருடன் அல்லாஹ் நாளை மறுமையில் நம்மை ஒன்று சேர்ப்பானாக! அவன் நமக்கு நேர்வழி காட்டிய பின்னர் நமது உள்ளங்களைக் கோணலாக்காமல் இருப்பானாக! ஏகவத்துவத்தில் உறுதியானவர்களாகிய, நல்லவர்களாகிய அவனது பாதையில் தீவிரமாக செயல்படுபவர்களாகிய அவனது அடியார்களில் நம்மை அவன் ஆக்குவானாக! நிச்சயமாக அவன் அதற்கு ஆற்றல் உடையவன். அவன் (பிரார்த்தனைகளை) நன்கு செவியுறுபவன், (பிரார்த்தனைகளுக்கு) பதிலளிப்பவன் ஆவான்.

நமது நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார், அவர்களின் தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருள்களும் நலவுகளும் நிலவட்டும்!

****